கழக வெளியீடு—௩௬௫

# ஷேக்ஸ்பியர்

# கதைக் கொத்து

## [நான்காம் பாகம்]

1. நான்காம் ஹென்றி,
2. மன்னன் ஜான்,
3. அதென்ஸ் நகர்ச் செல்வன் தைமன்,
4. காதற் சீரழிவு,
5. ஐந்தாம் ஹென்றி,
6. ஆறும் ஹென்றி,
7. வின்ட்ஸாரின் இன்னகைமாதர்,
8. மூன்றும் ரிச்சர்டு,
9 பெரிக்ளிஸ்,
10. எட்டாம் ஹென்றி அரசன்,
11. அடங்காப்பிடாரி,
12. திராய்லஸும் கிரெஸிடாவும்,
13. டைட்டஸ் அன்ட்ரானிக்ஸ்.

---

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,

திருநெல்வேலி, :: :: சென்னை.

முதற் பாகம் விலை ரூ. 1— 8
2-ம் பாகம் விலை ரூ. 1—10
3-ம் பாகம் விலை ரூ. 1—12
4-ம் பாகம் விலை ரூ. 2— 8

*Copyright :*

*Published by*

THE SOUTH INDIA SAIVA
SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY,
:: TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI, & MADRAS.

# பதிப்புரை

ஷேக்ஸ்பியர் நாடகங்கள் நவில்தொறும் இன்பம் பயப்பன. ஆங்கில இலக்கிய நூல்களின் தலைமையாகப் போற்றப் பெறுவன இந்நாடகங்களே. சிறுவரும் படித்து இன்புறும் பொருட்டு சார்லஸ் லாம் என்னும் ஆங்கிலப் புலவர் ஒருவர் அவற்றைக் கதைவடிவில் எழுதியுள்ளார்.

ஷேக்ஸ்பியர் எழுதிய நாடகங்கள் அனைத்தும் கதை வடிவில் எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பட்டு எட்டு புத்தகங்களாக வெளிவந்திருக்கின்றன. பரிசு வழங்குதற்கும் நூல்நிலையங்கட்கும் பயனுகுமாறு இரண்டிரண்டு புத்தகங்களை ஒன்றாய்ச் சேர்த்து அழகிய கட்டடஞ் செய்து வெளியிட்டுள்ளதில் இந்நூல் நான்காம் பாகமாகும்.

தமிழறிஞர்கள் இத்தகைய நூல்களை வாங்கி எங்கள் நூல் வெளியீட்டுத் தொண்டிற்குப் போதிய ஆதரவு தருவார்களாக.

சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்.

## ஷேக்ஸ்பியர் கதைகள்


ஏழாம் புத்தகம்

- நான்காம் ஹென்றி
- மன்னன் ஜான்
- அதேன்ஸ் நகர்ச் செல்வன் டைமன்
- காதற் சீரழிவு

எட்டாம் புத்தகம்

- ஐந்தாம் ஹென்றி
- ஆறாம் ஹென்றி
- வின்ட்ஸாரின் இன்னகை மாதர்
- மூன்றாம் ரிச்சர்டு
- பெரிக்ளிஸ்
- எட்டாம் ஹென்றி அரசன்
- அடங்காப்பிடாரி
- திராய்லஸும் கிரெஸிடாவும்
- டைட்டஸ் அன்ட்ரானிக்கஸ்

கழக வெளியீடு-௲௪௮

701

சிறுவர்க்கான

# ஷேக்ஸ்பியர் கதைகள்

(ஏழாம் புத்தகம்)

✲

திரு. K. அப்பாதுரைப் பிள்ளை, எம்.ஏ., எல்.டி.,
எழுதியது

✲

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: :: சென்னை

Second Edition : April 1945

[All Rights Reserved]

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
TIRUNELVELI : & : MADRAS.
June 1948

Printed at The Royal Printing Works, Madras.

# முன்னுரை

**ஷேக்ஸ்பியர்** உலகறிந்த ஆங்கிலப் பெரும் புலவர் என்று யாவரும் அறிவர். அவர்தம் நாடகங்கள் மிகவும் இன்பந்தருவன. அவை உலகம் அழியும்வரை மக்களிடை அழியாமல் நிற்கும் ஆற்றல் உடையன.

இதுகாறும் ஆறு நூல்களில் இருபத்தொரு கதைகளை வெளியிட்டுள்ளோம். இப்போது இதன்கண் **நான்காம் ஹென்ரி** (Henry IV) இரண்டு பகுதிகளுடன் **மன்னன் ஜான்** (King John), **அதேன்ஸ் நகர்ச் செல்வன் தைமன்** (Timon of Athens), **காதற் சீரழிவு** (Love's Labours Lost) ஆகிய நான்கு கதைகளும வெளிவருகின்றன.

இக்கதைகள், நாடகங்களைப் படிக்கப் புகுமுன் ஒவ்வொருவரும் படித்து இன்புறத் தக்கன. எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| க. | நான்காம் ஹென்றி | | |
| | ,, | பகுதி க | 5 |
| | ,, | பகுதி உ | 38 |
| உ. | மன்னன் ஜான் | | 58 |
| ந. | அதேன்ஸ் நகர்ச் செல்வன் தைமன் | | 85 |
| ச. | காதற் சீரழிவு | | 105 |

# ஷேக்ஸ்பியர் கதைகள்

(ஏழாம் புத்தகம்)

## க. நான்காம் ஹென்ரி

### கதை உறுப்பினர்

ஆடவர்

1. **நான்காம் ஹென்ரி அரசன் :** *ரிச்சர்டுக்குப்பின் அவனை விலக்கி அரசனானவன். ரிச்சர்டின் சிற்றப்பனான ஜான் அவ் காண்டின் மகன்.*
2. **ஹென்ரி இளவரசன் அல்லது ஹால் :** *நான்காம் ஹென்ரி அரசனுடைய மூத்தமகன். இளமையில் ஃபால்ஸ்டாஃப் கூட்டத்தாருடன் இன்ப வாழ்வி லீடுபட்டவன்.*
3. **ஜான் இளவரசன் :** *ஹென்ரி இளவரசன் தம்பி ; நான்காம் ஹென்ரியின் இளைய மகன்.*
4. **ஓவென் கிளென்டோவர் :** *வேல்ஸ் தலைவன்.*
5. **எட்மன்ட் மார்ட்டிமர் :** *மார்ச் இளங்கோவன் - ரிச்சர்டுக்குச் சிற்றப்பன் மகன் - நான்காம் ஹென்ரியின் பெரியப்பன் மகன் - ரிச்சர்டிற்குப்பின் வரன்முறைப்படி அரசுக்கு உரிமையுடையவன் - வேல்ஸ் தலைவன் ஓவென் கிளென்டோவர் மகளை மணந்தவன்.*

ஆடவர்

6. **நார்தம்பர்லந்துக் கோமகன் :** *ரிச்சர்டு அரசனுக் கெதிராக நான்காம் ஹென்ரிக்கு உதவி, பின் அவனுக்கும் எதிராகத் திரும்பியவன் - ஹென்ரி பெர்ஸி அல்லது ஹாட்ஸ்பரின் தந்தை.*
7. **ஹென்ரி பெர்ஸி அல்லது ஹாட்ஸ்பர் :** *பெருவீரன், அடங்காத் தறுதலை - ஸ்காத்லந்திலிருந்து படைத்தலைவன் டக்ளஸைச் சிறைப்பிடித்து விடுதலை செய்து நட்பாக்கிக் கிளர்ச்சியில் சேர்த்துக் கொண்டவன். ஹென்ரி இளவரசனுடன் ஒத்த அகவை யுடையவன் - அவன் எதிரி.*

ஆடவர்

8. டக்ளஸ்: ஸ்காத்லந்துப் படைத் தலைவன்.

9. ஸர் ஜான் ஃபால்ஸ்டாஃப்: வீழ்ச்சியுற்ற பெருங்குடியாளன் - ஒப்புற்ற நகைச் சுவையுடையவன் - இளவரசன் கீழ் நிலைத் தோழருட் சிறந்தவன்.

10. கார்லைல் தலைமகன்: ரிச்சர்டின் தெய்வீக உரிமையை வற்புறுத்தி நான்காம் ஹென்ரியால் கொலையுண்டவன்.

11. பார்டால்ஃப்: ஸர் ஜான் ஃபால்ஸ்டாஃபின் தோழருள் ஒருவன்.

12. ஸர் வால்ட்டர் பிளன்ட்: அரசர் பக்கத்து நின்று ஷ்ரூஸ்பரிச் சண்டையின் முன் தூதனாகச் சென்றவன்.

13. வொர்ஸ்டர்:
14. வெர்னன்:
கிளர்ச்சிக்காரர் பக்கத்திலிருந்து ஷ்ரூஸ்பரிச் சண்டையின் முன் தூதராகச் சென்றவர்கள்.

15. பாயின்ஸ்: ஸர்ஜான் ஃபாஸ்ல்டாஃப் தோழன்.

16. ஸர்ஜான் ஃபால்ஸ்டாஃபின் வேறு தோழன்:

17. தண்டத் தலைவன்

பகுதி 2

ஆடவர்

18. யார்க் பெருந்தலை மகன்: இரண்டாம் கிளர்ச்சியைத் தூண்டியவன்.

19. மேப்ரே: இரண்டாம் கிளர்ச்சித் தலைவருள் ஒருவன்.

20. திருவாளர் பொள்ளல்:
21. திருவாளர் வாய்மூடி:

ஸர்ஜான் ஃபாலஸ்டாஃப் சேர்த்த சொத்தைப்படை வீரர்கள்.

22. ஹேஸ்டிங்ஸ்: இரண்டாம் கிளர்ச்சித் தலைவருள் ஒருவன்.

23. வெஸ்டு மோர்லந்து: இரண்டாம் கிளர்ச்சிக்காலத்தில் ஜான் இளவரசனுடன் இருந்த தலைவன்.

24. வார்விக் பெருமகன்: அரச சவையிலுள்ள பெருமக்களுள் ஒருவன்.

25. ஸர் ஹென்ரி காஸ்காயின்: ஸர்ஜான்ஃபால்ஸ்டாஃபை வெறுத்த வழக்குமன்றத் தலைவன்.

# கதைச் சுருக்கம்

நான்காம் ஹென்றி அரசன் தனக்கு முன் இருந்த ரிச்சர்டு அரசனை வீழ்த்தி அரசனானவன். ரிச்சர்டு அரசனிடம் பொறாமை கொண்ட பெருமக்கள் ஆதரவினாலும், நல் ஆட்சி முறைகளால் பெற்ற பொதுமக்கள் ஆதரவினாலுமே அவன் அரசனாக முடிந்தது. அவனுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எதிரிகள் பலர். வடக்கே ஸ்காத்லந்தில் டக்ளஸ் என்ற படைத்தலைவனும் மேற்கே வேல்ஸ் தலைவன் ஓவென் கிளென்டோவரும் அவனுக்கு அடங்காதவர்களா யிருந்தார்கள். அதோடு அவ்விரண் டெல்லையிலும் உள்ள இரண்டு பெருங்குடியினரும் அவனுக்கு முன்போல் உட்பகையாயினர். அவருள் வேல்ஸ் எல்லையிலிருந்த மார்ச் கோமான் எட்மன்ட் மார்ட்டிமர் ரிச்சர்டிற்குப்பின் வரன்முறைப்படி அரசனாக வேண்டியவன். இன்னொருவன் ஸ்காத்லந்து எல்லையிலுள்ள நார்தம்பர்லந்துப் பெருமகன். இவன் ஹென்றிக்கு அரசனாக உதவியவன். இவன் மகன் ஹென்றி பெர்ஸி என்ற ஹாட்ஸ்பருக்கு மார்ட்டிமரின் தங்கையை மணம்புரிவித்ததன் மூலம் இவன் மார்ட்டிமர் நட்பைப் பெற்றான். அதோடு மார்ட்டிமர் வேல்ஸ் தலைவனால் சிறைப் படுத்தப்பட்டபோது அவன் புதல்வியைக் காதலித்து மணந்தான். ஸ்காத்லந்துப் படைத்தலைவன் டக்ளஸும் இங்கிலந்து மீது படையெடுத்து ஹாட்ஸ்பரால் சிறைப் பிடிக்கப்பட்டான். அரசன் அவனைத் தன் கையில் ஒப்படைக்குமாறு கேட்டதற்கு ஹாட்ஸ்பர் மார்ட்டிமரை மீட்க வற்புறுத்தினான். அரசன் அதற்கு இணங்காமையால் டக்ளஸிற்கு விடுதலைதந்து அவனையும் நண்பனாக்கினான். இங்ஙனம் எல்லா எதிரிகளும் ஒன்றுசேர்ந்து கிளர்ச்சிசெய்து ஷ்ரூஸ்பரி என்னுமிடத்தில் அரசனை எதிர்க்கக் காத்திருந்தனர்.

ஹாட்ஸ்பருடன் ஒத்த அகவையுடைய ஹென்ரி இளவரசன் அவனுக்கு நேர்மாறாய்க் கீழ்மக்கள் கூட்டுறவை விரும்பி அவர்களுடன் கீழான விடுதிகளில் சுற்றி அலைந்தான். அவனுடன் தோழராயிருந்தவருள் நகையரசனான ஸர்ஜான் ஃபால்ஸ்டாஃபும் ஒருவன். காட்ஸ்ஹில் என்ற இடத்தில் அவர்கள் நடத்திய சிறு திருட்டில் கூட அவன் உடன் கலந்து காவலருடையில் ஃபால்ஸ்டாஃபை ஏளனம் செய்தான். ஆனால் தந்தைக் கெதிரான கிளர்ச்சிபற்றிக்கேட்டதும் அவன் குணம் மாறி ஃபால்ஸ்டாஃப் முதலிய பலருதவியால் பெரிய நாட்டுப் படையைத் திரட்டிக்கொண்டு ஷ்ரூஸ்பரி சென்றான். கிளர்ச்

சிக்காரரிடையில் கோழைத்தனத்தால் நார்தம்பர்லந்து விலகி நிற்க, ஹாட்ஸ்பரின் முன் சினத்தால் கிளென்டோவரும் விலகி நின்றான். கிளென்டோவரின் மருமகனாகிய மார்ட்டிமரும் வேண்டாவெறுப்பாகச் சண்டைசெய்தான். கிளர்ச்சிக்காரர் தோற்றனர். ஹாட்ஸ்பர் ஹென்ரி இளவரசன் கையால் இறந்தான். ஃபால்ஸ்டாஃப் இறந்த ஹாட்ஸ்பரைத் தூக்கிச் சென்று தன் கைவேலை என்று கூறிக் கேலி நாடகம் நடித்தான்.

## பகுதி 2

எப்பக்கம் வென்றாலும் அதனுடன் சேர்வதென்று காத்து நின்ற நார்தம்பர்லந்து மகன் இறந்த செய்தி கேட்டுத் திகைத்தான். யார்க் தலைமகன் தோற்றுவிக்கும் இரண்டாம் கிளர்ச்சியில் சேர்ந்து பழி வாங்கவேண்டுமென்ற எண்ணத்தைத் துயரால் மன முறிந்த அவன் மனைவியும் புதல்வியும் தடுக்க, இரண்டாம் முறையும் அவன் கிளர்ச்சிக் காரரை ஏமாறவைத்தான். ஹென்ரி இளவரசன் வேல்ஸ் தலைவனை அடக்கச் சென்றிருந்ததால் ஜான் இளவரசன் அரசர் படைத் தலைமை தாங்கினான். அவன் தூதர்மூலம் கிளர்ச்சிப் படையோர் குறைகளை அகற்றுவதாகக் கூறி அவர்களைக் கலைத்தான். இளவரசனுடன் துணைத்தலைவனா யிருந்த வெஸ்டு மோர்லந்தின் சூழ்ச்சித்திறத்தால் இளவரசன் படைமட்டும் கலையாதிருந்தது. கிளர்ச்சித் தலைவர் ஏமாந்து சிறைப்பட்டனர்.

முதுமையாலும் துயர்களாலும் பிணியாலும் நலிவுற்று மன்னன் படுக்கையில் கிடந்தான். அவன் சோர்வைப் பிரிவென்றெண்ணி இளவரசன் துயரும், தனக்குப் பொறுப்பு வந்துற்றதே என்ற எண்ணமும் உந்த, முடியுடன் கடவுளை வணங்கச் சென்றிருந்தான். அதற்கிடையே விழித்தெழுந்த மன்னன் அதற்குள் முடியைக்கவர அவன் விரைந்தான் என்றெண்ணி ஐயமும் சினமும் கொண்டான். பின் அவன் ஹென்ரி இளவரசன் சொற்களால் உண்மையுணர்ந்து மகிழ்வுடன் உயிர் நீத்தான்.

இளவரசன் ஹென்ரி தன் முன்னைக்குணம் மறந்து புது மனிதனாய் இங்கிலாந்தின் ஒப்பற்ற அரசனானான். நற்குணமுடையவனாயினும், அரசனைத் தன் வழியிலிழுக்க முயன்ற ஃபால்ஸ்டாஃப் கூட்டத்தினர் புறக்கணிக்கப்பட்டனர். அவர்களை இளவரசனுடன் சட்டப்படி தண்டித்த ஸர் ஹென்ரி காஸ்காயின் என்ற தண்டத்தலைவன் நன்கு மதித்துப் போற்றப்பட்டான்.

# நான்காம் ஹென்ரி

பகுதி—க

## 1. துணைக்கருவிகளே பகைக்கருவிகளானது

பிறப்புரிமையால் அரசராகாது குடிகள் இணக்கம் பெற்று அரசிருக்கை ஏறிய ஆங்கில மன்னருள் நான்காம் ஹென்ரி அரசன் ஒருவன்.

அவனுக்குமுன் ஆண்ட [1]இரண்டாம் ரிச்சர்ட்டு மன்னனுக்கு அவன் சிற்றப்பன் மகன். ஆனால் அவன் தந்தைக்கும் மூத்தவனான இன்னொரு சிற்றப்பனுடைய மகன் ஒருவன் இருந்தான். அவன் பெயர் [2]எட்மன்டு மார்டிமர். அரசுரிமை ஒழுங்குப்படி அவனே அரசனாய் வந்திருக்கவேண்டும். ஆனால் ரிச்சர்டின் தன்னாண்மை ஆட்சியைப் பெருமக்கள் எதிர்த்தபோது, ஹென்ரி தான் அவர்களுக்குத் தலைமை பூண்டான். எனவே ரிச்சர்டு முடி துறந்தபோது அவனே அப்பெருமக்களின் இணக்கத்தாலும் துணையாலும் தன்னை அரசனாக்கிக் கொள்ள முடிந்தது.

தன்னலத்தின் வயப்பட்டு ரிச்சர்டின் போக்கைக் கண்டித்தே ஹென்ரி அரசனானான். ஆயினும் அங்ஙனம் அரசனானபின் அவனும் அந்த ரிச்சர்டைப் போலவே, தன்னாண்மையுடன் அரசாளத் தொடங்கினான். அப்போது பெருமக்கள், ரிச்சர்டை வெறுத்ததைவிட மிகுதியாக அவனை வெறுக்கத் தொடங்கினர். "ரிச்சர்டாவது முறைப்படி அரசனாயிருந்தவன்; அப்படியல்லனே இவன்: இவன் மணிமுடி நம் கைப்படக் கொடுத்த கொடைதானே; இவனுக்கென்ன இத்தனை தன்னாண்மை?" என்று அவர்கள் சீறினர்.

---

1 Richard II. 2 Edmund Mortimer.

மேலும், ரிச்சர்டின் தன்னுண்மைக்கு அவன் இன்ப விருப்பும் சோம்பல் வாழ்வுமே காரணம்: தன்னல மன்று. அரசன் என்ற முறையிலல்லாது தனி மனிதன் என்ற முறையில் அவன் நற்குணமும் பீடும் பெருந்தன்மையும் உடையவன். ஹென்ரியோ இதற்கு மாறுகத் தன்னலமும் சூழ்ச்சியும் உடையவன். எடுத்த காரியத்தை நிறைவேற்றும் வகையில் அவன் எத்தகைய முறையையும் கையாளத் தயங்காதவன். அவன் கையில் அரசுரிமை வந்ததே, அவன் தான் ரிச்சர்டின் கொடுமையோடுகூட அவனிடம் இல்லாத சிறுமையும் உடையவன் என்று காட்டிக்கொண்டான்.

ஹென்ரி, ரிச்சர்டை அகற்றித் தானே அரசனுகப் போகும் நாட்களில் அவனை அரசவையில் எதிர்த்து நின்று, " அரசுரிமை தெய்வீகமாகவும் பிறப்புரிமைப்படியும் வருவது; தெய்வத்தாலன்றி மனிதர் எவராலும் அஃது எடுக்கப்படவோ கொடுக்கப்படவோ கூடியதன்று " என்று [1]கார்லைல் தலைமகன் கூறியிருந்தான். அதன் பயனுக ஹென்ரி அவனைத் தூக்கிலிட நேர்ந்தது. சமயத்துறையினுள் தலைமையான ஒருவன், நடுநிலை உண்மை கூறியதற்காக உயிரிழந்தது கண்டு, அச்சமயத் துறையிலுள்ள தலைமக்கள் எல்லாரும் பிறரும் ஹென்ரியிடம் பகைமை கொள்ளலாயினர்.

மக்கள் ஹென்ரியை வெறுக்குந்தோறும் ரிச்சர்டின் நற்குணங்களையும் பெருந்தன்மையையும் ஓர்ந்து அவனை ஒழித்துவிட்டோமே என்று கழிவிரக்கமுங் கொள்ளலாயினர். ரிச்சர்டின் காலத்தில் அவனுக் கெதிராகக் கிளர்ச்சி செய்தவருள் முதன்மையான [2]நார்தம்பர்லந்துக் கோமகன் தான் இப்போது ஹென்ரியை எதிர்ப்பதிலும் முதல்வனுயிருந்தான்.

---

1 Bishop of Carlisle. 2 Northumberland.

இவ்வுட்பகைவரே யன்றி ஹென்ரி அரசனுக்கு வெளிப் பகைவரும் வேறு சிலர் இருந்தனர். அவரே வேல்ஸ் நாட்டுத்தலைவனை [1]ஓவென் கிளென்டோவரும், [2]ஸ்காட்லந்துப் படைத்தலைவன் டக்ளஸும் ஆவர். இவருள் ஓவென் கிளென்டோவர் பிற வேல்ஸ் மக்களைப் போலவே வேல்ஸ் நாட்டின் பழைய பழக்க வழக்கங் களிலும், புனைவியல் கதைகளிலும் தெய்வ வரலாற்றி லும் பற்றுடையவனுயினும், இங்கிலாந்தின் பல்கலைக் கழகப் பயிற்சியுடையவனுதலின், புது நாகரிக மேற்பூச் சும் எய்தப்பெற்றவன். அவன் தலைவனுனபின் அடிக்கடி எல்லைப்புறத்தில் வந்து சூறையாடுவான். அவனும், அவனைப்போலவே ஸ்காத்லந்து எல்லையில் டக்ளஸும் ஆங்கில அரசுக்கு இரு முள்போல் தொந்தரவு செய்து கொண்டிருந்தனர்.

இவ்விரு பகைவர்களிடமிருந்தும் நாட்டைப் பாது காக்கவே ஆங்கில அரசர் இரண்டு எல்லையிலும் இரு பெருங்குடிகளைச் செல்வாக்குடனும் வலிமையுடனும் விட்டுவைத்திருந்தனர். அவர்களே நார்தம்பர்லந்துப் பெருமகனும் மார்டிமரும் ஆவர்.

ஆனல் வேலியே பயிரை அழிக்கத் தொடங்கியது போல், இவ்விரு பெருங்குடிகளும் அவ் வெளிப்பகை களை எதிர்த்து அரசனை வலுப்படுத்துவதற்கு மாருகத் தாமே உட்பகையாய்த் தழைத்து அவ்வெளிப்பகை யுடன் ஒன்றுபட்டு அரசனுக்கு ஓர் உயிர்ப் பொறியாய் அமைந்தனர்.

இவருள் ஓவென் கிளென்டோவர் ஒருகால் போரில் எல்லைப்புறக் குடியினனுகிய எட்மன்டு மார்ட்டிமரைப் பிடித்துச் சிறையில் வைத்திருந்தான். சிறையி

1 Owen Glendeower, Chieftain of Wales.

2 Douglas of Scotland.

லிருந்தே மார்டிமர் கிளென்டோவரின் அழகிற் சிறந்த புதல்வியுடன் நட்புக்கொண்டு அவளை மணந்துகொண்டான். இதனால் மார்ட்டிமருக்கும் கிளென்டோவருக்குமிடையே இருந்த பழம்பகைமை நீங்கி அவர்களிடையே இணையரு உறவு ஏற்பட்டது.

மார்ட்டிமரின் உடன்பிறந்தாள் ஏற்கெனவே நார்தம்பர்லந்தின் மகனாகிய ஹாட்ஸ்பர் என்று வழங்கிய [1]ஹென்ரி பெர்ஸியை மணந்திருந்தாள். எனவே கிளென்டோவருடன் மார்டிமரும் நார்தம்பர்லந்தும் ஆங்கில அரசர்க்கெதிராய் ஒன்றுசேர்ந்துவிட்டனர்.

இந் நிலையில் அரசனை நார்தம்பர்லந்தின் வளர்ச்சி பற்றி இன்னும் அச்சமும் அழுக்காறும் கொள்ளச் செய்யும் செய்தி ஒன்று நிகழ்ந்தது.

ஸ்காத்லந்து வீரனான டக்ளஸ் இங்கிலாந்துமீது படையெடுத்து நார்தம்பர்லந்தால் முறியடிக்கப்பட்டான். இதுவரை எப்போரிலும் புறங்கொடா வீரனாகிய அவன் மிகுந்த ஊக்கத்துடன் இருபத்தையாயிரம் பேர் கொண்ட பெரும்படை ஒன்று திரட்டி மீண்டும் படையெடுத்தான். இத்தடவை ஹாட்ஸ்பர் என்ற இளங்காளை அவனையும் அவன் பெரிய படையையும் முன்னையினும் பன்மடங்கு நலிய முறியடித்து அவனையும் அவன் வீரர்கள் பலரையும் சிறைப்பிடித்தான். அதோடு போர்க்கருவிகளும் பொருட்குவையும் அளவிலாது அவன் கையுட்பட்டன.

வெளிப்பகையாகிய டக்ளஸை விட உட்பகையாகிய தன் பெருங்குடியினுக்கே மிகுதியாக அஞ்சிய ஹென்ரி, தன் சூழ்ச்சியால் அக் குடியினரை எப்படியாவது தன் வயப்படுத்த எண்ணி, அவர்களை அழைத்து நயவஞ்சக மொழியால் அவர்கள் வீரத்தையும் அரசுப் பற்றையும்

1 Henry Percy of Hotspur.

புகழ்ந்து, பின் நளினமாகப் போரில் பிடிபட்ட சிறையாளி களையும் பொருட்குவையினையும் தருமாறு கேட்டான். நார்தம்பர்லந்து அவற்றை விட்டுக்கொடுக்க மனமில் லாதபடி தாக்காட்டினன். அருகிலிருந்த வொர்ஸ்டர் முதலிய பெருங்குடிமக்களும் அவனையே பெரிதும் தாங்கி நின்றனர்.

ஆனல் நார்தம்பர்லந்தின் மகனை ஹென்ரி ஹாட் ஸ்பர் தன் தந்தை முதலியவருடைய வெளிப்பூச்சு முறை களை விரும்பாது நேரிடையாகவே அரசனை எதிர்க்க எண்ணினன். எண்ணி அவன், ஓவென் கிளென்டோவ ரிடம் அதுபோது சிறை புகுந்துள்ள தன் மைத்துன ஞகிய எட்மன்டு மார்ட்டிமரைச் சிறைமீட்டுக் கொடுப்ப தாயின், தான் டக்ளஸையும் பிற சிறையாளிகளையும் கொடுப்பதாகக் கூறினன்.

அதற்கு ஹென்ரி, "உண்மையில் எதிரி பக்கமே சேர்ந்துவிட்ட நாட்டுப் பகைவனை மார்ட்டிமரை நாட்டுப் பணத்திலிருந்து மீட்பது என்பது வெட்கக் கேடு" என்று கூறினன். ஹாட்ஸ்பர் சினந்து, "என் மைத்துனனையா நாட்டுப் பகைவன் என்று கூறுவது? நாட்டுப் பகைவன்தான் நாட்டுக்காகப் போர் புரிந்து படுகாயம் அடைவனே!" என்று வீறுடன் பேசி அகன்றன்.

தன்னை அரசனக்க மிகுதியும் உதவிய அந்தக் குடியே இன்று தனக்கு நேர் பகையாகிப் பிற பகைவர் களையும் தூண்டி ஒன்றுசேர்த்து வருவது கண்டு ஹென்ரி மிகவும் மனம் புழுங்கினன்.

ரிச்சர்டு தன் இறுதி நாட்களிற் கூறிய வெஞ்சினத் தின்படியே, அன்று அவ்வரசனுக்கு எதிராகத் தன் கிளர்ச்சிக்கு உதவிய அக் கைக்கருவிகள் இன்று தன் அரசுக்கும் எதிராகப் பிற கிளர்ச்சிக்காரருக்கு உதவு

வதையும், எத்தனேயோ தன்னலத்தாலும், சூழ்ச்சியாலும் தூண்டப்பெற்றுத் தான் பெருமுயற்சியின் பயனுகப்பெற்ற இம் மணிமுடி இறுதியில் ஒரு முள் முடியேயாய்த் தனக்குத் தாங்கருஞ் சுமையாய்விட்டதையும் நினைத்து அவன் புலம்பினுன்.

## 2. இந்த ஹென்ரியும் அந்த ஹென்ரியும்

ஆண்டு முதிர்வு ஒரு புறம், அரசியல் சுழல்களினுல் ஏற்பட்ட கவலே ஒரு புறம், பிணி ஒரு புறம் அரசன் உடலே அரித்துத் தின்றன. அதனிடையே வெளியினின்றும் இரு பெருங் கூர் வாள்கள் அவன் உள்ளத்தைப் பசையற ஈர்க்கலாயின. அவற்றுள் ஒன்று மேற் சொன்ன பகைவர்கள் வளர்ச்சியும் : கலப்பும் ; இன்ெனுன்று அவன் மகன் ஹென்ரி இளவரசனது நடவடிக்கை.

ஹென்ரி இளவரசனும் ஹென்ரி ஹாட்ஸ்பரும் ஏறக்குறைய ஒரே பெயரும் அகவையும் தோற்றமும் உடையவர். ஆனுல் இளமையில் இருவரது போக்கும் இரு வேறு வகைப்பட்டதா யிருந்தது.

ஹாட்ஸ்பர் போர்க்குதிரை போன்ற வீரமும் படபடப்பும் தன்ஞண்மையும் உடையவன். அதனுலேயே அவனே மக்கள் ஹாட்ஸ்பர் அல்லது ‘வெய்ய தார் முள்’ என்று அவனுக்குப் பெயர் வைத்திருந்தனர். அவனுக்குப் போரே பருகும் நீரும், உயிர்க்கும்உயிர்ப்புமா யிருந்தது. அவன் உண்ணும்போதும் உடுக்கும் போதும் கேளிக்கையின்போதும் பேசுவதெல்லாம் போர்ப் பேச்சுத்தான். அவன் மனேவியுடன்கூட அவன் போர் மறத்தையன்றி வேறெவ்வகைப் பேச்சிலும் நேரம் போக்குவதில்லே. இதற்கேற்ப அவன் சென்ற போர்களிலெல்லாம் அவனுக்கு வெற்றியும் புகழும் கிடைத்தன.

அவன் பெயர், புகழுக்கோர் மாற்றுச் சொல்லாகவே கருதப்பட்டுவந்தது.

ஹென்றி இளவரசன் நடை இதற்கு நேர்மாறு யிருந்தது. குடிமக்களிடைப் பிறந்த அந்த ஹென்றி புகழை எத்துணை நாடினனே அத்துணை அரசுரிமை பெறப் பிறந்த இந்த ஹென்றி இகழையே விரும்பி நாடியதாகத் தோற்றிற்று. அவன் ஓயாது தெருச்சுற்றும் கீழ்மக்களுடன் ஊடாடியும், அவர்கள் நடமாடும் கீழ்த்தர விடுதிகளில் உண்டாட்டயர்ந்தும், அவர்கள் சிறு சச்சரவுகளிலும் பூசல்களிலும் சிறு களவுகளிலும் மறைவு நடமாட்டங்களிலும் ஈடுபட்டும் உலகத்தவர் நகையாடலுக்காளாகிவந்தான்.

இம் மாற்றங்கள் அரசன் செவியிற் பட்டபோது முதலில் அரசன் அவற்றை நம்பவில்லை. பின் நம்பியும் நம்பியதாகக் காட்டாது மறைத்தான். அதன்பின் அவன் படிப்படியாக இளவரசனை இன்மொழிகளாலும் எச்சரிக்கைகளாலும் இறுதியில் வன்மொழியாலும் திருத்த முயன்றான். எதுவும் அவன் போக்கை மாற்றுவதாகக் காணவில்லை.

அரசியல் அவமதிப்பால் திருந்துவானே என்று எண்ணி அவனை அரசவைத் தலைமையினின்று விலக்கி, அதில் அவன் தம்பியாகிய ஜானை அமர்த்திப் பார்த்தான். இதனாலும் பயன் இல்லை. ஹென்றி ஏளன நகை நகைத்து “ அப்பாடா இந்தச் சோம்பேறிக் கூட்டத்திற்குப் போய்க் கொட்டாவி விட்டுக்கொண்டிருக்கும் தொல்லை ஒழிந்தது ” என்று தெறிபேசிக்கொண்டு தன் பதடி வாழ்க்கையில் இன்னும் ஆழமாகத் தங்குதடையின்றி இறங்கினான்.

இளமையிலேயே பெருநோக்கங்கொண்டு அந்நோக்கங்கள் நிறைவேறித் தன் இளமையிலேயே

பெரு வாழ்வு கண்ட தனக்கா இத்தகைய பிள்ளை பிறக்கவேண்டும் என்று அரசன் தன் மகனை எண்ணி வயிற்றில் அடித்துக்கொண்டான். அது மட்டுமா? தனக்குப் பிறந்த இப் பதரை ஏளனஞ் செய்வதற்காகவே போலும் தன் மாற்றானை நார்தம்பர்லந்துக்கு இத்தனைக்கும் நேர்மாறான பிள்ளை பிறந்தது!—"ஆ, என் மகன் நார்தம்பர்லந்து மகனாகவும், நார்தம்பர்லந்து மகன் என் மகனாகவும் பிறந்திருந்தால்,—ஆ, கருவில் வைத்தே எங்கள் பிள்ளைகளை யாதேனும் ஒரு தெய்வம் வந்து மாற்றியிருந்தால், எவ்வளவு சிறப்பாயிருந்திருக்கும்!—அந்தோ என் தலையெழுத் திருந்தவாறு!" என்று அவன் பலகால் பெருமூச்சுவிட்டு நொந்துகொள்வான்.

இளவரசனை அவனது ஈனவாழ்வில் பெரிதும் இழுத்து அவனது கவனத்தை அரசியல் வாழ்விலிருந்து முற்றிலுங் கவர்ந்த தோழருள் முதன்மையானவன் [1]ஸர் ஜான் ஃபால்ஸ்டாஃப் என்பவன். இவன் இங்கிலாந்தின் வீழ்ச்சியுற்ற பெருங்குடி ஒன்றிற் பிறந்து அப்பெருங்குடிக் குரிய மதிப்பும் வெளிநாகரிகமும் இழந்தும், அப்பெருங்குடியிலும் காணுதற் கரிதான உயரிய உளப்பண்புகளும் அன்புள்ளமும் நகைத்திறமும் கொண்டவன். வேறெத்தகையவன் மனத்தையும் முறித்துப் பித்தாக்கத் தகும் அத்தனை துன்பங்களை அவன் தன் நகைத்திறனாலும் மக்களுடன் ஊடாடி அளவளாவுவதனாலும் உதறித் தள்ளிவிட்டு உண்டு குடித்து ஆடிப்பாடி நாட்போக்கி வந்தான்.

அவனது இவ் வின்ப வாழ்க்கைக் கொத்தபடி அவன் உடலும், நகையாதவரையும் நகைக்கவைக்கும் வண்ணம் அகண்டாகாரமாய் விரிந்து பெருகி, நின்றாலும்

---

1 Sir John Falstaff.

கிடந்தாலும் இருந்தாலும் ஏறக்குறைய ஒரே உயரமாம் படி சரிசம உருவையாய் வளர்ந்திருந்தது. இயற்கையி லேயே அவன் சிரித்தால் சிரிக்காதவர்கள் இரார். ஒரு வேளை சிரிக்கப்படாதென்று பல்லைக் கடித்துக்கொண் டிருந்தாலுங்கூட, அவன் சிரிக்கும்போது அவன் முகம் செக்கச்சிவந்து வழிவதையும், அவன் உடலின் சதைப் பற்றுக்கள் எழுந்தெழுந்து நடமிடுவதையும் காணின், விலாப்புடைக்கத் தாமும் நகையாதிருக்க முடியாது.

அவனது நகைத்திறன் அவன் உடல், உளம், பேச்சு, நடிப்பு முதலிய யாவற்றையும் கவிந்திருந்தது. அவன் பேசும் நொடிப் பேச்சுக்களையும் நகைத்துணுக்குக் களையும் மக்கள் பலவிடங்களிலும் புதுப்புது மனிதர்க்குப் பேசிக்காட்டி இன்புறுவர்.

மேலும், அவனது நகைத்திறனுக்கு யாவரும் ஆளா யினும், அதனால் துன்புற்றவரோ நொந்தவரோ மட்டும் யாரும் கிடையாது. அவனுடன் நகையாடும் எவரேனும் அவனையே குறியாகக் கொண்டு எள்ளி நகையாடினும், அவன் அவர்களையும் மடக்கி நகையாடுவ தல்லது அத னால் சினங் கொள்ளமாட்டான். தீமை யில்லாத நகைக் களஞ்சியமான அவன் நகைச்சுழலில் பட்டு அவனை நாடாதவர் மிகக் குறைவு. இன்பவேட்கையும் குறும் புணர்ச்சியும் உடைய இளவரசன் அவனை நாடித் திரிந்த தில் வியப்பெதுவும் இல்லை.

## 3. நகையரசு

ஹென்ரி ஹாட்ஸ்பர் ஸ்காத்லந்து வீரர்களை வென்று வாகைசூடும் அதே சமயத்தில் இளவரசனும் அவன் தோழர்களும் அதற்கு முற்றிலும் மாறுபட்ட தோர் நகைப்போரில் ஈடுபட்டு அதில் வாகைசூடுவா ராயினர்.

அன்று ஃபால்ஸ்டாஃப் இளவரசனுடன் அளவளாவிப் பேசிக்கொண்டிருக்கையில் வழக்கம்போல் தனது ஒப்பற்ற நகைத்திறனால் எல்லோரையும் களிக்கச்செய்து கொண்டிருந்தான். அவன் பக்கத்திலிருந்த குடிவகையைக் கொஞ்சங் கொஞ்சமாக ஊற்றிப் பருகிக்கொண்டே இளவரசனை அவன் செல்வப் பெயரால் 'ஹால்' என்றழைத்து, "ஹால், இப்போது மணி என்ன இருக்கும்?" என்றான்.

இளவரசன்: "ஃபாஅல், உனக்கும் மணிக்கும் என்ன தொடர்பு? பகலும் இரவும் உனக்கு ஒன்றுதானே! நீ பகலிற் குடிக்கிற குடிதான் இரவிலும் குடிக்கிறாய்! இரவில் தூங்குகிற தூக்கம் பகலிலும் தூங்குகிறாய்! பகலில் படுக்கிற நாற்காலிதான் இரவிலும் படுக்கை. அப்படியிருக்க உனக்கு மணி ஒன்றா கெட்ட கேடு?

ஃபால்ஸ்டாஃப்: ஹால், நீ கெடாதவனையும் கெடுத்துவிடுவாய்போ லிருக்கிறது. நகரெங்கும் நான் உன்கூடச் சேர்ந்து கெட்டுவிடுகிறேன் என்று தூற்றுகிறார்கள். அதில் தப்புத்தான் என்ன? உன்னிடம் முனியரசர் வரினும் நெறிபிறழவே செய்வர். இன்னும் சிலநாள் உன்னோடு பழகினால் நானும் கிட்டத்தட்டக் 'காலாடி' ஆய்விடுவேன்போ லிருக்கிறது. நான் இனி, உன்னுடன் சேர்ந்த தீவினை தீர அங்கியணிந்து இறைவனை வழிபடவேண்டும்.

இளவரசன்: (தனக்குள் நகைத்துக் கொண்டு) "அது கிடக்கட்டும், ஃபாஅல், இன்று யார் மடியில் கைவைத்து மாலைச்செலவு கழிக்கலாம்?"

ஃபால்ஸ்டாஃப் (தன்னை மறந்து), "யார் மடியிலானால் என்ன? ஹால், பிள்ளையார் பங்கு எனக்கு என்பதை மட்டும் மறக்காதே.

இதுகேட்டதே இளவரசன் கைகொட்டி நகைத்துப் "பலே, பலே, ஃபாஅல், இறைவனை வழிபடும் முனிவனெங்கே. திருட்டிலும் பிள்ளையார் பங்கு கேட்கும் பக்காத்திருட னெங்கே ?" என்று நகைத்தான்.

ஃபால்ஸ்டாஃப் இதற்கு மறுமொழி பகராது பல்லைக் காட்டினான்.

அச் சமயம், வழித்திருப்பு ஒன்றில் மறைந்து வழிப்பறி செய்யும் அவர்கள் ஆட்களில் ஒருவன் காட்ஸ்ஹில் பக்கம் அன்று நல்ல "வேட்டை" அகப்படும் என்று சொல்லி அனுப்பினான். வழிப்பறியில் தான் நேரடியாகச் சேரப்படாதென இளவரசன் சற்றே விலகப்போனான்.

அதுகண்ட ஃபால்ஸ்டாஃப், "குற்றமற்ற வழிப்பறியில் பங்குகொள்ள அஞ்சும் இளவரசே, நீர் அரசரானால் அங்ஙனம் ஆகும் நாட்டில் நான் இருக்கமாட்டேன். இருந்தால் நான் உமக் கெதிராகக் கிளர்ச்சி செய்து நாட்டுப் பகைவனாகத்தான் வேண்டும்," என்றான்.

இளவரசன், "அரசனானபின் ஆவதை அப்புறம் பார்க்கலாம். இப்போது போய்வருகிறேன்," என்றான்.

அந்நேரம் ஃபால்ஸ்டாஃப் நாவில் கலைமகளின் அருளைப் போன்றதோர் அரிய நகைத்துணுக்கு எழுந்து அனைவர்க்கும் இன்பமூட்டிற்று. அரசன் என்று பொருள் கொள்ளும் 'இறை' என்ற சொல்லுக்கு இருபது வெள்ளிகொண்ட பொற்காசு என்ற பொருளும் இருப்பதைக் குறிப்பாகக் கொண்டு அவன் இளவரசனை நோக்கி, "ஹால், இன்று ஒருபத்து வெள்ளிக்குக்கூட உதவாத நீ நாளை அரை இறைகூட ஆகமாட்டாய்" என்றான். அதுகேட்டு அனைவரும் இளவரசனைப் பார்த்து அவன் இளவரசன் என்பதைக்கூட மறந்து கைகொட்டி நகைத்தனர்.

இச் சிரிப்பினிடையே எப்படியாவது நழுவிச் சென்றுவிட வேண்டும் என்று முயன்ற இளவரசன் காதில் அவர்கள் கூட்டாளிகளுள் ஒருவனுன பாயின்ஸ் என்பவன் ஏதோ கூற, இளவரசன் சட்டெனத் திரும்பி மலர்ந்த முகத்துடன் "ஆகட்டும்; இப் பணியில் நானும் சேர்கிறேன்," என்ருன்.

அன்று காட்ஸ்ஹில் பக்கம் இளவரசனும் ஃபால்ஸ்டாஃபும் பின்னும் நான்கு தோழரும் வந்து சேர்ந்தனர். இளவரசனே செயல்முறைத் தலைவனுக்கப்பெற அவன் அவர்களை இரு திறத்தினராகப் பிரித்தான். ஒரு திறத்தில் ஃபால்ஸ்டாஃபும் இன்னும் மூவரும் இருந்தனர். இவர்கள் வருபவர்களை மடக்கி அவர்களிடமுள்ள காசைப் பறிக்கவேண்டும்; சற்றுப் பின் இளவரசனும் இன்னெருவனும் நின்று தப்பியோடுபவர்களை மறித்துக்கொள்ளவேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

அதன்படியே நால்வரும் தம் குதிரைகளை மறைவில் கட்டிவிட்டுக் குந்தி இருந்தனர். வழிப்போக்கர் வந்ததும் அவர்களை மறித்துத் திட்டப்படி பொருள் பறிக்கப்பட்டது. அதனை மற்ற இருவருக்கும் தெரியாமல் தமக்குள்ளேயே பங்கிட்டுக் கொள்ளலாம் என்று எண்ணி அவர்கள் நால்வரும் இருந்து பங்கிடலாயினர். பங்கிட்டுக்கொண்டிருக்கையில் திடீரெனக் குதிரைமீது காவலர் உடையில் இருவர் இரைந்து அதட்டிய குரலில் "அடி, பிடி, பிடி, கள்வர்" என்று கூறிக்கொண்டுவந்தனர். நால்வரும் உடனே கொள்ளையிட்ட பொருளைக்கூட எடுக்காமல் விட்டு விட்டுத் தப்பினேம் பிழைத்தோம் என்று ஓடத் தலைப்பட்டனர்.

நால்வரிலும் ஃபால்ஸ்டாஃப் ஓடுவதுதான் கண்கொள்ளாக் காட்சியாயிருந்தது. அவர்கள் சற்று நேரத்தில் குதிரைகளைக் கட்டிய இடம் சென்றனர்.

அங்கே யாரோ ஒரு குதிரையை அப்புறப்படுத்தி யிருக்க வேண்டும். மூன்று குதிரைகளே நின்றன. முன் சென்ற மூவரும் மூன்று குதிரைகளிலும் ஏறி மறைந்தனர். அவர்களுக்கு நெடுநேரம் பிந்திவந்த ஃபால்ஸ்டாஃப் தன் குதிரையைக் காணுமல் திகைத்தான். இளவரசன் தான் தன் குதிரையை அப்புறப்படுத்தி யிருக்கவேண்டும் என்று எண்ணி அவனை வைதான். பின் தன் தோழர்கள் தன்னையும் ஏன் உடன்கொண்டு ஓடப்படாது என்று அவர்களை ஏசினுன். குதிரைகொண்டு போனவர்கள்தான் எல்லாக் குதிரைகளையும் கொண்டுபோனுலென்ன; துணையாவது இருக்குமே என்று அங்கலாய்த்தான்.

ஆனுல் அங்கலாய்க்கும் நேரமன்று அது. "அதோ ஒரு திருடன் ஓடமுடியாமல் இருக்கிருன்; அவனைப் பிடி! பிடி!!" என்ற இறைச்சல் கேட்டது. ஐயோ, ஐயோ, பணம் போனதுதான் போயிற்று. காவலன் கையிலும் அகப்பட்டுவிட்டால் நானை இளவரசன் முதலானவர்கள் சிரிப்பார்களே" என்று சொல்லிக்கொண்டு ஃபால்ஸ்டாஃப் கடகடவென் றடித்துக்கொள்ளும் தன் பெரிய தொந்தியை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு விழுந்து விழுந்து எழுந்திருந்து ஓடினுன்.

உண்மையில் அவர்களை அச்சுறுத்தித் துரத்திய இருவரும் காவலர்களே யல்லர்; மாற்றுருக் கொண்ட இளவரசனும் அவன் தோழனுமே யாவர். ஃபால்ஸ்டாஃப் பட்ட பாட்டைக் கண்டு இருவருந் தமக்குள் விழுந்து விழுந்து சிரித்தனர். ஆயினும் இளவரசனுக்கு மட்டும் உள்ளூற ஃபால்ஸ்டாஃப்மீது இரக்கமும் பரிவும் ஏற்பட்டன. அதனை வெளிக்காட்டாமல் அவனும் தோழருடன் சேர்ந்து அவர்களைப் பின் தொடர்ந்து அவர்களை ஏமாற்றி நகையாடுவதில் கலந்துகொண்டான்.

ஃபால்ஸ்டாஃபும் அவன் தோழர்களும் தம்முள் சண்டையிட்டபின், எப்படியும் தம்மைவிட்டுப்போன மற்ற இருவர் முன்னும் தம் தோல்வியைக் காட்டக்கூடா தென்று பேசிக்கொண்டனர். ஆகவே இளவரசனும் அவன் தோழனும் வந்து நயமாக, "இரவு உங்களை வந்து பார்க்குமுன் ஓடிவிட்டீர்களே ; செய்தி என்ன?" என்று கேட்க, அவர்கள் "திருடர் பலர் வந்து எங்களை எதிர்த்தனர். நாங்கள் நெடுநேரம் சண்டை செய்தோம். கொள்ளையிற் கிடைத்த பொருளை ஒரு சிலர் கொண்டு ஓடத் தலைப்பட்டனர். பலரைக் கொன்று குவித்துவிட்டு அவர்களையும் பின்பற்றித் துரத்தினோம். அப்போதும் இறந்தவர்போக மீதிப்பேர் தப்பி யோடிவிட்டனர். சண்டையினால் களைத்து வந் திருக்கிறோம். எங்களை விட்டோடின தோழர்களாகிய நீங்கள் வந்து தொந்தரவு வேறு கொடுக்கிறீர்கள்," என்றனர்.

இளவரசன் புன்சிரிப்புடன் 'திருடர் பலர் என்றிர் களே; செத்தவர் எத்தனை; ஓடியவர் எத்தனை?' என்று கேட்டான்.

அதற்கு மறுமொழியாகப் ஃபால்ஸ்டாஃபின் தோழ ரில் ஒருவன் நால்வர் என்றான். இன்னொருவன் இல்லை; ஆக அறுவர் என்றான். ஃபால்ஸ்டாஃப் 'என்னடா குறைத்துச் சொல்கிறாய்; எட்டுப்பேர் இருப்பார் கள். என் கையினால் மட்டும் ஆறுபேர் இறந்தார்கள். காயம் பட்டவர்கள் வேறும் இரண்டுபேர். போக நால்வர் ஓடினார்' என்றான். இளவரசன் எட்டுப்பேர்தானே வந் தது. இறந்த ஆறும் காயம்பட்ட இரண்டும் போக மீதி ஏது என்று நகைத்தான். ஃபால்ஸ்டாஃப் சினங் கொண்டு "நான்தான் சொன்னேனே சேர்த்துக் கணக் குக் கூட்டிக்கொள்!" என்று கூறிவிட்டுப் 'பின்னும்

ஓடியவர்களுள்ளுந்தான் என்ன; கால் ஒடிந்தவர் ஒரு எட்டுப்பேர் இருப்பர்; மீதி ஏழுபேர்தான் மறைந்திருக்க வேண்டும்' என்றான்.

இவ்வாறாக வாலுந் தலையு மில்லாமல் கூறிய பொய்களை ஏளனம் செய்தபின் இளவரசன் நேரடியாகப் பேசத் தொடங்கித் தாங்கள் செய்த சூழ்ச்சியை வெளிப்படுத்தி, "எங்கள் இரண்டுபேருக்கு அஞ்சியோடிய கோழைகளா எட்டுப்பேரையும் பத்துப்பேரையும் கொன்றீர்கள். கோழைத்தனத்தோடு புளுகும் வேறு குறை?" என்றனர்.

ஃபால்ஸ்டாஃப் அப்போதும் விடாமல் "நான் மட்டிலும் கோழையல்லன். நான் அங்ஙனம் ஓடியது உண்மையேயாயினும், அதற்கு உள்ளூற ஒரு காரணமுண்டு" என்று தன் சிவந்த மீசையை முறுக்கி நிமிர்ந்தான்.

இஃது ஏதோ புது வகைப் புளுகு என்று கண்டு ஆர்வத்துடன் இளவரசன் "அஃது என்ன காரணம்?" என்றான்.

ஃபால்ஸ்டாஃப் பெருமிதப் பார்வையுடன் "என் மனம் ஓடப்படாதென்றுதான் நின்றது. ஆனால் உள்ளுணர்ச்சி ஒன்று தெய்விகமாக ஏற்பட்டுக் கால்களை ஓடும்படி தூண்டியிருக்கவேண்டும்."

இளவரசன் : அஃதென்ன உள்ளுணர்ச்சி ?

ஃபால்ஸ்டாஃப் : பொறு, பொறு, எம்போன்ற சிங்கங்கள் காட்டரசர். தாம் நாட்டரசர் ஆகப்போகிறவர். நாட்டரசரைக் காட்டரசர் எதிர்க்கலாமா ? அதுவும் காட்டில் நாட்டரசர் விருந்தினர் ஆயின் ? என்றான்.

பேச்சுக்கிடமில்லாமல் அகப்பட்டுக்கொண்டது போல் தோன்றிய அவ்விடத்தும் புதுத் துணுக்கு

ஒன்றை உண்டுபண்ணிய அவன் அறிவுத்திறத்தை இளவரசன் மெச்சினன்.

அச் சமயம் ஒரு தூதன் வந்து "மார்ட்டிமரும் கிளென்டோவரும் ஹென்ரி ஹாட்ஸ்பரும் டக்ளஸூம் எல்லாரும் ஒருங்கு சேர்ந்துகொண்டு ஆங்கில அரசரை எதிர்க்கக் கச்சை கட்டிக்கொண்டு நிற்கின்றனர்" என்று கூறினன். ஃபால்ஸ்டாஃப் உடனே இளவரசைப் பார்த்து, "ஹால், இனி என்ன செய்வாய்? நாளை உன் தந்தை உன்னை அழைத்து இத்தகைய நெருக்கடியில் நீ என்ன கோழையாய் இருந்துவிட்டாய் என்பாரே. அப்போது என்ன மறுமொழி கூறுவாய் என்பதை நான் பார்க்கிறேன்" என்ருன்.

இளவரசன்; "ஏன், அதை இப்போதே வேண்டுமானல் பாரேன். நான் அரசர் உடையணிந்து அரசனுக இருக்கிறேன். நீ என் உடையை உடுத்தி இளவரசனுயிரு. அரசர் என்ன சொல்வார் என்று நான் சொல்லிக்காட்டுகிறேன்," என்ருன்.

ஃபால்ஸ்டாஃப் உடனே இளவரசன் உடையை மேலே போட்டுக்கொண்டு இளவரசனது வீறுப்பான நடைநடந்து அரசனுக நடிக்கும் இளவரசனிடம், வந்து, "அரசே, தங்களுக்கு உடம்புக்குக் குணமில்லை என்று கேட்டேன்; நான் செய்யவேண்டுவது ஏதேனும் உண்டா?" என்று கேட்டான்.

இளவரசன், "அசட்டுப் பயலே, தந்தையிடம் இப்படிப் பேசத்தாஞடா கற்றுக்கொண்டாய் இவ்வளவு நாளும்? நீ என்ன செய்வாய் பாவம். நீ நீயாயிருக்கும் வரையில் எவ்வளவோ நல்லவனுய்த்தான் இருந்தாய். அந்த ஃபால்ஸ்டாஃபோ ஃபீல்ஸ்டாஃபோ என்ருெரு சாராயப் பீப்பாய் இருக்கிறதாமே; அதன் சேர்க்கை என்று வந்து சேர்ந்ததோ அன்றே கவைக் குதவாதவ

னுய்விட்டாய். அவன் தோழமையை ஒழித்து நம் குடும்பத்தார்க்கும் அரசியலுக்கும் நேர்ந்த களங்கத்தை என்று ஒழிப்பாயோ எனத் தவங்கிடக்கிறேன்" என்றான்.

அரசன் மொழியில் வைத்துத் தன்னைக் குறை கூறியதற்குப் ஃபால்ஸ்டாஃப் விடை பகருமுன் அந் நகர்ப் புறத்துத் [1] தண்டத்தலைவன் வந்து "ஸர் ஜான் ஃபால்ஸ்டாஃப், ஸர் ஜான் ஃபால்ஸ்டாஃப்" என்று கதவைத் தட்டினான். இஃது அண்மையில் நடந்த கொலையைப் பற்றியது என்று கண்டு அனைவரும் ஃபால்ஸ்டாஃபைத் திரை மறைவில் வைத்துக்கொண்டு தண்டத் தலைவனை ஏமாற்றி அனுப்பிவிட்டனர்.

அதன்பின் திரை நீக்கியபோது அந்தச் சில நொடிகளுக்குள் ஃபால்ஸ்டாஃப் தன் பாரிய மலைபோன்ற உடல்மீது பூசனிக்காய்கள் போன்ற தன் கன்னங்களைச் சாய்த்துக்கொண்டு அயர்ந்து உறங்கிவிட்டது கண்டனர். உறங்குபவர் பொருளை எடுத்துக் கொள்ளும் வழக்கமுடைய அவர்கள், அவ்வழக்கப்படி அவன் சட்டைப்பையைத் தேட, அதில் ஒன்றுமில்லாது ஓர் உண்டிவிடுதிச் சீட்டு மட்டும் இருக்கக் கண்டனர். அச் சீட்டிலிருந்து அவன் கைப்பண மிழந்து காசில்லாமல் போனாலும் கடன் வாங்க மனமின்றி இரண்டுநாளாய் அரைக்காசு உண்டியுடன் இருந்து வந்திருக்கிறான் எனக் கண்டனர். அவனது வெள்ளை மனத்தையும் உயர்வையும் கண்ட இளவரசன் மறைவில், "ஆ! என் அழுக்கினுள் மாணிக்கமே! உன்னை விட்டு நான் எப்படிச் செல்வேன்; ஆயினும் சிலநாளில் செல்லத்தானே வேண்டும்" என்று புலம்பினான். அவன் கண்கள் கலங்கி அவனையும் அறியாமல் ஒரு சொட்டுக் கண்ணீர் நிலத்தில் வடித்தது.

---

1 Sheriff.

# 4. இளவரசன் உருமாற்றம்

அன்று விடிவதற்குள் போருக்குப் புறப்படுவர இளவரசனுக்கு அழைப்பு வந்தது. கழிந்த இரவுடன் தன் வாழ்க்கையின் முதல் இரவே கழிந்து விடிந்தது போல் தன் பழைய வாழ்வாகிய துயிலையும் கனவையும் உதறித்தள்ளிய உள்ளத்துடன் இளவரசன் அரசவைக்குச் சென்றான்.

வெளிக்காண உயிரற்றுத் தவங் கிடப்பதுபோல் தூங்கும் தாள்சுருள் கண்கவர் வனப்பும் சுறுசுறுப்பும் கொண்ட வண்ணாத்திப் பூச்சியாய் மாறுவதுபோல், விளையாட்டு மனப்பான்மையிலும் குறும்பிலும் மறைந்துகிடந்த இளவரசனின் வினையாண்மை சரியான நேரம் வந்ததும் விரைந்து சுற்றுச்சார்புகளுக் கேற்ப மாறிப் புத்துயிர் பெறலாயிற்று. நகைப்பையன்றி வேறொன்றையும் காணாத அவன் பிள்ளையுள்ளத்தில் அன்பும், பிறர் துன்பங் கண்டு பரியும் பரிவும், நன்மை தீமை ஆராயும் ஆராய்ச்சிக் குணமும் படிப்படியாய் ஏற்படலாயின.

கண்டதே காட்சி கொண்டதே கோலம் என அவன் திரிந்த நாட்களில் ஃபால்ஸ்டாஃபின் ஒரு பண்பே, அஃதாவது அவனது இன்பவேட்கை ஒன்றே, அவன் கண்ணுக்குத் தோன்றிற்று; ஃபால்ஸ்டாஃப் உள்ளூறப் படும்பாட்டைக் காணும் கண்ணும் அதற்காக அவன் மீது பரிவுகொள்ளும் உள்ளமும் அவனுக்கு நாளடைவில் தான் ஏற்பட்டன. ஃபால்ஸ்டாஃப் உறவால் தனக்கும் தன் தந்தைக்கும் ஏற்படும் அவதூறும், அதனால் தந்தைக்கேற்பட்ட தப்பெண்ணமும் துயரும் இன்னொரு புறம் அவனை வாட்டியன. இவ்வுறவை நீடிப்பது தவறு என்றும், அஃது அரசனுக்குத் துயர் விளைவிப்பதாகும் என்றும் அவன் அறிந்தான். ஆனால் அவ்

வுறவை முறிக்கலாம் என்றாலோ அதுவும் கொடுமையே யாகும். இரண்டில் எது செய்வது என மிகவும் ஊசலாடியது அவன் உள்ளம்.

இத் தயக்க நிலையில் அவன் அரசனைக் கண்டு அவனடி வணங்கி நின்றான். அவனது மனநிலையில் அவன் நா ஒன்றும் பேசுமாறில்லை. ஆகவே, அவன் மொட்டையாக ‘ அரசே, தம் உடலுக்கு நலமில்லை என்று கேட்டேன் ’ என்று கூறி வாளா நின்றான்.

அரசன் கண்களுக்கும் செவிகளுக்கும், அவ் வுருவினுள்ளும் அம் மொழிகளின் பின்னும் கிடந்த எண்ணங்கள் எப்படிப் புலனாகும்? இதுவரை இளவரசனைப் பற்றி அவன் கேட்டதற்கேற்ப இச் சொற்கள் அவனுக்குப் பொருள் தந்தன. தன் மகனுக்குத் தன்னைக் காணவே நேரமில்லையாதலால் சுருங்கப் பேசித் தொலைத்துவிட்டுப் போகவேண்டுமென்று வந்திருக்கிறான் என்றும், அவனுக்குத் தன்மீது அன்போ தன்னைப்பற்றிய கவலையோ இல்லை என்றும் அவன் நினைத்தான்.

தான் ரிச்சர்டுக்குச் செய்த தீவினையே தன் பிள்ளையுருவாகத் தன்முன் நின்றதென அவன் அப்போது நினைத்தான்.

அவன் உள்ளத்தில் அவன்மீது இறைவன் கொண்டபழி என நின்றது, அவன் பழைய நண்பன் நார்தம்பர்லந்தின் மகனாகிய அந்த மற்ற ஹென்ரியின் உருவம்.

ஆயினும் பிள்ளை மனம் என்ன கல்லானாலும் பெற்ற மனம் பித்து என்பதற்கேற்ப, அவன் ‘ தசையும் குருதியும் தம்முட் கலந்தா ’ லென்ன மகனை வாரி எடுத்தணைத்து, அவன் தோள்களையும் தன் தோள்களையும் ஒத்து நோக்கி, “ ஆ இத் தோள்களின் சுமையைத்

தாங்கும் தோள்களைப் படைத்தும் இத் தலை தாங்கும் முடியினைத் தாங்கும் தலையினை மட்டும் இறைவன் படைத்திலனே" என்று தன் வருத்தந் தோன்றக் கூறினான்.

"தந்தையே, நான் இயற்கை யுணர்ச்சியின்பாற் பட்டுச் சிறுபிள்ளைத்தனமா யிருந்துவிட்டேன் என்பது உண்மையே. ஆனால் வேண்டும்போது நான் பொறுப்புணரக் கூடாதவன் அல்லன். இன்றுவரை நான் வாழ்ந்த சோம்பல் வாழ்வினையும் இயற்றிய தீங்குகளையும் மனமார மன்னிக்கும்படி தங்களை வேண்டுகிறேன். அவற்றை யெல்லாம் என் நற்செயலால் இனிக் கழுவுவேன்" என்றான் அவன்.

மகன் இவ்வளவு இனிய மொழிகளாவது சொல்கிறானே என்று பேராறுதலடைந்தது அரசன் நெஞ்சம். ஆனால் இன்னும் மகன் உண்மையில் கழிவிரக்கங் கொள்ளுவதாகவோ திருந்துவதாகவோ அவன் நம்பக் கூடவில்லை. ஆதலின் சற்றுத் தாழ்ந்த குரலில் "மகனே, உனது நல்லெண்ணத்திற்கு நன்றி யுடையேன். பிற பிள்ளைகள் தந்தைக்கு ஆற்றும் கடனைக் கேட்கும் போதெல்லாம், பிற பிள்ளைகள் தந்தையிடம் காட்டும் அன்பைக் காணும்போதெல்லாம் நான் என் வயிற்றையும் என் தீவினையையும் நொந்து கொள்கிறேன். நீ கவலையற்று இன்ப வாழ்க்கை வாழ்கிறாய்" என்றான்.

தந்தையின் ஆற்றாமை கண்டு, மகன் உளநைந்து தந்தையிடம், "கழிந்ததை நினைத்து மனம் புண்படவேண்டா என்று தங்களை வேண்டுகிறேன். இனித் தங்கள் முகம் மலரும்படி செய்வது என் கடமை. ஆம், அது என் கடமை. இனி எந்தப் பிள்ளையையும் எந்தத் தந்தையையும் கண்டு தாங்கள், மனம் நையவோ தலை குனியவோ வேண்டாம்," என்றான்.

ஏற்கெனவே ஆறுதலுற்ற அரசன் உள்ளத்தில் மின்னலின் நிழல்போலும் ஓர் ஒளி விசிற்று. அரசன் தன் மகன் தலையைத் தடவி, "ஆ! சீர்திருத்தத்தின் குறி உன்னிடம் காண்கிறது. அந்த நார்தம்பர்லந்து மகனுக்கு இணையான புகழ் என் மகன் அடைய நான் என்று காண்பேனே, இறைவனே!" என்றான்.

இளவரசன் உள்ளத்தின் ஆழத்தில் கிடந்த தன் ஆண்மை, வீரம் முதலிய யாவற்றையும் இச் சொல் முழுமையும் கிளப்பிற்று. தந்தை கண்ணில் நார்தம்பர்லந்து மகனுக்கிருந்த உயர்வும் தனக்கிருந்த தாழ்வும்—கேவலம் குடிமக்களுள் ஒருவனுடைய பிள்ளையைக் கண்டு அழுக்காறுடன் மனம் புழுங்கும் நிலையிலே தான் தன் தந்தையை வைத்திருக்கிறோம் என்ற நினைவும்—எல்லாம் சேர்ந்து, அவனை உயிருடன் கொன்றது என்னல் வேண்டும். நெடுநேரம் கற்சிலைபோல நின்றிருந்து பின் அரசனை நோக்கி, "அரசே, என் தந்தையே, நீர் பெரிதாகக் கொள்ளும் அந்த ஹாட்ஸ்பரின் உயிர் குடித்தன்றி யான் உயிருடன் இப் போரில் நின்று மீளேன்; அன்றேல் தாங்கள் தற்போது அணைத்துக்கொண்ட தோள்களைத் தீண்டத் தகுதியுடையவன் ஆகேன்!" என்று கூறிக்கொண்டு மின்னென மறைந்தான்.

## 5. பகைக்கலத்தில் உட்கிறல்

ஹென்றி இளவரசனின் கோள் இப்போது கீழ்வானில் எழலாயிற்று. ஹென்றி ஹாட்ஸ்பரின் கோள் அதே சமயத்தில் உச்சத்தில் சென்று திரியலாயிற்று.

கிளர்ச்சிக்காரர் நால்வரும் ஒன்றுசேர்வதாக வாக்களித்த நாளே ஹாட்ஸ்பரின் செல்வாக்கு உச்சத்தில் நின்ற நாள். அன்று அவன் சொல்லுக்கு மேற்சொல் இல்லை. அவனைக் காண்பதினும் அன்று வேறு பேறு

இல்லை. வீர இளைஞர் தம் காதற் கன்னியரின் முத்தங்களைக் கூடப் புறக்கணித்துவிட்டு அவன் கடைக்கண் பார்வைக்கும் அவன் புகழில் பங்கடைவதற்கும் அங்கலாய்த்து நின்றனர். மங்கையர் தம் கிளிகளுக்கும் பூவைகளுக்கும் ஹாட்ஸ்பர், அதோ ஹாட்ஸ்பர் என்று கூறக் கற்றுக் கொடுத்திருந்தனர். அவர்கள் தம் நெஞ்சினுள்ளாக ஹாட்ஸ்பரை ஒத்த மைந்தர் பிறக்கவேண்டும் என்று இறைவனை வணங்குவதும், பிறந்ததாகவே கனுக் காண்பதுமாக இருந்தனர்.

ஹாட்ஸ்பரின் பெயர் கேட்டதே வீரரெல்லோரும் வெற்றி நமதே, புகழ் நமதே என ஆரவாரித்த வண்ணம் நின்றனர். நாலா பக்கங்களினின்றும் வந்து குவியும் வீரர்களால் படை எழுகடலும் திரண்டு வந்ததுபோல் பெருகிற்று.

ஆனால் பொன்னும் மணியும் பதித்து நறுமலர்மாலை சூட்டி வெளி அழகு நிறைந்த வீணையில் உட்கீறல் மறைந்து கிடந்தால் எப்படியோ அப்படியே கிளர்ச்சித் தலைவர்களான வொர்ஸ்டர், ஸர் ரிச்சர்டு வெர்னன் முதலியவர்களுடைய உள்ளத்தில் இத்தனை கோலாகலங்களிடையேயும், ஒருவகை அவநம்பிக்கை ஏற்படலாயிற்று. 'ஹாட்ஸ்பர் எங்கோ, அங்கு வெற்றி' என்று நம்பியிருந்த படைவீரர்களையோ அவர்களுடைய அன்றைய தனிப்பெருந் தலைவன் ஹாட்ஸ்பரையோ இது தாக்கவில்லை.

படைத் தலைவர்களது இவ் வவநம்பிக்கைக்குக் காரண மில்லாமலில்லை. கிளர்ச்சியில் சேர்ந்தவர் நார் தம்பர்லந்து, கிளென்டோவர் ஆகிய இருவரும் நாவளவில் படையில் சேர்வதாகச் சொல்லிக்கொண்டு காலங் கடத்திவந்தனர். [1]ஷ்ரூஷ்பரி என்னுமிடத்தில் வந்து

1 Shrewsbury,

கலந்த ஹாட்ஸ்பரின் படையும் டக்ளஸின் படையும் அவர்களுக்காக நாள் கணக்கில் காத்திருந்தன.

கிளென்டோவரின் தாமதத்திற்கு ஹாட்ஸ்பர்தான் காரணம். வேல்ஸ் நாட்டு மக்கள் வெள்ளை மன முடையவர்கள். தம் நாட்டிலும், தம் இலக்கியத்திலும், தம் பழங்கதைகளிலும் பெரும் பற்றும் வீறும் கொண்டவர்கள். விருந்தினரை ஏற்று முகமன் கூறுவதிலும் நண்பரையும் அண்டினோரையும் உயிரைக் கொடுத்துக் காப்பதிலும் அவர்களுக்கு இணை வேறு இல்லை. ஆனால் அவர்கள் மயிர்படின் வாழாக் கவரிமான் அன்ன மானமும், தொட்டால்வாடி யன்ன கடுஞ்சொல் பொறு மனமும் கொண்டவர்கள். கலையுணர்ச்சியோ ஈர நெஞ்சமோ அற்ற வட நாட்டானும் முன்பின் அறியாது பாயும் இளங் காளையுமாகிய ஹாட்ஸ்பர் அவன் தற்பெருமையைக் குலைத்து வெட்டி வெட்டிப் பேசி, அவனை மீண்டும் மீண்டும் புண்படுத்தினன்.

இருவருக்கும் உறவினனான மார்ட்டிமர் ஹாட்ஸ்பரை எவ்வளவோ அமைதிப்படுத்த முயன்றும் முடியாமல் இறுதியில் கிளென்டோவரையே அமைதிப்படுத்தி இருவரையும் சேர்த்துவைத்தான்.

ஹாட்ஸ்பர் உண்மையில் யாவரிடமும் தெறி பேசுவோனுதலால், இதில் பகைமை யுணர்ச்சியும் கொள்ளவில்லை. அதனை நினைவில் வைக்கவும் இல்லை. ஆனால் கிளென்டோவர் மனத்தில் அவன் சொற்கள் நின்று அரித்தன. போரிலும் நேரிலும் எதிர்ப் பறியாத வீரனுகிய அவன், விருந்தினனுய் வந்தவிடத்துப் பெற்ற இவ்வவமதிப்பை நினைத்துப் பலகாலும் புழுங்கினன். மார்ட்டிமர், தான் உயிரினும் அருமையாகப் பாராட்டிய தன் வேல்ஸ் நாட்டு மனைவிக்கு இந்த கிளென்டோவர் தந்தையும் வணங்கும் நாட்டுத் தெய்வமுமாக இருந்தமை

யின், அவனும் ஹாட்ஸ்பர் மீது பெருஞ்சினம் கொண்டா னெனினும், ஹாட்ஸ்பர் தன் மைத்துனனுனமையால் அதனை அடக்கி, அரை மனதுடன் அவன் பக்கம் நின்றான்.

கிளர்ச்சிக்காரருள், விலகி நின்ற மற்றத் தலைவன் ஹாட்ஸ்பரின் தந்தையாகிய நார்தம்பர்லந்தே. அவன் ரிச்சர்டுக்கு வஞ்ச மிழைத்தவன்; ரிச்சர்டு கற்பரசியான மனைவியுடன் சில நொடிகள் பேசுவதைக்கூடத் தடுத்த மாபாவி. ரிச்சர்டு அன்று அவனிடம் "நீ முடியரச னுக்கு இழைத்த வஞ்சம் நின் கைப்பிடி அரசனுக்கும் இழைப்பாயாக; நீ பிறர் குடிக்கு இழைத்த வஞ்சம் நின் குடிக்கும் இழைப்பாயாக!" என்று கூறியிருந்தான். அம்மொழி பொய்க்காவண்ணம் இன்று அவன் மகனே தலைமை வகித்து நடத்தும் கிளர்ச்சியில் சேர அவன் மனம் தயங்கலாயிற்று. இதற்கும் அவன் கோழைத் தனமே காரணம். பெரும்பாலும் வெற்றி தன் மகன் நின்ற புறமே என்று அவன் நம்பியபோதிலும், தோல்வி யுற்றால், அப்போதும் தான் வெளியில் நின்று அவனை மீட்கலாமே என்றும் அவன் கோழை யுள்ளம் அவனுக் குப் பகர்ந்தது. ஆகவே அவனும் வடக்கில் தங்கி நின்று கிளென்டோவரைப் போல நாட்கடத்திக்கொண்டே வந் தான்.

அரசன் பக்கத்தின் நிலைமை இவ்வளவு நம்பிக்கைக் குறைவாயில்லை. ஹென்ரி அரசன், பழைய அரசனாகிய ரிச்சர்டைப் போலாது, தன் படைகளை நல்ல நிலைமையில் பயிற்றுவித்தும், மனநிறைவுடன் வைத்துக் காத்தும் வந்தவன். அத்துடன் அவன் பெருங்குடிமக்களைப் பகைத்தனனேயன்றிப் பொதுமக்களை இன்மொழிகளா லும் நடுநிலை ஒழுங்காலும், தண்ணளியாலும் காத்துப் பாராட்டிவந்தான். அதனால் அவர்கள் அவன் படை

யின் குறைவை நிறைவுபடுத்தி ஆயிரக்கணக்கில்வந்து சேர்ந்தனர். மேலும் இளவரசன் அரசன் பக்கம் நின்றுழைத்தது, அரசன் நினைத்ததைவிட மிகவும் நல்ல பயனளித்தது. இளவரசன் இழிந்த மக்களுடன் ஒப்ப நடந்தது நாடுமுற்றிலும் அவனுக்குக் கெட்டபெயர் தந்திருக்கின்றது என்று அரசன் செவியிற் பட்டிருந்தது. இஃது ஓரளவு உண்மையே. இளவரசன் நல்லவன், எளியவர்க் கெளியவன் என்று மக்கள் கொள்ளினும், அவன் போர், அரசியல் இவற்றில் துணிந்திறங்காதவன் என்றே அவர்கள் கொண்டனர். அவனைப் பெருமக்களும் அரசனும் கொண்டதேபோல் அவர்களும் இன்ப விருப்பினனும் சோம்பேறியும் என்றே கொண்டனர். ஆனால் அவன் அதையெல்லாம் விட்டுப் போருக்கெழுந்து ஆள் சேர்க்க இறங்கியதே மக்கள் "எம் அன்னை வருக, எம் அப்பன் வருக, எம் குல விளக்கே வருக, எம் நாட்டுத் தெய்வமே வருக" என்று அவன் கொடியைச் சூழ்ந்து மொய்க்கலாயினர். விரைவில், அரசன் படைக்கொத்த அளவும், அதனினும் பன்மடங்கு கொந்தளிப்பும், ஆர்வமும் கொண்ட நாட்டுப்படையுடன் இளவரசன் போர்க் கெழுந்தான்.

இளவரசனிடம் இதற்கு முன் ஃபால்ஸ்டாஃப் ஒரு தடவை "ஹால், நீ அரசனுடன் சண்டைக்குச் சென்றால் என்னையும் அழைத்துச் செல்வாயா?" என்று கேட்டிருந்தான். இளவரசன் நீ என்ன செய்ய முடியும் என்று ஏளனஞ் செய்ய, ஃபால்ஸ்டாஃப், 'நீ மட்டும் என்னை என் பொறுப்பிலேயே ஒரு சிறு படை வகுப்பின் தலைவனாக்கிப் பார். அப்போது உன் வெற்றி தோல்விக்கு நான் எவ்வளவு உதவுவேன் என்று காண்பாய்' என்றான். ஃபால்ஸ்டாஃப் இவ் வேடிக்கைப் பேச்சை மறந்துவிட்டான். இளவரசன் மறவாது அவனிடம் சென்று, "ஃபாஅல், நான் அரசனுக்காகப் போருக்குச் செல்

கிறேன். இதோ உன் உடையும் உன் உரிமைத்தாளும். நீ இப்போது ஒரு காலாள் தலைவன்; நீயும் தக்க வீரரைச் சேர்த்துக்கொண்டு விரைவில் வருக" என்று கூறி யகன்ருன்.

அதே சமயம் அவன் ஃபால்ஸ்டாஃபின் தோழரில் ஒருவனை பார்டால்ஃபை இளவரசன் ஜானிடம் தூதனுக அனுப்பி அவனையும் விரைவில் படையுடன் வரும்படி ஏவினுன்.

தன் உரிமைத்தாளை வைத்துக்கோண்டு ஃபால்ஸ் டாஃப் முதலில் நல் நிலையுடைய நடுநிலை மக்கள், வணிகர், மணஞ்செய்யும் நிலையிலுள்ள இளைஞர் முதலியவரை யண்டி அரசர் படையில் சேருமாறு வற்புறுத்தினுன். அவன் எதிர்பார்த்தபடியே அவர்கள் பணத்தைக் கொடுத்து விடுதலைபெற மன்ருடினர். இங்ஙனம் சேர்த்த பணத்தைக் கையில் வைத்துக்கொண்டு சோற்றுக் கற்றவர், சிறையிலிருந்து விடுதலை பெற்றுப் பிழைக்க வழிதெரியாதவர் ஆகிய வற்றல் மக்களைச் சேர்த்து ஒரு சிறு காலாள் வகுப்புடன் அவன் போருக்குப் புறப் பட்டான்.

மன்னர் படை வருகிறது என்று கேட்டதே கிளர்ச் சிக்காரப் படைகளிடையே பரபரப்பும் போருக்கு ஒருக்கம் செய்யும் அரவமும் எழுந்தன. அப் படையுடன் இளவரசனும் வருகிருன் என்றறிந்த ஹாட்ஸ்பர் அவனை எதிர்க்க ஆவலுடன் விரைந்தான். இளவரசன் இதுவரை போரில் தன்னைப்போல் ஈடுபடாவிடினும், மக்கள் மனமாகிய கோயிலில் தன் இடம் பெறப் போட்டிக்கு நிற்பவன் என்று ஹாட்ஸ்பர் அறியாமலில்லை. போராலும் வெற்றியாலும் தான் வீரரால் எவ்வளவு போற்றப் பெறினும், இளவரசனிடம் காட்டும் அன்பை யாரும் தன்னிடம் காட்டவில்லை என்பதை அவன் உணர்ந்தான்.

அதன் காரணம் இளவரசன் மக்களிடம் உயர்வுதாழ்வின்றி ஊடாடும் தன்மையே என்று அவன் அறியான். இதுவரை அவன் வழி வேறு, தன் வழி வேருயிருந்ததால் அவனை நேரிட் டெதிர்த்துவெல்ல வகையில்லாதிருந்தது. இப்போது அவன் வருகிருன் என்று கேட்டதே அவனை எதிர்த்தடக்க அவன் உடலின் உறுப்புக்கள் ஒவ்வொன்றும் தனித்தனி கொதித்தெழுந்தது. தம் உயிர்ப் பகைவன் வருகிருன் என அவை துடித்தன போலும்!

இந் நிலையில் அரசர் பக்க நின்று [1]ஸர் வால்ட்டர் பிளன்ட் என்ற தூதன் கிளர்ச்சிக்காரரிடம் வந்து அமைதி கோரிப் பேசினன். ஹாட்ஸ்பர் அவனிடம் சீற்றத்துடன் "நார்தம்பர்லந்துக் குடி, நும் அரசருக்கு முடியளித்ததற்கு அவர் காட்டிய நன்றி போதும். அப்போதளித்த வாக்குறுதிகள் என்னவாயின, என்றறிந்த பிறகு அவர் வாக்குறுதியை இன்னும் ஏற்கத்தக்க பித்தராயில்லை நாங்கள்" என்று கூறியனுப்ப இருந்தான். ஆனல், [2]வொர்ஸ்டர் முதலிய பிற தலைவர்கள் அவ்வளவு திமிராய்ப் பேசவேண்டாம் என்றதன் மேல், அவர்களையே அரசனிடம் அனுப்பி ஒப்பந்தம் செய்ய ஏற்ருன்.

மறுநாள் கீழ் வான் குருதி கக்கி நிற்கும் நேரத்தில் கிளர்ச்சிக்காரரது படைவீட்டினின்று வொர்ஸ்டரும் [3]வெர்னனும் அரசன் படைவீட்டிற்குச் சென்றனர். அரசன் முன்னும் நார்தம்பர்லந்துக் குடியின் பழங் குறைகள் படிக்கப்பட்டன. அரசன் அவற்றை ஆராய்ந்து வேண்டுவன செய்வதாகவும் போர்நிறுத்தும் கிளர்ச்சிக்

1 Sir Walter Blunt.
2 Worcester.
3 Vernon.

காரர் குற்றங்களைத் தண்டனை யின்றி மன்னிப்பதாகவும் வாக்களித்தான். அரசன் பக்கத்தில் நின்ற இளவரசன் மட்டும் குறும்பாக, "இவற்றை ஏற்காவிடில் இரு புறத்தும் நாட்டுக்குடிகள் வீணில் போர் செய்து அழி வதைவிட உம் பக்கத் தலைவனை ஹாட்ஸ்பர் என்னுடன் தனிச் சண்டைக்கு வரும்படி கூறுங்கள். அவன் வருவ தாயின் அதன்மூலம் வெற்றி தோல்விகளை எளிதில் வரையறுத்து விடலாம்," என்றான்.

இளவரசன் வாக்கு விளையாட்டானது என்றறிந்து வெர்னன் அரசனது வாக்கை நம்பிக்கையாக, ஏற்ப தென்றே முடிவு கொண்டான். ஆனால் வொர்ஸ்டருக்கு அரசன் வாக்குப் பிடிக்கவில்லை. வன்மையுள்ள ஹாட்ஸ்பர், நார்தம்பர்லந்து முதலியவர்க்குக் கொடுக்கப் படும் மன்னிப்பு, வலி குன்றிய, ஆனால் தீமையில் முந்திக்கொண்ட தன்போல்பவருக்குக் கொடுக்கப் படா தென்று அவன் நினைத்தான். ஆகவே அரசன் காரியம் கைகூடும்வரை பசப்புமொழி பகர்வானென்றும், ஆதலின் அவன் சொல்லை நம்பி அப்படியே போய்ச் சொல்லவேண்டாம் என்றும், எதிரிகள் அப்படியே போய்விட்டால் மன்னிக்க மட்டும் அரசன் ஒருப்படுவ தாகக் கூறவேண்டும் என்றும் வெர்னனிடம் வற்புறுத்தி னான். மேலும், 'இளவரசன் ஹாட்ஸ்பருக்குத் தந்த போரழைப்பையும் அழுத்தந் திருத்தமாக எடுத்துரைக்க வேண்டும்' என்றான்.

இதன் பயனாகக் கிளர்ச்சிக்காரரும் போர்செய்வ தென்று தீர்மானஞ் செய்தனர்.

## 6. ஷுரூஸ்பரிப் போர்

இளவரசனது போரழைப்புக் கேட்டு ஹாட்ஸ்பர் மதயானையின் முழக்கங் கேட்ட வேங்கை யென்னச் சீறிப் பாய்ந்தான்.

அன்று ஷ்ரூஸ்பரியில் நடந்த அப் போரில் முதலில் வெற்றி கிளர்ச்சிக்காரர் பக்கமாகவே தோன்றிற்று. அரசன் படைகள் எவ்வளவு பயிற்சி பெற்றவையா யிருப்பினும், டக்ளஸினுடைய ஸ்காத்லந்துப் படையின் தாக்குதலுக்கு முன் நிற்கமாட்டாமல் பின்னடையத் தொடங்கின. அதே சமயம் கிளர்ச்சிக்காரர் பக்கத்துள்ள மார்ட்டிமரின் வேல்ஸ் நாட்டு வில்லாளிகள் கூரிய அம்புகளால் படையின் பக்கங்களைத் துளைத்தனர். டக்ளஸ் தன் ஒப்பற்ற குதிரைமீதேறி வலசாரி இடசாரியாகச் சுழன்று கைவாளால் எதிரியின் அம்புகளைத் தடிந்து, எதிரிகளையும் அவர்கள் குதிரைகளையும் தட்டின்றி வெட்டி வீழ்த்தினன். ஆயினும் இவற்றால் மனநிறைவு அடையாமல் எப்படியாவது அரசனைக் கண்டுபிடித்து அவனை அழிக்கவேண்டும் என அவன் வந்தான்.

அரசன் உயிர் போரில் மிகவும் விலையேறியதாதலின் இளவரசன் ஏற்பாட்டின்படி, அரசனுடை அணிந்து அரசன்போல் நடிப்பவர் பலர், படையின் பல் பகுதிகளில் நிறுத்தப்பட்டனர். அவர்களில் ஒருவன் ஃபால்ஸ்டாஃப். டக்ளஸ் அவனைத் தொலைவில் கண்டு அரசன் என்று மனத்துட் கொண்டு அவனை நோக்கி வந்தான். அது கண்ட ஃபால்ஸ்டாஃப் குதிரையைவிட்டிறங்கிச் சரேலென்று மண்ணில் கிடையாய் வீழ்ந்து கிடந்து, செத்தவன்போல் நடித்தான். அவன் உருவாலும் நடிப்பாலும் அவன் அரசனல்லன் என்று கண்டு டக்ளஸ் அவனை விட்டுவிட்டுப் பின்னும் அரசனையே நாடிச் சென்றான்.

டக்ளஸால் நிலைகுலைந்து வரும் மன்னன் படைப் பக்கம் இளவரசன் தனது உணர்ச்சி மிக்க படையுடன் வந்து தாக்கி எதிரியைப் பின் வாங்கச்செய்து வீரரை ஊக்கினன். அன்றைப்போரில் அவன் மூக்கில் ஆழமாக

ஓர் அம்பு பாய்ந்தது. அதனையெடுத்து மருந்திட்ட பின் அவன் மருத்துவர் அறிவுரையைக்கூடக் கேட்காது மீட்டும் போர்க்குப் பாய்ந்தெழுந்தான்.

இறுதியில் அவன், ஃபால்ஸ்டாஃப் கீழே விழுந்து போர்த் தடுமாற்றங்களுக் கிடையில் எழுந்திருக்க முடியாமல் கிடக்கும் பக்கமாகப் படைகளைப் பிளந்துகொண்டு செல்கையில் நேருக்கு நேராகத் தான் எதிர்க்க விரும்பிய பகைவனுகிய ஹாட்ஸ்பரைக் கண்ணுற்றான்.

இருவருக்கும் தம் நாள்—மாளாப் புகழோ மாள்வோ வந்தெய்தும் நாள்—வந்ததெனத் தெற்றென விளங்கிற்று. இனியும் உலகில் இவ்விரு ஞாயிறுகளும் எழுந்து ஒளிவீச முடியாது ; ஒருவர்க்குத்தான் இவ்வுலகில் இடமுண்டு. என்பதை இருவரும் அறிந்தனர். இருவரும் பாயப் பதுங்கும் புலிகள்போல் சற்றே பின்வாங்கிப் பின் ஒருவர்மேல் ஒருவர் சீறி விழுந்தனர். முதலில் ஈட்டியுடன் ஈட்டி மோதின. அவை முறிந்த பின் வாளொடு வாள் பொருதன. பின் மீண்டும் குதிரைமீதேறி ஒருவர்மீதொருவர் சாடினர். ஹாட்ஸ்பர், இளவரசன் குதிரையை மூன்று தரம் வீழ்த்தினான். இளவரசன், ஹாட்ஸ்பரின் தலையணியைப் பலகால் உதைத்தான். இருவர் உயிரும் உடலும் வரம்பெற்றவைபோல் தோன்றின. அடிக்கடி இருதிறத்தார் கவனத்தையும் பிரிக்க அவர்களுடைய எதிரிகள் முயன்றனர். ஆயின் புலியேற்றையும், சிங்கவேற்றையும் எதிர்க்கவல்லது பிற ஏறுகுமோ! அவர்கள் தமக்குத் தாமே இணையாய்—நெடுநேரம் நின்று பொருதனர்.

அவ் விருவர் குண வேற்றுமைகளும் அவர்கள் போர் முறையிலும் விளங்கின. ஹாட்ஸ்பர் மதயானைபோல் பொங்கி எழுவான். பாம்புபோல் சீறுவான். புலிபோல் வெறித்த நோக்குடன் வாளுந் தானுமாய் இளவரசனை நோக்கிப் பாய்வான். ஆனால் இளவரசனோ

தன் நிலை குலையாது வைத்தகால் பின் வாங்காது நின்று எதிரி வன்மை குறைந்தவுடன் பரபர வென்று சிலந்தி தன் வலையிலகப்பட்ட பூச்சியைச் சுற்றுவதுபோலச் சுற்றி அவன் உடல் முற்றும் வாளால் சல்லடை சல்லடையாகத் துளைத்தான். இறுதியில் குருதி தோய்ந்த ஹாட்ஸ்பர் உடலம், வலியற்றுக் குற்றுயிராய்க் கீழே வீழ்ந்தது.

ஹாட்ஸ்பர் வீழ்ந்தான் என்னும் சொல் எப்படியோ நம்பிக்கை யற்ற அவன் படைகளூடு நெடுக விரைந்து சென்றது. மின்வலி யேற்ற நெடுமரம் என்ன, அச் செய்தி கேட்ட படைவீரர் தம் நிலை குலைந்து வலியிழந்து நின்றனர். பகைவர் அம்பு மாரிக்கும் வாள் வீச்சுக்கும் ஆற்றாது படைகள் சிதறத் தொடங்கின. பிற தலைவர்கள் எவ்வளவோ முயன்றும் ஓடும் ஓட்டத்தைத் தடுப்பதற்கு மாறாக அதன் இழுப்புவன்மையிற் பட்டுத் தாமும் ஓடவே நேர்ந்தது. போர், அரசனுக்கும் இளவரசனுக்கும் ஒப்பற்ற வெற்றியாய் முடிந்தது.

போர் முடிவில் இளவரசனும் அரசர் பக்கத்துத் தலைவர்களும் இளைப்பாறிச் சிற்றுண அருந்திக்கொண்டிருக்கையில் ஃபால்ஸ்டாஃப் ஒரு பிணத்தைத் தூக்கிக்கொண்டு—"ஹால், ஹால், இதோ பார்! உன் வெற்றி என்ன வெற்றி? உன் பகைவனை நான் அல்லனோ கொன்று தூக்கிக்கொண்டு வருகிறேன்" என்றான்.

இளவரசன்: என்ன இது; ஹால்! ஏன் பிணத்தைத் தூக்கிச் சுமந்து வருகிறாய்?

ஃபால்ஸ்டாஃப்: பிணமன்று, ஹால்; இஃது உன் பகைவன் போர்க்கஞ்சா இளஞ்சிங்கம் ஹாட்ஸ்பர்; உன்னால் கொல்ல முடியாதென்று விடப்பட்ட இவனை நான் என் கைவாளால் வெட்டிக் கொன்று தூக்கிவருகிறேன்.

இளவரசன்: இவனை நீ கொல்லவில்லை. நான் கொன்று போட்டிருந்தேன். அதோடு இவன் பக்கமே நீயும் செத்துக் கிடந்ததைக் கண்டேனே.

ஃபால்ஸ்டாஃப் : சிவசிவா ! இளவரசன் 'இள' அரசனு யிருக்கும்போதே இவ்வளவு பொய் சொல்கிருனே; இனி அரசனுய்விட்டால் எவ்வளவு சொல்வானே! நான் உயிருடனிருக்கும்போதே செத்துவிட்டேன் என்று கூறியது போலத்தா னிருக்கும் ஹாட்ஸ்பர் இருக்கும்போது கொன்றுவிட்டதாக நீ கூறுவதும் ! அப்பாடா ! அவனும் நானும் சண்டை செய்து களைத்து ஓய்ந்துகிடந்தோம் என்பது மட்டும் மெய். அப்போது இளவரசன் வந்து பார்த்துவிட்டு நாங்கள் இருவரும் செத்துவிட்டோம் என்று நினைத்து என் வீரத்தையும் புகழையும் எளிதில் திருடி மேற்கொண்டு விடலாம் என்று பார்த்திருக்கிறுன் ! என்ன இருந்தாலும் இங்கிலாந்து அரசராக, இவ்வளவு திறம் வேண்டியதுதான் !

இளவரசன் : "அடே, உன்கூடப் பேச எனக்கு நேரமில்லை ; உன் பொய்க்கோட்டையைக் கட்டிப் புளுகுக் கொடி பறக்கவிட்டு நீயே அரசனு யிரு. நான் படுகள நிலையைப் பார்வையிடச் செல்கிறேன்," என்று அகன்றுன்.

போரில் தோற்றவருள் டக்ளஸ் இனிச் சண்டை செய்வதால் பயனில்லை என்று கண்டதன்பின் களத்தினின்றும் ஓடுகையில் குதிரை தள்ளிக் காயம்பட்டு வீழ்ந்து சிறைப்பட்டான். அவன் தூய வீரனும் தன்னுட்டுப் பற்றுமிக்கவனும் ஆனவன் என்ற காரணத்தால் அவனை மன்னித்து விடுதலைசெய்து அவன் நாட்டிற்கு அனுப்புமாறு இளவரசன் அரசனை வேண்டினுன்.

வொர்ஸ்டரும் வெர்னனும் சிறைப்பட்டனர். இவர்கள் தூதில் பொய் சொன்ன தன்னலக் கயவராதலால் இவர்களைத் தூக்கிலிடும்படி இளவரசன் கட்டளை யிட்டான. பகைவரே யாயினும் டக்ளஸைப்போல் உண்மையாக நின்று தம் தலைவருக்குதவினுல் தோற்ற பகைவருக்குரிய மன்னிப்பு இவருக்கும் உண்டு. இவர்கள் பகைவரையன்றித் தமரையும் பகைத்தவராதலின்

தெய்வத்துக்கும் உண்மைக்கும் பகைவராவர். இவ்வுலகில் மக்கள் பழியால் உயிர்ப்பிரிவும், மறு உலகில் இறைவன் பழியால் எல்லையில்லாத ஓய்வற்ற நரகமும் இவர்க்குரியன என்று இளவரசன் அவர்களைத் தூக்கிலிடுகையில் மக்களுக்குக் கூறினன்.

ரிச்சர்டு அரசனைக் கொன்ற பழியின் ஒரு பகுதி, ஹென்ரி அரசனது ஆட்சியை விழுங்க முயன்றது. இளவரசனது தூய உள்ளத்தின் மாண்பால், அப் பழியின் பகுதியை ஹென்ரியின் ஆட்சி விழுங்கிநின்றது..

---

# நான்காம் ஹென்ரி

பகுதி உ

## 7. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும்

ஷ்ரூஸ்பரிப் போரில் அடைந்த வெற்றியில் ரிச்சர்டு மன்னனின் பழி முற்றிலும் போய்விடவில்லை. ஒரு பகுதி இன்னும் மிகுந்தே இருந்தது. மன்னன் நல்லாட்சி முறையாலும் இளவரசன் நல்லெண்ணத்தாலும் பொதுமக்கள் துணையாலுமே அப்பழி தற்காலிகமாக வேனும் அமைதியுறலாயிற்று. பின் ஐந்தாம் ஹென்ரி அரசனை இளவரசனது நன் முயற்சியினளவே அதன் தடையின் அளவாக நின்று, அஃது இரண்டாண்டுக்குப்பின் மீண்டும் எழுந்து ஏழாம் ஹென்ரியின் ஆட்சியிலேயே ஓயலாயிற்று. அதற்கிடையில் அது தனக்கு இரையாகக் கொண்ட குருதி வெள்ளம் மட்டற்றது.

ஷ்ரூஸ்பரிப் போரில் சேராதிருந்த பகைவர் இருவர். அவருள் முதல்வன் வேல்ஸ் தலைவன் கிளென் டோவர். இவன் ஷ்ரூஸ்பரிப் போர்க்குப் பின் வேல்ஸ் மலைகளிடையில் பதுங்கி நின்று அடிக்கடி இங்கிலாந்திடம் தன் மருமகன் தோல்விக்குப் பழிவாங்கிவந்தான்.

இதே சமயம் நார்தம்பர்லந்து போர்க்களத்திற்கு நெடுந் தொலைவில் நின்றுகொண்டு போர் நிலையைக் கவனித்துக்கொண் டிருந்தான். கிளர்ச்சிக்காரர் வெல்வதுபோ லிருந்த சமயம் தானுஞ் சென்று சேர்ந்து கொள்ளலாமா என்று அவன் நினைப்பான். அடுத்த நொடி மன்னன் படை முன்னேறுகிறதென்று கேட்டுப் பின்னிடைவான். ஒரு சமயம் டக்ளஸின் வீரச் செயல் கேட்டுக் களிப்பான். பின் இளவரசன் எதிர்பாரா வீரங் காட்டினன் என்று மனமுட்குவான். தன்

மகன் களந்தூள்பட வாளுழவு உழுகின்ருன் என்று கேட்டு இறும்பூது எய்துவான். அவ் விறும்பூதினி டையே அத்தகைய மகனுக்கு உதவாமல் உயிரை வெல்ல மாக வைத்துக்கொண் டிருக்கிறேமே என்றும் மனம் நைவான்.

இங்கிலேயில், ஹாட்ஸ்பரும் இளவரசும் நெடுநேரம் தனிப்போர் செய்கின்றனர் என்று கேட்டான்.

அதன்பின் ஒரு செய்தியும் வரவில்லே.

பலர் அவ்வழியே போயினும் அவர்களுள் ஒருவ ரேனும் அவன் முன்வாயிலில் நில்லாமலும், உள் வாரா மலும் சென்றனர். அவர்கள் முகமும் நடையும் நற் செய்தி கொண்டு செல்பவராகக் காணவில்லே.

ஆனல் அவரிடம் சென்றுதான் கேட்போமே என்ருல் அதற்குந் துணிவு வரவில்லே. எப்படி வரும்! போரில் முன்னணியில் நிற்கவேண்டியவன் அவன்; போர்த் தலேவருள் தலேவராயிருக்கவேண்டும் நிலேயு டையவன் அவனே. அப்படியிருக்க, எப்படிப் போரி னின்றும் மீண்டு வருகிறவர்களிடம் போய் அவன் 'போரில் வெற்றியா தோல்வியா' என்ற செய்தி வினவு வான்?

"இறைவா! நான் அஞ்சியவாறேதான் நிகழ்ந்து விட்டதோ?

"இறைவா! நீயே என் தீவினேகளுக்கு என்னேத் தண்டிக்கவேண்டும்!—ஆம், அதுவுந்தான் இதற்கேது தண்டனே? தற்பகைக்கும் தன் மகன் பகைக்கும் தக்க தண்டனே நரக வாழ்வன்றி வேறுண்டோ? இறைவா, என் பிழை பொறுப்பாய்" என்றிவ்வாறு பிதற்றி அறி வழிந்துநின்ருன் ஹாட்ஸ்பரைப் பெற்ற தந்தை.

"ஆ, தோல்வி என்பதற் கையமில்லே. ஆனல் என் மகன், என் ஒப்பற்ற மகன், என் போர்ச்சிங்கம் என்ன ஆனன்?

"ஆ, அன்று ஓர் அபிமன்னனைத் தன்னை யறியாமற் பறிகொடுத்து உயிர்விடத் துணிந்து நின்ருனே அவ் விசயன்! இன்று யான் அவ் அபிமன்னனை ஒத்த நின்னை என் கையாற் கொன்று நின்றேனே!

"ஆ, என் மகனே, நீ இறந்தாயா? இருக்கின்ருயா? யார் பகர்வர்! யாரேனும் இப் பக்கம் வந்தாலோ அல்லது திரும்பினுலோ அல்லது சற்று நின்ருலன்ரு கேட்க லாம்" என்றெண்ணி நின்ருன் அவன்.

அச் சமயம் பெருமகனெருவன் குதிரைமீ தேறி ஓட்டமாக வந்தவன் நெடுந்தொலை ஓடி இளைத்தவனுய் அவன் வாயிலில் இறங்கி நின்ருன்.

நார்தம்பர்லந்து அவனிடம் சென்று, "ஐயனே, போர் என்னவாயிற்று? என் மகன்,—இல்லை ஹாட் ஸ்பர் நிலை என்ன?" என்று கேட்டான்.

"வந்தவன் நார்தம்பர்லந்தை ஏற இறங்கப் பார்த் தான். பின் குறும்பாக, "ஏன், உமக்குத் தெரியாதோ? மன்னர் படையும் போயிற்று; மன்னரும் போனர். இள வரசர்கூடப் பிழைக்கவில்லை. ஜானும் ஒரு சிலரும் தலை பிழைத்தது தம்பிரான் புண்ணியம் என ஓடினர்" என்ருன்.

மிகத் தேறுதலான வாக்கு; உண்மை மட்டு மாயின்! ஆனல் எதை நம்புவது, கண்ணையா? காதையா?

அடுத்த தூதன் எல்லாம் வெட்டவெளிச்சமாக்கி னன். தந்தையின் நெஞ்சம் பதைத்தது. ஆ! ரிச்சர்டு, ரிச்சர்டு, எது பொய்ப்பினும் நின் நாப் பொய்க்காது. 'ஆ என் ஒரே பிள்ளையையா நீ பலி வாங்கவேண்டும். என் பகைவன் ஹென்ரியின் மகனைத்தான் பலிவாங்கக் கூடாதா' என்று கூறி அவன் நிலத்தில் வீழ்ந்தான். யாரும் அவனை வந்து தேற்ருமலே அரை நாழிகை கிடந்து பின் எழுந்தான். பின் விசயன் போலவே 'என்

மகன் கொலைக்குப் பழி வாங்குவேன்,' என்றெழுந்து அவன் கடற்கரையிலுள்ள தனது தனியிருக்கையாகிய வார்க்வர்த் கோட்டைக்குச் சென்றான்.

## 8. மீண்டும் ரிச்சர்டு நாவிற் பிறந்த பழி

மன்னன் தான் இதுகாறும் நொந்துகொண்ட இளவரசன் தனக்கு ஓர் கலங்கரை விளக்கமாய் உதவுவது கண்டு மனங்குளிர்ந்து முன்னையிலும் ஊக்கத்துடன் தன் பகைவர்களை ஒறுக்கும் வேலையில் இறங்கினான். ஆனால் உளம் ஊக்கம் பெறினும் அவன் உடல் வளங் குன்றியதனால் இளவரசன் அவனுடன் உதவியாகச் சென்றான். முதன்முதல் அவர்கள் வென்றடக்க முயன்றது மலைநாட்டரசனாகிய வேல்ஸ் தலைவனையே. அந்நாடு ஆங்கிலேயர் சென்று போர் புரிவதற்கேற்றதன்று. அகன்ற உயர்நிலம், குன்றுகள்; பள்ளத்தாக்குகள், தலை குப்புற விழும் அருவிகள் ஆகியவை நிறைந்தது அந்நாடு. மலைநாட்டார்க்கன்றி வேறெவர்க்கும் உணவோ, இடமோ அளிக்காத நாடு அது. அதில் தங்கு தடையின்றித் திரியும் குரக்கினப்படை போன்ற வேல்ஸ் மக்களை அடக்க அவர்களுக்குப் பல ஆண்டுகள் பிடித்தன.

இப் போர் தொடர்ந்து நடைபெறாது அவ்வப் போதே நடந்துவந்த தொன்றாகையால், இளவரசன் இடை இடையே ஓய்வு ஏற்படும்போதெல்லாம் லண்டனுக்கு வந்து நாட்டின் ஆட்சியிலும் தந்தைக்கான உதவிகள் செய்துவந்தான்.

ஃபால்ஸ்டாஃப் ஷ்ரூஸ்பரிப் போரில் காலாள் தலைவனா யிருந்தபோதிலும் வேல்ஸ் போராட்டத்தில் மலைநாட்டின் ஏற்ற இறக்கங்களில் நடமாடத் தக்கவன் அல்லனாதலால், அவன் பணியின் முழுமதிப்புடனும் நாட்டிலேயே திரிய இணக்கம் பெற்றான். இளவரசன்

ஆணைப்படி அவன் மதிப்பைக் காக்க அவன் பின் வாள் தங்கிவர ஒரு பணிப்பையன் அமர்த்தப்பட்டான்.

ஆனால் பொருளை வைத்து. துய்த்தறியாத ஃபால்ஸ்டாஃப், அதைத் தானும் பையனும் குடித்தும், உண்டும் நண்பர்களுக்கு விருந்தளித்தும் கடனுதவியும் கைப்பொருளைத் தொலைத்தான். அவனுக்குக் கடன் கொடுக்கத் தெரியுமேயன்றி வாங்கத் தெரியாததலால் அதன் பின் அவன் பட்டினி கிடக்க நேர்ந்தது. பையன் உணவிற்குக்கூட அவனிடம் வழியில்லாமல் போகவே, அப்பையனும் தன் செலவிலேயே உண்டு அவனைப் பின்னால் நின்று கேலி செய்யலானான்.

இதற்கிடையில் வார்க்வர்த் சென்ற நார்தம் பர்லந்து, அங்கே தன் மனைவியும் புதல்வியும் இருப்பதைக் கண்டான். இவன் வரப் பார்த்ததுமே அவர்கள் இருவரும் முகத்தைத் திருப்பிவைத்துக் கொண்டனர்.

அப்போது ஒரு தூதன் வந்து, "ஹாட்ஸ்பர் இறந்தது கேட்ட வடநாட்டுக் குடிகள் அவன் உயிருக்குப் பழிவாங்க வேண்டுமென்று எழுந்து கிளர்ச்சி செய்கின்றனர் என்றும், அவர்களிடையே [1]யார்க்பெருந் தலை மகன் சென்று, "மக்களே, கடவுளறிய உங்கள் அரசர் ரிச்சர்டேயன்றி வேறு யாரு மிலர். அவன் இறந்தாலென்ன? அதனாலும் ஹென்ரி அரசனாய் விடமாட்டான்? இவனை வீழ்த்தி ரிச்சர்டின் அடுத்த உரிமைப் பிள்ளையை, அரசனாக்குவோம்! அதற்கு உதவும்படி ரிச்சர்டின் உயிர்நிலையே உதவட்டும்! அவன் குருதி இன்னும் மணிக்கூண்டுச் சிறையில் தோய்ந்து கிடக்கின்றது. அதனை இதோ உம்முன் கொண்டுவந்துளேன்! அதன் பேரால் எழுந்து பகைகளை அழிக்க எழுவீர்!" என்று வெறியூட்டி வருகின்றான். ஹேஸ்டிங்ஸ் பெருமகனும், மோப்ரே பெருமகனும், பார்

1 Archbishop of York.

டால்ப் பெருமகனும் துணையாய் நிற்கின்றனர். தெய்விகமாய் எழுந்த இப்போரில் தம்மையும் சேரும்படி தலைவர்கள் அழைக்கிறார்கள்!" என்று கூறினான். நார்தம்பர்லந்து, காலிழந்தவனுக்கு ஒரு கோல்போல் வந்த இச்செய்தியை அவன் உடனே வரவேற்றுப் போன உயிரின் பகுதி மீண்டதென்ன எழுந்தான்; எழுந்து பணியாட்களை அழைத்துப் "படைகளையும் படைத் தலைவரையும் திரட்டுக" என்றான்; தானும் தன் போர்க் கருவிகளை எடுக்கவும் குதிரை ஏறவும் விரையலானான்.

நார்தம்பர்லந்து தான் எண்ணியபடி இரண்டாம் கிளர்ச்சியுடனாவது முழுவன்மையுடனும் சென்று சேர்ந்திருந்தால் மன்னனை ஆட்சியினின்றும் விலக்கி அழித்திருக்க இடமுண்டு. வடக்கே இப்பெருங் கிளர்ச்சியையும், மேற்கே வேல்ஸ் படைகளையும், அவற்றிற்குத் துணையாக மில் போர்டு ஹேவனில் வந்திறங்கிய பிரான்சுப் படைகளையும் ஒருங்கே முறியடித்தல் என்பது அருமையான காரியமாய் விடக்கூடும். ஆனால் தெய்வமும் ரிச்சர்டின் பழியும் இதனைத் தடுத்தன— அதுவும் அந் நார்தம்பர்லந்தின் குடியாலேயே. படையெழுச்சிக்கு விரையும் நார்தம்பர்லந்தை இதுகாறும் அவன் முகம் காணப்பெறாது நின்ற அவன் மனைவியும் புதல்வியும் வந்து தடுத்து, "மகனைப் பறிகொடுத்த சமயம் கைகட்டி வாய்புதைத்து நின்ற வீரரே! இனி வீரத்தைக் காட்டி யாரைக் கொல்லப்போகிறீர்? உம் கோழைத்தனத்தைக் கண்டு உலகம் சிரிப்பது போதாதா? இனி உம் வீரத்தைக் காட்டி வேறு சிரிக்க வைக்க வேண்டுமோ?" என்று இடித்துரைத்தனர்.

நார்தம்பர்லந்து கண்களில் நீர் சொட்டவில்லை; செந்நீர் சொட்டாக் குறை ஒன்றுதான் உண்டு. அவன் உடல் கனலிலிட்டு வாட்டிய மாதிரி அழலாய்க் கொதித்தெழுந்தது.

அவன் கவிழ்ந்த முகத்துடன் அவர்களை நோக்கி, "என் ஒளியிழந்த கண்கள்போலவே உயிர் இழந்தது போதும். உயிரினும் சிறந்த பழிவாங்குதலையும் ஏன் தடை செய்கின்றீர்? பழி வாங்கி அன்றோ இனி அமைதியுடன் இறக்கவேனும் முடியும்?" என்றான்.

இன்னும் அவர்கள் விடாப்பிடியாய்ப் போக வேண்டாமென்று தடுத்தனர். "எம் விருப்பை அன்று மீறி இக் கோலம் கண்டீர். இன்றேனும் யாம் கூறுவதைக் கேளும். இந் நாட்டெல்லை கடந்து ஸ்காத்லந்தில் சென்று காத்திருந்தால் நாட்டின் எழுச்சி முதிர்ச்சி அடைந்தபின் வந்து பெருங் கிளர்ச்சி செய்து பகைவனை அழித்துப் பழிவாங்கலாம். இச் சிறு கிளர்ச்சியுடன் சேர்ந்து நாம் நம் வன்மையிழந்து பகைவனுக்கே நாட்டை விட்டுவிடவேண்டாம்" என்றார்கள்.

அன்று நார்தம்பர்லந்தின் காலில் வந்திருந்து மகனை உதவாமற் பண்ணிய அதே ரிச்சர்டின் பழி, இன்று அவன் மனைவி புதல்வி ஆகிய இருவருடைய நாவிலும் வந்திருந்து இரண்டாவது கிளர்ச்சியையும் அழித்தது.

மன்னனைவிட்ட ஹென்ரியைக்கூட விட்டுவிட்டு, அந்த ரிச்சர்டை மன்னனாக்க உதவியவனும் அரசியல் பகையோடு தனக்குக் குடிப்பகையானவனுமான நார் தம்பர்லந்தை அழிப்பதே கடன் என நின்றது அந்த ரிச்சர்டின் பழி.

முதற் கிளர்ச்சிக்காரர் நின்றமாதிரியே நார்தம் பர்லந்துக்காக இரண்டாம் கிளர்ச்சிக்காரரும் காத்து நின்றனர். ஆனால் அவன் வரமாட்டானென்று பல நாட்களுக்குப் பின்னரே தெரிந்தது; என்ன செய்வது! படைகளை அணிவகுத்தாயிற்று. போர்நோக்கம் தெய்விகமானதென்று கூறியாயிற்று. வெற்றியோ தோல்வியோ முன்வைத்த காலைப் பின் வைக்கலாகாதென

வீரருக்கு முழங்கி ஆயிற்று. இனித் தலைவர் பின்ன டைவதெப்படி?

"தெய்வம் உங்கள் கைவாளில் நின்று உங்களுக்கு வெற்றியைத் தரும்," என்று வீறுடன் வீரருக்கு முழங்கிய அதே நாக்கு, இப்போது "தெய்வந்தான் நம் கைவாளில் நின்று நமக்கு வெற்றியளிக்கவேண்டும்" எனத் தணிந்த குரலில் கூறலாயிற்று.

## 9. கறைபட்ட வெற்றி

இளவரசன் இச் சமயம் மன்னனுடன் வேல்ஸில் போர் செய்துகொண்டிருந்தான். ஆகவே அவன் ஃபால்ஸ்டாஃபை அனுப்பி ஜானை வடபுலக் கிளர்ச்சியை அடக்க ஏவினான். ஜானுடனேயே ஃபால்ஸ்டாஃபையும் அவனால் சேர்க்க இயன்ற படைகளுடன் செல்லுமாறு தூண்டினான்.

ஃபால்ஸ்டாஃபின் பெருமைக்கு இது மிகவும் உகந்த சமயம். அவன் நன்னிலையில் இருந்தகாலத்தில் அவனுக்கு நண்பர்களாய் இருந்து தற்போது நலிந்து வருபவர்களான [1] திருவாளர் பொள்ளலையும் [2] திருவாளர் வாய்மூடியையும் தேடி அவர்களுக்கும் ஆட்சேர்க்கும் உரிமை வழங்கினான். பார்டால்ஃபும், ஃபால்ஸ்டாஃபும் அங்ஙனம் சேர்த்த ஆட்களிடம் கைப்பணம் பெற்று நல்லவர்களை விட்டுவிட்டுப் போலிகளைமட்டுங் கொண்டு சென்றான்.

ஜான் படை வந்தடுத்தது எனக் கேட்டதும் கிளர்ச்சிக்காரர் போருக்கு ஒருங்கலாயினர். இளவரசன் போர் செய்யாமலே அவர்களை அமைதிப்படுத்த எண்ணினான். ஆனால் இந்தத் தடவை கிளர்ச்சிக்காரர் பணியக்கூடாதென் நின்றனர். ஏனெனில் படைவீரர் இந்தத் தடவை நார்தம்பர்லந்து போன்ற பெரு

1 Master Shallow. 2 Master Silence.

மக்களின் தன்னலத்திற்காகப் போரிடவில்லை. போலி அரசனாகிய ஹென்ரியை வீழ்த்தி உண்மை அரசனாகிய ரிச்சர்டின் பேரால் அவன் உரிமையாளனாகிய மார்ட்டிமரை அரசனாக்கவே அவர்கள் இன்று போர் தொடுத்தனர். தலைவரிடையும் பலர் தத்தம் குடிப்பழிகளுக்குப் பழிவாங்க நின்றனர்.

யார்க் பெருந்தலைமகன், மோப்ரே முதலியோரிடம் இத்தகைய தன்னலம் இருந்தது. ஆனால் ஹேஸ்டிங்ஸ் நாட்டுப்பற்று ஒன்றேயன்றி வேறுபற்றற்றிருந்தான். ஆதலால், வெஸ்ட்மோர்லந்து மூலம் ஜான் கிளர்ச்சிக்காரர் குறை அறிந்து அமைதியை நிலைநிறுத்துவதாகக் கூறியபோது, அதனை ஏற்க வேண்டுமென்று அவன் வற்புறுத்தினன். நார்தம்பர்லந்து வாராததால் சற்றே மனம் தளர்ந்த பிற தலைவரும் இதனை ஏற்றனர்.

ஜான் பெயரால் வெஸ்ட்மோர்லந்துப் பெருமகன் கிளர்ச்சிக்காரரை நோக்கி, “நீர் எக் காரணங் கொண்டு மன்னர் ஆட்சியை எதிர்க்கின்றீர்? நிலைபெற்ற ஆட்சியுடன் ஒத்துழைக்க உம் தடைகள் அல்லது உம் குறைகள் யாவை?” என்று கேட்டான்.

யார்க் பெருந் தலைமகன் ஹென்ரி ஆட்சியின் கொடுமைகளை எடுத்தெடுத்துக் கூறினன். ஜான் அவற்றை நேர்மையுடன் கவனித்து ஆவன செய்வோம் என்ருன். படைவீரருட் பலரும் உடனிருந்ததால் இம் மறுமொழியை ஏற்காதிருக்க முடியவில்லை. இருபடைகளுக்கு மிடையில் கிளர்ச்சித் தலைவர்களும் ஜானும் உடன்படிக்கை செய்வதென முடிவு செய்யப்பட்டது.

அதில் குடிமக்கள் குறைகள் எழுத்து மூலம் எழுதிக்கொடுக்கப்பெற்று, அவை தீர்க்கப்படுவதாக வாக்களிக்கப்பட்டது. பட்டபின், இருபுறமும் படை

கள் கலைவதெனவும் அவ்வப் பக்கத்துத் தலைவரால் ஆணைகள் தரப்பட்டன. ஆனால், சற்று நேரத்திற்குள் ஜானின் அருகிலிருந்த பெருமகன் ஒருவன், இருபுறப் படைகளையும் தலைவர்கள் முன்னிலையில் வரிசையாகப் போகச் செய்யலாமே என்றான். உடனே முன் உத்தரவை அகற்றிப் புது உத்தரவுகள் இருபுறமும் பிறப்பிக்கப்பட்டன.

ஆனால் ஜான் முன்னமே தன் பக்கத்துப்படைகளிடம், "நான் நேரில் இடாத கட்டளைகளை நிறைவேற்ற வேண்டா," என்று கூறியிருந்தான். அதன்படி படைகள் கலைவதென்ற முதல் உத்தரவு விலையற்றுப் படைகள் உலையாது நின்றன. கிளர்ச்சிக்காரர் பக்கமோ, 'படைகள் கலைக' என்ற உத்தரவு உடனே நிறைவேற்றப்பட்டு இரைச்சலுடனும் குழப்பத்துடனும் கலைந்தன. இரண்டாம் உத்தரவு வருவதற்குமுன் படைகள் இருந்த இடமே தெரியாமல் ஆங்காங்கு ஒன்றிரண்டு பேரே மீந்துநின்றனர்.

இதனால், அரசர் பக்கம் தலைவர்கள் படைவன்மை குறையாதிருந்தனர். கிளர்ச்சிக்காரர் பக்கமோ படைகளே இல்லாமல் வெறும் தலைவர்கள் மட்டுமே தங்கி நின்றனர்.

அத் தறுவாய்க்கே காத்திருந்த வெஸ்டுமோர்லந்துப் பெருமகன் உடனே அவர்கள் முன்வந்து, "நாட்டுப் பகைவர்களே, உங்களை விலங்கிடுகிறோம்," என்றான்.

அவர்கள் திடுக்கிட்டு, "இஃது என்ன ஐயன்மீர், அரசர் வாக்குறுதி இதுவா?" என்று கேட்டனர்.

அதற்கு விடையாக, "வாக்குறுதி குடிமக்களுக்கன்றோ? அவர்கள் குறைகள் தீர்க்கப்படுமென்பதில் தடங்கல் எதுவும் இல்லை. உங்களுக்கு யார் வாக்குறுதி கொடுத்தது? நீங்கள் பொதுமக்களை ஏமாற்றிக்

கிளர்ச்சிக்குத் தூண்டியவர்களாயிற்றே. உங்களுக்கு அரசர் சட்டப்படி தண்டனை தரப்படும்,'' என்று கூறப்பட்டது.

கிளர்ச்சிக்காரர் ஏமாந்தனர்.

மன்னர் கட்சி வெற்றி பெற்றது. ஆனால் இறைவன் அளிக்கும் வெற்றிக்குக் காத்திராமல் மனித வஞ்சத்தால் பெற்ற இவ் வெற்றி தன் வெறுமையை இரண்டாட்சிக்குப்பின் காட்டலாயிற்று.

## 10. மணி முடியிற் கரந்த மாத்துயர்

இங்ஙனம் இரண்டாங் கிளர்ச்சி அடக்கப்படும் நாட்களில் மன்னனை ஆண்டு முதிர்வும், நெடுநாட் பிணியும், நீண்ட கவலையும், கடுமுயற்சியுமாகச் சேர்ந்து அழுத்தவே, அவன் படுத்த படுக்கையாய்க் காலனழைப்பிற்குக் காத்துக்கிடந்தான். உறவினரும் மக்களும் மன்னன் படுக்கையைச் சூழ்ந்து கவலையிலாழ்ந்திருந்தனர்.

மன்னன் இப்போது தன் மணிமுடியை அடிக்கடி எடுத்துப் பார்த்து, "ஆ நீ மணிமுடியோ, மண்முடியோ? உன்னை ஓர் அணிகலமாக்க நினைக்கின்றனர் சில பேடிகள்; மாந்தர் விழைவின் உச்சமாகவும், இன்ப வாழ்வுக்கும் உயர்வுக்கும் ஆற்றலுக்கும் அறிகுறியாகவும் நினைப்பர் ஏழைமக்கள்: உன் சுமை இவ்வளவு, நீ தரும் கவலை இத்தனை என்பதை யாரே யறிவார்!'' என்பான். இன்னும் சில சமயம் அவன் "ஆ, ரிச்சர்டு, இஃது எனக்கு முள் முடியாகும் என்று நன்கு சொன்னாய்! ஆயின் நின் வாக்குக்கூட இவ்வொன்றில் குறைவுடையதே. ஏன்? முள்முடி உறுத்துமேயன்றித் தாங்கருஞ் சுமையாய் அழுத்துமோ? அம்மம்ம, இவ் வகன்ற நாட்டில் எண்ணில் கோடிக் குடிகளில் ஏழைமையில் மிக்க ஏதேனும் ஓர் ஆண்டி

யின் வெறுந்தலைக்கு இம் மணிமுடி தாங்கும் தலையை மாற்றாக இறைவன் அருளியிருக்கலாகாதா? ஆ! என்ன சொன்னேன்? என் விருப்பம் இஃது எனக் கூறின் இதனை யார் நம்புவர்? ஆயின் மன்னர் முடியின் அருமையை, அதன் தன்மையை மன்னரே யறிவர் என்பது மிகையாகாது," என்பான். சிலபோது, "ஆம் என் எண்ணம் தவறுதான். இதன் சுமை தாங்க மன்னர் இலரேல், மலர்தலை உலகில் அமைதியும் இன்பும் நிலைபெறுவது எங்ஙனம்? ஆயினும் கொடுமை! கொடுமை!! குடிகளில் ஒவ்வோர் ஏழையும் அடையும் இன்பத்திற்கும் தன்னுண்மைக்கும் விலையாக மன்னர் மன அமைதியும் தன்னுண்மையும் விலைப்பட வேண்டுமோ?" என்று புலம்பலானான். அச்சமயம் ரிச்சர்டின் அழகிய உரு அவன் முன்நின்று புன்முறுவல் பூத்தது. அரசன் அயர்ந்த துயிலுள் ஆழ்ந்தான்.

## 11. தப்பெண்ணமும் தெளிவும்

இளவரசன் அச்சமயம் மன்னனைப் பார்க்க வந்தான். வடபுலக்கிளர்ச்சி யடங்கி வெற்றிகிடைத்த செய்தியைச் சொல்ல விரைந்து வந்தான் அவன். வெளி யறையில் வெஸ்டுமோர்லந்து, [1]வார்விக் முதலிய பெருங் குடிமக்கள் நிலநோக்கிய முகத்துடன் நின்றிருந்தனர். இளவரசன் தம்பி ஜானும் அவ் விடத்தில் கண்ணீர் வடித்து நின்றான். இளவரசன் நெஞ்சு திடுக்கிட்டது. ஆ என்றலற வாய்திறந்தான். அதற்குள் ஜானும் பெருங்குடி மக்களும் முன்வந்து அவனிடம் "அரவம் செய்யற்க; எம் ஐயனே! அரசன் அயர்ந்து உறங்குகிறான்," என்று சைகை செய்தனர்.

மன்னன் அறையை எட்டி நோக்கினான் இளவரசன். படுக்கையில் செயலற்று ஓய்ந்துகிடந்த தந்தை

1 Warvick.

யைக் கண்டதே அவன் துயரமீதூரப் பெற்றும் பிறரை வெளியே இருக்கும்படி சைகை செய்துவிட்டுத் தான்மட்டும் உட்சென்று தந்தையருகி லிருந்து உடலைக் காக்கும் உயிரென அவனைக் கவலையுடன் காத்து நின்ருன்.

வாழ்க்கை ஒளியற்றுக் காலன் கைப் பதிப்பிட்டதுபோற் ருேன்றிய அம் முகத்தை நோக்க, இளவரசனுக்கு அரசன் இறந்தேவிட்டான் என்று தோன்றிற்று. தன் ஐயந் தீரப் பல இடங்களிலும் தொட்டு நோக்கிப் பிணம்போல் சில்லென் றிருக்கக் கண்டு, “ இது சாவே. ஆ! என் தந்தையே, என் அரசே, நீ வாழ்ந்த வாழ்க்கையின் முடிவா இது; நின் வீரக் கையும் காலும் ஓய்ந்த ஓய்வும் இதுவோ!” என்று கண்ணீர் வடித்தான்.

பின் மன்னன் கையருகிலுள்ள மணிமுடியையும் அவன் முகம் அப் பக்கம் சாய்ந்திருப்பதையும் நோக்கி, “ஆ, இம் மணிமுடியன்ருே என் அரசன் உயிரைக் குறுக்கி அதனைத் துன்ப நிறைந்ததாக்கிற்று! அதனை யடைய எடுத்துக்கொண்ட முயற்சியினும் அதனைத் தாங்கவேண்டிவரும் முயற்சி எத்தனை மிகையானது! அரசே—என் தந்தையே, இச் சுமையை எனக்கா—இன்பவாழ்வி லிடுபட்டிருக்கும் எனக்கா விட்டுவைத்துச் சென்றீர்? நும் அன்பிற்குப் பிற பிள்ளைகளும் இச் சுமைக்கு நானுமாகவா பிறந்தோம்?...ஆ, இனி ஃபால்ஸ்டாஃப் எங்கே, என் நகையரசுடன் வாழ்ந்த வாழ்வெங்கே! நான் ஆளு யிருந்தால் அதெல்லாம் துய்க்கலாம். அதனுல் என்ன? நான் உமக்கு மகனல்லனே? உம் சுமையை நான் சுமப்பேன் என்ற உறுதி இருந்திருந்தால் கூட இம் முகம் இன்னும் சிலநாள் வாழ்க்கை ஒளி வீசி நின்றிருக்குமே” என்று பலவாறு புலம்பினன்.

அவன் மனத்தகத் திருந்த துயர், வெறுப்பு முதலிய அனைத்தும் அச் சிறுமனத்தில் இடம் போதாமல் நீருருவில் கண்களாகிய மடைச் சீப்புக்களைத் துருவி வெளிவந்து வழிவதுபோல் வழியலாயின. அதனைப் பிறரறியாதே மறைக்கவும், பொறுப்பு வாய்ந்த அம் மணிமுடியின் சுமையைப் பொறுப்புடனும் கடமையுணர்ச்சியுடனும் ஏற்பதாக இறைவன்முன் வாக்களித்துத் தந்தை உயிர்க்கு அமைதிதரவும் எண்ணி, அவன் தனிமையை நாடினன். நாடி அம் மணிமுடியையுங் கையி லெடுத்து அவ்வறையிலேயே யுள்ள மாடிப்படியேறி உப்பரிகையில் தனியிடத்திலிருந்து இறைவணக்கத்தி லாழ்ந்து தன்னை மறந்துவிட்டான்.

இளவரசன் மனம் இறைவனுள்ளத்துடன் கலந்து நிற்கும் அத் தறுவாயில் அயர்வுற்றிருந்த அரசன் வர வரத் தெளிவுற்றுக் கண் திறந்தான். அவன் பார்வை மங்கலாயிருந்தது. மேற்கட்டியில் இருந்த உருக்கள் ரிச்சர்டின் உருக்கள் போல் தோன்றின. அவன் கண்களைச் சாய்த்து நாற்புறமும் நோக்கினன். அறையில் யாருமில்லை; யாதோர் அரவமுமின்றிக் கல்லறைபோன்ற அமைதி நிலவியிருந்தது கண்டு வியப்புற்று ஈனக் குரலில் "யார் அது?" என்றான்.

மறுமொழி ஒன்றுமில்லை. கீழ்உலகில் இருந்து வருவது போன்ற அச் சொற்கள் ஒருவர் செவியிலும் விழவில்லை.

சற்றே உரத்த குரலில் அவன் மீண்டும் "வெஸ்ட்மோர்லந்து, வார்விக், ஜான்" என்றான்.

மூவரும் முன்வந்து தனித்தனியாக அரசே, அரசே, அரசே எனக் கைகுவித்து நின்றனர்.

"என்னை ஏன் தனியே விட்டுச் சென்றீர்கள்," என்று கேட்டான் அரசன்.

"தனியே விடவில்லை அரசே. இங்கே இளவரசர் இருந்தனரே," என்றனர் மூவரும்.

"இளவரசர்! அவன் எங்கே? அவன் எப்போது வந்தான். எங்கே போய்விட்டான்?" என்று கேட்டான் அரசன்.

ஜான்: "அரசே! நாங்கள் வெளியேதான் நிற்கிறோம். அவர் வெளியே எங்களைக் கடந்து செல்லவில்லை; உள்ளேதான் இருக்கவேண்டும். ஒருவேளை உப்பரிகையில் சென்றிருக்கலாம்.

அரசன் தற்செயலாய்ப் படுக்கைமீது கண்செலுத்தினான். அங்கே முடியைக் காணோம். அவன் மனத்தில் பழைய ஐயங்கள் தலைதூக்கி நின்றன. "ஆ! அவன் இடையில் நடித்த நடிப்பெல்லாம் பொய் யன்றோ? இன்றோ நாளையோ அவன் நல்வினையால் நான் இறப்பேன். அதுவரையிற்கூடப் பொறுக்க வில்லையா அந்தச் சிறுமை உள்ளம்? ஆ, மணிமுடி என்ன, தந்தை உயிரினும் அத்தனை வெல்லமென்று நினைத்தாய்? இறைவனே! இத்தனை தன்னலமும் வஞ்சமும் எப்படி என் உடலினின்று மனித உருவெடுத்து வந்தது? இறைவனே! நான் எத்தனை தீமை செய்யினும் நான் அதன் பயனாக வேறெந்தத் தண்டனையும் அடையத் தயங்கேன். ஆனால் எனக்கும் எண்ணற்ற குடிமக்களுக்கும் இறைவனுக்குங்கூட அரிதான ஒப்பற்ற இங்கிலாந்தை, இக் கடலிற் பதித்த மணியை, இவ் விடுதலைக் கொழுந்தை, இந் நாகரிக ஊற்றைச் சிறுமைப்பட்ட ஒருவன் கையில் விழாது தடுப்பீராக!" என்று பலபடப் பேசிக் கரைந்தான்.

பேச்சு முடிவில் அவன் திரும்பிப் பார்க்க, அப்பேச்சைக் கேட்டுக்கொண்டே இளவரசன் மணிமுடியுடன் அருகில் நிற்பதைக் கண்டான். அவன் கண்களும் முகமும் வழியும் கண்ணீராலும் கைகளாலும் மறைபட்டிருந்தன. அவன் அழுதுகொண்டே "அரசே! என் மீது தாங்கள் தப்பெண்ணங்கொண்டு தங்கள் மனதைப்

புண்படுத்தவேண்டாம். தங்கள் மணிமுடி இதோ பாது காப்புடன் இருக்கிறது. தாங்கள் நெடுநாள் அதை அணிந்து என் சுமையை எளிதாக்க வேண்டும். அதற்குள் நானும் தகுதியுடையவனாகி விடுவேன். எல்லோருக்கும் தங்கள் பிரிவு ஒரே ஒரு பிரிவாகும். எனக்கு அஃது இரட்டிப்புப் பிரிவு. தந்தையை—ஒப்பற்ற தந்தையை—அரசை இழந்த பிரிவு ஒன்று. தமது கவலையும் வெறுப்பும் நிறைந்த வாழ்க்கைக் கடனை என் வாழ்க்கை முற்றும் நடத்திச் செல்லும் வண்ணம், நான் என் இன்ப வாழ்வையும் விடுதலையையும் விட்டுப் பிரியும் பிரிவு இன்னொன்று. ஆயின் அந்நாள் என்று வரினும், அதனால் எத்தகைய துயர் நேரினும் அதனைத் தமக்காகவும், தம் நற்பெயருக்காகவும், நம் முன்னோர் புகழிற்காகவும், நம் அரிய தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காகவும், தலைமேல் தாங்கும் கடப்பாடும் பெருமையும் உடையவனாவேன்,'' என்றான்.

## 12. முடிவு

அரசன் துயர், ஏக்கம், எல்லாம் இருந்த இடம் தெரியாமல் பறந்துபோயின. அவன் முகத்தில் அரசிருக்கை ஏறியபின் அன்றே புன்சிரிப்புத் தவழ்ந்த நாள் என்னலாம்.

அதன்பின் இரண்டு மூன்று நாட்கள் மன்னன், உயிருக்கும் பிரிவுக்குமிடையே ஊசலாடினான். ஆனால் மன அமைதியுடன் மக்களை வாழ்த்தி இறுதியில் தன்னை மகிழ்வுடன் அழைக்கும் ரிச்சர்டை நோக்கி, "ஆ, என் கடன் தீர்த்தேன்; வருகின்றேன். நான் தீர்க்காத குறைத் தீவினைகளை என் பிள்ளையும் பிள்ளையின் பிள்ளையும் அவர்கள் தலைமுறையினரும் தீர்ப்பார். அவர்களுக்குத் தண்டனை கொடுத்தாலும் இறுதியில் தண்ணருளையும் கொடுப்பாயாக'' என்று கூறி உலக வாழ்வினின்றும் விடைகொண்டான்.

இளவரசன் மூன்று நாள் அரசனின் மணிமுடியைக் கையிலேந்தி ஊணுறக்கம் துறந்து தந்தையை நினைந்து நினைந்து அழுதான். பின் தம்பியும் பெருநில மக்களும் தேற்றத் தேறி அரசுரிமை கொள்ளலானான்.

அவன் குடிகளைப் பார்வையிட்டு முடியணியப் போகும் ஊர்வலத்தில் அவனைக் காண ஃபால்ஸ்டாஃபும் அவன் கூட்டத்தினரும் வழியில் காத்துநின்றனர். ஃபால்ஸ்டாஃப் தன் ஹால் அரசனாகிவிட்டான் என்று கேட்டவுடன் தன் நண்பர்களிடமெல்லாம் ஆரவாரத்துடன் உனக்கு அது தருவேன், உனக்கு இது தருவேன் எனப் பொன்னும் மணியும் பணியும் உரிமையும் 'வாயார' வழங்கினான். அவை யனைத்தையும் ஒரு நொடியில் நிறைவேற்றிவைக்க அவன் காத்திருந்தான்.

இளவரசன் முன்னம் போர்க்கெழும்போது ஃபால்ஸ்டாஃப் கூட்டத்தினர் செய்த திருட்டில் தொடர்பு வைத்ததாக அவனையும் சிறைப்படுத்தத் துணிந்த [1] ஸர் ஹென்ரி காஸ்காயின்' என்ற வழக்குமன்றத் தலைவனும் அங்கே வந்து காத்திருந்தான். பாவம், அவனை ஃபால்ஸ்டாஃப் அச்சுறுத்தி, "உன் நாள் போயிற்று; இஃது என் நாள்; உன் தண்டனையை ஏற்க வா" என்று இழுத்து வந்திருந்தான். அந் நடுநிலை ஒழுங்காளன் இறைவனை வணங்கிய கையுடனும் பதைபதைக்கும் உடலுடனும் உலக நலனுக்காக வேண்டித் தூக்கிற்குப் போகக் காத்து நிற்கும் முனிமகன் போன்று நின்றான்.

மன்னனாய் ஐந்தாம் ஹென்றியாகப் போகும் இளவரசன் தொலைவில் நின்றே ஃபால்ஸ்டாஃபைக் கண்டான். அவன் மனம் அன்பால் உருகிற்று. அவன் முகம் "வன்பினால்" கல்லுருவென உறுதியுடன் காணப்பட்டது. அவன் ஃபால்ஸ்டாஃபை நோக்கிச் "சிறியோய், அரசர் நிலையுறப்போகும் தறுவாயில் இடையூறு செய்

1. Sir Henry Gascoigne.

யற்க. அது நாட்டுப் பகைமைக் குற்றத்தின்பாற் படும். நின் வாழ்வு என்னளவில் செத்தது; நீ போகலாம்," என்றான்.

நகையரசு அரசிழந்தது; நகை யிழந்தது; நகையற்றுச் செயலற்றுத் தன் விடுதி சென்றது. "ஹால் உன் பிரிவிற்கு வருந்துகிறேன். ஐந்தாம் ஹென்றி, உன் வருகைக்கு மகிழ்கிறேன். என் இறந்துபோன ஹால், என்னுடன் மறு உலகில் வந்து வாழ்க! ஐந்தாம் ஹென்றியும் அவன் சிறிய உலகும் "இங்கேயே" நிலைக்கட்டும்" என்று எழுதி யனுப்பிவிட்டு அன்றே அவன் தன் மலையுடலை வைத்து மக்கள் மலைவடையச் செய்துவிட்டு ஆவி நீத்தான்.

இதை யறிந்த புதிய மன்னன் ஐந்தாம் ஹென்ரி இன்பமும், துன்பமும், இறும்பூதும, இளிவரலும் ஒருங்கே அடைந்தான். அவன் நகையரசன் உயிர்க்கு உறுதி தர இறைவனை வணங்கினான்.

வழக்கு மன்றத் தலைவனை முதலில் முனிவால் உறுக்கி அதன் உயர்வை உலகறியக் காட்டியபின், அவனை உச்சிமேற் கொண்டு பாராட்டி உரிமைகளும் பட்டங்களும் வழங்கித் தன் அரசவையில் ஓர் உறுப்பினனாக்கிக் கொண்டான்.

நான்காம் ஹென்ரியின் தீவினைக்கு முற்றிலும் ஆளாகாமல் நல்லெண்ணமும், நன்மனமும், நன் முயற்சியும் கொண்டு ஐந்தாம் ஹென்ரி அரசிருக்கை யேறி நான்காம் ஹென்ரி அரசனுக்கு நற்புகழ் ஈந்தான்.

# 2. மன்னன் ஜான்

## கதை உறுப்பினர்

### ஆடவர்

1. **மன்னன் ஜான்:** மன்னன் ரிச்சர்டு அரிமாநெஞ்சினன் தம்பி, மன்னன் இரண்டாம் ஹென்ரி மகன் — ஆர்தரின் தந்தை காலஞ்சென்ற ஜொஃப்ரே தம்பி.
2. **ஃபிலிப்:** ஃபிரான்சு அரசன் ஜானின் எதிரி.
3. **ஆர்தர்:** ஜானின் இறந்துபோன அண்ணன் ஜொஃபிரே மகன்-ஜானைவிட அரசுரிமைக்கு அணித்தானவன்-சிறுபையன்-கான்ஸ்டன்ஸின் பிள்ளை.
4. **சார்லஸ்:** ஃபிலிப் மகன்-பிளான்ஷிச் சீமாட்டியை மணந்தவன்.
5. **ஃபால்கன் பிரிட்ஜ்:** ரிச்சர்டு அரிமாநெஞ்சினன் காமக் கிழத்தியின் மகன்-வீரன்-நாட்டுப் பற்று மிக்கவன்.

### ஆடவர்

6. **லிமோஜிஸ்:** தற்பெருமை மிக்க பிரான்ஸ் நாட்டுப் பெருமகன் - ரிச்சர்டு அரிமாநெஞ்சினனைக்கொன்ற அம்பை எய்ததாக வீம்படித்தவன்.
7. **அங்கியர்ஸ்:** நகர வாயாடி.

### பெண்டிர்

1. **எலினர்:** இரண்டாம் ஹென்ரி அரசன் மனைவி, ரிச்சர்டு அரிமாநெஞ்சினனுக்கும் ஜானுக்கும் தாய், ஆர்தர் பாட்டி.
2. **கான்ஸ்டன்ஸ்:** இறந்துபோன ஜொஃப்ரேயின் மனைவி-ஆர்தரின் தாய்.
3. **பிளான்ஷிச் சீமாட்டி:** கஸ்டைல் அரசன் மகள், ஜானின் மருகி, ஃபிரான்சு அரசன் மகன் சார்லஸுக்கு வாழ்க்கைப்பட்டவள்.

---

## (கதைச் சுருக்கம்)

ஜான்மன்னன் பேரரசன் இரண்டாம் ஹென்ரியின் மகன். அவனுக்கு முன் அரசனுயிருந்தவன் அவன் அண்ணன் ரிச்சர்டு அரிமாநெஞ்சினன். ரிச்சர்டுக்குப்பின் அவனுக் கிளைய ஜொஃப்ரே இறந்து போனதனுல், ஜொஃப்ரேயின் பிள்ளை ஆர்தருக்கே அரசுரிமை செல்லவேண்டும். ஆர்தர் சிறுவனுதலால் ஜான் அரசனுனன். அவனது ஃபிரஞ்சு அரசு வட்டங்களில் சில ஆர்தரையே ஏற்றன. ஃபிரான்சு அரசன் ஃபிலிப்பும் அவனை ஆதரிக்கவே இரு கட்சிக்கும் சண்டை மூண்டது. இரு கட்சியினரும் ஆங்கியர்ஸ் என்ற பிரஞ்சு நகரினைத் தம் பக்கமாக்க முயல, நகர வாயாடி ஒருவன் இருவருள் வென்றவர் பக்கம் நகர் சேரு மென்ருன். ரிச்சர்டு அரிமாநெஞ்சினன் காமக்கிழத்தி மகனுகிய ஃபால்கன் பிரிட்ஜின் தூண்டுதலால் இரு கட்சியினரும் சேர்ந்து நகரை எதிர்க்கத் துணிந்தனர். அப்போதும் தளராது வாயாடி ஃபிரான்சு அரசன் மகன் சார்லஸையும் ஜான் மருகி பிளான்ஷிச் சீமாட்டியையும் மணம் செய்வித்து இரு கட்சியையும் இணைத்துத் தப்பிக்கொண்டான். ஆர்தர் மட்டும் தனியே விடப்பட்டு ஜானுல் மணிக்கூண்டுச் சிறையில் அடைபட்டான். அவ்விடத்தில் வைத்து ஜானின் தூண்டுதலால் அவன் கையாளான ஹியூபர்ட் கொலைகாரர் உதவியுடன் ஆர்தர் கண்ணைப் பழுத்த இரும்புக் கம்பிகளால் போக்க முயன்ருன். ஆனல் ஆர்தர் இளமழலைச் சொற்களுக் கிரங்கி ஹியூபெர்ட் அவனைக் கொல்லாது கொன்றதாக அரசனுக்குச் சொல்லி அனுப்பினுன்.

காண்டர்பரித் தலைமகன் இடத்தை நிரப்பும் வகையில் உலகின் சமயத்தலைவராகிய ஜானை எதிர்த்துப் பல வகையில், ஒறுத்தும் பயனில்லாமல் போகவே, இறுதியில் பான்டல்ஃப் என்ற தூதன் மூலம் ஃபிலிப் அரசனை அவன்மீது ஏவிப் படையெடுக்கச் செய்தான். ஆர்தர் கொலைச் செய்தி கேட்டு ஆங்கில மக்கள் ஃபிலிப்பை ஆதரித்ததுடன், ஹியூபெர்ட்டையும் பிடித்து ஒறுக்க, அவன் ஆர்தரைக் காட்டுகிறேன் என்று சிறைக்கு வந்தான். தற்செயலாய் அதே சமயம் ஆர்தர் நம்பிக்கை யிழந்து பலகணிவழி தப்ப முயன்று கீழே விழுந்து இறந்துகிடந்தான். தன் செயலால் வந்த துயர் பொருது ஜான் இறக்கவும், ஆங்கில மக்கள் சினம் தீர்ந்து புதிய அரசனுகிய மூன்ரும் ஹென்ரியை ஆதரித்தனர். ஃபிலிப்பும் ஃபிரான்சு திரும்பினுன்.

# 2. மன்னன் ஜான்

## (King John)

### 1. அரசுரிமையா ஆற்றலுரிமையா?

மன்னன் ஜானின் ஆட்சி ஆங்கில நாட்டு வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதொன்று ஆகும்.

இஃது அவன் ஆட்சி செங்கோல் ஆட்சி என்பதனால் அன்று. உண்மையில் அவன் ஒரு கொடுங்கோல் மன்னனே யாவன்.

அவன் நற்குணக்குன்று என்பதனாலும் அன்று அது. நேர்மாறாக ஒரு வகையில் அவனைத் தீக்குணக் குன்று என்று கூடச் சொல்லல் ஆகும.

பின் அவன் ஆட்சியின் சிறப்புத்தான் என்னை எனில், அவன் தீக்குணங்கள் கூட ஆங்கிலேயருடைய நாட்டுரிமை உணர்ச்சியையும் விடுதலை உணர்ச்சியையும் தூண்டி அவற்றிற்கு நிலவரமான பாதுகாப்பளிக்கும் சட்டதிட்டங்களை ஏற்படுத்த உதவின என்பதேயாகும்.

மன்னன் ஜானுக்குமுன் அரசனாயிருந்தவன் அவன் அண்ணன் ரிச்சர்டு அரிமா நெஞ்சினன் என்ற முதல் ரிச்சர்டு அரசன்[1] ஆவன். இவன் போரும் மறமுமே உயிர்வாழ்க்கை எனக் கொண்டு வீரமும் புகழும் நாடிப் பலஸ்தீனம் ஃபிரான்சு முதலிய நாடுகள் சென்று போர் செய்து வெற்றிக்கொடி நாட்டி வாழ்ந்தவன். அவன் தன் நாட்டுடனோ நாட்டின் அரசியலுடனோ தொடர்பே வைத்துக் கொள்ளாமல் அவற்

1. Richard I or Richard Coeur de Lion.

றைத் தன் போர்ச் செலவிற்கான ஒரு பணப்பை என்று மட்டுமே கணித்திருந்தான்.

ஜானிடம் ரிச்சர்டின் போர்மறம் இல்லாமலில்லை. ஆனால் ரிச்சர்டின் பெருந்தன்மையும் தன்னலமற்ற புகழ் விருப்பும் இவனிடம் இல்லை. இவற்றோடு ரிச்சர்டிடம் இல்லாத சிறுமையும் பொய்மையும் கொடுமையும் இவனிடம் மிகுந்திருந்தன.

இன்னொரு வகையிலும் ஜான் ரிச்சர்டிடமிருந்து வேறுபட்டவன். ரிச்சர்டு பெரும்பாலும் வெளிநாட்டிலேயே இருந்ததனால் ஆங்கில நாட்டுப் பழக்கமும் ஆங்கில நாட்டுப் பற்றும்கூடக் குறைந்தவன். ஜானோ இங்கிலாந்திலேயே இருந்து அந் நாட்டார் பழக்க வழக்கங்களையும் இயல்பையும் அறிந்தவன். மிகுந்த நாட்டுப்பற்றுங் கொண்டவன். அவன் தீயகுணங்கள் பலவாயிருந்தாலும் இந்த ஒரு நல்ல குணத்தால்தான் ஆங்கிலமக்கள் 'சினந்தும்' அவன் இனத்திலேயே இருந்தனர். ஆயினும் அதற்கேற்ப மக்களைத்தான் எத்தனை கொடுமையாய் நடத்தினும், பிறநாட்டவர்க்கு அவர்களையோ தன்னையோ அவன் விட்டுக் கொடுப்பதில்லை.

ரிச்சர்டுக்கும் ஜானுக்குமிடையில் அவர்கள் தந்தையாகிய பேரரசன் இரண்டாம் ஹென்ரிக்கு [1]ஜொஃப்ரே என்றொரு புதல்வன் இருந்தான். அவன் தந்தையிருக்கும்போதே இறந்துவிட்டான். ஆயினும் அவனுக்கு [2]ஆர்தர் என்றொரு பிள்ளை உண்டு. ரிச்சர்டு அரசர்க்குப் பின் ஒழுங்குப்படி அரசனாக வேண்டியவன் அவனே. ஆனால் அச் சமயம் அவன் பால்மணம் மாறாச் சிறுவனாயிருந்ததனாலும், அவன் தன் தாய் [3]கான்ஸ்டன்ஸுடன் அயல் நாடாகிய ஃபிரான்சிலிருந்ததனாலும் ஜானே அரச

1. Geoffrey.
2. Arthur. 3. Constance.

னுன். அவன் திறமையும் நாட்டுப் பழக்கமும், அவன் தாய் [1] எலினரின் உதவியும் இதில் அவனுக்கு மிகவும் துணைநின்றன.

எலினருக்கு ஆர்தரும் பிள்ளையின் பிள்ளையே யாவான். ஆயினும் ஜானே அவளுக்குச் செல்வப்பிள்ளையா யிருந்தபடியால் அவள் மற்ற யாரையும் விட்டு அவனுக்கே உடந்தையாய் இருந்தாள். இரண்டாம் ஹென்றி ஆண்ட நாடுகள் இங்கிலாந்து மட்டுமல்ல. பிரான்சின் மூன்றிலொரு பிரிவை உள்ளடக்கிய பல சிறு அரசு வட்டங்களும் அவற்றுள் அடங்கியவையே ஆகும். எலினரின் செல்வாக்கு இங்கிலாந்திலும், ஃபிரான்சு அரசுவட்டங்களுள் [2]நார்மன்டி முதலிய சிலவற்றிலும் மிகுதியாயிருந்தது. எனவே அவ் விடங்கள் அவள் முயற்சியால் மிக எளிதாக ஜானை அரசனாக ஏற்றன. பிற சில வட்டங்கள் ஆர்தரையே தலைவனாக ஏற்றன. இவ் வட்டங்கள் அனைத்திற்கும் பெயரளவில் மேற்பார்வையாளனும் ஃபிரான்சு அரசனும் ஆன [3] இரண்டாம் பிலிப், ஆங்கில அரசனுடைய செல்வாக்கு, விரிந்த ஆட்சிப்பகுதிகள் ஆகியவற்றை உன்னி அவனிடம் அழுக்காறு கொண்டிருந்தான். ஜானை ஒத்த ஆற்றல் மிக்க ஒருவன் ஆங்கில அரசனா யிருப்பதைவிட ஒன்று மறியாச் சிறு பைதலாகிய ஆர்தர் அரசனா யிருப்பது அவனுக்குப் பிடித்தமாயிருந்தது. ஆகவே அவன் ஜானை அரசனாக ஏற்காமல் ஆர்தரையே அரசனாக ஏற்றான்.

அரசவட்டங்களுட் சில இருகட்சிகளுள் எதனுடன் சேரலாம் என்ற உறுதியற்றனவா யிருந்தன. தோற்கும் கட்சியுடன் சேர்ந்தவர்க்குத் தோல்வியும் தோல்வியின் பயனான தீங்குகளும் இறுதியில் கிட்டுமாதலால், எக்கட்சி வெல்லும் என்றறிந்து அதனுடன் சேரலாம் என்று

1. Elinor. 2. Normandy. 3. Philip II.

அவை காத்திருந்தன. அத்தகைய பகுதிகளில் மிகவும் தலைமை வாய்ந்தது [1]ஆங்கியர்ஸ் என்னும் நகரமாகும்.

## 2. வல்லவனுக்கு வல்லவன்

அவ் ஆங்கியர்ஸ் நகரின் ஒருபுறம் ஆங்கிலேயரது படைவந்து கூடாரமடித்துநின்றது. இன்னொருபுறம் ஆர்தர் கட்சிக்காக ஃபிலிப்பும் அவனது ஃபிரஞ்சுப்படையும் வந்து காத்திருந்தனர். இரு கட்சியினரும் நகர மக்களைத் தங்கள் தங்களுடன்தான் சேரவேண்டும் என வற்புறுத்திப் பார்த்தனர். நகர மாந்தரிடையே பல இடங்களிலும் சுற்றி அடிப்பட்ட வாயாடி ஒருவன் இருந்தான். அவன் தன்னைத்தானே அவர்கள் ஆட்பெயராக்கிக்கொண்டு நகர் மதிலில் வந்து நின்று இருபுறத்தும் தலைமைதாங்கும் அரசரையே நோக்கிப் பேசினான். "மன்னர்களே, நீங்கள் இருவரும் உலகின் இருபெரு வல்லரசுகள். நீங்கள் ஒருவரை ஒருவர் எதிர்க்கும்வரை எம்போல்பவர்க்கு ஓர் உறுதி உண்டு. உங்களில் எவரேனும் எங்களை எதிர்ப்பதாயின், அடுத்தவர் எங்களுக்கு உதவி செய்வார்கள் என்று எங்களுக்குத் தெரியும். ஆனால் அதேசமயம் உங்களில் எவரையேனும் நாங்கள் சார்ந்தால் அடுத்தவர் பகைத்து எதிர்ப்பதும் உறுதி. ஆகவே நாங்களாக வலிய உங்கள் பகைமையை வாங்குவதைவிட உங்கள் நட்பை வாங்கவே விரும்புகிறோம். அதுவும் உங்களில் எவர் ஆற்றல் மிக்கார் என்று கண்டு அவருடனே தான் நட்புக்கொள்ள விரும்புகிறோம். அதனால் நீங்கள் வெறும் பசப்பு மொழிகளைச் சொல்லி எங்களை உங்களில் ஒருவர் பக்கம் சேர்க்கலாம் என்று காத்திருப்பது வீணேயாகும். விரைவில் உங்கள் ஆற்றல் மிகுதியை ஒருவர் மீது ஒருவர் போரால் நிலைநிறுத்தி விடுங்கள். யாதொரு தடையுமின்றி நாங்கள் அங்ஙனம்

1. Angiers.

வெற்றி வீரனுகும் கட்சியினருக்குத் தலைவணங்கிக் கோட்டைவாயில் திறந்து வரவேற்போம்" என்ருன்.

அவன் கூறியது வெறும் வாயடியே; ஆனுல் அவ் வாயடியிலுள்ள உண்மை உலகின் பெரிய வல்லரசுகளான அவ் விருவரையும் திணறவைத்தது. ஒரு சிறு நகரம்; அது நம்மை இப்படிப் 'பித்துக்குளி'யாக்கி விட்டதே என்று இரண்டு திறத்து வீரர்களும் மனம் வெம்பினர். இனி என் செய்வது? ஒருவர்க்கொருவர் பகையான இரு கட்சியினரிடையேயும் நகரைப்பற்றிய அளவில் ஒரே சீற்றமும் புழுக்கமும் பழிச் சொல்லுமே நிறைந்திருந்தன.

'வல்லவனுக்கு வல்லவன் வையகத்திலுண்டு' என்றபடி அந் நகர வாயாடிக்காரனுக்கு மிஞ்சியவன் ஒருவன் ஜானின்படையில் இருந்தான். அவன் ரிச்சர்டு அரசனுடைய காமக்கிழத்தியின் மகன். அவனிடம் ரிச்சர்டின் வீரமும் தாயின் ஆங்கில நாட்டுப்பற்றும பிடிவாதமும் ஒன்றுபட்டிருந்தன. அவனும் ரிச்சர்டுடன் கூடப் பல நாடுகளிலும் சென்று போரில் பழகியவன்; அதோடு அந்நாளைய படைத்திறப் பயிற்சிக்குரிய நூல்களையும் போர் வரலாறுகளையும் நாட்டு வரலாறுகளையும் மேலெழுந்த வாரியாகப் படித்தவன். அவன் பெயர் [1]ஃபால்கன் பிரிட்ஜ்.

அவன் மூளைக்கு அந் நகர வாயடிக்காரனது வாயடியின் மிக்கதொரு வாயடி தென்பட்டது. அவன் வாசித்த போர் வரலாறுகளில் முன் இதேபோல் இரண்டு பகைவர்களைக் கிண்டிவிட முயன்ற ஒரு சூழ்ச்சிக்காரனை அவ் விருபகைவர்களும் ஒன்றுபட்டழித்து, அதன்பின் நேரடியாய்த் தங்கள் பகைமையைத் தீர்த்துக்கொண்டனர் என்று அவன் கண்டிருந்தான். இப்போதும் அதே மாதிரி செய்தாலென்ன என்று அவன் இரு புறத்தவர்க்கும் கூறினுன்.

1. Faulconbridge.

நகர மக்கள்மீ துள்ள வெப்பத்தால் இருபுறமும் வீரர் உள்ளம் வைக்கோற்போர்கள் போல் காய்ந்து கிடந்ததனுல், இக் குறும்புச் சொல் காற்று வாக்கிற்பட்ட பொறி போல் பிடித்துக்கொண்டது. இத்தகைய வெட்கங் கெட்ட சொற்கள் அம்பலமேறும் வெட்கங்கெட்ட காலம் அது. ஆதலால் பகைவர்கள் பகையல்லாத மூன்ரும் கட்சியை அழிக்கவேண்டித் தம் பகைமையைச் சுருட்டி வைத்துக்கொண்டு அத் தீவழியில் ஒன்றுசேர்ந்து முனையலாயினர்.

நகரமக்கள் பார்த்தனர். தம் நிலை அசைக்க முடியாதது என்று நினைத்தது போக, இப்போது நிலைக்க முடியாததெனத் திரிந்தது கண்டனர். கண்டு இனி யாது செய்வது எனக் கூடி ஆராய்ந்தனர். முதலில் தம் கட்சியை எடுத்துக் கூறியவனையே எல்லாரும் இடித்துக் கூறி "இப்போது என்ன சொல்லுகிருய்! உன் சொல் செல்லவில்லையே" என்றனர்.

அவ் வாயடிக்காரன் சமயத்துக் கொத்த அறிவு நிரம்பியவன். நகரமக்கள் திக்குமுக்காடும் அந் நேரத்திலும் அவன் ஒரு புது வழியை அவர்களுக்குக் காட்டினன். "முதலில் வல்லரசுகள் இருவரும் தம்முட் பகைத்து நம் நட்பை நாடினர். இப்போது தம்முட் பகைநீத்து நம்மைப் பகைக்கலாயினர். சரி, இவ்வளவு தொலை பகை நட்பாகவும் நட்புப் பகையாகவும் மாறும்போது ஏன் அவ் இருவரே போல் நாம் மூவரும் பகை நீத்து ஒத்துப் போகப்படாது" என்ருன் அவன்.

முதலில் அவன் கூறுவது புரியாமல் நகரமக்கள் விழித்தனர். பின்னர் அவன் விளக்கமாகத் தன் கருத்தை எடுத்துக் கூறினன். "பேச்சளவில் இப்போதுள்ள சண்டை ஜானுக்கும் ஆர்தருக்கும் ஆயினும், உண்மையில் படைவலியுடன் போர்புரியும் கட்சிகள் ஃபிரான்சு அரசனும் ஆங்கில அரசனும் தாமே! அவர்களிடையே

எப்படியாயினும் நட்பை உண்டாக்க முடியுமானால் இங்கே சண்டையு மிராது; நமது இக்கட்டும் அதனுடன் போகு மன்றோ? அத்தகைய நட்புக்கொரு வழி எனக்குத் தோன்றுகிறது. ஃபிரான்சு அரசன் மகனாகிய சார்லஸுக்கு இன்னும் மணமாக வில்லை. ஜானின் மருமகளும் கஸ்டைல் அரசன் மகளுமான பிளான்ஷிச் சீமாட்டியை சார்லஸுக்கு மணம் செய்தால் என்ன? என்றான்.

நகர மக்களுக்கு இது துன்பநேரத்தில் வந்த தெய்வ அருட்பேறு போல் விளங்கிற்று. இதனைச் செவியுற்ற படைவீரரும் தோல்வி என்ற பெயரின்றியும் சண்டையின்றியும் விடுபட்டோம் என்று கலகலத்துக் கொண்டனர்.

## 3. கான்ஸ்டன்ஸின் பழி

ஆர்தருக்கு அரசாட்சி கொடுப்பதினின்றும் ஃபிரஞ்சு அரசனை எதிர்த்துப் போரிடுவதினின்றும் தவிர்தலின் ஜான் இதனை ஏற்றான் என்று சொல்ல வேண்டுவதில்லை. ஃபிலிப்மட்டும் இதனை ஏற்கச் சற்றுத் தயங்கினான். ஒருபுறம் இதனால் ஆங்கில நாட்டரசு கூட ஒரு வேளை தன் மகனுக்கே வரக்கூடும் என்ற அவா அவனை இழுத்தது; இன்னொருபுறம் அவன் மனச் சான்று ஆர்தருக்கு அவன் செய்யும் வஞ்சத்தைக் குறை கூறிற்று. ஆனால் அதனைச் சரிப்படுத்த ஜான் ஆர்தருக்கு ஆங்கியர்ஸையும் பிரிட்டனில், ரிச்மண்டு முதலியவற்றையும் கொடுப்பதாகச் சொல்லவே, அவன் தயக்கமின்றி அந்த உறவை ஏற்றான். அதன்படியே சார்லஸுக்கும் பிளான்ஷிச் சீமாட்டிக்கும் கடிமணம் நடந்தேறியது.

ஏழை ஆர்தரையும் அவன் தாய் கான்ஸ்டன்ஸையும் முதலில் தன் நலத்திற்காகத் தலைக்குமேல் ஏற்றிய

பிலிப், இப்போது அதே தன்னலத்தால் தூண்டப்பட்டு அவர்களை மீண்டும் துணையற்றவராக விட்டுவிட்டான்.

இங்ஙனம் தம் பகைவருடன் நண்பரும் சேர்ந்து தம்மைக் கைவிட்டனர் என்று கான்ஸ்டன்ஸ் கண்டாள். உலகியல் வாழ்வில் வாள்வலி இன்றேல் ஒழுங்கு என்பது மட்டிலும் தனிப்படப் பயனுடையதன்று என்பதை அவள் அறிந்து தற்காலிகமாகக் கிடைத்ததை ஏற்றுக்கொண்டிருந்தால் அவளுக்கும் அவள் மைந்தனுக்கும் வேறிடையூறின்றி வாழ்வாவது கொடுத்து வைத்திருக்கும். வாய்ப்பு நேர்ந்தால் வெற்றிகூடக் கிடைத்திருக்கலாம். ஆனால் ஊழ் யாரைவிட்டது ! அவள் தன் பெருந்துன்பத்திலும் 'ஓங்கி எழுந்த தன் சினத்திலும் தன் வலிமையின்மையையும் துணையின்மையையும் மறந்தாள். மறந்து தன் பகைவனாகிய ஜானையும்; நண்பனாக நடித்துத் தன்னையும் தன் குதலை மைந்தனையும் காட்டிக் கொடுத்த ஃபிலிப்பையும் வாயார வைதாள். அவர்கள் தம்மைப் பிணக்கும்படி ஏற்படுத்திய அக் கடிமணத்தையும் மணமக்களையும் பழிசேர்க என அவள் வன் சொல் கூறிப் பழித்தாள்.

அவளது பழிச்சொல், அவளது கண்ணீர் பயனற்றுப் போய்விடவில்லை என்பது மட்டிலும் உண்மை. அம் மணமக்கள் நெடுநாள் மனமார வாழக் கொடுத்துவைக்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்தது போல் அந்த மணம் அவர்கள் குடும்பங்களைப் பிணைக்கவுமில்லை. விரைவில் அவளைக் கைவிட்டு ஒன்று கூடிவிட நினைத்த இரு வல்லரசுகளும் ஒருவர் கழுத்தை ஒருவர் கடித்துக் குருதி கொப்புளிக்கவும், ஒருவர் அவாக்களை ஒருவர் அழிக்கவும் செய்ததன்றி அது வேறு வாழ்வு காணவில்லை. ஆனால் அப்பழிச்சொல்லால் பிறர்க்கு இத்தனை கேடு விளைந்தும் அச் சொல்லைக் கூறிய கான்ஸ்டன்ஸுக்கு எவ்வகை நன்மையும் கிட்டவில்லை. அவள் தீவினைப் பயனை அவள்

துய்த்தே தீரவேண்டுமன்றோ? அதுமட்டுமன்று, ஊழ் அவளுக்கு இன்னும் பெருந் துன்பம் தந்து அவள் வாயிலிருந்து வரும் பழியை இன்னும் மிகைப்படுத்தவே செய்தது.

## 4. வீரனும் போலி வீரனும்

இச் சமயம் ஃபிலிப்பின் அரசவையில் லிமோஜிஸ் என்றொரு பெருமகன் இருந்தான். அவன் பெயருக்குத் தான் பெருமகனேயன்றிப் பெருமகனுக்குரிய எவ்வகை உடைமையோ உரிமையோ அற்றவன். அவன் தீவழிகளால் தனக்கிருந்த பெருநிலக்கிழமை, பொருள்நிலை முதலிய யாவும் இழந்தவன். ஆனால் காரியம் போகினும் வீரியம் போகவில்லை என்றபடி அவன் தற்பெருமை மட்டிலும் மாளவில்லை. அது மேன்மேலும் மிகுதியாயிற்று என்று கூடச் சொல்லவேண்டும். யார் யார் உயர்நிலைக்கு வந்தாலும் அவர்களிடம் பல்லைக் காட்டி இளித்து முகமன்கூறி வாழ்ந்த பேதை அவன்! எப்படியோ, அவன் எய்த அம்போ, அல்லது அதே சமயம் அவனது என்னும்படி வாய்ப்பாக உடன் எய்யப்பட்ட வேறு அம்போ ரிச்சர்டு அரசன் கண்மீது பட்டு அவன் இறந்துவிட்டான் என்ற காரணத்தால், அவன் தன்னை, ரிச்சர்டையும் வென்ற வீரன் என்று கூறி வீம்படித்துக் கொள்வான். இதற்கு அறிகுறியாக அவன் ரிச்சர்டு அரிமாநெஞ்சினனைக் குறிப்பாகக் காட்டும் முறையில் அரிமாவின் தோல் ஒன்றைத் தோளில் இட்டிருந்தான்.

ஜான் படையும் ஃபிலிப்பின் படையும் எதிரெதிர் நின்றிருந்தபோது இருபுறமிருந்தும் கான்ஸ்டன்ஸும் ஜானின் தாயாகிய எலினரும் ஒருவரை ஒருவர் வைது கொண்டனர். லிமோஜிஸ் அவரிடையே பெருமிதத்துடன் நடுநிலை ஒழுங்கு பேசவந்து, இருவர் சினத்துக்

கும் ஆளானதோடு ஃபால்கன் பிரிட்ஜினையும் மிகவும் பகைத்துக்கொண்டான்.

லிமோஜிஸ் அதோடு தற்போது கான்ஸ்டன்ஸின் துயரிடையே வந்து தன் வழக்கமான பல்லவியாகிய ஃபிரான்சு அரசன் பெருமையையும் தன் வீரத்தையும் பற்றிப் பேசவே, கான்ஸ்டன்ஸ் அவன்மீது சினந்து, "போ, போ பசப்புகாரக் கோமாளி, உன்னை யார் இங்கே வரச் சொன்னது? நீ பெரிய வீரன் என்று நினைத்தா உலகப் பெருவீரன் ரிச்சர்டின் அறிகுறியாகிய கேசரியின் தோலைப் போர்த்திருக்கிறாய்? உனக்குக் கிடைக்கத்தக்க தோல் கேசரியின் தோல் அன்று; வேசரியின் தோலே" என்றாள்.

அவள் சொல்லி வாய்மூடுமுன் காது செவிடுபடும்படி சிரிப்புடனும் கனைப்புடனும் ஒரு குரல் "ஆகா ஆகா, நன்று சொன்னாய், நன்று சொன்னாய்! ஆயினும் அதிலும் ஒரு பிழை இல்லாமலில்லை. அவன் கேசரியின் தோலைத்தான் போய்த் தேடவேண்டுமே தவிர வேசரியின் தோலைப் போய்த் தேட வேண்டியதே இல்லை; அவனேதான் ஒரு வேசரியாயிற்றே!" என்றது.

அதுகேட்டு, அங்கே நின்ற ஆண்பெண்களனைவரும், துன்பத்துள் தோய்ந்த கான்ஸ்டன்ஸும் ஆர்தரும் கூடக் கைகொட்டி நகைத்தனர். அங்ஙனம் நகைத்தது யார் என்று லிமோஜிஸ் சீற்றத்துடன் திரும்பிப்பார்க்க, அது, தான் அவமதித்து வரும் ரிச்சர்டின் அன்புடைப் புதல்வன் ஃபால்கன்பிரிட்ஜ் என்று கண்டான்.

அது வேறு யாராயினும் அன்று அவன் தன் வெற்று வீச்சுக்களையேனும் காட்டியிருப்பான். ஃபால்கன்பிரிட்ஜின் வீரத் தோற்றத்தையும் சிங்கநோக்கையும் கண்டதுமே அவன் உண்மையிலேயே ஒரு வேசரியாய் நடுங்கி ஒடுங்கி வெளியே நகர்ந்து நழுவலுற்றான்.

## 5. போப்பின் சீற்றம்

கான்ஸ்டன்ஸின் தீவினை அவனை முற்றிலும் விழுங்கு முன்னதாகவே, அவள் வாயின் பழிச்சொல்லின் முழு வன்மையும் வெளிவருமுன்னதாகவே அவ் 'ஏழை யழுத கண்ணீரின்' பழி தன் வேலையைத் தொடங்கிற்று. ஜானுக்கும் ஃபிலிப்புக்கும் இடையே ஒரு புதிய வேறு பாடு ஏற்பட்டது—அதுவும் அவர்களைப் பிணைக்க ஏற் பட்ட திருமணத்தின் விளைவாகவே.

இங்கிலாந்தில் கான்டர்பரிப் பெருந்தலைவனை [1]ஹியூபெர்ட் வால்ட்டர் இறந்தபின் அடுத்த பெருந் தலைவனைத் தேர்ந்தெடுக்கும் வகையில் ஜானுக்கும் அந் நாளைய கிரிஸ்தவ சமயத்தில் உலகத்தலைவனாகிய "திருப்பெருந்தந்தை"க்கும் வேற்றுமை ஏற்பட்டது. ஜான் தேர்ந்தெடுத்த ஜான்டிகிரேயை மறுத்துத் 'திருப் பெருந் தந்தை' ஸ்டீஃபென் லாங்ட்டனை அனுப்பினான். ஜான் இங்ஙனம் தன் நாட்டிலேயே தன் ஆற்றலை எதிர்க்க முயன்ற திருப்பெருந் தந்தைமீது சினங் கொண்டு அவனுடைய ஆளான ஸ்டீஃபென் லாங்டனை இங்கிலாந்தில் காலடி எடுத்து வைக்க வொட்டாமல் தடை செய்யலானான்.

அவ்வந் நாட்டு மக்களின் உலகியல் வாழ்க்கைக்குத் தலைவரான அவ்வந்நாட்டு அரசரைப் போலாது எல்லா நாட்டுக் கிறிஸ்துவ மக்களின் உடல் பொருளாவி மூன் றிற்கும் திருப்பெருந் தந்தை உரிமையாளனாகக் கருதப் பட்டு வந்ததனால் அவனது ஆற்றலும் ஆணையின் அளவும் அரசரையும் பேரரசரையும் அதிரச்செய்யத் தக்கதாயிருந்தன. ஜான் தன்னை எதிர்த்து மீறத் துணிந்தான் என்றறிந்ததுமே அவன் எழுமுகிற் கிறை வன் சினந் தெழுந்ததுபோல் சினந்தெழுந்து மின்படை

---

1 Archbishop of Canterbury.

யும் இடிப்படையும் போன்றதன் பேராணைகளை வீசி எறிந்தான். இவற்றுள் ஒன்றால் ஜான் [1]சமய வினைகள் அனைத்தினின்றும் விலக்கப்பட்டான். அதனையும் அவன் சட்டை செய்யாதிருக்கவே இரண்டாவது [2]ஆணையால் ஜான் ஆளும் நாட்டையே சமய வினைகளினின்றும் விலக்கிவைத்தான். இதன் கொடுமை மக்களனைவரையும் தாக்கியது. பிறந்த பிள்ளைக்குப் பெயரிடவும், இறந்தவரை நன்முறையில் அடக்கம் செய்யவும், மணமக்களை மணவினையால் பிணைத்து வைக்கவும் [3]சமயத் தலைவரும் [4]சமய வினைஞரும் மறுத்தனர்.

இவ்விரு பேராணைகளாலும் எதிர்பார்க்கப்பட்ட பயன் ஏற்படவில்லை. சமயத்தின் திருவுருப்போன்ற சமயத்தலைவர்மீது சிற்றங்கொண்ட ஜானுக்குச் சமய விலக்கு ஒரு பொருட்டாகத் தோன்றாதது இயல்பே. ஆனால் இரண்டாவது ஆணை நாட்டுமக்கள் அனைவரையும் தாக்குவதனால் அதனால் பெரும்பயன் ஏற்படும் எனத் திருப்பெருந் தந்தை எதிர்பார்த்தார். ஓரளவு அதனால் ஆங்கிலேயர்—சிறப்பாகச் சமயப்பற்று மிக்கார்—மன அமைதி குலைந்தனர் என்பதில் ஐயமில்லை. ஆனால் சமயத்தின் பேரால் வெளிநாட்டான் ஒருவன்—அது திருப்பெருந் தந்தையாயிருந்தாலும் கூட—தம் அரசனை—அவன் எவ்வளவு கெட்டவனாயிருப்பினும் கூட அடக்கியாள அவர்கள் ஒருப்படவில்லை. எத்தனையோ வகைகளில் அவனுக்கு மாறாயிருந்த பல்வகை ஆங்கில அரசியல் கட்சியினரும் திருப்பெருந் தந்தையை எதிர்க்கும் ஒரு இடத்தில் மட்டும் அவனுக்கு மனமாரத் துணை தந்தனர். இக் காரணத்தால் திருப்பெருந் தந்தையின் இரண்டாவது ஆணையை அவர்கள் பொறுத்து எதிர்த்தனர்.

ஆற்றல் மிக்கார் பெருந்தோல்விகளால் வீறெய்துவரேயன்றி மலைவதில்லை. ஜானையன்றி நாட்டு மக்களும்

---

1. Excommunication 2. Interdict 3. Clergy 4. Priests

கூடத் தன்னை அசட்டை செய்கிறார்கள் என்று கண்ட திருப்பெருந் தந்தை சூரபன்மனுடைய மாயத் தோற்றங்களால் ஒரு சிறிதும் கலங்காது வைவேலெறிந்த முருகவேள் போன்று தன் முழு ஆற்றலையும் செலுத்துவதென்று துணிந்து ஜானை அவனது அரசிருக்கையினின்றும் நீக்கினான். இதனை முதலிரு ஆணைகளையும் போல் சொல்லளவிற் செய்தால் பயனில்லை என்று கண்டு அதனை நிறைவேற்றி வைக்கும்படி ஃபிரான்சு அரசன் ஃபிலிப்புக்கு ஆணை தந்தான்.

## 6. நட்பின் விதையே பகை விதையாயிற்று

ஃபிலிப்புக்கும் ஜானுக்கும் இடையே மீண்டும் பகைமை என்னும் பயிர் வளர இவ்வாணையே விதையாயமைந்தது. இவ் விதை வளர்வதற்கு அவர்கள் தம் உறவைப் பிணைக்க ஏற்படுத்திய மணமே உரமாகவும் நின்றது. ஏனெனில் நன்மையை நாடிய தூய வீரனல்லனாயினும் தீமையைச் செய்யும் வகையிலும் கோழையேயான ஃபிலிப் முன் ஆர்தரைக் கைவிடத் தயங்கியபோது திருப்பெருந் தந்தையின் தூதனாகிய [1]பான்டல்ஃப் அவனிடம் "உரிமைப்படிகூட ஆர்தருக்கடுத்தபடி அரசன் உன் மகனே ஆதலால் அவனுக்காகவும் ஜான்மீது நீ போர்செய்யக் கடமைப்பட்டிருக்கிறாய்" என்றான். அதற்கும் சற்றுத் தயங்குவதாக ஃபிலிப் காட்டிக்கொள்ளவே, பான்டல்ஃப் ஒப்பற்ற சூழ்ச்சித்திறத்துடன் 'அரசே, திருப்பெருந் தந்தையின் ஆணை இறைவன் ஆட்பெயரின் ஆணை; அதனுடன் ஆர்தர்க்கும் நீரே துணைவர்; இடையில் அவனுக்கு நீர் செய்த வஞ்சத்தை நீர் இதனால் தணிக்கலாம். அவ்வஞ்சங்கூட

1. Pandulph. (Legate of the Pope)

இறைவன் உமக்கு ஆங்கிலநாட் டரசுரிமை தர உம் மனத்தில் தூண்டிய தூண்டுதலாகவே இருக்கவேண் டும். இன்று இப்போரில் இறங்குவதால் அவ் வஞ்சனை யின் தீவினையினின்றும் விடுபடலாம்' என்றான்.

ஃபிலிப் பின்னும் "அங்ஙனமாயின் ஆர்தரையன்றோ அரசனாக்க வேண்டும்; திருப்பெருந் தந்தை என்னை அரசனாக்கியது என்னவது" என்றான்.

பான்டல்ஃப் ஃபிலிப்பைப்போல் எத்தனையோ கோழைகளையும் ஜானைப்போல் எத்தனையோ வீரரையும் பார்த்துப் பழமும் தின்று கொட்டையுமிட்ட பழம்பூனை. ஆகவே அவன் திறம்பட "அரசே, தெய்வ உள்ளத்தின் போக்கை நீர் அறியீர். ஆர்தருக்கிடும்போர் உம் போரா யிருக்கவேண்டும் என்பது இறைவன் உள்ளம். நீர் ஆர் தருக்காகப் போரிட்டால் போதும். அப்போர் முடியு முன் உம் பகைவன் ஜானே ஆர்தரைக் கொன்று விட் டிருப்பான். ஆதலால் நீர் உம் பெயரால் முயலாமலே அரசுரிமைக்குரியவராவீர்" என்றான்.

தொலைநோக்குடன் வகுத்த அந்நுண்ணிய பொறி யில் ஃபிலிப் மாட்டிக்கொண்டான்.

அவனை வன்மையாக அவ் வலையின் பக்கம் இழுத் தது ஆங்கில நாட்டின் நிலைமை. அவனை அதில் தூண் டிய திருப்பெருந் தந்தைகூட அவனை அதினின்றும் பின்னால் இழுக்க முடியவில்லை.

## 7. படுநொலைக்கஞ்சா மன்னன்

ஜானிடம் போர்வீரம் இருந்ததே ஒழிய நெஞ்சு வீர மாகிய மானமும் உரமும் இல்லை. அவனது கொடுங் கோன்மையால் மக்கள் துன்புற்று அவனைப் பகைத் தனர். அவனது தன்னாண்மையால் பெருமக்கள் எழுந்து கிளர்ச்சி செய்தனர். திருப்பெருந் தந்தையின் எதிர்ப் பால் விளைந்த கெடுதல்கள் வேறு. இவை அனைத்திற்

கும் மேலாகத் திருப்பெருந் தந்தையின் தூண்டுதலால் ஃபிலிப் அரசன் படை யெடுப்பதாகவும் அவன் கேட்டான். இவை யனைத்தையும் எப்படிச் சமாளிப்பதென்று அறியாமல் அவன் திகைத்தான்.

இத்தனை எதிர்ப்பையும் நெஞ்சிலேற்றுச் சாகும் உயர்நெறியும் தன்மறுப்பும் தூய வீரமும் அவனிடம் இல்லை. ஆனால் அவற்றிற்கு மடங்கிப் பணியும் கோழைத் தனமும் அவனிடம் இல்லை. வஞ்சனையாலும் சூழ்ச்சியாலும் போலிப் பணிவினாலும் ஏன் எல்லாரையும் ஏமாற்றித் தப்பக்கூடாது என்று நினைக்கும் இரண்டக வஞ்சமும் கீழ்மையும் மட்டும் அவனிடம் நிறைந்திருந்தன.

அவன் பகைவருள், பச்சை மதலையாகிய ஆர்தரை மட்டுமே ஊழ் அவன் கையில் கொண்டுவந்து விட்டது. விட்டு அவன் மூலம் மீண்டும் அவனுக்கு இம்மையிலேயே இகழும் ஒறுப்பும் அழிவும் தந்தது.

ஃபலிப் போர் தொடங்கிய சில நாட்களுக்குள்ளாகவே, ஆர்தர் அவன் கையிற்பட்டான், படவே அவனை உடனே இங்கிலாந்துக் கனுப்பி [1]மணிக்கூண்டுச் சிறையில் வைத்துக் காக்கும்படி அனுப்பினன். அவனைப் பாதுகாக்குப் பொறுப்பு ஜானின் நெருங்கிய நண்பனும் கொலைக் கஞ்சாக் கல் நெஞ்சினனுமாகிய [2]ஹியூபெர்ட்-டி-பர் என்பவன் கையில் ஒப்படைக்கப்பட்டது. அங்ஙனம் ஒப்படைக்கும்போதே ஜான் அவனிடம் தனிமையாகவும் குறிப்பாகவும் தான் அவன் கொலையை விரும்புவதாகக் காட்டினன்.

சிலநாட்கள் சென்றபின் இங்ஙனம் குறிப்பாகக் கூறிய செய்தி வெளிப்படையாக ஆணையுருவில் தரப் பட்டது. “ஹியூபெர்ட்! என் மனத்தில் இருக்கும் எண்ணத்தை நீ அறிவாய், பலதடவை நீ அதனை அறிந்து

---

1 Tower of London. 2 Hubert de Burgh.

நடப்பதாயும் குறிப்பாய் ஏற்றுக்கொண்டிருக்கிறாய். அதனை நிறைவேற்றும் காலம் வந்தது.

"நீ பல கொலைகளைக் கூசாது செய்தவனாயினும் இன்று இவ்வொன்றிற்குத் தயங்குகிறாய். சரி, இப்போது நான் சொல்லுகிறபடி செய். கொலை வேண்டா. பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளால் அவன் இரு கண்களையும் அவித்துவிடு,

"இதனைச் செய்யத் தவறின் நீ என் நண்பனில்லை; என் மாறாப் பகைவன்."

## 8. பணஞ் செய்யும் படுமோசம்

இவ்வாணையைமீற வகையில்லாது ஹியூபெர்ட் விழித்தான், "இதுவரையில் எத்தனையோ கொலைகளும் துணிகரச்செயல்களும் செய்து அரசன் அன்பையும் அதன் பயனாகிய உயர்நிலையையும் பெற்றோம். இனி இவ்வொரு செய்தியால் அவற்றை விட்டுவிடுவதா? இவ்வொன்றைச் செய்துவிட்டால் — இதுவே அவனுக்கு எல்லாவற்றினும் உயிர் நிலையான செய்தி—இவ்வொன்றைச் செய்துவிட்டால், பின் இதை வைத்துக் கொண்டு அவனை எப்படி வைத்தாட்டப்படாது? அப்போது அவன் என்ன கேட்டால் தரமாட்டான்?

"ஆனால், ஆனால்-ஈசனே, அப் பிள்ளை முகம் ஞாயிற்றின் ஒளியும், திங்களின் குளிர்ச்சியும், விண் மீனின் தனிமையும் மின்மினியின்நொய்ம்மையும் கொண்ட அவன் முகம்—அன்றலர்ந்த செந்தாமரையினை நாணச் செய்யும் அவன் புன்முறுவல் பூத்த முகம்—என்னை என் அம்மாவிடம் என் சிற்றப்பா எப்போது அனுப்புவார், என்னை எல்லாரும் எடுத்து முத்திமோந்து மகிழ்கிறார்களே, என் சிற்றப்பா மட்டும் என்ன என்னைக் கண்டு முகத்தைக் கோண வைத்துக்கொண்டே நிற்கிறார்; நான் அப்பா

என்றால் சட்டென்று சீறி விழுகிருர்; ஏன் மாமா, நீ என்னை எடுத்தணைக்கும்படி அவரிடம் சொல்லப்படாதா! நான் நல்ல பிள்ளையாய் இருப்பேனே!" என்று அவன் பிதற்றும் வஞ்சமற்ற குதலைமொழிகள்—"அம்மா அம்மா" என்று அவன் அழும்போது, "அம்மா என்ருல் அடிப்பேன்" என்று உறுக்கி அடிக்க, "இல்லை, இல்லை! அம்மாவைக் கூப்பிடமாட்டேன், இனி ஒரு போதும் அம்மா என்று சொல்லக்கூட மாட்டேன்!" என்று வாயிலடித்துக்கொண்டு, மனதில் மட்டும் நினைத்த நினைப்புடன் உறங்குகையில், "அம்மா அம்மா" என்று தன்னையறியாமல் சொல்லிக் கண்ணீர் வடித்தும் இடையிடையே தான் அம்மா என்று தவறிச்சொல்லி யாரேனும் கேட்டுவிட்டார்களோ என்று அஞ்சிச் சட்டென்றெழுந்து நாற்புறமும் இளமிளாப்போல் மருண்ட பார்வையுடன் பார்த்துவிட்டு ஒருவாறு மனவமைதி பெற்று மீண்டும் போர்த்துக்கொண்டு தணிந்த குரலில், 'பிள்ளையாய்வந்து பிறந்த எம்பெருமானே! என் நாவில் அம்மா என்ற சொல் வராதபடி என்னைக் காப்பாற்றும்!' என்று அவன் கூறும் கல்மனத்தையும் உருக்கும் காட்சி —ஆ, ஆ, இவற்றையெல்லாம் நினைத்தால் என் அங்கம் நடுங்குகிறது, என் கை என்னைப் பழிக்கின்றது!

ஆனல் பணம்—படி—உயர்நிலை—ஆ, இவ்வுலகில் இச் சிறு தெய்வங்களை வேண்டின்—இச் சிறு திருவருட்பேறுகளை—இச் சிறு கயிலாயங்களை உயர்வாக மதித்திடின் வஞ்சத்திற்கும் கொலைக்கும் பொய்ம்மைக்கும் அஞ்சக்கூடாது. ஆனல் கொலை! கொலை!! அதை மட்டும் செய்யா திருக்கவேண்டும். ஆயின் இதுவோ! கொலையன்றுதான், ஆயின் கொலையினும் கொடிது! மும்மடங்கு கொடிது! ஆ, கொலைஞராகிய என் போன்ருர் மனமும் இரங்கும் செயலைச் செய்யத் தூண்டுகின்ருனே இவன்! இவன் எத்தகையன்! எத்தனை கொலைப்

பழி—கொலைப்பழியினும் எத்தனை மடங்கு கொண்ட பழி இவனைச் சார்ந்தது! ஆயினும் அவனைக் குற்றஞ்சொல்ல எனக்கு உரிமை ஏது? என் போன்றார்—அடிமைகள்—பாவத்தின் அடிமைகள்—கொலைச்செயலின் அடிமைகள் இன்றேல் அவர்கள் பழிசூழ் நெஞ்சம் உலகிற்கு இத்தனைபழி சூழாதன்றோ?

இவை எல்லாம் பேசிப் பயனென்? நான் துணிந்தே யாகவேண்டும். உரலில் தலையிட்டபின் உலக்கைக்குத் தப்புவது ஏது? கழுத்தைப் பாதியறுத்த பின் பாபத்துக் கஞ்சியோ கொலைக்குப் பரிந்தோ பயனென்ன? என்றிவ்வாறு பலபடி மன முளைந்து இறுதியில் தேறிச் சிறைக்கூடம் சென்றான்.

"பெண்ணென்றால் பேயும் இரங்கும்; பிள்ளையென்றால் பித்தும் இரங்கும்," என்பது பழமொழி. ஹியூபெர்ட், தன் கல்நெஞ்சையும் ஆர்தரது களங்கமற்ற மதிமுகம் கவர்ந்து, தனது மன உறுதியையும் துணிவையும் கலைத்துவிடுமோ, என்றஞ்சி முகத்தைத் திருப்பிக் கொண்டு சிறையினுட் சென்றான். அவன் பின் இருப்புக் கம்பியைக் காய்ச்ச உதவவேண்டி மூன்று காவலாளிகள் காலன் கையாட்கள்போல் உடன் புகுந்தனர்.

## 9. சிறுவன் அடைந்த வெந்துயர்

என்றும், வரும்போதே தன்னை நோக்கி வரும் ஹியூபெர்ட்மாமா இன்று முகந்திருப்பிக்கொண்டு வருவதையும் அவருடன் கூடப் புதியவராக அச்சந்தரும் உருவும் நடையும் கைக்கருவிகளும் உடைய மூவர் வருவதையும் கண்டு ஆர்தர் சற்றே அஞ்சினான். அஞ்சி, "மாமா, மாமா, என்னை ஏன் பார்க்காமல் போகிறீர், நான் இன்று குறும்பு ஒன்றும் செய்யவில்லையே, நல்ல பிள்ளையாய் என் வேலையைச் சரியாய் முடித்துவிட்டு உங்களுக்

காகக் காத்திருக்கிறேனே. எனக்கு உங்கள் முத்தம் தரப்படாதா? மாமா!'' என்றான்.

எதிர்பார்த்த இன்குரல், இன்று அவனுக்குப் பெருந் தடங்கலாய் அவன் துணிவுக் கோட்டைக்குப் பெரிடி யாயிற்று, கோட்டையின் வெளிச்சுவர் தொளைக்கப்பட்டது, உட்சுவர் நகர்ந்தது, நடுமனைகூட அதிர்ந்தது. ஆனால் வெளிக்கு மாறுதல் எதனையும் அவன் காட்டிக் கொள்ளவில்லை.

கையாட்களுள் ஒருவன் விழுங்கும் பார்வையாக முறைத்துப் பார்த்து' 'பேய், பேசாதிரு அல்லது உன் வாயை மூடிவிடுவேன்,' என்று கூறிவிட்டுச் சென்றான்.

உள்ளே சென்ற நால்வரும் அரைமணி நேரம் காண வில்லை.

ஆர்தருக்கு ஒன்றும் புரியவில்லை, இன்று ஏதோ புதிய செய்தி நடக்க இருக்கிறது என்றமட்டில் அவன் சிறிய மூளைக்கு எட்டியது. அல்லாவிடில் ஹியூபெர்ட் மாமா இப்படிப் பேசாமல் போகமாட்டார்.

அவர் சிற்றமடையும்படி நான் என்ன தப்புச் செய் தேன் என்று அவன் அன்று தான் செய்த யாவற்றை யும் மீண்டும் மீண்டும் எண்ணிப் பார்த்தான். இதுதான் தவறோ, அதுதான் தவறோ என்று பலவும் நினைத்தான்.

பின் அம்மா இல்லாத நேரம் மாமாவும் மனத்தாங்க லடைய லாயிற்றே என்று நினைத்தான். தான் இங்கே அடைபட்டிருப்பதுபோல் தன் அம்மாவும் அடைபட் டிருப்பாளோ என்று நினைத்தான்.

அம்மாவை நினைத்தவுடன் இச் சிறு நெஞ்சில் அடை பட்டிருந்த துயரெல்லாம் மேலெழுந்து அவன் விம்மி விமமி அழுதான். ஹியூபெர்ட் வருமுன் காய்ந்த கண்ணீ ருடன் அவன் உறங்கிவிட்டான்.

அந்தோ பஞ்சணை மெத்தை அழுத்தும் எனப பதைத்தழும் இயல்புடைய அப் பாலன்; கடுமுகம்

காணப் பொறுத அப் பாலன்; மைதீட்டப் பொறுத கண்களை உடைய அப் பாலன்; இன்று தன் உயிர்க்கு உலை வைத்தாகிறது என்று எப்படி அறிவான்? அறிந்தால் உறங்குவானா, ஒரு நொடியில் தமக்கு வர இருக்கும் முடிவு அறிந்தால் அக் கண்கள் தாம் துயிலில் மூடுமா?

பாலுக்கழுது தாய் மார்பில் கிடந்துறங்குவதுபோல் உறங்கும் அப் பாலன்முன் காவலர் மூவரும் உருக்கிய இருப்புப் பாளங்களுடன் வந்தனர். அவன் உறங்குவது கண்டு உறங்குபவரைக் கொல்லவோ ஊறு செய்யவோ படாதென்னும் பழஞ் சொல்லை உன்னி அவர்கள் ஹியூபெர்ட்டிடம் அவனை எழுப்பக்கோரினர்.

## 10. கொலைஞனும் கூட மனிதனே

ஹியூபெர்ட் எங்கே தான் கண்கொண்டு கண்டால் தாங்க முடியாதென்றுருகி விடுமோ என்று அஞ்சி வேண்டுமென்றே பின் தங்கி நின்றான். கூப்பிட்ட பின்னும் முக மூடியணிந்து உடைமாற்றி உள் வந்து மாறிய குரலில் ஆர்தர், ஆர்தர் என எழுப்பினான்.

உருமாறினும் குரல் மாறினுங்கூட இயற்கை உணர்ச்சி வயப்பட்டு அச்சிறுவன் எழுந்தவுடன் ஹியூபெர்ட் காலைக் கட்டிக்கொண்டு, "மாமா மாமா இன்று ஏன் இப்படி என்னுடன் பேசாமற் போனாய்? ஏன் இன்னும் என்னிடம் முகத்தையும் மாற்றிக்கொள்கிறாய்? எண்ணி எண்ணிப் பார்த்தும் ஒரு பிழையும் நான் செய்ததாக நினைவில்லையே! அப்படியிருந்தால்கூட அதற்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் ஏற்றுக் கொள்வேன். முகத்தை மட்டும் மாறவைக்காதே மாமா!" என்றான்.

வடியும் கண்ணீரைத் துடைக்க வகையின்றிக் கம்மிய குரலில், "சிறுவ, என் மனத்தைக் கலக்காதே, உன்

கண்களை இன்று நான் பழுக்கக் காய்ச்சிய இரும்புகளால் தோய்த்து அழிக்க வேண்டும். இது மன்னன் கட்டளை,' என்ருன்.

பையன் திகைத்தான். பின் துடிதுடித்து அவன் முழந்தாள்களுக் கிடையில் முகத்தை மறைத்துக் கொண்டு "மாமா, மாமா! என்ன சொற்கள் சொன்னீர்கள்? என் காதில் என்ன சொற்கள் விழுந்தன? அல்லது இது வெல்லாம் என் கனவா?" என்று கேட்டு நடுங்கினுன்.

மிகுந்த முயற்சியுடன் தன்னை அடக்கிக்கொண்டு ஹியூபெர்ட் மீண்டும், "கனவில்லை நனவுதான். ஆனுல் அதனை நான் செய்யவும் மாட்டேன். கூட இருந்து பார்க்கவும் மாட்டேன். என்னை அழைக்காதே" என்று கூறிவிட்டுக் காவலாளிகளைப் பார்த்து, "விரைவில் உங்கள் வேலையை நிறைவேற்றுங்கள்: நான் அப்பால் செல்கிறேன்," என்ருன்.

பையன் அம் மனிதர்களைக் கண்டஞ்சி ஹியூபெர்ட்டின் காலைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "மாமா, நான் இறப்பதாயினும் இறக்கிறேன்; அழாமல் இறக்கிறேன்; உன் கையாலாவது இறக்கட்டுமே. இந்த மனிதர்களைப் பார்க்க அச்சமாயிருக்கிறது. இவர்களைச் சற்றே போகச்சொல்," என்ருன்.

ஹியூபெர்ட் வேறு வகையின்றி அம் மூவரையும் சற்று அப்பால் போகச் சொன்னுன்.

ஆர்தர் அழுதுகொண்டே, "ஹியூபெர்ட், இந்தத் துன்பத்திலும் கடவுள் உங்களை அனுப்பினுரே, அதற்கு நான் நன்றி செலுத்தவேண்டும். நீங்கள் என்மீது ஒரு துரும்புகூட விழப்பொறுக்கமாட்டீர்கள்; நீங்கள் எனக்குத் தீங்கு செய்யும்படி யாரோ உங்களைத் தூண்டியிருக்க வேண்டும். அந்தச் சிற்றப்பாதானே! அவருக்குத்தான் நான் என்ன தீங்கு செய்தேன்! நான் அந்த ஜொஃப்

ரேயின் மகனுல் என்ன? ஐயோ, ஈசனே! என்னை வேறு யார் மகனுகவாவது பிறக்கச் செய்யப்படாதா? ஏன், என் மாமா, உங்கள் மகனுகப் பிறக்கச் செய்தால் கூட நன்று யிருந்திருக்குமே; அப்போது அந்தச் சிற்றப்பா என்னைக் கொல்ல வந்தால்கூட நீங்கள் தடுத்து என்னைத் தப்ப வைப்பீர்களன்றோ?" என்று பலவாறு பிதற்றித் தன் கண்ணீரால் ஹியூபெர்ட்டின் முழந்தாளையும் காலடிகளையும் கழுவினுன்.

முதலில் அவன் அழுவதைக் கவனிக்காமல் மீண்டும் ஓடிப்போய் காவலாளிகளை அனுப்பலாம் என்றெண்ணினுன் ஹியூபெர்ட். பின் அரசனையும் அவனுல் வரும் வாழ்வையும் விட்டு இப் பையனுடன் அயல் நாட்டுக்கு ஓடிவிடலாமா என்று நினைத்தான். இறுதியில் இரண்டுக்கும் பொதுவாக அவனை அங்கேயே மறைத்து வைத்து, கூறியபடி கண்ணவித்ததால் இறந்துவிட்டதாகக் கூறிவிட்டு, அமைதி ஏற்பட்ட பின் அவனை வேறிடம் அகற்றலாம் என்று தீர்மானித்தான்.

இத் தீர்மானத்தால் ஆர்தர் கழுத்தைச் சுற்றியிட்ட காலன் பாசக்கயிறு ஒருசில நாள்களுக்குத் தளர்த்தப்பட்டது.

## 11. நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கும்

ஆர்தர் இறந்துவிட்டான் என்று கேட்டதே ஜான் தன் பகையின் முக்காற்பங்கும் அழிந்துவிட்டதாகக் கொண்டு மகிழ்ச்சி யடைந்தான். அவன் துன்பங்கள் ஓய்ந்துவிட்டன என்று கொள்வதற்கில்லை. பொதுமக்கள் கிளர்ச்சியும் பெருமக்கள் எதிர்ப்பும் இன்னும் ஓயவில்லை, திருப்பெருந் தந்தையின் எதிர்ப்பும். அதனுல் ஏற்பட்ட ஃபிலிப்பின் படை எடுப்பும் இன்னும் இங்கிலாந்தரசன்

நிலைக்குக் குந்தகமாகவே யிருந்தன. உண்மையில் இவை யனைத்தும் தற்போது ஒரே எதிர்ப்பாகக்கூட ஒன்று சேரத் தொடங்கின. மக்கள் பலர் ஜான்மீதுள்ள வெறுப்பால் ஃபிலிப்பின் கொடியின் கீழ்ச்சென்று சேர்ந்தனர். இவருள் அவன் ஆட்சியை எதிர்க்கும் குடிகளும், திருப்பெருந் தந்தையின் தூண்டுதலுக்காளான சமயத் தலைவரும், சமயப்பற்றுடையாரும், ஜானின் தன் ஆண்மை கண்டு மனம்புழுங்கிய பெருமக்களும் இருந்தனர். ஆனால் இத்தனை பகைவர்கள் பகைமைக்கும் அச்சாணியாயுள்ளது ஆர்தரின் உயிரே என்று அவன் நினைத்ததனால் அவன் இனி மற்றப் பகைகளுக்கு அஞ்சவேண்டுவதில்லை என்று நினைத்தான்.

ஆனால் தான் நினைத்தது தவறு என்றும் ஆர்தரின் உயிர் இருப்பதைவிடப் போவதுதான் தனக்கு எமன் என்றும் அவன் விரைவில் உணரலானான்.

ஆர்தர் இறந்த செய்தி கேட்குமுன்னமே அவன் பாவி ஜான் கையில் பட்டதனால் வாழான் என்றறிந்து கான்ஸ்டன்ஸ் மனநைந்துருகி வாடி வந்தாள். இப்போது அவன் இறந்தான் என்பதையும் இன்ன வகையில் இறந்தான் என்பதையும் கேள்விப்பட்டு அனலிற்பட்ட சருகெனாப் பொசுங்கி மாய்ந்தாள்.

ஆர்தர் இறந்தான் என்ற செய்தி காட்டுத்தீப் போல் பரவியது. ஜான் எவ்வளவு தனக்கும் அதற்கும் யாதொரு ஒட்டும் கிடையாது என்று கூறினும் அதனை யாரும் நம்பவில்லை. அவனே கொன்றிருக்க வேண்டும் என்றும், ஹியூபெர்ட் மூலமே கொல்வித்திருக்க வேண்டும் என்றும் முடிவு கட்டினர். கட்டி அவ்விருவரையும் எதிர்த்தழிப்பதென எழுந்து நாற்புறமும் கிளர்ச்சி செய்து ஃபிலிப்புக்கு உதவ முன்வந்தனர்.

திருப்பெருந் தந்தையும் ஃபிலிப்பும் ஜானுக்கு எதிராக நின்றபோதும் பொதுமக்களுக்குள் ஒரு பெரும்

பகுதியினர் ஃபால்கன்பிரிட்ஜ் தலைமையில் அயல் நாட்டினனை திருப்பெருந் தந்தையுடன் சேராமல் ஜானுக்கே துணையாக நின்றனர். இப்போது ஆர்தர் இறந்ததனால் அரசனுக்கு நன்மை வருவதற்கு மாறாக அவர்கள் எதிர்க் கட்சியில் சேரும்படியாயிற்று. போதாக்குறைக்குப் பெரு மக்கள் சிலர் ஹியூபெர்ட்டைப் பிடித்து, "நீதானேடா ஆர்தரைக் கொன்றவன் ? நீதானேடா இத் தியமன்னன் காசை வாங்கிக்கொண்டு இத்தகைய எண்ணற்ற கொலைகளைச் செய்தவன்," என்று கூறி நையப் புடைத்தனர்.

அடி பொறுக்காமலும், ஆர்தரின் உயிரின் விலையைக் கண்டும் ஹியூபெர்ட் எல்லோரிடமும், "ஐயன்மீர், வீணில் சினங்கொண்டு என்மீது பாயாதீர்கள் : நான் ஆர்தரைக் கொல்லவில்லை என்றுமட்டுமன்று, அவன் சாவவே யில்லை என்பதற்குக்கூடத் தெளிவு காட்டிவிடுகிறேன். அவன் இன்னும் சிறையில் உயிருடன் இருக்கின்றான், வாருங்கள் காட்டுகிறேன்," என்றான்.

மக்கள் அச் சொல்லில் நம்பிக்கை கொள்ளவில்லையாயினும் சிறைசென்று பார்ப்போமே என்று பின் சென்றனர். ஜான் தன்னிடம் ஹியூபெர்ட் ஆர்தரைக் கொன்றுவிட்டதாகக் கூறியது பொய் என்றும், அவன் தன்னை ஏமாற்றிவிட்டான் என்றும் கண்டான். ஆயினும் அதனால் முனிவதற்கு மாறாக மகிழவேண்டும் நிலை வந்திருக்கிறது. என்னே இறைவன் திருவுளத்தின் போக்கு ! மனிதன் ஒன்று நினைக்க அது பிறிதொன்று நினைத்து விடுகிறது.

## 12. வஞ்சித்த எங்கும் உளன் ஒருவன்

சிறையில் கண்ட அலங்கோலக் காட்சி அவர்கள் அனைவரையுமே திகைக்கச் செய்தது. மனிதர் கையால் சாவாது பிழைத்த ஆர்தர் நேரிடையாகவே எமன்

கையில் சென்று சேர்ந்தான். அவன் மனதில்; 'என்னவோ ஒருநாள் ஹியூபெர்ட்டின் கனிந்த உள்ளத்தால் பிழைத்தோம்! எப்படியும் இன்னும் வேறு யாரேனும் வந்து என்னைக் கொலை செய்யக்கூடும்' என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது. மேலும் இரவெல்லாம் அன்று கண்ட காவலாளிகளின் மயிர் சிலிர்க்கவைக்கும் உருவங்களும் விழிகளும் அவன் விழிகளின் முன் வந்து நின்று அவன் துயிலை ஒழித்து அவனைக் கொல்லாமல் கொன்றன. அவற்றைப் பொறுமல் அவன் தப்பியோட எண்ணினன். அதற்கேற்ப, அவன் இறந்துபோனன் என்ற நினைவில் காவலர் அசட்டையாய்க் காவல்காத்தனர். ஆகவே ஆர்தர் எளிதில் பலகணி வழியாகக் குதித்தான். எதிர் பார்த்ததை விட வெளியிடம் மிகவும் பள்ளமாயிருந்ததனுல் அவன் விழுந்து நொறுங்கிவிட்டான். அச்சமயமே ஹியூபெர்ட்டும் மக்களும் அவனைக் காண வந்த நேரம்.

மக்கள் இக் காட்சியால் மனம் பதைத்த அளவு ஹியூபெர்ட்டும் ஜானும்கூடப் பதைத்தனர். அதோடு தான் கொலை செய்யாது விட்ட ஆர்தர் எப்படி இறந்தான் என்றும் வியப்படைந்தான் ஹியூபெர்ட். ஆனல் அவன் கதையெல்லாம் மக்கள் எப்படி நம்புவர்? அவர்கள், "ஹியூபெர்ட்டே இப்பாலனைக் கொன்றவன். அவனைப் பிடி, அடி, வெட்டு, கொல்லு, சிதை," எனச் சூழ்ந்து ஆரவாரித்தனர்.

இதற்கிடையில் ஃபிலிப் இங்கிலாந்தில் இறங்கிப் படையுடன் முன்னேறினன். அவன் படை வரவர வளர்ந்தது. ஃபால்கன்பிரிட்ஜ் அவனை எவ்வளவோ தடுக்க முயன்றும் தடுக்க முடியவில்லை. ஆனல் ஆர்தரின் முடிவு அவனுக்கு எதிராயிருந்தது. அவனுக்கு இப்போது தீயவனை ஜானை எதிர்க்கவும் முடியவில்லை; ஏனெனில் அவனை எதிர்ப்பதாயின் இங்கிலாந்தை எதிர்க்கவேண்டும். இங்கிலாந்தைக் காக்கவும் முடிய

வில்லை; ஏனெனில் அதைக் காக்க வேண்டுமானால் ஜானுக்கே துணைசெய்ய வேண்டும். இக் குழப்பத்திலிருந்து தவிர்வது எப்படி என்று அவன் தெரியாது விழித்தான்.

ஹியூபெர்ட், ஃபால்கன்பிரிட்ஜ் ஜான் இவர்கள் அனைவருக்கும் தத்தம் முயற்சியில் சோர்வும், தயக்கமும், குழப்பமும் ஏற்பட்டு இனி இங்கிலாந்தின் எதிர்காலம் என்னவாகுமோ என்ற கவலைக்கிடமான நிலையில் அத்தனையையும் இறைவன் எதிர்பாராவகையில் தெளிவுபடுத்தினான்.

அவ் வனைவரும், 'ஜான் திடீரென்று குளிர்காய்ச்சல் கண்டு இறந்தான்' என்று கேட்டனர்.

ஜான் தனது வாழ்வினால் இங்கிலாந்திற்குச் செய்யாத நன்மையைத் தன் இறப்பால் செய்தான். அவன் இறந்ததே திருப்பெருந் தந்தையின் சினம் தீர்ந்தது; மக்கள் சினம் தீர்ந்தது. ஃபிலிப்பை விட்டு மக்கள் விலகவும், அவன் இறக்கைகள் அற்ற பறவை போல் தன் நாடு சேர்ந்தான். இங்கிலாந்துச் செல்வி ஜானின் மகனாகிய மூன்றும் ஹென்றியை அரசனாகப் பெற்று மீண்டும் திருவும் நல்வாழ்வும் பெற்று ஓங்கலானாள்.

# 3. அதேன்ஸ் நகர்ச் செல்வன் தைமன்

## கதை உறுப்பினர்

ஆடவர்

1. **தைமன் :** அதேன்ஸ் நகரின் ஒப்பற்ற செல்வ வள்ளல். நன்றி கொன்ற மனிதரை வெறுத்துக் காட்டில் விலங்குடன் வாழ்ந்தவன்.
2. **ஹாஸியஸ்**
3. **ஹாகிலஸ்** } தைமன் பொய் நண்பர்கள். அவன் கொடையால் வளர்ந்து அவனிடம் நன்றி கெட்ட பதர்களுள் தலைமையானவர்கள்.

ஆடவர்

4. **ஃபிளேவியஸ் :** தைமனின் உண்மை மிக்க மேலாள்.
5. **அல்கிபியாதிஸ் :** அதேன்ஸ் நகரின் படைத்தலைவன். நகர மக்களால் நகர் கடத்தப்பட்டுப் பகைவனாய், தைமன் பொருளுதவி பெற்று நகரை அழித்தவன்.

## கதைச் சுருக்கம்

அதேன்ஸ் நகரின் ஒப்பற்ற செல்வனும் வள்ளலுமான தைமன் தன் உண்மையுள்ள மேலாளான ஃபிளேவியஸின் சொல்லைத் தட்டி ஹாஸியஸ், ஹாகிலஸ் முதலிய நண்பர்களுக்குச் செல்வமனைத்தும் கொட்டி யிறைத்து அவர்கள் நன்றியின்மை கண்ட பின் மனித வருப்பையே வெறுத்து, பொய் விருந்தொன்றில் அவர்களுக்கு ஈரமண்ணும் உப்பும் தந்து அடித்து அவமதித்துத் துரத்தியபின் காட்டிற்குச் சென்று விலங்குடன் விலங்காய் வாழ்ந்து மனிதரைப் பேய் போல் எதிர்த்துவந்தான். அங்கே அவனைப் பார்க்கச் சென்ற ஃபிளேவியஸைக் கூட ஏற்காது அனுப்பிவிட்டான். ஆனால் அதேன்ஸின் படைத் தலைவனாயிருந்து நகர் கடத்தப்பட்ட அல்கிபியாதிஸ் தான் அதேன்ஸை அழிக்க விரும்பியதாகச் சொல்லியதால், தைமன் காட்டில் தான் கண்ட பொருட் குவையைக் காட்டி அதன் மூலம் அதேன்ஸை அழிக்க அவனுக்கு உதவினான். அல்கிபியாதிஸுக்காக் காற்றுது சென்ற ஹாஸியஸ் ஹாகிலஸ் முதலிய செல்வரை அவன் கல்லாலடித்துத் துரத்திவிட்டான்.

# அதேன்ஸ் நகர்ச்செல்வன் தைமன்

## (Timon of Athens)

### 1. வள்ளல் பெருந்தகை

பண்டைய உலகில் கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஒருங்கே வாய்க்கப் பெற்ற ஒப்பற்ற நகரம் அதேன்ஸ்.

அந் நகரில் கலைகடல் கடந்து வாணிபம் செய்யும் நாவாய்ச் செல்வரும், நானிலம் ஆண்டு திறைகொணரும் அரசுரிமைச் செல்வரும், கல்விச் செல்வரும், கலைச் செல் வரும் நிறைந்திருந்தனர்.

ஆனால் அச் செல்வரது செல்வமனைத்தும் திரண்டு தவஞ் செய்யினும் அண்ட முடியா அரும் பெருஞ் செல் வத் தொகுதியுடையான் ஒருவன் இருந்தான். அவன் பெயர் தைமன் என்பது. அவனது கொடையும் வள் ளன்மையும் அச் செல்வத்தினும் பெரிது என்னலாம்.

நூறாயிரம் படைத்தவரும் கோடி படைத்தவரும் அவன் வாயிலில் இரவலராக வந்து நின்றனர். மன்னர், பேரரசர் முதலியோருள் போர் மறத்திற்கஞ்சித் தலை வணங்காதவரும் அவனது பேரறத்திற்கும் கொடைக் கும் அஞ்சித் தலைவணங்கினர்.

அவன் கொடை, முகிலின் கொடை போன்றது. மலை மீதும் கடல் மீதும் நாட்டின் மீதும் காட்டின் மீதும் முள்மீதும் மலர் மீதும் வேற்றுமையின்றிப் பெய்யும் மழைபோல அது, அரசனையும் ஆண்டியையும் தக்காரை யும் தகாதாரையும் ஒன்றுபோல மகிழ்வித்தது.

கேட்டவர் கேட்டதெல்லாம் கேட்டபடியே கொடுக் கும் முதல் எழு வள்ளல்களை ஒப்பான் அவன். கேட்பவர்

நிலையையோ, கேட்கும் பொருளின் விலையையோ, கேட்போர் உள்ளத்தின் நேர்மையையோ அவன் உசாவுவதுமில்லை ; உசாவ விரும்புவதுமில்லை.

வற்றாத கடல்போல் எடுக்க எடுக்கக் குறையாத அவன் செல்வக்குவையன்றி வேறெதுவும் அவன் கொடையின் அளவுக்கு ஒரு நொடி கூட ஆற்றியிராது. ஏனெனில் இல்லார் இரப்பதினும் உள்ளவர் இரப்பதே அவனிடம் மிகுதியா யிருந்தது.

அவன் கொடையின் தன்மை அறிந்து கொடாத நீய செல்வர் பலர் அக் கொடையைப் பெறுவதே தம் செல்வத்தைப் பெருக்க மிகவும் எளிதான வழியென்று நினைத்துப் பிற தொழிலை யெல்லாம் விட்டு அவனிடம் போய் இரந்து கொள்ளை யடிப்பதே தம் தொழிலாகக் கொண்டு விட்டனர்.

அவன் பிறர் குறிப்பறிந் தீபவன். ஒருவர் ஒரு பொருளை வேண்டும் என்று கூறவோ தருக என்று கூறவோ அவன் காத்திருப்பதில்லை. அது தனக்கு விருப்பம் என்றோ அல்லது அக் குறிப்புத் தோன்ற அதனைப் புகழ்ந்தோ அது நன்றென்றோ கூறிவிட்டாற் போதும்; அப் பொருள் அதனை விரும்பியவனறியாமல் நன்கொடையாகவோ பரிசிலாகவோ அவன் வீட்டை யடைந்து அவனை மகிழ்வித்துநிற்கும்.

இதனை அறிந்த பலர் அவனிடம்பொய் நட்புப்பூண்டு சமயமறிந்து அவன் அரிய பொருள்களுள் எதையும் சற்றே புகழ்ந்து அதைக் கைக்கொள்ளலாயினர். இன்னும் சில சூழ்ச்சிக்காரர் அவனுக்குத் தாம் நன்கொடை தருவதாக நடித்து அவன் அதற்கு மாறாகத் தரும் ஆயிர மடங்கு விலைபெறும் நன்கொடைகளை நகைமுகத்துடன் பெற்று மகிழ்ந்தனர்.

## 2. செல்வ நிலையாமை

இங்ஙனம் யாண்டுகள் பல கழிந்தன. மலைபோன்ற பொருட்குவைக்கும் ஒரு முடிவுண்டன்றோ? அவன உடைமைகளின் மேற்பார்வையாளனாகிய [1]ஃபிளேவியஸ் எத்தனையோ தடவை அவன் பொருட்குவை குறைந்து வருவதைக் குறிப்பாயும் வெளிப்படையாயும் கூறிப் பார்த்தான். தைமன் அவற்றை இம்மியும் செவியில் வாங்கிக் கொள்ளவில்லை.

நில உடைமைகளும் ஒவ்வொன்றாக ஈடுவைக்கப்பட்டன. பின் அவை விற்கப்பட்டன. அப்படியும் தைமன் கொடையின் அளவு மிகுந்ததே தவிரக் குறையவில்லை. வீட்டுப் பொருள்களும், பொன் வெள்ளித் தட்டுக்களும் நகை நட்டுகளும் விற்கப்பட்டன. "இனி ஒன்றுமில்லை, ஐயனே!" என்ற ஃபிளேவியஸின் சொல் ஒரு நாள் திடீரென அவன் உணர்வில் சென்றெட்டியது.

**தைமன் :** என்ன, என்முன் என்ன சொல்கிறாய்? ஒன்றுமில்லையா? அதுவுந்தான் வந்து சொல்வானேன். ஏதேனும் நிலத்தை அடகுவைத்தாவது இந்தத் தவணை காரியம் முடிக்கப்படாதா?

**ஃபிளேவியஸ்:** அப்படித்தான் இப்போது பலநாளாய் நடந்து வருகிறது ஐயனே! ஆனால் தற்போது யாவும் அடகுவைத்துத் தீர்ந்துவிட்டன; ஒன்றும் மீதி இல்லை. தம்மிடம் அடிக்கடி தம் பொருளை விணுக்க வேண்டாம் என்று எவ்வளவோ சொல்லியும் தாங்கள் செவியேற்கவில்லை. அதன் பயனை இனி நாம்தாம் துய்க்கவேண்டும்.

**தைமன் :** "என்ன ஃபிளேவியஸ்! அப்படி ஒன்றும் நான் வீணில் செலவு செய்யவில்லையே! கொடையிலும், குணக்குன்றுகளான நண்பர்களுக் குதவியுந்தானே மிகுதியான பொருளையும் செலவழித்திருக்கிறேன். என்

1 Flavius.

பணம் என்னிடத்தி லிருந்தாலென்ன, என் நண்பர்க ளிடத்தி லிருந்தாலென்ன?''

**ஃபிளேவியஸ்:** "அப்படி யன்று, ஐயனே! தங்கள் பொருள் உலக முழுமைக்கும் உரியதாயிருக்கலாம். ஆயி னும் உலகின் பணம் தம் பணமாய் விடும் என்று நீர் கனா விலும் கருதவேண்டா!''

**தைமன்:** "உன்னைப் பேசவிட்டால் நீ இப்படி என் நண்பர்களையும் என்னையும் தூற்றுவாய்போ லிருக்கி றதே! ஏன், [1]லூஸியஸுக்கு இடுக்கண் வந்தகாலை உதவிய ஒரு மூன்று நூறாயிரமும், [2]லூக்கிலஸுக்கு உதவிய முப்பது நூறாயிரமும் நற்பயனளித்து அவர்கள் செல்வநிலையை சீர்படுத்திவிட வில்லையா? அவர்களுக் குக் காலத்தினற் செய்த உதவிக்கு அவர்கள் இரட் டியோ பத்திரட்டியோ மகிழ்வுடன் கொடுப்பார்களன்றோ? அப்படியிருக்க இன்று வேண்டிய இச்சிறு தொகைக்கா நீ கவலைப்படவேண்டும்?''

**ஃபிளேவியஸ்:** "ஐயனே! தாம் கடவுள் தன்மை யுடையவர். கடவுளை அறிந்தவர். ஆனால் மனிதரை யும் மனித உலகையும் தாம் அறியவில்லை. அறிவீர் விரைவில்'' என்று கூறி விலகிச் சென்றான்.

## 3. போலி நண்பர்

தைமன் அதன்பின் லூஸியஸ் வீட்டை நாடிச் சென்றான்.

தொலைவில் நின்றே தைமன் வருவது கண்ட லூஸி யஸ் ஏதோ தனக்கு அன்று பெரும்பேறு வரப்போகி றது என்றெண்ணி மகிழ்ந்து ஓடோடியும் வந்தெதிர் கொண்டு சிவிகையேற்றிச் சென்றான். சென்று தன் பொற்கட்டிலில் இருக்கச் செய்து, "ஐயனே! இச் சிறு

1 Lucius. 2 Lucilus.

குடில் தம் வரவுக்கு எத்தனை புண்ணியம் செய்ததோ; தம் வரவு நல்வரவாகுக! தம் விருப்பம் எதுவாயினும் ஈடேறுக!" என்றான்.

தைமன் தன் நண்பன் நன்றியறிதலுக்கு மகிழ்ந்து, "அன்பனே, வேறொன்றுமில்லை. இன்று ஃபிளேவியஸி னிடம் ஒரு காரியமாகப் பணம் கேட்டதற்குப் 'பொருட் குவை முற்றிலும் செலவாயிற்று,' என்று சொன்னான். சொல்லிப் பெருமூச்சு விட்டழத் தொடங்கினான். நான் 'போடா முகடி, இதற்குக் கவலையாபடுவது?' என்று கூறிவிட்டு உன்னிடம் வந்தேன்," என்றான்.

லூஸியஸ் அன்பு கனிந்த குரலில், "அதற்கென்ன ஐயனே! இந்த அதேன்ஸ் முழுமையும் தங்களதே. நானும் தங்கள் உடைமையே. வேண்டிய பொருளை எடுத் துச் செலவு செய்துகொள்ளுங்கள். தங்களைப்போன்ற வள்ளல்களுக்குக் கொடுப்பதென்றால், அது கொடை கூடவன்று; தாம்தாம் ஒரு நொடிக்குள் அதன் பத் திரட்டி கொடுப்பவர்களாயிற்றே!" என்றான்.

லூஸியஸ் மொழிகள் கேட்டுத் தைமன் இறும்பூது எய்தியவனாய் மனத்திற்குள் இப்பேர்ப்பட்ட நண்பர்கள் தன்மை அறியாது பேசிய ஃபிளேவியஸை நன்கு ஏள னம் செய்யவேண்டுமென்று எண்ணங்கொண்டான்.

பின் அவன் லூஸியஸை நோக்கி, "உனது பெரு மிதக் குணத்தையும் என்பால் உனக்குள்ள அன்பையும் நான் அறிவேன். லூஸியஸ்! நான் இழந்த உடைமை களுக்கெல்லாம் இவ்வன்பு எனக்குப் போதிய கைம்மா றும் ஆறுதலும் ஆகும் என்பது உறுதி," என்றான்.

லூஸியஸ் மனத்தில் இப்போது ஒரு சிறு ஐயம் ஏற்பட்டது. "என்ன உடைமை எல்லாமா? அப்போது நில உடைமைகளுமா போயின?" என்றான் அவன்.

"ஆம் அன்பனே!" என்றான் தைமன்.

ஓராஸியஸ் முகம் சடக்கென மாறிற்று. அவன் கண்கள் சிறுத்துக் கூர்த்தன; அவன் உதடுகள் துடித்தன. அவன் அமைந்த குரலில், "அப்படியாயின் அன்பனே! உமக்குக் கட்டாயம் உதவவேண்டும்," என்று கூறி உட்சென்று பெட்டியைத் திறந்து திறந்து அடைப்பது போல் நடித்துப் பின் வெளியே வந்து, "ஆ என் தீவினை இருந்தவாறு! நேற்று ஒரு நண்பனுக்குக் குறைந்த விலையில் ஒரு பெரு நிலக்கிழமை விற்பனைக்கு வந்ததால் அதனை வாங்கிக் கொடுத்தேன். அதற்காக ஒவ்வொரு செப்புக்காசும் திரட்டப்பட்டுச் செலவாயிற்று. தம் போன்ற வள்ளல்களுக்கு உதவும் பெரும் பேற்றிலிருந்து இறைவன் என்னை விலக்கி வைத்துவிட்டான் என்று வருந்துகிறேன். எப்படியும் தாங்கள் ஓாக்கிலஸ் வீடு செல்லுங்கள். அவன் கட்டாயம் உங்களுக்கு உதவி செய்யக்கூடும்," என்ருன்.

"நான் தங்கள் உடைமை" என்ற பழைய வாக்கையும், "ஓாக்கிலஸ் வீடு செல்லுங்கள்; அவன் கட்டாயம் உங்களுக்கு உதவக்கூடும்" என்ற தற்போதைய வாக்கையும் ஒப்பிட்டு நோக்கினன் தைமன்.

உண்மையில் தைமன் ஓாக்கிலஸைப் பார்க்குமுன் ஓாஸியஸின் ஆள் ஒருவன் ஓாக்கிலஸினிடம் விரைந்து சென்று தைமன் நிலைமை இன்னதென அவனுக்குக் கூறிவிட்டான்.

ஓாக்கிலஸ் முதலில் இதனை நம்பக்கூடவில்லை. "நண்பர்கள் ஒன்று சேர்ந்து செய்யும் விளையாட்டுக்களுள் ஒன்ரு இது," என்று நினைத்தான் அவன்.

தூதன் மீண்டும் வற்புறுத்திக் கூறியபின், அவன் ஓாஸியஸினும் கடுமையாகத் தைமனைத் தொலைவிலேயே விலக்க எண்ணினன். ஆகவே அவன் தன்னிடம் வந்த போது அவனை எதிர்கொள்ளவோ வரவேற்கவோ செய்யாமல் கடுகடுத்து, "என் அறிவுரைகளுக்கு மாருகப்

பணத்தை வீண்செலவு செய்து ஓட்டாண்டியானதன் பின் என் தலைமீது உட்காரலாம் என்று வந்தீரோ? நாங்களும் உம்மைப்போல் சோம்பேறிக் கூட்டங்களை வைத்து நடத்தும் சோம்பேறியல்லேம்'' என்று கூறி அவனைத் துரத்தினான்.

அதேன்ஸில் தைமன் வீட்டில் நாய்போல் கிடந்த பெருமக்களும் செல்வரும் ஒருவரேனும் நன்றியோ பரிவோ காட்டாது இதே போன்று கடுமொழிகளே கூறினர்.

## 4. தைமன் பழி

பிள்ளைகள் மனம்போல் சூதோ களங்கமோ இன்றித் தூய்மையாய் இருந்த தைமன் உள்ளம் சட்டெனத் துடித்து நடுங்கிற்று. தான் இதுகாறும் சாந்தடைத்தவை எனக்கொண்ட செப்புக்கள் பாம்பகங் கொண்டவை என்று கண்டு பதறினான் அவன்.

பெண்ணென நம்பிப் பேயை யடைந்தவன் போலவும், துணையென நம்பித் திருடனை உடன்கொண்டு பயணம் செய்த வழிப்போக்கனைப் போலவும், நறிய அமுதென நம்பி நஞ்சினை உட்கொண்டவன் போலவும் பதைத்தான் தைமன்.

அவன் மனம் உலகை வெறுத்தது. மனித வகுப்பையே வெறுத்தது. அவன் கால்கள் மக்கள் உறைவிடத்தைவிட்டு அப்பால் செல்ல விருவிருத்தன. கைகால்கள் மனித உருக்கொண்ட தன் உடலையே கிறிக் கிழித்து விடுவோமோ என்று படபடத்தன.

அவன் இனி மனிதர் வாழாத காடுகளில் சென்று மனிதனை அழிக்கும் வகைகளிலேயே மனஞ் செலுத்த வேண்டும் என எண்ணினான்.

ஆனால் அதற்கிடையில் 'கூட இருந்து குரல்வளை அறுத்த தன் படுமோச நண்பர்களுக்கு நல்லதொரு பாடம் படிப்பிக்க வேண்டுமென்று அவன் எண்ணினான்.

ஆகவே அவன் ஃபிளேவியஸ் மூலம் வீட்டை ஒருவனுக்கு அடகுவைத்து ஒரு பெருவிருந்துக்கான வெளிப் பகட்டுகளில் அதனைச் செலவு செய்தான். பின் தன் பழைய போலி நண்பர்கள் அனைவர்க்கும் வழக்கத்திற்கு மேம்பட உயர்வான முறையில் ஒரு விருந்தழைப்பு விடுத்தான்.

அவ்வழைப்பை நோக்கிய லூஸியஸ், லூகிலஸ் முதலிய எல்லா நண்பர்களுக்கும் வயிர் பகிர் என்றது. "ஐயையோ! அந்தத் தைமன் கபடற்றவன் என்று நினைத்து, அன்று அவன் சொற்களை நம்பி ஏமாந்து போய் அவன் தேர்வுப் பொறியில் அகப்பட்டுக்கொண்டோமே. இனி என்ன சொல்லித் தப்புவோம்!" என்று ஒவ்வொருவரும் தம்மாலியன்ற வரை ஆராய்ந்து பொருத்தமான புனைகளும் எண்ணி வைத்துக்கொண்டு என்றையினும் விட நல்ல ஆடை யணிகளுடன் தைமன் வீட்டுக்கு வந்தனர்.

தைமன் அவர்களை வரவேற்றான். வீட்டில் பழைய பணியாட்களெல்லாம் விலக்கப்பட்டிருப்பினும், ஒரு நாளைக்கென அவர்களும் வேறு சிலரும் தருவிக்கப்பட்டிருந்தமையால் அவன் உண்மையில் வறுமைப்பட்டதாக அன்று யாரும் நம்பமுடியவில்லை.

ஆனால் உணவு பரிமாறும் இடத்தில் மட்டும் ஒரு பெருமாறுதல் இருந்தது. வழக்கம் போல் பொற்கலங்களும் வெள்ளிக்கலங்களும் பரப்பப்பட்டிருந்தனவாயினும் அவற்றுள் இன்னுணவுப் பொருள்களும் தின் பண்டங்களும் வைக்கப்படவில்லை. ஈரமண்ணும் உப்புமே கலந்துவைக்கப்பட்டிருந்தன. அதைக் கண்ட பெரு மக்கள் வியப்புடன் தைமனை நோக்கி, "வள்ளலாகிய தாம்

ஏன் உணவுக்கு மாருக இவற்றை எங்கள் முன் வைத்திர்" என்று கேட்டனர்.

கேட்டதுதான் தாமதம்! எப்போதும்போல் நகை முகங் காட்டி நின்ற தைமன் உருவம் சடக்கென மாறியது. அவன் முகம் மீண்டும் கடுகடுத்தது. பேய் சிரித்தாலென்ன அவன் அவர்கள் செவிகள் செவிடுபடச் சிரித்து, "நன்றி கெட்டவர்களே! இதுவரை நீங்கள் தின்றதெல்லாம், துய்த்ததெல்லாம் ஈரமண்ணுக் கொப்பாம் என்று காட்ட ஈரமண்ணும், உங்களுக்கு நன்றியில்லாததால் இனியேனும் நல்லுப்பைத் தின்று வாழ்விர் என்று காட்ட உப்பும் தந்தேன்," என்ருன்.

அத்துடன் அவன் சீற்றம் தணியவில்லை. பின்னும் அவன், "உங்கள் உருவம் மனித உருவம். ஆனல் உங்கள் மனம் காட்டு விலங்குகளினும் கீழ்ப்பட்டது. உங்கள் ஊரில் வாழ்வதினும் புலி சிங்கங்கள் வாழும் காட்டிலோ, பேய்களும் பிணங்களும் உறையும் சுடுகாட்டிலோ வாழ்தல் மேலாம்," என்று கூறிக் கைக்கெட்டிய பொன் வெள்ளிக் கலங்களையும் கண்ணுடிக் கலங்களையும் அவற்றிலுள்ள ஈரமண்ணையும் அவர்கள் மீது அடித்துடைத்தான். 'அவனைத் தடுக்க முயன்றவர்கள்மீதும் நாற்காலிகளையும்[1] மேடைப் பலகைகளையும் வீசி எறிந்தான்.

இங்ஙனம் அவமதித்துத் துரத்துகையில் காயம்பட்டோர் பலர். உறுப்புக்கள் ஊறுபட்டோர் பலர். ஈக்கும் இரங்கும் அவ்வள்ளல் பெருந்தகைக்கு அன்று இரக்க ஊற்றே வற்றிவிட்டது என்னல் வேண்டும். அவன் ஓடுபவர்களையும் தெருக்கோடிவரைப் பின்பற்றி, நாய்களே, பேய்களே, வெளிப்பூச்சுப் பூசிய சோற்றுத் துருத்திகளே, பிணங்களே!" என்று பலவாருக வைது துரத்தினன்.

அதன் பின் அவன் தன் ஆடை அணிகளை யெல்லாம் எரியிட்டு அழித்துவிட்டுக் காடு சென்ருன்.

---

1 Tables.

## 5. மனிதப்பேய்களை வெறுத்த பேய்மனிதன்

அதேன்ஸினின்று மிகவும் தொலைவிலுள்ளதொரு காட்டில் மனிதரே புகமுடியாத இருள் குகைகளில் சென்று டைமன் தங்கினான். மனிதர் உண்ணும் உணவையும் ஒழித்து அவன் இலைகளையும் கிழங்குகளையும் உண்டான். சில நாட்களில் அவன் உடலெங்கும் மயிரடர்ந்து கரடிபோலானான். மனித உரு அகன்றுவிட்டதென்று தெளிந்த சுனைநீரில் பார்த்தபின் களிப்படைந்து கொக்கரித்துச் சிரித்தான்.

அந்தச் சமயம் மனிதர் யாரேனும் அவனிடம் அகப்பட்டால் போதும். கரடி புலியிடம் அகப்பட்டால்கூடத் தப்பியிருக்கக்கூடும். அவனிடம் தப்ப முடியாது. அப்படியே சதைசதையாய்ப் பிய்த்திருப்பான்.

ஒருநாள் அவன் கிழங்குகளை ஒரு கம்பியால் கல்லிக்கொண்டிருந்தான். அப்போது கம்பியில் ஏதோ ஒன்று தட்டுப்பட்டது. ஓசையால் "அது கல்லன்று, செப்புச் சருவமே!" எனக் கண்டு, அதனை எடுத்துப் பார்க்க, அது பொற்காசுகள் நிறைந்த ஒரு புதையலாயிருந்தது.

அவனுக்குத் திரும்பவும் மனித உலகில் வாழ விருப்பம் இருந்தால்—திரும்பவும் வள்ளலாய்த் திகழ எண்ணமிருந்தால்—அந்தப் புதையல் அவனுக்கும் அவன் ஏழு தலைமுறையினர்க்கும் போதியதாயிருந்தது. ஆனால் அவனிடம் மனித அவாக்கள், மனித எண்ணங்கள் எல்லாம் வறண்டு மனம் வற்றற் பாலையாய்விட்டது. அன்பு எனும் பயிரைக் கீழ்ப்பட அழுத்தி மாய்த்து, வெறுப்பு சீற்றமென்னும் களைகள் காடாய் வளர்ந்தன.

அந்நிலையில் அவன் அப்புதையலைக் கண்டதே அச்சங்கொண்டவன் போல், பாம்பைக் கண்டு பதறி அறிவிழந்தவன்போல் உறுத்து விழித்தான். அதனைத்

தொட்ட கையைச் சடாரென்று அகல எடுத்துப் பின்னிட எட்டி நின்றான். அவன் உடல் உறுப்புக்கள் எல்லாம் பதைத்துத் துடித்து விம்மின.

"ஐயோ, மனித உலகைக் கெடுக்கும் பேயன்றோ இது! இதை நாட்டில் விட்டு விட்டு வந்தேன் என்று நினைத்தேனே; இன்னுமா அந்தச் சனி விட்டபாடில்லை" என்று கூறிக்கொண்டு அவன் அப் புதையலினின்றும் ஓடினான்.

அன்றுமுதல் அவன் காடெங்கும், வெறிபிடித்தவன் போல், பேய் போல், பித்தன் போல் அலைந்து திரிந்தான். அவனை ஏனென்று கேட்பாரோ யார் என்று கேட்பாரோ இல்லை. அக் காடு அதேன்ஸ் வாடையென்று மட்டுமல்ல, மனித வாடையே யற்றது என்றுகூடச் சொல்லலாம். ஆகவே பல திங்களாக அவன் மனிதர் முகத்தில் விழிக்கவில்லை; மனிதரும் அவன் முகத்தில் விழிக்கவில்லை. மனிதர் அவனை மறந்தனர்; அவனும் மனிதரை மறந்தான். தான் மனிதருள் ஒருவன் என்பதைக்கூட அவன் மறந்தான். மனிதர்மீதுள்ள வெறுப்பு ஒன்றே அவனுக்கு உயிராயிருந்தது.

சில சமயம் அக் காட்டினை அடுத்த முல்லை நிலப் பகுதிகளில் அவன் திரியும்போது மாடு மேய்ப்பவரோ வழிப்போக்கரோ நேர்வழி தப்பி அவனைக் காண நேரும். அப்போதும் அவர்கள் அவனை மனிதன் என்று ஐயுற்றதில்லை. விலங்கொடு விலங்காய்த் திரிந்த அவனைப் புதுவகையானதொரு விலங்கென்றே கருதி என் செய்யுமோ என்று ஓடி ஒளித்தனர். அதற்கேற்ப அவனும் அவர்களைக் கண்டுவிட்டால் போதும்; நடந்தும், தவழ்ந்தும், தாவியும், குதித்தும் சென்று அவர்களைக் கற்களாலும் கொம்புகளாலும் தாக்குவான். அவர்கள் யாரேனும் பொறிவாய்ப் பட்டுக் கையிலகப்பட்டால் எமன் கையிலகப்பட்டதுபோல்தான். வற்றாத ஈகைக்கு ஆட்பட்ட

அக் கைகள் அவர்களை இரக்கமின்றிச் சித்திரவதை செய்துவிடும்.

அவன் செல்வனாயிருந்தகாலை அவனுக்கு நல்லுரை தந்து புறக்கணிக்கப்பட்ட ஃபிளேவியஸ் காட்டில் நெடு நாள் தேடி அலைந்து இறுதியில் எங்ஙனமோ அவனைப் பார்த்து அடையாளமும் கண்டுகொண்டான். நன்னாளில் அறிவுரை தந்து இந்நாளிலும் மாறாதிருந்த அம் மெய் யன்பனைக் கூடத் தைமன் முற்றிலும் அறிந்துகொள்ள முடியவில்லை. "நீ மனிதனானாலும் உன்னை என்னவோ கொல்ல மனம் வரவில்லை. உண்மையில் நீயும் என்னைப் போல் அரை விலங்குதான் போலிருக்கிறது. போ, பிழைத்துப்போ; ஆனால் திரும்பி மட்டும் வாராமற் பார்த்துக்கொள்," என்ற எச்சரிக்கை ஒன்றுதான் ஃபிளேவியஸின் உறுதியான மெய்யன்புக்கு அவன் கொடுத்த மதிப்பும் கைம்மாறும்.

## 6. இருவகைப் பகைவர்

ஒரு நாள் அதேன்ஸின் படைத்தலைவனான [1]அல்சிபியாதிஸ் அவ்வழியே வந்தான்.

அல்சிபியாதிஸ் அதேன்ஸின் படைத்தலைவன்; அதேன்ஸின் போர்கள் பலவற்றில் வெற்றி யடைந்தவன். ஆனால் நகரப் பெருமக்கள் பலர் அவன்மீது பொறாமை கொண்டு அவனை நகர்ப் பகைவனெனக் குற்றஞ்சாட்டினர். அதேனிய அரசியல் அவர்கள் செல்வாக்குக்கு உட்பட்டதாதலின் அதனை ஏற்று அவனை நாடுகடத்திற்று.

அச் சமயம் அல்சிபியாதிஸ் வெற்றி வீரருடன் போர்க்களத்தினின்று திரும்பி வந்துகொண்டிருந்தான்.

1. Alcibiades.

நகரத்தின் நன்றியற்ற தீர்ப்பைக் கேட்டதுமே அவன் தன் படைவீரரை நகருக்கு அனுப்பாமல் தன்னிடமே வைத்துக்கொண்டு அவர்கள் உதவியால் அந்நகரின் கொட்டத்தை அடக்க எண்ணினன்.

அவனது எண்ணத்திற்கு ஒரே ஒரு பெருந்தடை இருந்தது. அதுவே பொருள் முடை. அவன் கைப் பொருளெல்லாம் செலவானபின் தனக்கும் வீரருக்கும் உணவுமுதலிய வாழ்க்கைப் பொருள்கள் தேட வகை யின்றித் தவித்தான். வீரருக்குத் திங்கட் கணக்கில் ஊதியமும் கொடுபடவில்லை. இந் நிலையில் தான் தைமனைக் கண்டான்.

அச்சமயம் தைமன் கிழே குனிந்து ஏதோ நினைத்துக் கொண்டிருந்தான். அதே சமயம் அல்சிபியாதிஸூம் அதேன்ஸை எப்படி அழிப்பது, எங்கிருந்து பொருள் பெறுவது என்ற நினைவிலேயே ஈடுபட்டிருந்தான்.

இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்ததே அல்சிபி யாதிஸ், "இதென்ன, மனிதனாகவும் தோற்ற வில்லை; விலங்காகவும் தோற்ற வில்லை; அரை விலங்குருவமுடைய பேயோ?" என்று நடுங்கி ஓடப் போனான். அதற்குள் தைமன் அவனைக் கண்டுவிட்டான். அவன் மனிதன் என்றும் அதேனிய உடையணிந்தவன் என்றும் கண்டு சீறி எழுந்து, "அதேனிய நாயே, அகப்பட்டாயா; உன்னை என்ன பாடு படுத்துகிறேன் பார். அதேன்ஸ் மீதுள்ள பழி அனைத்தையும் உன்பேரிலேயே தீர்க்கி றேன் பார்" என்று கற்களை வாரி எறியத் தொடங் கினன்.

அல்சிபியாதிஸ் வீரனாயினும் முன் கண்டறியா இப் பேயுருவம் என்ன செய்யுமோ என்று தயங்கி நின்ற நேரம் அவ் வுருவம் பேசுவதையும் அதுவும் அதேனிய மொழியில் பேசுவதையும், கேட்டுத் திடுக்கிட்டான். பின் அவ்வுரு தான் அதேன்ஸின் பகைவன் என்று கூறக்

கேட்டதும் அது பேயாயிருந்தாலும் தனக்குதவிசெய்ய வல்லதாகக்கூடும் என நினைந்து அச்சந் தவிர்ந்து அதனை நோக்கி, "அரை விலங்குருவமுடைய புதுமை யான அரை மனிதனே! பொறு; நீ பேயாயினு மாகுக. மனிதனுயினும், அன்றி விலங்காயினு மாகுக. ஒரு செய்தி யில் நீயும் நானும் ஒன்று. நானும் அதேன்ஸின் பகைவன்; நீயும் அதேன்ஸின் பகைவன். நீ அதேன்ஸினை அழிக்க விரும்பிக்கொண்டு இங்கு வாளா காட்டில் கிடக் கிருய். நான் அதேன்ஸை அழிக்கச் சூள்உரைத்து அதற்கான முன்னேற்பாடுகளுடன் இதே காட்டில் காத் திருக்கிறேன்; எனக்கு நீ உதவக்கூடுமா?" என்றுன்.

டைமன் அவனைக் கண்டும் காணுதவன்போல் பரக்க நோக்கி, "ஆ, என்ன அடம்! உதவியா? உனக்கா? மனித உருவுடைய, அதேனிய உருவுடைய உனக்கா? ஒருகாலும் இல்லை. வேண்டுமானல் நீ அதேனியன் பகைவன் என்று கூறுவதனல் நீ மனிதனுபினும் உன் னைக் கொல்லாமல் விடுகிறேன். அது ஒன்றுதான் உனக்கு நான் செய்யக்கூடும் உதவி," என்று கூறி ஞன்.

அவன் பேச்சிலிருந்தும் அவன் கூறிய குறிப்புக் களிலிருந்தும் அல்சிபியாதிஸ் அவன் டைமனே என்று அறிந்துகொண்டான். உடனே அவன் டைமன் காலடி யில் வீழ்ந்து, "அறிந்தேன், அறிந்தேன், எம் வள்ளற் பெருந் தகையே! எம் வீரப்பெருந்தகையே, அறிந்தேன்! வாள்வலியால் அதேன்ஸின் பகைவர்களை அழித்த பெருமை போதாதென்று, அதேனியரையும் பிறரையும் கொடையாலும் வள்ளன்மையாலும் வெட்கித் தலை குனி யச் செய்த மன்னனே! தம்மை இந்நிலையில் காணப் பெற்றேனே! தம் உருமாறி எம்முடன் எழுந்தருள்க! இவ்வதேனியப் பதர்களை அழித்துப் புதியதோர் அதேன்ஸை நிறுவி அதில் உம்மை முடிசூடா மன்ன

ஞக்குவேன், வருக!" என்று கண்ணின் நீர் கால்களைக் கழுவ விழுந்து கிடந்து புலம்பினான்.

## 7. பழியிலும் பகைமை

மனிதர் என்ற பெயரையே கேட்கத் தரிக்காத நிலையிலுள்ள தைமன் எப்படியோ அல்சிபியாதிஸின் இச் சொல்மாரியைக் கேட்டுக்கொண்டு அசையாது நின்றான். வெறுப்பே நிறைந்து உணர்ச்சியற்றுத் தோன்றிய அவன் கண்களில் இடையிடையே சில உணர்ச்சிப் பொறிகள் தோன்றித் தோன்றி மறைந்தன. கண்களில் நீர் கலங்கிக் கண்ணீர் விடுவானோ என்ற தோற்றத்தை அவன் அடைந்தான்.

ஆனால் அல்சிபியாதிஸ் பேசி முடிப்பதற்குள் இம் மெல்லிய உணர்ச்சி அலைகள் மறைந்தன. அவன் மீண்டும் பித்தம் பிடித்தவன் போல நின்று நோக்கி, "எனக்கொன்றும் புரியவில்லை. உன்னைக் கொல்லவே மனம் வரவில்லை; போ, நீ மட்டும் பிழைத்துப்போ," என்றான்.

அல்சிபியாதிஸ், "நான் போகிறேன். வணக்கம்! ஆனால் அதேனியரை அழிக்கவேனும் உதவப்படாதா?" என்று கேட்டான்.

**தைமன்:** அதேனியரை அழிப்பதா! ஆம். அழிக்க வேண்டும். எப்படி அழிப்பது! அதுதான் கேள்வி.

**அல்சிபியாதிஸ்:** தாங்கள் நினைத்தால் எளிது. அதேன்ஸின் போர்வீரர்கள்—வெற்றிபெற்று மீளும் போர்வீரர்கள்—என்னுடன் இருக்கின்றனர். தாமோ முன் அதேன்ஸின் பகைவர் நெஞ்சுட்கப் பொருத பெருந் தலைவர். அப் படையின் தலைமை தாங்கி என்னுடன் வரின் அந் நகரை அழிப்போம்.

தைமன் வெளிப்பட யாதொன்றும் கூறாமலே 'மாட்டேன்' என்ற குறிப்புத் தோன்றத் தலையை ஆட்டிக் கொண்டு நின்றான்.

பின் ஏதோ நினைத்தவன் போல் நெட்டி எழுந்து அல்சிபியாதிஸைப் பின்வரும்படி சைகை செய்து கொண்டு காட்டின் ஒருபுறமாகச் சென்றான்.

அல்சிபியாதிஸ் வியப்புடன் அவனைப் பின்தொடர்ந்தான்.

இறுதியில் தைமன் அவனுக்குப் புதையலிருக்குமிடம் காட்டி, "இஃது அதேனியரை அழிக்க உதவும்" என்று கூறிவிட்டு ஓடினான்.

அதேன்ஸின் செல்வமனைத்தையும் நாணவைக்கும் அத்திரண்ட பொருட்குவையைக் கண்டு எல்லையிலா மகிழ்ச்சி அடைந்தான் அல்சிபியாதிஸ். அதன் உதவியால் உணர்ச்சியும், தன்னிடம் உண்மைப்பற்றும் உடைய அவ்வீரருக்கு எல்லையிலா ஊக்கம் தந்து அவர்களுடன் அதேன்ஸை முற்றுகையிட்டுச் சூறையாடினான்.

அல்சிபியாதிஸின் வீரர்களுடைய வாள்களுக்கு அதேனிய வணிகர் இறையாயினர். அவர்கள் கால்நடைச்செல்வ மனைத்துங்கூட அல்சிபியாதிஸ் கைப்பட்டன. அவன் வில்லாளிகளின் அம்புமாரியால் அந்நகர் அல்லோலகல்லோலப்பட்டது.

## 8. காலங்கடந்த கழிவிரக்கம்

நாட்கள் வாரங்கள் திங்கள்கள் பல சென்றன. முற்றுகையும் சூறையாட்டும் நின்றபாடில்லை. நகர மக்கள் வெலவெலத்து இனி யாது செய்வது எனக் கலவரப்பட்டனர். பணிந்தும் அல்சிபியாதிஸ் விட்டபாடில்லை. கெஞ்சியும் விட்டபாடில்லை. அவனை எதிர்த்து நிற்கத் தக்க வீரரோ அந் நகரில் எவரும் இல்லை.

அச்சமயம் நகர மக்கள் "அந்தோ இச் சமயம் தைமன் இருந்திருந்தால் இன்று பகைவர் அஞ்சுவார்களே. அயல்நாட்டினர் அனைவரும் அவன் பெயரால்

அதேன்ஸை மெச்சி இடுக்கண் நேரத்திலும் வந்துதவு வார்களே! அவன் இல்லாததால் அன்ரோ, உலக மொப்பிய பெரியானுகிய அவனைப் பகைத்ததனுலன்ரோ அவர்கள் இன்று நம்மை வெறுத்து இழிவும் படுத்தி, நம் அழிவையும் பார்த்துக்கொண்டு வாளா விருக்கின்றனர்" என்று புலம்பலாயினர்.

மக்கள் மனநிலை கண்டு அஞ்சிப் பெருமக்கள் திரண்டு எப்படியேனும் தைமனிடம் தூதனுப்பி அவனை நகருக்கு அழைப்பதெனத் தீர்மானித்தனர். தைமன் துன்புற்ரூர்க் கிரங்கும் வள்ளல்; குற்றம் செய்தாரைப் பொறுக்கும் பெருந்தகை. ஆதலின் தமது திக்கற்ற நிலைக்கும் கழிவிரக்கத்திற்கும் செவிசாய்த்துத் தம்மைக் காத்தருள இணங்குவான் என்று அவர்கள் நினைத்தனர்.

தைமன் கொடையின் பெரும் பகுதியையும் பெற்று அவனுக்கு மிக்க தீங்கையும் இழைத்தவரான லூஸியஸும் லூகிலியஸும் இன்று அவனை அழைக்கச் செல்லும் தூதுக்குழாத்திற்கும் தலைமை தாங்கியவராயினர்.

ஆயின் அந்தோ, காட்டில் தைமனைக் கண்டதும் அவர்கள் அவன்நிலை கண்டு இரங்குவதா அஞ்சுவதா என்றறியாது துணுக்குற்றனர். அவனும் அவர்களை அண்டவொட்டாமல் அவர்கள்மீது தொலைவில் நின்று கல்லெறிந்துகொண்டே ஓடினன். அவற்றைப் பொறுத்துப் பின்பற்றியவரையும் கண்டஞ்சி அவன் "ஐயையோ மனிதர், அதேனியர்! ஐயையோ மனிதர், அதேனியர்!" என்று அரற்றிக்கொண்டு ஓடி ஒளித்தான்.

ஒரே ஒரு சமயம் லூஸியஸும் லூகிலியஸும் இன்னும் சிலரும் எப்படியோ தைமனை அறியாது அவன் பக்கம் வந்து, விடாது அவன் காலைப் பிடித்துக்கொண்டு "தைமன் தைமன், உனக்கு இரக்கமில்லையா; அந்தப்

படுபாவி அல்சிபியாதிஸனும் அவன் வீரர்களும் எங்களை இளைஞரென்றும் பாராமல், முதியோரென்றும் பாராமல், பெண்ணென்றும் பாராமல், பிள்ளை என்றும் பாராமல் கூரிய வாளால் எங்கள் கழுத்துக்களை அறுத்தறுத் தெறிகிறார்களே! எங்கள்மீதும் எங்கள் பெண்டு பிள்ளைகள் மீதும் சற்று இரக்கம் கொள்ள லாகாதா?'' என்று கேட்டனர். அப்போதும் அவன் திமிறிக்கொண்டு "இரக்கமா, அது இங்கேது; எனக்கு இரக்கம் வந்தாலும் உங்கள் கழுத்தை அறுக் கும் வாளின்மேல் வரும். உங்கள் நெஞ்சத்தைப்போல் கழுத்தும் கல்லாய்த்தானே இருக்கும்? அதனை அரிந் தரிந்து அதன் முனை மழுங்குமே என்றுதான் இரங்கு வேன். உங்கள் கழுத்தைக் கண்டு இரங்கமாட்டேன். உண்மையில் அல்சிபியாதிஸ் வாழ்வதும், கத்திகள் வாங்குவதும் என் இறுதிக் கொடையால்தான். என் நாவின் இறுதி அருள்மொழியும் 'அல்சிபியாதிஸ் வாழ்க' என்பதுவே என்று கூறி அகன்றான்.

இனி அவனிடம் மன்றாடிப் பயனில்லை என்று கண்டு மக்கள் மீண்டேகினர்.

தாம் செய்த தீவினை தம்மையும் கெடுத்துத் தம் நகர் விளக்கமாயிருந்த வள்ளலையும் பேயுரு வாக்கிற்று என்று மீளாத் துயருற்று மாழ்கினர் அதேனியர். அல் சிபியாதிஸே இறுதியில் அவர்கள் நிலைகண் டிரங்கி நக ரைக் கொள்ளையடித்தலை நிறுத்தும்வரை அவர்களின் பதைபதைப்பு நீங்கவில்லை. நன்றி கொன்றார்க்கு இம்மை யிலும் மறுமையிலும் மீட்பு அரிதன்றோ?

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.''

---

# 4. காதற் சீரழிவு

## கதை உறுப்பினர்

### ஆடவர்

1. ஃபிரான்சு அரசன்
2. நாவார் அரசன் : ஃபிரான்சு இளவரசியின் காதலன்.
3. பைரன் :
4. லாங்கவில் :
5. துமெயின் :

(3–5) நாவார் அரசன் நண்பர்கள், இளவரசி தோழிகளின் காதலர்கள்.

6. காஸ்டர்டு : அரண்மனைக் கோமாளி, ஜாக்குவெனெட்டாவைக் காதலிப்பதாக நடித்தவன்.
7. தான் அர்மெதோ : கல்விச் செருக்கும், வீரனென்ற விம்பும் கொண்ட கோமாளி.
8. ஷாலோஃபர்லிஸ் : திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர், புரியாப் பேச்சுப் பேசுபவர்.
9. பாயெட் : நாவார் அரசனுக்கு உளவாளி.

### பெண்டிர்

1. ஃபிரான்சு இளவரசி : நாவார் அரசன் காதலி.
2. ரோஸாலின் :
3. மேரியா :
4. காதரைன் :

(2–4) இளவரசி தோழியர், நாவார் அரசன் நண்பரது காதலியர்.

5. ஜாக் குவனெட்டா : குறும்புக்காரப் பணிப் பெண், காஸ்டர்டைக் காதலிப்பதாக நடித்துப் பின் தான் ஆர்மெதோவையும் காதலிப்பதாக நடித்து அவனைக் கேலி செய்தவள்.

## (கதைச் சுருக்கம்)

ஃபிரான்சு அரசன் தன் ஒரே மகளாகிய இளவரசியைத் தன் நண்பன் மகன் நாவார் அரசனுக்கு மணஞ்செய்விக்க எண்ணினான். ஆனால் நாவார் அரசன் தன் நண்பராகிய பைரன், லாங்கவில், துமெயின் ஆகியவருடன் பெண்களைத் துறந்து நோன்பிருப்பது கேட்டு, அவர்களிடம் அக்குவிதேன் என்ற தனக்குரிய நாட்டுப் பகுதிக்கு வழக்காடும் மெய்ப்புடன் இளவரசியை அவள் தோழியரான ரோஸாலின், மேரியா, காதரைன் ஆகியவர்களுடன் அனுப்ப, அவர்களை அரண்மனைக்கு வெளியில் கூடாரத்தில் கண்ட இளைஞர் தனித்தனி அவர்களைக் காதலித்து, மாலையில் பூஞ்சோலையில் ஒருவர் நிலை ஒருவர் அறிந்து நேரடியாக இளவரசி முதலிய நங்கையரின் காதலைப் பெற முயல, மாற்றுருவில் அவர்கள் ஆள்மாறி வந்து அவர்கள் கணையாழியையும் காதலுறுதியையும் பெற்று அவர்களை நகையாடினர். பின் அரசனால் அவர்கள் ஒரு நாடகத்துக்கு அழைக்கப்பட்டனர். நாடக நடுவில் ஃபிரான்சு அரசன் இறந்த செய்திகேட்டு அவர்கள் இளைஞர்களை இன்னும் ஓர் ஆண்டு காதலுக்காக நோன்பிருக்கவிட்டுச் சென்றனர்.

காதற்கோட்டையினுள் அரண்மனைக் கோமாளி காஸ்டார்டும் ஜாக்குவெனெட்டாவும் காதல் நாடகமாடி தான் அர்மெதோவைக் கோமாளியாக்கினர். திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியர் காதலியர்க்கு நாடகம் எழுதினார்.

# காதற் சீரழிவு

## (Love's Labours Lost)

### 1. புது வகை நோன்பு

[1]நாவார் என்னும் நாட்டில் இளமை வீரம் கல்வி ஒழுக்கம் முதலிய எல்லா நலன்களும் வாய்க்கப்பெற்ற அரசன் ஒருவன் இருந்தான்.

அவனுக்குமுன் அரசனயிருந்த அவன் தந்தை போரில் மிகவும் விருப்பமுடையவன். அதற் கேற்ப அவன் தன் நண்பனுன ஃபிரான்சு அரசன் போர்களில் சென்று அவனுக்கு உதவிசெய்து அதற்காக அவ்வரச னிடமிருந்து நூறுயிரம் வெள்ளியையும் அக்குவிதேன் என்ற செழித்த மாவட்டத்தையும் பரிசாகப் பெற் றிருந்தான்.

நாவாரின் புதிய அரசன் இத் தந்தையைப் பின்பற் றிப் போரி லீடுபடாமல் கல்வி கேள்விகளிலும் துறவோ ரிடத்திலும் பற்றுடையவனுய் அறிவு முன்னேற்றத்திற் கான ஆராய்ச்சிகள் நடத்தலானுன்.

அரசனுக்கு இக் கலையாராய்ச்சித் துறையில் அவ னது நண்பர்களான [2]பைரன், [3]லாங்கவில், [4]துமெயின் ஆகியவர்கள் உதவ முன்வந்தனர். அனைவருமாகச் சேர்ந்து இவ்வாராய்ச்சிகளை வெற்றிபெற முடிக்கும் வரை பெண்களுடன் உறவாடவோ அவர்களை அரண் மனைப்புறம் வரவிடவோ செய்வதில்லை என்றும், ஆடல் பாடல் முதலிய கேளிக்கைகளில் கலப்பதில்லை என்றும் நோன்பு கொண்டனர். அரண்மனைக்குள்ளே பிறர் எவ ரும் இத்திட்டத்தை மீறக்கூடாதெனக் குடிகளும் எச்ச ரிக்கப்பட்டனர்.

---

1. Navarre. 2. Biron. 3. Langavill. 4. Dumain.

கொஞ்ச நாளைக்குள் நண்பர்களின் இப் புதுவகையான நோன்பிற்குப் பல இடையூறுகள் நேர்ந்தன.

அவற்றுள் முதன்மையான இடையூறு அரசனுக்கே ஏற்பட்டது.

அக்குவிதேனை நாவாருக்களித்த ஃபிரான்சு அரசன் இறந்தபின் அவன் மகனை அடுத்த ஃபிரான்சு அரசன் அதனைத் திரும்பவும் பெறும் எண்ணத்துடன் பல தூதர்களை அனுப்பிப்பார்த்தான். நாவார் அரசனோ போர்ச் செலவுக் கீடாகவே அது தன் நாட்டுக்குக் கொடுக்கப்பட்டது என்றும், அதனுடன் கொடுக்கப்பட்ட தொகையாகிய நூருயிரம் வெள்ளிகளும் செலவின் ஒரு பகுதியேயாகும் என்றும் கூறினன்.

ஃபிரான்சு அரசன் எப்படியாவது அக்குவிதேனை அடையவேண்டுமென்று தீர்மானித்துக் கொண்டான். ஆகவே தன் அரசுக்குரிய இளவரசியையும் நாவார் அரசனையும் இணைத்துவிட்டால் அக்குவிதேனேயன்றி நாவார் முழுவதுமே ஃபிரான்சுடன் சேர ஏதுவாகும் என்று அவன் எண்ணமிடலானன்.

நாவார் அரசனுக்கும் மணவினைக்கும் தொலை மிகுதி என்பதையும், அவன் புதுமை வாய்ந்ததோர் நோன்பு கொண்டுள்ளான் என்பதையும் அவன் கேள்விப்பட்டிருந்தான். அதனல் நேரடியாக மணவினைப் பேச்சுப் பேசுவதில் பயனில்லை என்று அவனுக்குப் புலப்பட்டது. ஆகவே அக்குவிதேனுக்காகத் தூது அனுப்பும் மாதிரியாகவே இளவரசியைத் தோழியருடனும் குழாத்தினருடனும் அனுப்பினல் அவர்கள் வாய்த்திறனலும் கவர்ச்சியினலும் தன் கருத்து நிறைவேறப் பெறலாகாதா என்று அவன் மனக் கோட்டை கட்டினன்.

இளவரசி நாவார் வந்துசேர்ந்தவுடன் தொடக்கத்தில் நிகழ்ந்த செய்திகள் இக் கருத்துக்குச் சற்றும் இணக்கமுடையவையாகத் தோற்றவில்லை. தன் நோன்

பின்படி அரண்மனையினுள் பெண்களை வரவேற்க முடியாததனால் அரசன் தன் நோன்பை முறிப்பதா அல்லது அவர்களை வரவேற்காதிருப்பதா என்ற இருதலைப்பொறியிற் பட்டுழன்றான். முடிவில் நோன்பைக் காப்பதே தலைமையான கடனெனக் கொண்டு இளவரசியை நகர்ப்புறத்திலுள்ள வெளியிடத்தில் கூடாரமடித்து அதில் வரவேற்பதெனத் தீர்மானித்தான்.

## 2. நோன்புக்கோட்டை தகர்தல்

இதனைக் கேட்டதே இளவரசி, "இஃது என்ன, என்றும் கேட்டிராத புதுமையாயிருக்கிறதே! ஃபிரான்சின் பட்டத்துக்குரிய இளவரசியாகிய என்னையா நகர்ப்புறத்தில் வரவேற்பது? இவர் நோன்பு அத்தனைக்கு நம்மினும் மிக்கதா! சரி, அப்படியாயின் தோழியரே, நாம் இவரைப் பார்க்கவேண்டா; ஃபிரான்சு செல்வோம்" என்றாள்.

இளவரசியின் தோழியருள் குறும்புமிக்க ரோஸாலின்[1] என்பவள் அவள் சினந் தீர்த்து, "இளவரசி! தாங்கள் வெளுத்ததெல்லாம் பாலென்று எண்ணிவிட வேண்டா. துறவிபோல் நடிக்கும் இவ்வரசனும் அவன் தோழர்களும் முற்றத்துறந்த முனிவரு மல்லர்; முதியோரு மல்லர்; இளைஞர்களே; நாங்கள் அவர்களை அறிவோம். ஆதலால் அவர்களை விட்டு நாம் திரும்பிச் செல்வதால் அவர்கள் நோன்பிற்கும் அவர்கள் ஆண்மைக்கும் அஞ்சிப் போனவர்கள் ஆய்விடுவோம். இவ்வகையில் ஆடவர்க்குப் பெண்டிர் இளைத்தவர்களல்லர் என்று காட்டி அவர்கள் நோன்பை அழித்து அவர்களை அவமதித்தே செல்லவேண்டும்" என்று கூறினாள். [2]காதரைன், [3]மேரியா என்ற மற்ற இரு தோழியரும் இக்கருத்தை ஆர்வத்துடன் வரவேற்றனர்.

---

1. Rosaline 2. Katherine 3. Maria

நால்வரும் தம் கருத்தை நிறைவேற்றத் திட்டம் வகுத்தனர். அரசனும் அவன் தோழர் மூவரும் தம்மை வரவேற்கையில் தாம் ஒவ்வொருவரும் அவர்களுள் ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மன உறுதியைக் கலைப்பதென அவர்கள் தீர்மானித்தனர். அதன்படி இளவரசி அரசனையும், ரோஸாலின் பைரனையும் காதரைன் லாங்கவிலையும், மேரியா துமெயினையும் தனித்தனி கவனித்துத் தம்வயப்படுத்துவதாக வாக்களித்தனர்.

அவர்கள் சூழ்ச்சி மிக எளிதில் நிறைவேறியது. அந் நால்வரும் தாம் குறித்த ஆடவரைத் தம் கடைக்கணிப்பாலும் முறுவலாலும் ஈர்த்தும், சுடு சொற்களால் வாட்டியும், பொய்ச் சீற்றத்தால் பணியவைத்தும் தம் பக்கம் வளைத்தனர். நூலறிவில் திளைத்து முதிர்ச்சி யுறினும் உடலளவில் இளைஞரான அந்நால்வரும் திறம்பட நடித்த அக் காதல் நடிப்பில் ஈடுபட்டு மயங்கினரேனும் அதனை ஒருவர்க் கொருவர் காட்டாது மறைத்து வைத்துக் கொண்டனர்.

அரசன் நண்பருடைய நோன்புக் கோட்டையினுள் ஆழமாகச் சுரங்கம் வைத்தாயிற்று. அது வெடிக்குமுன் இன்னொருபுறம் கோட்டையின் தாழ் திறக்கலாயிற்று.

## 3. காதல் விளையாட்டு

அரண்மனை யருகில் அரசனாணைப்படி பெண்டிர் எவரும் வரவில்லையாயினும் அரண்மனைப் பணிப்பெண்கள் மட்டும் பணி செய்வதை யாரும் தடை செய்யவில்லை. அப் பணிப்பெண்களுள் தன்னுண்மையும் பேச்சுத் துடுக்கும் கவர்ச்சியும் மிக்கவள் ஒருத்தி இருந்தாள். அவள் பெயர்[1] ஜாக்குவெனெட்டா என்பது. அவள் அரசன்

---

1. Jaequenetta

முதலியோர் நோன்பைப் பற்றிக் கேட்டதும் அதனை வெறுத்து அரசனுடைய மெய்காப்பாளனாகிய [1]தான் அர்மெதோவிடம் அதைப்பற்றி ஏளனமாகப் பேசி நகையாடினாள்.

இந்தத் தான்அர்மெதோ மனிதருள் ஒரு புது வகைப் பிறவி. அவன் தன்னைப் பெரிய போர் வீரனென வீம்படித்துக் கொள்வதோடு அதற்குரிய உடையும் அணிந்து திரிந்தான். ஆனால் உண்மையில் அவன் போர்வீரன் அல்லன்; பெருங்கோழையே. மேலும் அவன் தான் கல்வியிற் சிறந்தவன் எனவும் இலக்கிய வளமுடையவன் எனவும் கருதி, அரை குறையாகப் பழநூல்களைப் புரட்டிப் பெருஞ் சொற்களை ஏற்பும் வாய்ப்புமின்றித் தாறுமாறாக அடுக்கிக் கொட்டுவான். சுருங்கச் சொல்லின் தான் கோமாளி என்றறியாத கோமாளி அவன்.

அவனை மிகவும் வெறுத்தவர்கள் ஜாக்குவெனெட்டாவும் அரண்மனைக் கோமாளியான [2]காஸ்டர்டும் ஆவர்.

ஜாக்குவெனெட்டா அரசனையும் அரசன் நோன்பையும் ஏளனம் செய்வதைக் கண்ட அவன் அரசனிடத்தில் தனக்கே சிறப்பாகப் பற்று உள்ளதுபோல் பாசாங்கு செய்து அவளைக் "குரக்கினத் தரக்கி" என்றும் "இராமன் தங்கையாகிய தடாதகைப்பிடாரி" என்றும் "கஞ்சன் முதலிய நூறு பேரையும் பெற்ற குந்தமாதேவி" எனவும் பொருத்தமற்ற அடைப்பெயர்கள் கொடுத்து வைதான்.

ஓயாது கடகடவென்று பொரியும் அவனை ஒறுத்து நகைக்காளாக்க வேண்டுமென்று காஸ்டர்டும் ஜாக்குவெனெட்டாவும் திட்டமிட்டனர். அதன்படி அவர்கள் இருவரும் ஒளிவு மறைவின்றிக் காதல் கொள்வதாக நடித்தனர். அதனை உண்மையென்று நம்பிய அவன் வெகுளியுடன் ஓடோடியும் சென்று அதனைப் பல்லுடைக்கும்

1. Don Armado 2. Costard

சொற்களால் விரித்துரைத்து வம்பளந்தான். அதைக் கண்டு காஸ்டர்டும் ஜாக்குவெனெட்டாவும் தம்மீது சாட்டும் குற்றத்தை இன்னும் வெளிப்படையாக ஒப்புக் கொண்டு நகைத்தனர். அரசன் உடனே சினங்கொண்டு இருவரையும் சிறைப்படுத்தி அவர்கள் குற்றங் கண்டு பிடித்த தான்அர்மெதோவே அவர்களைக் காக்கும்படி செய்து அவர்களை அவன் வீட்டி லடைத்தான்.

ஆனால் அவன் நடைமுறையில் அவர்களைச் சிறை காப்பதென்பது தனக்கே சிறை என்று கண்டான். இதனைப் பயன்படுத்தி அவர்கள் அவனை மிகவும் எள்ளிக் கொக்கரித்தனர். பின்னும் ஜாக்குவெனெட்டா "தான் காஸ்டர்டின் காதலை விட்டதாகவும், அவனையே காதலிப்பதாகவும் நடித்து, அந்தக் காஸ்டர்டு வெறும் வாயாடிக் கோமாளி; என் தான்அர்மெதோ என் உள்ளத்தில் நுழைந்தபின் காஸ்டர்டு போன்ற மின்மினிகளுக்கும் விண்மீன்களுக்கும் இடமேது" என்று அவன் உச்சிகுளிரப் பேசி, அவனைத் தான் எண்ணிய எண்ணிய கூத்துப்படியெல்லாம் ஆட்டினாள்.

காஸ்டர்டும் இதற்கியைய ஜாக்குவெனெட்டா தன்னைக் கவனியாததால் அவளை மறந்துவிட்டதாகவும், அவளைப்போன்ற காரழகிக்குத் தான் இசைந்தவனல்லன் என்றும், தான்அர்மெதோவே இசைந்தவன் என்றும் கூறியதுடன் அவர்களுடைய காதல் தூதனாயிருக்கவும் ஒப்புக்கொண்டான்.

அரசன் நோன்புக்கு நிலைக்களமாகிய அத் துறவறக் கோட்டையில் இங்ஙனம் ஒருபால் மாறன் விளையாட்டாக எய்த கணை சுவரைத் தொளைத்து வழி செய்துவிட்டது. ஆனால் விரைவில் அகன்ற நிலைக்கதவங்களே அவன் வர இடந்தந்து திறக்கக் காத்திருந்தன.

# 4. கலைத்தொண்டரே மேகலைத் தொண்டராதல்

அரசனும் தோழரும் தனித்தனியாக அவரவர் காதலியரின் மையலிற் பட்டுப் பிறர் அறியாமல் தனியே திரிந்து மனம் புழுங்கி வாடினார். நோன்புறுதியின் போதே பைரன் தன் இன்ப வாழ்க்கையை விடவேண்டுமே என்று தயங்கினான். நோன்பெல்லாம் ஒரு பித்து எனக் கூறிக்கொண்டே அவன் வேண்டா வெறுப்பாக வற்புறுத்தலின் பேரில் அதனை ஏற்றான். தானாகத் தளர்வுற்ற அவன் மனஉறுதி இன்று ரோஸாலினின் கட்டழகுக்கும் புன்முறுவலுக்கும் ஆற்றாது சூறைக்காற்றிற் பட்ட தேமாங் கொம்பெனத் துடிதுடித்தது.

முதலில் பைரனது மனத்தளர்ச்சியைக் குறித்து ஏளனம் செய்து நகையாடிய மற்ற மூவர் நிலையும் இன்னும் வெட்கக்கேடானதாகவே இருந்தது என்னல்வேண்டும். அரசன் "ஆ, என் மனத்தைக் கொள்ளை கொண்ட மாதரசி, உன் தந்தை அக்குவிதேனைக் கேட்டபோது நான் உன்னைக் கண்டிருந்தால் அதனையும் சரி, அதனினும் சிறந்த இன்னும் பத்து மாவட்டங்களையும் சரி, அட்டியின்றித் தந்து உன்னைக் காதலியாகப்பெற முயன்றிருப்பேனே! ஆ! ஃபிரான்சின் மலர்களுள் இத்தகையதோர் காணரிய செந்தாமரை மலரும் இருக்கும் என்று கண்டதார்? ஃபிரான்சின் நறிய தேனைக் கண்டறிந்த யாம் அதனைப் பழிக்கும் வெறிதரும் இத்தகைய கண் பார்வை ஒன்று அங்கே கரந்திருந்ததை அறியாமற் போனோமே! ஆ, தென்றலைப் பழித்த மென்மையும், கன்னலைப் பழித்த மொழியும், அன்னத்தைப் பழித்த நடையுமுடைய என் ஆரணங்கே, உன்னை அடையும் நாள் எந்நாளோ?" என் றேங்கினான்.

அதேபோன்று லாங்கவிலும் துமெயினும் காதரைனையும் மேரியாவையும் எண்ணி எண்ணி மனம் புண்பட்டு வெம்பி வெதும்பினர்.

ஆனல் இத்தனையிலும் நகைப்புத்தரும் செய்தியாதெனில் அவர்கள் ஒவ்வொருவரும் தாம் இத் தீயில் பொசுங்கியதோடு தமது நிலையைப் பிறர் எங்கே கண்டு கொள்ளப் போகிறுரோ என்று வேறு அஞ்சினர். முன்னம் ஆராய்ச்சி என்னும் ஒரே நோக்கத்திற் பட்டு நால்வரும் ஒருவரான அவ்வறிஞர், இன்று காதல் என்னும் நோக்கிற் பட்டதும் நால்வரும் நால்வேறு வழியாக ஒருவரை ஒருவர் வருந்தி விலகிச் சென்று பிறருடன் உரையாடுவதை ஒழித்துத் தம் மனத்தகத்தே குடிகொண்டிருந்த மங்கையருடன் உள்ளூற உரையாடுவாராயினர்.

## 5. ஒக்கவிழுந்தால் வெட்கம் இல்லை

இளவரசியும் அவள் குழாமும் தங்கியிருந்த கூடாரத்தினை அண்டியிருந்த அரண்மனைத் தோட்டத்தில் பூஞ்செடி கொடிகளிடையே சென்ற நடைவழியில் பைரன் தன் காதலிக்கு வரைந்ததோர் இன்கவிதையைத் தனக்குள்ளேயே படித்தவனுய் முன்னும் பின்னும் நடந்துகொண்டிருந்தான். தென்றலும் மாலையும் இளவெயிலும் மென்மலர் மணங்களும் எங்கணும் இனிமையைக் கொழித்த அந்த வேளையில், அவனது நெடிய உயிர்ப்புமட்டும் வெம்மையைக் கான்று நின்றது. அவன் தன் உளமாகிய நிலப்பரப்பில் தன் எழிலாரணங்கிற்கு மனக்கோட்டையாகிய மதில்களை எழுப்பிக் கோயில் கட்டிக்கொண்டே தன்னை மறந்து நடந்துகொண்டிருந்தான்.

அத்தறுவாயில் தொலைவில் யாரோ பூஞ்செடிகளை விலக்கிக்கொண்டு வரும் அரவங் கேட்டு மலர்ப் படுக்கை ஒன்றில் ஒதுங்கி ஒளிந்துகொண்டான்.

ஆங்கே அவன் ஒளிந்துகொண்டிருக்கும் இடத்தின் வழியாகவே வந்துகொண்டிருந்தான் அரசன். மண் மிசை விழுந்துகிடந்த நிலவானத்தின் துண்டமென்ன மாசு மறுவற்ற அவன் முகம் அன்று துன்பமும் அயர்ச்சியும் தாங்க மாசடைந்து கிடந்தது. அவன் கண்கள், கையில் இருந்த ஒரு கடிதத்திலேயே ஊறிநின்று அதன் எழுத்துக்கள் சென்ற திக்கிலேயே வழுக்கிச் சென்றதாகத் தோன்றின. அவ்வெழுத்துகளை அவன் தலையை யசைத்தும் கழுத்தை உயர்த்தியும் உரக்கப் பாடினன்.

மென்பனி தீரின ஞாயிறும்
கண்பனி தீருமோ ஒக்குமோ ?
வண்பனி தீரிலா வாவுறும்
தண்பனி மாமதி தானெங்கே?
என்பனி நீரும்நின் இங்கினை
வன்பினிற் கொண்டுசெல் ஊர்தியே !
வெண்பனித் தாள்சுமந் தேகுமென்
துன்பினைத் தூமொழி, காண்பையோ?

இதைப் பாடியபின் பெருமூச்சுவிட்டு இளவரசியின் உருவெளித் தோற்றத்தில் ஈடுபட்டவனாய், "வா, வா, ஃபிரான்சின் தவப்பயனாய் வந்த என் பெண்ணணங்கே, உனக்காக உலர்ந்துகிடக்கும் இவ்வுள்ளத் தடத்தில் உன் அன்பு மழையினைப் பொழிவாய்" என்றான்.

அவ்வமயம் பின்னால் நிழலாடக் கண்டு அவன் சட்டெனத் தேமா ஒன்றின்பின் மறைந்துநின்றான்.

வந்தவன் வேறு'யாருமில்லை; லாங்கவிலே. "என்ன வியப்பு! இவனுமா இந்நேரத்தில் இந்த இடத்தில் இருக்கிறான் ?" என்று மூக்கில் கைவைத்தனர், ஒருவரை ஒருவர் அறியாது மறைந்து நின்ற அரசனும் பைரனும்.

அவன் வரும் மாதிரியில் அரசனும் பைரனும் மறைவாயிராமல் கண்ணெதிரில் நின்றிருந்தால்கூட அவன் காணமாட்டான்போலும். அவன் கைகளைக் கட்

டிக்கொண்டு நிலத்தில் பதித்த கண்களுடன் நடந்தான். இடையிடையே அண்மையிலுள்ள உலகைக் கடந்து அடிவானத்திற் கப்பால் வேறோர் உலகைப் பார்ப்பது போல் வெறித்து நோக்குவான் அவன். அடிக்கடி அவன் "என் நோன்பு! என் நோன்பு!!" என்பான். பின் "நான் நோன்பை முறித்துவிடவில்லை. அந் நோன்பு மண்மாதர்களை மட்டுமன்றோ குறித்தது? என் மேரியா மண்மாதல்லளே! விண்மாதாயிற்றே! அவளிடம் கொண்ட பற்று பெண் பற்றன்று; பெண்ணிறைப் பற்றேயாம்; அதில் பழி ஏதும் இருக்கமுடியாது?" என்பான். "ஆ, நான் கூறிய உறுதி என்ன, அஃது ஒரு வாய்மொழி; வாய் மொழி ஆவது ஒரு சொல்; அஃதாவது ஓசைவகை. ஓசை என்பதோ காற்று; காற்று வெறும் ஆவி; ஆவிப் பொருள்களை அகற்று பவன் கதிரவன். அத்தகைய கதிரவனாகிய என் மேரியா முன்னுமா அவ் ஆவி, ஆவியாகிய காற்று, காற்றாகிய சொல், சொல்லாகிய வாய்மொழி, வாய்மொழியாகிய வாக்குறுதி நிற்கும். நிற்கவே நிற்காது!" என்று பிதற்றுவான். சாவப் போகிறவன் உயிரை விரும்பித் துரும்பைப் பற்றுவதுபோல் உண்மையை மீறுகையிலும் இப் போலி யாராய்ச்சியால் தான் விழைந்ததே உண்மை என நிலைநாட்ட எண்ணும் இப்பேதைமை கண்டு பைரன் வெகுண்டான். அரசனும் பரிவுற்றான்.

துமெயின் ஒருவனே இன்னும் மாறன் அம்பிற்குப் பிழைத்தவன் என்றான் பைரன் தன் மனத்திற்குள். அதற்குள் துமெயின் சீழ்க்கை அடித்துக்கொண்டு அப் பக்கம் வந்துவிட்டான். லாங்கவில் உடனே மறைந்து கொண்டான்.

துமெயினும் இப்போது பாட்டு மேளத்தில்தான் வந்தான்.

அவன்,'

தென்றலும் மாலையும் திங்களும் கூடின;
வென்றிகொள் மாறன்தன் வெங்கணை எய்தனன்;
மன்றல் மதர்விழி மாதர்? உன் பொன் அருள்
இன்றெனக் கீந்திட வாராய்—இணையிலின்
பின்றெனக் கீந்திட வாராய்.

என்று பாடினன்.

தன்னைப்போல் துமெயினும் காதலுக் காட்பட்டது கண்டு லாங்கவில் திடீரெனத் தாவி வெளிவந்து "துமெயின், துமெயின், இதோ அகப்பட்டாய்: நீ நோன்பை முறித்துவிட்டாய். அதற்கான ஒறுப்பை நீ ஏற்கவேண்டும்" என்முன். துமெயினும் "ஐயோ, தனிமையிலிருக்கிறேம் என்றன்றோ வாய்விட்டுப் பாடினேம்! இனி என் செய்வது? நண்பர்கள் ஏளனத்திற்கு ஆளானேமே" என்று வருந்தினன்.

ஆனல் அதற்குள் அரசனும் அவனையடுத்துப் பைரனும் வெளிப்பட்டனர். அரசன் மற்ற இருவரையும் குறைகூற, பைரன் அரசனையும் உள்ளிட்டு மூவரையும் பழித்துத் தான் மட்டும் நல்லவனாக நடித்தான். அவன் குட்டும் வெளிப்படும் நேரம் வந்துவிட்டதாகலின் அவன் நடிப்பும் பகல் வெளிச்சத்தில் பாவைக் கூத்தாட்டுபவன் ஆட்டம்போல் பயனற்றதாயிற்று.

பைரன் தோட்டத்திற்கு வருமுன்னரே ரோஸாலினுக்கு எழுதிய கடிதத்தை காஸ்டர்டிடம் கொடுத்து அவளிடம் கொடுக்கும்படி கூறியிருந்தான். அதற்குச் சற்று முன்னுகத்தான் அர்மெதோவும் ஜாக்குவெனெட்டாவிடம் கொடுக்கும்படி அவனிடம் வேறு ஒரு காதற் கடிதம் கொடுத்திருந்தான். கோமாளி என்ற முறையில் தெரிந்தோ, அல்லது தெரியாமல்தானே அவன் கடிதங்களை மாற்றிவிட்டான். ஆகவே ரோஸாலினிடம் கொடுபடவேண்டும் கடிதம் ஜாக்குவெனெட்டாவிடம் சென்றது.

அவள் அதனை வாசிக்க அறியாது அருகிலுள்ள திண்ணைப் பள்ளிக்கூட ஆசிரியரான [1]ஹாலோஃபர்னஸிடம் காட்டினாள். அவர் பழைய நூல்களின் துரட்டுச் சொற்களுடன் வழக்கிறந்த புரியா மொழிகளினின்று (லத்தீன், கிரேக்கம் முதலியவற்றிலிருந்து) அரை குறையாகத் தான் படித்த சொற்களையும் இடைச்செருகலாகச் சேர்த்துப் பேசினாரேனும், அக் கடிதம் ஜாக்குவெனெட்டாவிற் கன்று; இளவரசியின் குழாத்தைச் சேர்ந்த ரோஸாலின் என்ற மாதரசிக்குரியது; அரசன் நண்பனான பைரன் எழுதியது என்பதை ஒருவாறு விளங்கக் கூறினார்.

ஒழுங்குப்படி அக் கடிதத்தை ரோஸாலினுக்கே அனுப்பியிருக்கவேண்டும். ஆனால் அரசன் நோன்பை நகர் சிரிககவைக்கவேண்டுமென்னும் கருத்துடன் ஜாக்குவெனெட்டா அதனை அரசனிடம் கொண்டு வந்து கொடுக்க எண்ணினாள். அரசனை எவ்விடத்திலும் காணாமல் பின்தொடர்ந்து மேற்கூறியபடி தோட்டத்தில் அவனைக் கண்டு அவனிடம் அவள் அதனைக் கொடுத்தாள்.

தான் எல்லோரையும் பித்தராக்க எண்ணிய சமயம் பார்த்துத் தன் செய்தி வெட்ட வெளிச்சமானது கண்டு பைரன் முதலில் மிகவும் வெட்க முற்றானாயினும் ‘ஒக்க விழுந்தால் வெட்கமில்லை’ என்றபடி தானும் பிறருடன் சேர்ந்து காதலின் சிறப்பைப் புகழலானான். தத்தம் கோழைமையை மறைக்க அத்தகையதோர் விரிவுரை உதவுமாதலின் அனைவரும் தலையசைத்து “அப்படிச் சொல்லு, அதுதான் சரி” என்று கூறினர். ‘காதல், தெய்வங்களுக்கும் உரியது; அதனைப் பின்பற்றுவதால் உண்மையை மீறியதனால் ஏற்படும் குற்றம் தம்மைச் சாராது’ என்று அவன் கூறுவதற்கு அவர்களும் ஒத்துப் பக்கப்பாட்டுப் பாடினர்.

---

1. Holofornes.

நோன்பில் மனமொத்த நண்பர் நால்வரும் இடையில் பிரியினும்; இணைப்பொத்த காதலால் மீண்டும் ஒன்றுபட்டு நின்றனர். நோன்பின் பெயர் மறக்கப்பட்டது. இளவரசியின் திட்டத்தில் வெற்றிக்கான கொடி ஏற்றப்பட்டது.

## 6. காதலர் ஏமாற்றம்

நால்வர் கவனமும் இப்போது புது வழியில் திரும்பிற்று. இனித் தத்தம் காதலியரைப் பெறுவது எப்படி என்று அவர்கள் ஆராய்ச்சி செய்யலாயினர்.

பைரன் நல்லுரையைப் பின்பற்றி அவர்கள் ஒவ்வொருவரும் தம் காதற்கடிதங்களுடன் காதல் நன்கொடைகளும் அனுப்பினர். அதன்பின் மாற்றுருவுடன் சென்று அவர்கள் அம்மாதரைத் தம்முடன் நடனமிடும்படி கேட்டனர். ஒருவேளை அவர்களும் மாற்றுருவில் வரக்கூடுமாதலின் அவர்களிடமுள்ள தம் நன்கொடைகளால் அவர்களை அடையாளங் கண்டுகொள்ளக்கூடுமென்று அவர்கள் எண்ணினர்.

ஆனால் அவர்கள் இட்ட திட்டங்களைப் பாயெட் என்ற அப்பெண்டிரின் நண்பன் ஒளிந்திருந்து கேட்டு வந்து பெண்டிர்க்கு உரைத்தான். அதனால் அவர்கள் திறமையாகத் தங்கள் நன்கொடைகளை ஒருவர்க்கொருவர் மாற்றி வைத்துக்கொண்டு முகமூடியாலும் அங்கியாலும் தம் உருவை முற்றிலும் கரந்துகொண்டனர். இப்போது இளவரசியின் நன்கொடையும் ரோஸாலினின் நன்கொடையும் ஒரு புறம் மாறி மாறியும், மேரியாவின் நன்கொடையும் காதரைன் நன்கொடையும் இன்னொரு புறம் மாறிமாறியும் இருந்தன.

உருசியர் உருவில் வந்த நால்வரும் நடந்த சூழ்ச்சியை அறியாமல் ஒருவர் காதலியை மற்றொருவராக மாறப் பெற்றுத் தம் காதலிக்குக் கொடுக்க வேண்டும் உறுதி

யையும் அதன் அடையாளமாகிய தம் கணையாழியை யும் இன்னொருத்திக்கே கொடுத்துவிட்டனர். இறுதி யில் அவர்கள் பெண்டிரை நடனத்திற் கழைத்தனர். அப்போது முன்னேற்பாட்டின்படி இளவரசி ஓர் சைகை காட்ட அனைவரும் நடனமிட மறுத்து அவர்களை விட்டகன்றனர்.

ஆடவர் வெளியே சென்றபின் தத்தம் உருவேற்று மீண்டும் சென்று தாம் செய்த காதல் உறுதியை மண உறுதியாக்கிவிட எண்ணினர். பெண்டிர், விளையாட்டுக் காதலாய்த் தொடங்கியது வெற்றிக் காதலாவது கண்டு தம் ஒறுப்புக்கு இது நல்லகாலம் என நினைத்து "உங்கள் காதலால் எங்களை ஏய்க்க முடியாது; நீங்கள் உறுதியும் உண்மையும் அற்றவர்கள்" என்றனர்.

காதலர்: நாங்கள் உறுதியற்றவர்களல்லேம். வீண் பழி கூறவேண்டாம். உலக நடுநிலை திரியினும், கடல் சுவறினும் திங்களும் ஞாயிறும் நெறி வழுவினும் நாங்கள் வழுவோம்.

காதலியர்: ஓகோ! உங்கள் உறுதியையும் உண் மையையும் யாரிடம் அளக்கிறீர்கள். பெண்கள் பக்கம் போகாத நோன்புக்குச் செய்த உறுதி யெங்கே? இப் போது தங்கள் காதலெங்கே?

காதலர்: அது காதல் அருமை அறியாமல் செய் தது. இவ்வளவு உண்மையான பற்று ஏற்படுமுன் அறி யாமல் மேற்கொண்ட நோன்பு அது.

காதலியர்: அது சரிதான். நேற்றைய உண்மை இன்றைய பற்றில் போம். இன்றைய உண்மை நாளைய பற்றில் போம். போங்களையா, உங்கள் உண்மையும் வேண்டா, பற்றும் வேண்டா.

காதலர்: இல்லை, அப்படி எண்ணவேண்டா; தங்க ளைக் காதலித்த பின்னர் இனி வேறு யாரையும் ஏறெடுத் துப் பாரோம்.

காதலியர் : அதுவும் முழுப்பொய் ; நேற்றுமுன்நாள் எங்களுக்குக் காதற்கடிதம் வரைந்த நீவிர் நேற்று வேறு யாருக்கோ காதலுறுதியும் கணையாழியும் தந்து விட்டு, இன்று மீட்டும் எம்மிடம் ஒன்றும் அறியாதவர்போல் வந்து பிதற்றும் நாடகத்தை யாரிடமையா காட்டுகிறீர் ?

காதலர் : நீவிர் கூறுவது விளங்கவில்லையே !

காதலியர், 'விளங்கவில்லையா ? இதோ பாருங்கள்' என்று அவர்கள் தலைமாறிக் கொடுத்த கணையாழியைக் காட்டினார்.

அப்போதுதான் காதலர் தாம் ஏமாற்றப்பட்டதைக் கண்டனர். நன்கொடை மாற்றி வைக்கப்பட்டிருந்த சூதை அறிந்து வெட்கினர். ஆயினும் வெளிப்பட "நாங்கள் வெளித்தோற்றத்தால் தவறினும் அதற்கு நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர்; உருமாறி வந்த பெண்டிரே பொறுப்பாளிகள். நாங்கள் உண்மைதவறிய குற்றம் ஏற்பட இதனால் இடமில்லை" என்று வாதாடினர்.

காதலியர் அதனை ஏற்காமல் மேலும் ஊடி நிற்கும் நேரம் ஹாலோஃபர்னஸ் ஜர்க்குவெனெட்டா முதலியோர் வந்து அரசனது ஏற்பாட்டின்படி இளவரசி முதலியோரின் பொழுது போக்கிற்காக "ஒன்பது பெருங்குரவர்" என்னும் நாடகத்தைத் தாம் நடத்தப்போவதாகக் கூறினர்.

காதலர் காதலியர் அனைவரும் தம் பூசலை விடுத்து நாடகங் காணச் சென்றனர்.

## 7. காதலைத் தவிர்த்த நோன்பே காதலை நாடிய நோன்பாயிற்று

ஹாலோஃபர்னஸும் ஜாக்குவெனெட்டா முதலியோரும நாடகம் நடத்த முடியும் என்று வீம்படித்தனரேயன்றி உண்மையில் நடிக்கத் திறமுடையவர்களல்லர். அவர்கள் நாடகம் தெருக்கூத்திலும் மோசமாயிருப்பி

னும், காதல் சிதைவால் அயற்சியுற்றிருந்த நண்பர்கட்கும் பெண்டிர்க்கும் அஃது ஒரு நல்ல கேலிக்கூத்தாய் அமைந்தது.

நாடகத்தினிடையில் இளவரசிக்கு அவர் தந்தை இறந்துவிட்டதாகத் தூதன் ஒருவன் வந்து சொன்னான். உடனே கேளிக்கைகளை எல்லாம் விட்டு அவர்கள் புறப்படலாயினர். அரசனும் நண்பரும் தாம் காதலுக்காகப் பட்ட பாடுகள் அனைத்தும் வீணாகின்றனவே என்று நினைத்து அவர்களைத் தடைந்து தமக்கு மண உறுதி தந்தேனும் செல்லவேண்டும் என்று மன்றாடினார்.

பெண்டிர், "உங்கள் மனம் நிலையற்றது. ஆதலின் உங்கள் காதலை இப்போது நம்போம். மண உறுதிக்கு எம் தந்தை இறந்த இந்நேரம் நல் நேரமும் அன்று. ஆகவே முன் காதலைத் துறந்து நோன்பு ஏற்று அதனைக் கைவிட்ட நீர் அங்ஙனம் கைவிடாமல் விடாப்பிடியாக எங்கள் பேரால் ஓராண்டு நோன்பு நோற்பீரேல் அதனிறுதியில் எங்கள் காதலை உங்களுக்கு உவந்தளிப்போம்" என்றனர்.

காதலர்கள் வேறு வழியற்று அவ் ஏற்பாட்டை ஏற்றனர்.

அவ்வேற்பாட்டின்படி ஓராண்டளவும் அந்நால்வரும் இன்பவாழ்வு, நல் உடை, உணவு முதலிய யாவற்றையும் துறந்து முறையே அறநிலையங்கள், மருத்துவவிடுதிகள் துணையற்ற சிறுமியர் பாதுகாப்பிடங்கள், சீர்திருத்தப் பள்ளிகள் ஆகியவற்றிற் சென்று அரும்பணியாற்றினர்.

அதன் இறுதியில் அவர்கள் காதல் உறுதிப்பாடுடையதே எனக் கண்டு, பெண்டிர் இறந்த அரசனுக்கான பரிவையும் நீத்து அவர்களை மணந்துகொண்டனர்.

காதலரின் காதற் சிரழிவு ஒரு முடிவுக்கு வந்து அவர்கள் நல்வாழ் வெய்தினர்.

---

கழக வெளியீடு—ருஅஅ

சிறுவர்க்கான

# ஷேக்ஸ்பியர் கதைகள்

[எட்டாம் புத்தகம்]

❀

திரு. K. அப்பாதுரைப் பிள்ளை, எம். ஏ., எல். டி.,
எழுதியது

❀

:: திருநெல்வேலி, தென்னிந்திய ::
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி & சென்னை.

*First Edition—April 1945*

[COPY RIGHT]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
:: PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., ::
TIRUNELVELI & MADRAS.

*February 1947*

The Jupiter Press Ltd., Madras. for M. S. 95—2-47—2000 cs.

# பதிப்புரை

ஷேக்ஸ்பியர் ஆங்கில இலக்கியத்தில் பெருங்கவிஞர் என்று மட்டுமன்றி உலக இலக்கியத்திலேயே ஒப்புயர்வற்ற கவிஞராகவும் நாடக ஆசிரியராகவும் கருதப்படுகிறார். ஆங்கிலத்தில் அந்நாடகங்களை சார்லஸ் லாம், மேரி லாம் Charles and Mary Lamb) என்ற ஆசிரியர்களும் பேராசிரியர் கியர்கூ (Professor Quillercouch) என்பாரும் மாணவருக்குப் பயன் தரும்படி உரைநடையில் கதையாக வழங்கியிருக்கின்றனர்.

மேற்கூறிய ஆசிரியர்கள் தந்த கதைகளையும் அவர்களால் விடப்பட்ட கதைகளையும் சேர்த்து ஷேக்ஸ்பியர் நாடகங்கள் எல்லாவற்றையுமே தமிழ் மாணவர் படித்து உணரும்படி எளிய இனிய நடையில் எழுதப்பெற்றுக் கழக வாயிலாய் வெளியிடப்படுகின்றன. இக்கதைத் தொடர்ச்சியில் 8-வது தொகுதியாகிய இச்சிறு நூலுடன் ஷேக்ஸ்பியர் நாடகக் கதைகள் முற்றுப் பெறுகின்றன.

இதுகாறும் வெளிவந்துள்ள 7 தொகுதிகளிலும் சேர்த்து 25 கதைகள் வெளிவந்துள்ளன. இத்தொகுதியிலுள்ள 9 கதைகளும் சேர மொத்தம் ஷேக்ஸ்பியரின் நாடகக் கதைகள் 34-ம் வெளியிடப்பட்டுவிட்டன.

இத்தொகுதியில் பெரும் பகுதியையும் எழுதிய ஆசிரியர் திரு. கா. அப்பாதுரைப் பிள்ளை எம். ஏ., எல். டி., அவர்கள் மூலமே ஷேக்ஸ்பியர் நூல்களை நாடக உருவில் பாட்டிடையிட்ட செய்யுள், உரை விரவிய நடையில் (முதனூலைப் போலவே) இலக்கிய நலன் குன்றாமல் மொழி பெயர்த்து வெளியிட எண்ணியுள்ளனம். தமிழன்பர்களும் ஷேக்ஸ்பியர் கலையில் திளைத்த ஆங்கில இலக்கிய அன்பர்களும் எம் முயற்சியை முன்னின்று ஊக்குவார்கள் என்று நம்புகிறோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| i. | ஐந்தாம் ஹென்றி | 1 |
| ii. | ஆறும் ஹென்றி | 28 |
| iii. | வின்ட்ஸாரின் இன்நகை மாதர் | 45 |
| iv. | மூன்றும் ரிச்சர்டு | 62 |
| v. | பெரிக்ளிஸ் | 79 |
| vi. | எட்டாம் ஹென்றி அரசன் | 101 |
| vii. | அடங்காப் பிடாரி | 119 |
| viii. | திராய்லஸும் கிரெஸிடாவும் | 135 |
| ix. | டைட்டஸ் அன்ட்ரானிக்கஸ் | 153 |

# I. ஐந்தாம் ஹென்ரி

## (கதை உறுப்பினர்)

ஆடவர்

1. ஐந்தாம் ஹென்ரி அரசன்: இளமையில் ஹென்ரி இளவரசன். நான்காம் ஹென்ரியின் மகன்; மூன்ரும் எட்வர்டுப் பேரரசன் இவன் முன்ஞேன்.
2. சார்லஸ்: ஃபிரான்சு நாட்டு அரசன்.
3. டாஃபின்: ஃபிரெஞ்சு இளவரசன்.
4. ரிச்சர்டு: கேம்பிரிட்ஜ் கோமான் — அரசனின் ஒன்றுவிட்ட உடன் பிறந்தான். } சூழ்ச்சிக்காரர்
5. ஸ்க்ரூப் பெருமகன்; அரசன் பள்ளித் தோழன், } சூழ்ச்சிக்காரர்
6. தாமஸ் கிரேப் பெருந்தகை. } சூழ்ச்சிக்காரர்
7. கிளஸ்டர் கோமகன் — அரசன் உடன் பிறந்தான். } படைத் தலைவர்
8. பெட்ஃபோர்டுக் கோமகன். } படைத் தலைவர்
9. தாமஸ் எர்ப்பிங்ஹாம் பெருந்தகை:—முதியோன். } படைத் தலைவர்
10. எக்ஸ்டர் பெருமகன் :— ஹென்ரி அரசன் தூதன்.
11. ஃபால்ஸ்டாஃப்: அரசன் பழந் தோழருள் தலைவன் - புறக்கணிப்பால் இறந்தவன். } அரசன் பழந் தோழர்
12. பார்டல்ஃப்: ஹார்ஃப்ளூர் முற்றுகையில் சமய நிலையத்தைக் கொள்ளையிட்டதற்காகக் கொலைத் தீர்ப்பளிக்கப் பட்டவன். } அரசன் பழந் தோழர்
13. பிஸ்டல் :- ஃப்ளூவெல்லினை எதிர்த்து அவமதிக்கப் பெற்றவன். } அரசன் பழந் தோழர்
14. நிம்: } அரசன் பழந் தோழர்
15. ஃப்ளூவெல்லின்: வேல்ஸ் தலைவன் படைத் தலைவன் - வாயாடி—லத்தீன் போரியல் நூல் அறிவைக்காட்டி மிரட்டும் பகட்டன்—எனினும் சிறந்த போர் வீரன்.
16. மாக் மோரிஸ்: அயர்லந்து நாட்டான்-சிறந்த படைத் தலைவன்.

17. வேறு ஆங்கிலத் தூதர்.
18. ஃபிரெஞ்சுத் தூதர்.
19. வீரர்.
20. ஃபிரெஞ்சு வீரர், படைத் தலைவர்.

பெண்டிர்

1. காதரைன் :—ஃபிரெஞ்சு அரசன் மகள்—டாஃபின் தங்கை-ஹென்ரி அரசனை மணந்தவள்.

## கதைச் சுருக்கம்

இறக்குந் தறுவாயில் தன் தந்தை நான்காம் ஹென்ரி தந்த அறிவுரைக்கிணங்க ஐந்தாம் ஹென்ரி அரசன் பெரு மக்கள் போர்க் குணத்தை அடக்கி யாளும் வண்ணம் ஃபிரெஞ்சு நாட்டின்மீது போர் தொடுத்தான். மக்களிடைப் பரவும் பகுத்தறிவியக்கங்கண்டஞ்சிய தலைமக்களும் இதனை ஆதரித்து ஃபிரெஞ்சு அரசுரிமை இங்கிலாந்து அரசனுக்குச் செல்லும்படியானதே எனச் சாக்குத் தந்து ஊக்கினர். பல் வகைப்பட்ட மக்களுடன் ஹென்ரியின் பழந்தோழருள் ஃபால்ஸ்டாஃப் இறந்து விட்டமையின் அவன் நீங்கலாக அவன் குழுவினரும் சேர்ந்து சென்றனர்.

ஹார்ஃப்ளூர் நகரை முற்றுகையில் பிடித்தபின் பிணியாலும் பஞ்சத்தாலும் வாடிய சில வீரருடன் இறுமாப்பு மிக்க பெரிய ஃபிரெஞ்சுப் படையை அரசன் அஜின் கோர்ட்டுச் சண்டையில் வென்று வாகைசூடிப் பின்னும் பல நகர்களைப் பிடித்து ஃபிரான்சு அரசனைப் பணியவைத்து உடன்படிக்கை செய்துகொண்டான். அதன் வழியாக ஃபிரெஞ்சு அரசன் தன் மகள் காதரைனை அவனுக்குத் தந்து தனக்குப் பின் அவனே அரசனாகும்படி இணங்கினான்.

ஃபிரெஞ்சு நாட்டில் ஹார்ஃப்ளூர் முற்றுகையின் பின் சமய நிலையமொன்றைக் கொள்ளையிட்ட குற்றத்திற்காக பார்டல்ஃப் கொலைத் தீர்ப்பளிக்கப் பட்டான். பிஸ்டல் வாயாடியும் பெருவீரனும் ஆன வேல்ஸ் நாட்டுப் படைத் தலைவன் ஃபுளூவெல்லினை இகழ்ந்துரைத்து அவனால் நன்றாகப் புடைத்தொறுக்கப் பட்டான்.

---

# ஷேக்ஸ்பியர் கதைகள்

## எட்டாம் புத்தகம்

# I. ஐந்தாம் ஹென்ரி

## 1. போரோ போர்!

நான்காம் ஹென்ரி அரசன் காலத்தில் அவன் மூத்த மகனாகிய ஹென்ரி இளவரசன், சிறுபிள்ளைத் தனமாகக் கீழ்மக்களுடன் உண்டாட்டயர்ந்து கீழ் மகன்போலவே நடந்துவந்தான். ஆனால் தந்தையின் இறுதி நாட்களுக்குள் அவனுடைய குணங்களெல் லாம் மாறி அவன் ஒரு புதிய மனிதனாய் விட்டான். பேரரசனுக்கும் பெரு வீரனுக்கும் இருக்கவேண்டும் உயர் பண்புகள் யாவும் ஒரு கணப்போதில் அவனிடம் வந்தமைந்து விட்டன. இம் மாறுதல்களைக் கண்டு நான்காம் ஹென்ரியும் தன் கவலை நீங்கி மகிழ்ச்சி யடைந்தான்.

நான்காம் ஹென்றி அரசன் தன் வாழ்நாள் முற்றிலும் பெருமக்களால் மிகவும் அல்லலுற்றவன். தன் மகனும் அதே தொந்தரவுக்காளாகக் கூடாதே என்று அவன் கவலை கொண்டான். ஆகவே இறக்

கும் தறுவாயில் அவன் ஹென்ரி இளவரசனை அழைத்துப் "பிறநாட்டுப் போர்களின் வாயிலாகப் பெருமக்கள் தோள் வலிக்கும் போர்த்திறத்திற்கும் ஒரு போக்கிடம் செய்வதே தக்க அரசியல் சூழ்ச்சியாகும்" என்று அறிவுரை கூறினன். ஹென்ரியும் அதனைப் பசுமரத் தாணிபோல் மனத்துள் பதியவைத்துக் கொண்டான்.

தந்தை இறந்தபின் ஹென்ரி அரசிருக்கை ஏறி **ஐந்தாம் ஹென்ரி**[1] அரசனுனன். தந்தை அறிவுரையாலும், தன் இயற்கைப் போரார்வத்தாலும் தூண்டப் பெற்று, அவன் தன் முன்னோர்களைப் போலவே வெற்றியுடன் போர் புரிந்து, பூமாதினையும் புகழ் மாதினையும் ஒருங்கே மணம்புரிய எண்ணினன். இவ்வகையில் ஆங்கிலநாட்டுப் பொது மக்கள், பெருமக்கள், தலைமக்கள் ஆகிய முத்திறத்தினர் இணக்கத்தையும் பெற அவன் முயன்றான்.

பெருமக்களின் ஓயாத சச்சரவால் அலைக்கழிக்கப்பட்ட பொது மக்கள் எப்படியாவது அமைதி கிட்டாதா என ஏங்கியிருந்தனர். ஃபிரஞ்சுப் போரினால் தம்மீது அழுத்தும் சுமை, தம் பழம் பகைவராகிய ஃபிரெஞ்சு மக்களின்மீது செல்வதுடன், தம்மில் பலருக்குக் கொள்ளையிடும் வாய்ப்பும் தம் நாட்டிற்குப் புகழும் கிட்டும் என உணர்ந்து, அவர்கள் அதனைப் பேரார்வத்துடன் வரவேற்றனர். பெருமக்களும் உள்நாட்டைவிட வெளிநாட்டிலேயே தங்கு தடையின்றிப் போராடவும் கொள்ளையிடவும்

1. Henry the fifth.

இடமுண்டு என்று எண்ணங்கொண்டு அதில் ஊக்கங் காட்டினர்.

இவ்விருவகையினரையும்போலத் தலைமக்களும் இதற்கு இணக்கம் தருவரோ என முதலில் அரசன் ஐயுற்றுத் தயங்கினான். அவன் அவர்கள் உயர்நெறியாளர் என எண்ணியிருந்தபடியால் போர் வாழ்வையும் கொள்ளையையும் அவர்கள் கண்டிக்கக்கூடும் எனக் கருதினான். மேலும் அவர்கள் இயேசு பெருமானின் அடியார்கள் ஆதலால், குறுகிய நாட்டுப்பற்றுக்கு இடந் தராமல் பரந்த மனப்பான்மை கொண்டு தன் கோரிக்கையை உள்ளூர ஆராய்ந்து பார்த்து, அது நேர்மையற்றது என ஒறுப்பர் என்றும் அவன் அஞ்சினான்.

ஆனால், நடைமுறையில் அவர்கள் செயல் இதற்கு நேர்மாறாயிருந்தது. அவனை ஒறுக்கவோ தடுக்கவோ செய்வதற்கு மாறாக, அவர்கள் மற்ற இருதிறத்து மக்களையும்விட அதில் உணர்ச்சியும் ஆர்வமும் காட்டி அரசனை வற்புறுத்தியதோடன்றி, அவ்வகையில் ஏற்படும் செலவில், ஒரு பெரும் பகுதியைத் தாமே கொடுத்து உதவுவதாகவும் கூறினர்.

இதற்குக் காரணம் அவர்கள் மக்களிடையில் அந்நாள் பரவி வந்த சீர்திருத்த இயக்கத்தின் குறிகளைக் கண்டு வெருட்சியடைந்ததேயாகும். ஐரோப்பாவில் இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு ஏற்படவிருந்த சீர்திருத்தப் புயலின் முன் அறிகுறிகள் தோன்றிய காலம் அது. மடத்தலைவர், துறவிகள், அந்தணர் ஆகிய நிலைகளில் பொதுமக்களும் பெரு

மக்களும் அளித்த பொருட்குவையின் வாயிலாக அந் நாளைய தலைமக்கள் அரசவாழ்வு வாழ்ந்து வந்தனர். பிறர் நெற்றி வியர்வை நிலத்தில்விழப் பாடுபட்ட பொருளை முயற்சியின்றிப் பட்டுமெத்தையிலும் பல வகை இன்பக் கலைகளிலும் செலவழித்து அவர்கள் பழகிப் போய்விட்டனர். புதிய சீர்திருத்தக்காரர் மக்கள் கண்களைத் திறந்து, அப்பொருளை யெல்லாம் பொது மக்கள் வாழ்வை உயர்த்தும் நெறிகளில் செல விடும்படி தூண்டலாயினர். அத்தகைய தலைவர் களில் சிலர் பெருமக்கள் பேரவையிலும் இடம் பெற்று, அரசன் செவிசாய்க்கும் அளவு கவர்ச்சி யடைந்து விட்டனர் என்று கண்டனர் தலைமக்கள். போரார்வம், நாட்டுப்பற்று முதலிய இயற்கை வெறி களாலன்றி இவ்வறிவியக்கத்தை வேறு வழியில் திருப்ப முடியாது என்று அவர்கள் அறிந்தனர். அதனாலேதான் அரசனது போர்த் திட்டத்திற்கு அவர்கள் இத்தனை ஆதரவுகொடுக்க நேர்ந்தது.

ஹென்றியின் முன்னோனாகிய மூன்றும் எட்வர் டுப் பேரரசன் ஃபிரான்சுடன் போர் புரிவதற்காகத், தன் தாய் வழியில் அந்நாட்டின் அரசுரிமையைக் கோரினான். ஆனால் சலீக் சட்டம் என்ற ஓர் அரசியல் சட்டத்தின்படி ஃபிரெஞ்சு அரசுரிமை பெண்களுக் குச் செல்லாது. ஆகவே எட்வர்டின் அவ்வுரிமை வல்லடி வழக்காயிருந்ததேயன்றி வேறன்று. எட்வர் டின் உரிமையே இத்தகையது. ஆனால் ஹென்றியின் உரிமையைப்பற்றிக் கூறவேண்டுவதில்லை. ஏனெனில் **எட்வர்டின் நேர்வழியினனாகிய மார்ச்சுகோப்**[1] பெருமானை

1. Edward Earl of March.

விலக்கியே ஹென்ரியின் குடியினர் இங்கிலாந்தின் அரசியலைக் கைப்பற்றி யிருந்தனர். ஆனால் இவ்வையங்களுக்கெல்லாம் தெய்வத்தின் ஆட்பெயர்களாகவும் மக்கள் மனச்சான்றின் வெளியுருக்களாகவும் கருதப்பட்ட தலைமக்கள், மறைமொழி மேற்கோள்களுடனும் சட்ட விவரங்களுடனும் தக்க விடையிறுத்தனர். மக்கள் மனத்தில் எழுந்த மயக்கங்களும் தயக்கங்களும் இங்ஙனம் தலைமக்கள் உறுதியினாலும் துணிபினாலும் அகன்றன. கரும்பு தின்னக் கைக்கூலியும் பெற்றவன்போல, அரசன் மன எழுச்சியுடன் போரெழுச்சியில் முனைந்தான். ஃபிரான்சின் அரசுரிமை கோரி ஃபிரெஞ்சு அரசனாகிய சார்லஸுக்கு அறிக்கையும் அனுப்பப்பட்டது.

இங்கிலாந்தில் கொழுந்துவிட்டெரியும் உணர்ச்சிகளையோ, இங்கிலாந்தின் புதிய அரசனிடத்தில் ஏற்பட்ட மாறுபாட்டின் தன்மையையோ ஃபிரெஞ்சு மக்கள் உணரவில்லை. இங்கிலாந்து மக்களிடை இதுவரை ஏற்பட்டிருந்த சச்சரவுகளையும், ஹென்ரியின் இளமைக்கால விளையாட்டுக்களையுமே அவர்கள் எண்ணிக்கொண்டிருந்தனர். குறிப்பாக டாஃபின்[1] என்றழைக்கப்பட்ட ஃபிரான்சு நாட்டு இளவரசன் ஹென்ரியை மிகவும் ஏளனமாக எண்ணியதுடன், தன் இளமை முறுக்கினால் அதனை வெளிப்படையாகவும் காட்டினான். இங்கிலாந்துக்குச் செல்லும் தூதர் வாயிலாக அவன் பூம்பந்துகள் அடங்கிய பேழை ஒன்றை அனுப்பி, "ஃபிரான்சின் அரசுரிமைக்கும் உனக்கும் ஏணி வைத்தாலும் எட்டாதே; அர

1. Dauphin.

சுரிமைக்குரிய செங்கோலிலும் நின் மென்கைக்கு உகந்த அணியினை இதோ அனுப்பி யுள்ளேன்; பெற்று மனநிறைவடைக!" என்று சொல்லும்படி ஏவினன். இச்சொற்கள் எரியும் தீக்கு எண்ணெயாக உதவின. ஃபிரெஞ்சுத் தூதரிடம் ஹென்ரி "உம் விளையாட்டுக் கண்டு மகிழ்ந்தோம். பூம்பந்திற்கு மாருக ஃபிரெஞ்சு மக்கள் காதுகளில் பூம், பூம் என இரைந்துகொண்டு வந்து அவர்களது இறுமாப்புக் கோட்டையைத் தகர்க்கும் தழற்பந்துகளை ஏவி, உம் முடியினையும் செங்கோலினையும் கேளிக்கைப் பரிசாகப் பெற இருக்கிறோம் எனக் கூறுக!" என்று சொல்லி அனுப்பினன்.

## 2. சூழ்ச்சியும் துணிவும்

வெளிநாட்டுக்குப் போகுமுன் உள்நாட்டிலேயே ஹென்ரிக்குத் தன் ஆண்மையையும் திறத்தையும் காட்ட ஒரு வாய்ப்பு ஏற்பட்டது. அதுவே அவனை அண்டி நின்று அவனை மறைவாக ஒழிக்க முயன்ற உட்பகையை அவன் வென்ற வகை ஆகும். ஹென்ரியை விளையாட்டுப் பிள்ளையாக எண்ணிய 'டாஃபின்' பிரெஞ்சு நாட்டுத் தங்கத்தை வாரி யிறைத்து இங்கிலாந்தில் சூழ்ச்சியாளரை வளர்த்தான். அவர்களுள் ஹென்ரியின் ஒன்று விட்ட உடன் பிறந்தானும் கேம்பிரிட்ஜ் கோமானுமான[1] **ரிச்சர்டும்** அவன் பள்ளித் தோழனும் துணைவனுமான **ஸ்க்ரூப் பெருமகனும்**[2], **தாமஸ் கிரேப் பெருந்தகை**[3]யும் முதற்கொண்டு சேர்ந்

1. Earl of Cambridge. 2. Lord Scroop. 3. Sir Thomas Grey.

திருந்தனர். தம் சூழ்ச்சியின் மறைவில் உறுதி கொண்டு, போர்க்கெழுமுன் கூடிய போர்முறைப் பேரவையில் அவர்கள் அச்சமின்றி அமர்ந்திருந்தனர். ஆனால் அவர்கள் திட்டமனைத்தும் ஒற்றர் மூலம் அறிந்து வைத்திருந்த ஹென்ரி,

> 'மிகச்செய்து தம்மெள்ளு வாரை, நகச்செய்து
> நட்பினுட் சாப்புல்லற் பாற்று'

என்று வள்ளுவனார் கூறிய அரசியல் அமைதி குன்றாது, அவர்கள் வாயாலேயே அவர்கள் குற்றத்திற்கான ஒறுப்பின் அளவும் ஏற்படுமாறு செய்தான். எப்படியெனில், அவர்கள் உள்ளிட்ட அனைவரையும் நோக்கிப், போர்த்திட்டங்களின் பல பகுதிகளையும் ஆராயும் முறையில், "நம் படைஞர் அனைவரும் நம்மிடம் முற்றிலும் நம்பிக்கையும் பற்றும் உடையவர்கள் தாமே? அவர்களுள் அரசுக்கெதிரான உட்பகைவர் யாருமிலர் அன்றோ?" என்று வினவினான்.

"அங்ஙனம் யாரும் இலர்," என்று ஒரே குரலாக அனைவரும் விடையிறுத்தனர்.

"படைத் தலைவரிடம்?"

"இல்லை; படைத் தலைவரிடமும் இல்லை"

"நன்று, நன்று, மிக நன்று; அப்படியாயின் உட்பகையற்ற இந் நற்றறுவாயில், அரசனுக்குப் பகைமை செய்யாது அவன் ஆட்சி ஒழுங்குக்கு மட்டும் தீங்குசெய்த சில தீயர் சிறையிலிருக்கின்றனர் அன்றோ! அவரை விடுவிப்பது நல்லதன்றோ?"

பலர் இதுகேட்டு வாளா இருந்தனர். சிலர் விடுவிக்கலாம் என்றுகூற இருந்தனர். கிளர்ச்சிக்காரர் வினைவயப்பட்டு, "அரசே, போர்க்கெழும்போது சிறுபகைக்குக்கூட இடம் இருத்தல்கூடாது. அவர்களை மற்றக் காலத்தில் ஒறுப்பதினும் கடுமையாக ஒறுத்து, நாம் முன்னணியில் போர்க் கெழும்போது பின்னணியை வலியுறுத்திக் கொள்ளுதல் வேண்டும்," என்றனர்.

அரசன் மறுமாற்றம் பேசாமல், அவர்களிடம் அவர்கள் குற்றச் சாட்டுகளின் விவரத்தோடு அதற்கான தூக்குத் தீர்ப்புஆணையும் அடங்கிய உறையைத் தந்தான். அது நட்பினுக்கோ, வேறு உயர் பணிவகைக்கோ அறிகுறியான பரிசா யிருக்கவேண்டும் என அதனை அவர்கள் மகிழ்ச்சியுடன் வாங்கினர். வாங்கிப் பிரித்து வாசித்ததுமே அவர்கள் முகங்கள் சுண்டின. ஆனால் எதுவும் கூற அவர்கள் வாயெழவில்லை. தம் சொல்லே தம்மைப் பிணித்துவிட்டன என்று அவர்கள் உணர்ந்தனர். செயல்வீர னாகிவிட்ட ஹென்ரியும் உணர்ச்சிக்கு இடம் தந்து காலந் தாழ்த்தாமல் அவர்களைத் தூக்கிடுமாறு பணித்துவிட்டுப், போர் எழுச்சிக்கு ஒருக்கமானன்.

ஹென்ரியின் இளமைக்காலத் தோழர்களுள் ஃபிரெஞ்சுப் படையெழுச்சிக்கு முன்னதாகவே நகையரசன் ஃபால் ஸ்டாஃப் இறந்துபோனன். அவன் வயிற்றுவலி, தலைநோய் ஆகிய பலவற்றைத் தன் நலிவுக்குக் காரணமாகக் கூறினபோதிலும், உண்மையில் அரசன் புறக்கணிப்பினல் அவன் நெஞ்சு முறிவுற்ற தென்பதை அவன் தோழர்கள் அறிந்தனர்.

அவனுக்குப்பின் மீந்த **பார்டல்ஃப், பிஸ்டல், நிம்**[1] முதலியவர்களும், அவர்களைப் போலவே வேறு தொழிலற்றுத் திரிந்த பிறரும், இப்போரினிடையே யாவது தமது பழஞ் சில்லறைக் கொள்ளைமுறை களைத் துணிகரமாகத் தொடர்ந்து நடத்தலாம் என் றெண்ணி, அரசன் படையில் ஏராளமாக வந்து சேர்ந்தனர். செல்வர்களும் நாட்டுப்பற்று மிக்க குடிமக்களும் மற்றொருபுறம் வந்து குவிந்தனர். பழம் போர்வீரரும், ஸ்காத்லாந்து வேல்ஸ் முதலிய அயல்நாட்டு வீரரும்கூட ஹென்ரியின் புகழிலும் கொள்ளையிலும் பங்கு கிட்டுமென எண்ணி வந்து சேர்ந்திருந்தனர். இக் கடைசி வகுப்பார் பெரும் பாலும் நல்ல மறவரேயாயினும், தத்தம் நாட்டு மொழிகளையே பேசியதுடன், நாகரிக நயமிக்க ஆங்கில மக்களுடன் முரணி ஆரவார மிட்டும் வந் தனர். இத்தகையோருள் சிறந்தவர் **ஃபுளுவெல்லின்** என்ற வேல்ஸ் நாட்டுத் தலைவரும், **மாக் மோரிஸ்** என்ற அயர்லாந்துப் படைத்தலைவரும் ஆவர். இவர் களுள் ஃபுளுவெல்லின் பல போர்களில் அடிபட் டவன்; வாயாடி. அதோடு "கடுகு வறுக்கும்" அளவு இலத்தீன் மொழிப் பயிற்சியும், படைத் துறையியல் நூல்களிலும், ஸீஸர், பாம்பி முதலிய ரோமவீரர் போர்த்திட்ட நூல்களிலும், சிறிது பழக்கமுடையவ னுதலால், அவற்றிலிருந்து மேற்கோள்களும் பல் லுடைபடும் தொடர்களும் எடுத்துக்காட்டிப் பிறரை அடக்கிவிட முயன்றுன். இத்தகைய பலவேறு வகைப்பட்ட படைஞரையும் ஹென்ரி தன் ஒப்பற்ற தலைமைத்திறத்திஞல் ஒன்றுபடுத்திஞன்.

1. Bardolpe, Bistol, Nym.

ஹென்ரி இயற்கையில் ஈரநெஞ்சுடையவனே. இளமையில் அவன் இரக்கம், நகைச்சுவை என்னும் போர்வையுட்பட்டிருந்தது. ஆயினும் ஃபால்ஸ்டாஃப் குழுவினர்க்கு அவன் இளகிய உள்ளம் தெரிந்தே இருந்தது. அரசனானபின் தனது இரக்க மனப்பான்மையும் இளமைக்காலக் கூட்டுறவுகளும் உலகியல் வெற்றிக்குத் தடையாயிருக்கும் என்று அவன் கண்டான். ஆகவே அவன் அவற்றை வெளிக்குக் காட்டாமல் உள்ளடக்கியும், கூடியமட்டும் உள்ளுணர்ச்சிகளைக் கொன்றும், ஃபால்ஸ்டாஃபைப் புறக்கணித்துத் தள்ளினான். அதே கடுமையினைத்தான் போர்க்கெழுமுன் தன்னைச் சூழ்ந்த உட்பகைவரிடமும், போர்த் தலைவன் என்ற முறையில் தன் பணியாளரிடமும் பெருமக்களிடமும் அவன் காட்டினான். இதனாலும், பொது மக்களிடமும் நாட்டினிடமும் கொண்ட பற்றினாலும், அவன் ஆங்கில நாட்டு வரலாற்றில் 'ஒப்பற்ற போர்த் தலைவன்', 'ஒப்பற்ற நல் அரசன்' என்ற இரண்டு பேர்களையும் ஒருங்கே அடையப் பெற்றான்.

சூழ்ச்சியின் முடிவு துணிவு எய்துதல் என்பதையும், துணிவு எய்தியபின் தாழ்ச்சி செய்தல் ஆகாது என்பதையும் அறிந்த ஹென்ரி, ஃபிரான்சுக்கு அனுப்பிய தன் தூதனை விரைவில் பின்பற்றினான். பின்பற்றித் தன் படைகளுடன் ஸதாம்ப்டனில் கப்பலேறி, ஃபிரெஞ்சுக் கரையில் "கோ" என்னுமிடத்தில் வந்திறங்கினான். அதன் பின் ஃபிரெஞ்சு அரசனிடம், அவன் அரசுரிமையை உடனே விட்டுக்கொடுக்கும்படி இறுதி யறிக்கை விடுத்

தான். அதன் இறுமாந்த எடுப்பைக் கண்டு, சற்று உள்ளூர அச்சமுற்ற ஃபிரெஞ்சு அரசன், தன் கோட்டை கொத்தளங்களைச் சீர்ப்படுத்தவேனும் கொஞ்சம் உதவட்டுமென்ற எண்ணத்துடன் தன் முடிவு தெரிவிக்க ஒருநாள் தவணை கேட்டான். ஆனால் ஹென்ரியின் தூதனாகிய **எக்ஸ்டர்** "அரசே, நான் பொறுத்தாலும் என் தலைவர் பொறார். குறித்த நேரம் நான் மீண்டு செல்லாவிடில் அவர் முன்னணிப் படையின் அம்புகள் தாமே வந்து இங்கே என்னைத் தேடும்," என்றனன். வேறு வகையின்றி டாஃபின் போர் அறிக்கை தந்து தம் படைகளை விரைவில் திரட்ட முயன்றான்.

## 3. முதன் முதல் வெற்றி

ஹென்ரி அரசன் தன் படைகளைக் **'கோ'**விலிருந்து **ஹார்ஃப்ளூர்**[1] என்ற நகரத்தை நோக்கி நடத்திச் சென்று அதை முற்றுகையிட்டான். ஐந்து வாரம் தொடர்ச்சியான போரால் நகரம் நலிவுற்றது. போரின் அழிவை வென்றது பிணி; பிணியையும் வென்றது, உண்ண உணவும் பருக நீரும் இன்றி மக்கள் பட்டதுயர். அவர்கள் நிலையறிந்து ஹென்ரி உள்ளூர இரக்கங்கொண்டான். ஆனால் அதைச் சற்றும் காட்டிக்கொள்ளாமல் கடுமையும் வன்கண்மையும் புறத்தே காட்டி நகர்வாயிலை உடனே திறந்துவிடுமாறும், விடாவிடில் முற்றிலும் அழிவுகாண எழு

1. Harfluer.

வதாகவும் இறுதித்தாள் அனுப்பினான். "இதுவரை நீங்கள் கண்ட கடுமையெல்லாம் கடுகென நினைக்கும் படி இனிச் செய்யும் பாரிய துயர்ப்பொறிகள் உங்கள் மீது பாயக்காத்திருக்கின்றன" என்ற அவனுடைய துணிகரச் சொற்களைக்கேட்டு அவர்கள் மனமுடைந்து வாயிலைத் திறந்துவிட்டனர். ஹென்ரியின் வீரரும் நகர மக்களைவிட நல்ல நிலையில் இல்லை. நகர மக்களைப் பிடித்த பிணியும் பஞ்சமும் அவர்களையும் தாக்கவே செய்தன. ஆதலின் ஒருவகையில் அரசன் வன்கண்மையினால் இருதிறத்தினரும், தம் பொதுப்பகை யாகிய பிணியையும் பஞ்சத்தையும் ஓரளவு வென்றனர் என்றே சொல்லவேண்டும்.

ஹார்ஃப்ளூர் வெற்றிக்குப்பின் நடந்த ஒரு சிறு நிகழ்ச்சியினால் "கருவி யின்றிக் குருதி யின்றி" ஹென்ரி ஃபிரெஞ்சு மக்கள் உள்ளத்தின் மீது ஒரு வெற்றியை நிறுவினான். கொள்ளையிடும் நோக்கம் ஒன்றுடனேயே ஃபிரான்சுப் போரில் கலந்த பல ஆங்கிலேயரை, அந்நாட்டில் தொடக்கத்திலேயே ஏற்பட்ட பிணிகளும் பஞ்ச நிலைகளும் பின்னும் விலங்கியற்படுத்திவிட்டன. எளிதில கிட்டிய வெற்றியால் வந்த வெறியும், வழிவழி வந்த ஃபிரெஞ்சு நாட்டுப் பகைமையுணர்ச்சியும், இன்னொரு புறம் அவர்களை உந்தின. ஆகவே அவர்கள் வரம்பிழந்து ஃபிரெஞ்சு மக்களைக் கொள்ளையிடவும் இழிவு படுத்தவும் தொடங்கினர். ஹென்ரி இவற்றை வன்மையாகக் கண்டித்தும் அவை தடைபடாமற் போகவே, அவன் தன் படைஞர்மீதே கடு நடவடிக்கை எடுக்க நேர்ந்தது. அதிலும் பார்டால்ஃப் இரு நாட்டினரிடை

யிலும் பொது மதிப்புடைய சமய நிலையமொன்றைக் கொள்ளையிடவே, அதனுல் பின்னும் வெகுண்டு அரசன் பார்டால்ஃபைக் கொலைத் தீர்ப்புக் காளாக்கி விட்டான். இச்செய்தி கேட்ட ஆங்கில வீரரது கொள்ளையார்வமும் ஆரவாரமும் பெட்டிப் பாம்பென அடங்கின. ஃபிரெஞ்சு மக்கள் உள்ளத்தில் தம்மீது போராடவந்த அரசன் தம் எதிரியாக வரவில்லை; அரசுரிமை கோரிய அரசனுகவே வந்தனன்; என்ற எண்ணத்தையும் அது உண்டுபண்ணிற்று.

ஹென்ரியுடன் சேர்ந்து ஃபிரெஞ்சு நாட்டில் கொள்ளையிடலாம் என்று வந்த இவர்களுட் பலர் பார்டால்ஃபின் முடிவால் ஊக்கமிழந்தனர். பிணியாலும் பசியாலும் நலிவுற்றவரும் மடிந்தவரும் வேறு. முறிந்தும் சிதைந்தும்போன கருவிகளைச் சீர்திருத்தக் கூட அந்த அயல் நாட்டில் ஆங்கிலேயருக்கு உதவி கிட்டவில்லை. ஃபிரெஞ்சுப் போர் என்றால் கிள்ளுக் கீரை என்றெண்ணி வந்த அவர்களுள் பலர் வாடி வதங்கி அழுக்கடைந்த ஆடையுடனும் மாசூர்ந்து சோர்ந்து பொலிவற்ற தோற்றத்துடனும் நடந்தனர். அவர்களைப் பார்த்து ஃபிரெஞ்சுமக்களுட் பலர் நகையாடவும் இரங்கவும் தொடங்கினர். எனவே ஹார்ஃப்ளூர் முற்றுகையால் பொதுவாக பிரெஞ்சு மக்களிடையே பேரதிர்ச்சி எதுவும் ஏற்படவில்லை. அவர்கள் ஆங்கிலேயரது வெற்றி ஏதோ ஃபிரெஞ்சுப் படைத் தலைவர் அசட்டையா யிருக்கும் நேரத்தில் கிட்டிய விளையாட்டு வெற்றியே என்றும், டாஃபின் திரட்டிய பெரும்படை அவர்கள் பக்கமாகத் திரும்பி

விட்டால் வெற்றி யெல்லாம் காற்றில் பறக்கும் என்றும் எண்ணினர்.

டாஃபினும் ஹென்ரியின் வெற்றியைக் கண்டு அஞ்சவில்லை. ஆங்கிலப் படையை வெல்வதை அவன் ஒரு பொருட்டாக எண்ணினவன் அல்லன். உண்மையில் அவர்கள் சில வெற்றிகளை யேனும் அடையுமுன் அவர்களைப் போய் எதிர்ப்பது கூடத் தனக்குப் பெருமை தராது என அவன் எண்ணியிருந்தான். எனவே அவன் ஹென்ரிக்கு முன்னிலும் செருக்கான எடுப்புடன் ஒரு தூதனை அனுப்பி "ஆங்கில மக்கள் மதிப்புக்கு ஒன்றிரண்டு வெற்றிகள் இருக்கட்டுமே என இதுகாறும் உம்மை எதிர்க்காது விட்டுவைத்தோம். எம்பேரரசின் படைகளை நேராகக் காணுமுன் தன் மதிப்புடன் உடம்படிக்கை செய்து கொள்ளுக!" என்று கூறுவித்தான்.

போருக்கஞ்சா ஹென்ரியின் உள்ளம் தம் போர் வீரர் நலிவு கண்டு கனிவுற்றது. அக் கனிவின் நயம் பிரெஞ்சுத் தூதனுக்கு அளித்த மறுமொழி யிலும் காணப்பட்டது. "எங்கள் நிலையை நீங்கள் நன்குய் அறிந்துள்ளீர்கள் என்பதை ஒத்துக்கொள் கிறோம். நீங்கள் எங்களை உடனடியாக எதிர்க்காமல் முன்னேற விடுவதுகூட எங்களுக்கு ஆறுதல்தான். அந்த மட்டும் எனது நன்றி. ஆனால் உடல் நலியினும் ஆங்கிலேயர் உளம் நலியார் என்பதை அறிவீராக! நீங்கள் எதிர்ப்பதாயின் இந்த நெருக்கடியான நிலைமையிலும் துணிவுடன் போராடாமல் விடோம். எனவே எம்மை எதிர்க்காது செல்ல விடுவதாயின் விடுக; அன்றி எதிர்ப்பதாயின் பிரெஞ்சுக் குருதிக்

களரி ஈந்து முன்னேற்றத்தின் ஒவ்வோரடியையும் விலைக்கு வாங்குவோம்'' என்று ஆங்கிலத் தூதன் டாஃபினிடம் கூறினன்.

தோள் நடுங்குமிடத்து வாலும் பிற உறுப்பும் நடுங்குவதில் வியப்பு என்ன? அரசன் உடன்பிறந்தானும் அரசனுக்கடுத்தபடி படைத் தலைவனுமான **கிளஸ்டர் கோமகன்**[1] தூதன் சென்றவுடன் "அரசே, நம் நிலையை இவ்வளவு தெளிவாக எதிரிக்குக் காட்டி விடுகிறோமே. அவர்கள் உடனே வந்துவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்டான்.

அரசன் "வந்தால் என்ன, தம்பி! நம் வெற்றி தோல்வி இறைவன் கையிலிருக்கிறதேயன்றி அவர்கள் கையில் அல்லவே," என்றான்.

"இல்லாத இடத்தில்தான் இறைவன் என்ற சொல்லுக்கு இடமுண்டு. எல்லாம் நிறைந்த ஃபிரெஞ்சுப் படைஞர் தம் வெற்றி தம் கையில் என்ற இறுமாப்புடன் உண்டாடினர். அவர்கள் ஏன் வெற்றியில் ஐயப்பட வேண்டும்? வெற்றியைத் தரும் போர்க் கருவிகளுக்கும் படைகளுக்கும் அவர்களிடம் குறை வில்லை. படை வீரரும் ஆங்கிலேயரைப்போல் நின்ற நிலையில் திரண்டு வந்தவர் அல்லர். பண்டு பண்டு தொட்டே நல்ல பயிற்சி பெற்றவர். எண்ணிக்கையில் ஒன்றுக்கு ஐந்தானவர். எனவே, இறைவனைப் புகழ்வதற்கு மாறாக அவர்கள் தம் வீரத்தையும் வல்லமையையும் பற்றியே பெருமையாகப் பேசிக்கொண்டனர்."

ஆற்றைக் கடந்து அவர்கள் அருகிலே வந்து தங்கியிருந்த ஆங்கிலேய வீரர் செவியில் இப்

1. Duke of Cloucester.

பேச்சுக்களும் ஆரவாரமும் எட்டவே, அவர்கள் புற அமைதியையேயன்றி உள்ள அமைதியையும் கலக்கி விட்டன.

## 4. கார்முகிலின் சூலில் தோற்றும் வெண்மின்

வெற்றியின் அளவு அதனைப் பெறுவோர் அடையும் இடையூற்றின் அளவுக்கு ஒப்பு ஆயின் ஹென்ரி அன்று **அஜின் கோர்ட்டுச் சண்டையில்** அடைந்த வெற்றியினும் பெரிய வெற்றி வரலாற்றில் இல்லை என்னலாம். ஆனால் அவ் விடையூறனைத்தையும் கடக்க உதவிய பொருள் ஒன்று உண்டானால் அது அரசன் ஐந்தாம் ஹென்ரியின் வீரத்தோடுகூடிய அருளே யாகும். தன் வீரர் துன்பத்துள் தோய்ந்து கிடந்த அன்று, அவன் இன்பமோ ஓய்வோ நாடவில்லை. அது மட்டுமன்று. பொதுப்படையான வீரன் அறியாத அளவு இடையூற்றின் அளவை அவன் அறிந்திருந்ததற் கிணங்க, அவ்வீரர் துயில் பெறினும் அவன் துயில் பெறாது, பிணியுற்ற சேய்களைக்காக்கும் தாய்ப் புலிபோன்று அவர்களைக் காவல் செய்து வந்தான்.

விடிய ஒரு யாமத்தில் அரசன் தன் உடன் பிறந்தான் கிளஸ்டருடன் இறுதியாக ஒருமுறை படை வீட்டைச்சுற்றிப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அதற்குள் எழுந்து அரசனை வணங்கியவர்களுக் கெல்லாம் அவன் ஊக்க மொழிகள் தந்தான். **பெட்ஃபோர்டிடம்**[1] "கார்முகிலின் சூலிலும் வெண்மின் தோன்றுவது உண்மையே; பகைவர் அண்மையில்

---

1. Bedford.

இருப்பதனுலேயே யன்றோ நாம் எல்லாம் இவ்வளவு புலர் காலை எழுந்திருக்க நேர்ந்தது?" என்றான். ஆண்டிலும் படைப் பயிற்சியிலும் முதிர்ந்த **தாமஸ் எர்ப்பிங்ஹாம் பெருந்தகை**[1]யைக் கண்டதும் "பெரியோய், தமது பஞ்சுப் பொதிபோன்ற வெண் தலைக்கு ஃபிரெஞ்சு நாட்டுப் பரல் மேடோ ஏற்புடையது? மெல்லிய பஞ்சணையன்றோ ஏற்புடையது" என்றான். எர்ப்பிங்ஹாம் "அரசருடன் ஒத்த தலையணை எமக்கு இன்றன்றோ கிட்டியது; மெல்லணை இதற்கு ஒப்பாகுமோ?" என விடையிறுத்தனன். இதற்குள் கிழக்கு வெளுக்கத் தொடங்கிவிடவே இனி மாற்றுருவில் மீந்த பகுதியைப் பார்வையிடுவது நன்று என எண்ணி அரசன் எர்ப்பிங்ஹாமின் மேலாடையை வாங்கி அதனுல் தன்னைப் போர்த்திக்கொண்டு சென்றான்.

பழைய ஃபால்ஸ்டாஃபின் தோழர்களுள் மீந்திருந்த பிஸ்டல் தன் குற்றங்கண்டு அரசனுக்குரைத்த **ஃபுளுவெல்லின்**[2]மீது புழுக்கத்துடன் இருந்தான். அரசனைக் கண்டவுடன் அவன் மாற்றுடையில் அவனை இன்னுனென்றுணராமல் "உன் பெயரென்ன!" என்று அதட்டினுன். அரசன் "ஹென்ரி அண்ணல்" என்றான். பிஸ்டல் "அண்ணல், அஃதென்ன, கார்ன்வால் நாட்டுப் பெயர் போன்றிருக்கிறதே" என்றான்.

அரசன்: இல்லை. நான் வேல்ஸ் நாட்டிற் பிறந்தவன். (இஃது ஓரளவு உண்மையே; அரசன் வேல்ஸ் நாட்டில் மான்மத் என்ற இடத்தில் பிறந்தனன் ஆகலின்.)

---

1. Sir Thomas Erphingham.　　2. Fauellen.

பிஸ்டல் : "அப்படியாயின் ஃபுளூவெல்லினை அறிவாயோ?"

அரசன் : "அறிவேன்"

பிஸ்டல் : "சரி, அவனை முன்னெச்சரிக்கையாய் இருக்கச் சொல்லு. வருகிற ஆயன் திருநாளுக்குள் நான் அவன் தலையை உடைக்கக் காத்திருக்கிறேன்.

"அரசன் : "நீ உடைப்ப திருக்கட்டும். உன் கைத் தடியால் அவன் உன் தலையை உடைக்காமல் பார்த்துக்கொள்," என்று கூறிவிட்டுப் பின்னும் அப்பால் சென்முன்.

கும்பலாய் நின்ற படைவீரர் சிலர் அரசனிடம் "நீ எந்தத் தொகுதியைச் சேர்ந்தவன்?" என்று கேட்டனர்.

அரசன் : "தாமஸ் எர்ப்பிங்ஹாம் பெருந்தகையின் தொகுதி.

வீரருள் ஒருவன் : "ஓகோ அவர் நல்ல பழம் பெருச்சாளி. போர் நிலைமையைப்பற்றி அவர் என்ன கருதுகிமுராம்."

அரசன் : "கடல் நடுவில் மணல் திட்டில் ஓரலையால் கொண்டு சேர்க்கப்பட்டு அடுத்த அலையை எண்ணிக் கவலையுடன் இருக்கிற உடைந்த மரக் கலத்து மக்கள் நிலைமையே நம் போர் நிலைமை என்று அவர் எண்ணுகிமுர்."

வீரர் : "அவர் அறிந்த இவ்வுண்மையை அரசனுக்கு அறிவிக்க அவர் துணிவாரா?"

அரசன்: "துணியவும் மாட்டார்; துணிதலும் கூடாது. ஏனெனில், அரசன் எவ்வளவு உயர் கருத்துடையவனாயினும், மனிதனே யாதலால் ஒருவேளை கலங்கக்கூடும். அங்ஙனம் அரசன் கலங்கினால் படையே கலங்குமாதலால், அது நாட்டுக்கிழைத்த தீங்காய் விடும்."

இன்னொரு வீரன்: "யார் சொல்லி என்ன; சொல்லாமல் என்ன? அரசன் மனத்திற்குள் கலக்க மில்லாமலா இருக்கும்? இன்று இப்படையின் தலைவனாய் இங்கிருப்பதைவிட அடிவயிற்றில் கல்லைக் கட்டிக் கொண்டு ஆழ் கடலினடியில் கிடக்கப்படாதா என்று அவன் எண்ணுவான். இதை நான் உறுதியாகக் கூறுவேன்."

அரசன்: "நான் அறிந்தவரை அரசன் இன்று வேறு எங்கும் இருக்க விரும்பான்; இப்படையின் தலைவனாகவே இருக்க விரும்புவான் என்றெண்ணுகிறேன்."

வேறொரு படைஞன்: "ஒரு வகையில் நீ கூறுவது சரியே. அரசன் எங்கிருந்தால் என்ன? படையில் சண்டைசெய்து சாவதும், சாவாது பிழைத்தால் சிறைப்பட்டு நலிவதும் நாம் தாமே! அரசன் நேரடியாகச் சண்டை செய்வதுமில்லை. தோற்றுச் சிறைப்படினும் அவன் உயிர்க்கு உறுதிப் பணம் கொடுத்து அவனை நாட்டுமக்கள் மீட்பாரன்றோ?"

அரசன் மனத்தில் இது சுருக்கெனத் தைத்தது. அதனைக் காட்டாது அவன் அரசனிடம் பற்றுடைய வீரன்போல் "நம் அரசன் அப்படிப்பட்டவன் அல்

லன் என்று உறுதி கூறுகிறேன். பகைஞருடன் பகைஞனாய்ப் போரிட்டு மடிவதன்றி வேறு அறியான். உறுதிப்பணம் கொடுத்து மீள ஒருப்படான்'' என்றான். பின் சற்றுத் தயக்கத்துடன் "ஒரு வேளை இஃதெல்லாந் தெரிந்து நீங்கள் வேண்டுமென்று இவ்வளவும் கூறியிருக்கலாம். அரசன் போர் நற்போர் ஆதலின் அவனுடன் மாள்வதே சால்புடையது என்பதே என் எண்ணம்" என்றான்.

அதற்கும் ஒருவன் "அது நற்போர் என்றுதான் எப்படிச் சொல்லமுடியும்? போரில் இறப்பவர், கால் கை முதலிய உறுப்பிழந்து நலிபவர் என்போர் தீவினை யனைத்தும் அவர்கள் யாருக்காகப் போர் செய்கின்றனரோ அந்த அரசனுக்கன்றோ உரியன" என்றான்.

அரசன்: "அவரவர் தீவினை அவரவருக்கே. அரசன் கடமை போர் புரிவதன்றி அவர்கள் நல்வினை தீவினைகளை ஏற்றுக் கணக்கிடுவதன்று," என்று கூறிவிட் டகன்றான்.

வெளிக்கு வீரருக்கு ஓரளவு மறுமொழி தந்தாலும் இச்சொற்கள் அரசன் மனத்தில் எண்ணற்ற கருத் தலைகளை எழுப்பின. "அந்தோ, அரசர் வாழ்விருந்த வாறு? அரசன் உண்பதும் உடுப்பதும் எல்லாரையும் போல ஒரு நாழியும் ஒரு நாலு முழமும் தானே? எல்லாரையும்போல ஒரு வயிறும் ஓரிருகையும் காலும் உடைய இந்த ஒரு மனிதன் எல்லார் தீவினைகளுக்கும் பொறுப்பு ஏற்க வேண்டுமாமே! அந்தோ! அரசர் முடி ஏற்றால் மனித வாழ்வின் இன்பமும் உரிமையும்

அற்றுப்போக வேண்டுமா? வலம் இடம் அறியாத கயவர்கூடக் குறைகூறும் இவ் அரசரின் நிலையை ஒருவன் ஏற்க விரும்பும்படி அதில் என்ன அருமை இருக்கிறது? ஆரவாரமும் பகட்டும் அவனிழக்கும் அமைதிக்கும் உறக்கத்திற்கும் ஈடாகுமோ?" என்றிவ்வாறு துயர்தரும் எண்ணங்களுள் ஆழ்ந்து நின்று அரசன் சில நொடிப்போது தன்னிலையழிந்தான். ஆனால் எர்ப்பிங்ஹாம் வந்து "போர்த் தலைவர் போரவைகூட ஒருங்கினர். தம் வரவை எதிர் நோக்குகின்றனர்" என்றதுமே அவ்வெண்ணங்களை நெடுந்தொலை உதறி எழுந்தான். 'இதோ வந்தேன்' என எர்ப்பிங்ஹாம் வாயிலாகக் கூறியனுப்பிவிட்டு அவன் மண்டியிட்டு இறைவனை வணங்கி, "ஆண்டகையே! அவரவர் ஊழ்ப்பயனை அவரவர்க்கு ஊட்டுவிக்கும் அறிவுப் பொருளே! ரிச்சர்டின்பழி இன்னும் மீந்துள்ளதறிவேன். ஆங்கில மக்களுக்காக இன்று மட்டும், இவ்வொரு நாள் மட்டும் அது என்மீது விழாது காத்து எம் படைக்கு வலி தந்தருளுவீர்" என வேண்டினான்.

போரவையுள் அரசன் படைத்தலைவரிடம் "வெற்றியின் சுமையை இறைவன் மீது போட்டுவிட்டுக் கடனாற்றுக" என்று ஊக்கினான். வெஸ்டுமோர்லந்து "ஆம் அரசே, இறைவனே நமக்கு வன்மையருளல் வேண்டும்! ஆனால் இப்போது இங்கிலாந்தி லிருக்கும் எண்ணற்ற வீரரில் ஒரு சில ஆயிரவர் இங்கு உடனிருந்தால் எவ்வளவோ நன்றாயிருந்திருக்கும்!" என்றான்.

அரசன் அதுகேட்டுத் தலையசைத்து, "இல்லை, இல்லை, ஒருபோதும் அங்ஙனம் விரும்பற்க. இறப்ப

தாயின் சிலர் இறப்பது மேம்பாடுதானே. ஆயின் வெற்றி வருவதாயின் அப்புகழைப் பங்கிட ஆள் எத்தனை குறைவோ அத்தனையும் பங்கு மிகுதியன்றோ? இன்று போரில் நின்று இறப்பவரையும், வென்று மீள்பவரையும் பலகாலம் இங்கிலாந்து போற்றுமன்றோ? அவ்வழியாப் புகழில் பங்கு கொண்டு நம் புகழைக் குறைக்க ஆயிரமல்ல; ஒருவர் கூடக் கூடுதலாக வந்து சேரவேண்டுமென்று நான் விரும்பேன்" என்றான்.

நகைச்சுவை பொதிந்து வீரமும் அருளும் கனிந்த அரசன் சொற்கள் ஆங்கில மக்கள் உள்ளத்தில் கரந்து கிடந்த விலங்கியல் மாசகற்றி, மாந்தருள்ளும் மேம்பட்ட உயர் வீரநிலை தந்தன.

போருக்குரிய இருப்புடைகூட இல்லாத நிலையிலிருந்த ஆங்கிலவீரர் துணிகரமாக ஃபிரெஞ்சுப்படை மீது மோதலாயினர். அவர்களின் அவல நிலைகண்டு இவர்களுடன் சண்டையிடப் போரணிகூட வேண்டுமா என்ற ஏளன எண்ணத்தால் படைத் தலைவன் ஆணை கடந்து ஃபிரெஞ்சுப் படைஞர் சிதறி நின்றனர். சிலர் ஆங்கிலேயர் தாக்குவதுவரைக் காத்திராது தாமாகச் சென்று தாக்கினர். இந் நிலைகண்டு ஹென்ரி ஆங்கில வீரரைத் தம் ஈட்டிகளை முன்னிறுத்திக் கோட்டை செய்து அதன் பாதுகாப்பிலிருந்து கொண்டு அம்புகளைப் பகைவர்மீது ஏவுமாறு தூண்டினான். அதனால் பட்டவர் பலர்; அதிலிருந்து பிழைக்க ஓடுபவரால் தள்ளுண்டு நெக்குண்டழிந்தவர் பலர்; அப்படியும் பெருந் தொகையினரான ஃபிரெஞ்சுப் படைஞர் கலங்காமல் ஆங்கில வீரர்களைச்

சிதறடிக்க முயன்றனர். ஹென்ரி தன் படைஞர்களை இரு புறமும் பிரித்துப் பக்கத்திலுள்ள காடுகளுக்குள்ளிருந்து அம்புமாரி வீச ஏவினன். இத்தகைய போர்த்திறத்தினல் ஹென்ரி கடல்போலிரைந்து வந்த ஃபிரெஞ்சுப் படைகளை எளிதில் கலைத்து வெற்றி வீரனாய்த் திகழ்ந்தான். பிற போர்களில் போர்வீரர் தலைவனாய் மட்டும் இதுவரை விளங்கிய அவன், இன்று அதோடு நாட்டுக் கவிஞர் பாடல்களின் தலைவனாகவும் விளங்கினன்.

போர் நடந்த இடம் அஜின்கோர்ட்டு என்ற ஊரின் பக்கத்தில் இருந்ததனால் அது வரலாற்றில் 'அஜின்கோர்ட்டுச் சண்டை' எனப் பேர் பெற்றது. அதில் இறந்த ஃபிரெஞ்சுவீரர் பதினாயிரத்தினும் மிக்கவர். இறந்த கோமக்களும் பெருமக்களும் நூற்றிருபதினும் மிக்கவர். ஒப்பற்ற படைத்தலைவர் பலர் ஆங்கில மக்கள் கையில் சிறைப்பட்டிருந்தனர். ஆனால் ஆங்கிலேயர் பக்கத்தில் படைவீரருள் இறந்தவர் இருபத்தைந்து பேரே. தலைவருள் யார்க்குக் கோமகனும், சஃபோக்குக் கோமகனும் இறந்து விட்டனர். இத்தனைச் சிறிய இழப்புடன் சிறுபடை நின்று பெரும் படையை வென்றது கண்டு வியவாதவர் இல்லை. அரசன் இன்மையுட் காட்டிய இறை எண்ணம் சிறிதேனும் மறவாது, "ஆண்டவனே, இது உன் கைவரிசையே யன்றி வேறன்று," என்றான். ஆங்கிலவீரர் யாரும் இவ்வெற்றிக் கொண்டாட்டத்தின் போது தம்மையோ தம் வேலையையோ அரசனையோ புகழாது இறைவனையே புகழ்தல் வேண்டும் என்று ஆணையும் தந்தான். ஆனால் இவ்வொரு வகையில்

அரசனுணையை மதிப்பவரில்லை. ஆங்கில நாடெங்கும் முன்பின் கேட்டறியா இவ்வெற்றியால் வெறி கொண்டு அரசனை வாயாரப் புகழ்ந்து நெஞ்சார வாழ்த்திற்று.

வெறும் லத்தீன்மொழி வீரனுயிராது போரிலும் பெரு வீரனாய்ச் செயலாற்றிய ஃப்ளூவெல்லின் ஆண்டில் முதிராத ஹென்ரி அரசன் போரில் காட்டிய ஒப்பற்ற திறங்கண்டு வியந்து அதனைத் தன் இயற்கைக் கேற்பப் பழ வீரருடன் இணைத்துக் கூறிக் கொக்கரித்தான். "எம் அரசர் ஜூலியஸ் ஸீஸரினும் மிக்கவர்: தற்கால அலெக்ஸாந்தர் என்றும் கூறலாம். மேலும் அலெக்ஸாந்தர் பிறந்த மாசிதோனும் எம் அரசர் பிறந்த மான்மத்தும் மகரத்திலேயே தொடங்குகின்றன அன்றோ? அம்மகரம் வெற்றிக் குறிகுறியான மகர மீனையன்றோ குறிக்கும்? அன்றி மாசிதோனிலும் ஒரு மலையுண்டு; மான்மத்திலும் ஒரு மலை இருக்கிறது. மாசிதோவில் ஒரு ஆறு; மான்மத்திலும் ஒரு ஆறு. என்ன நெருங்கிய ஒப்புமை!" என்பான்.

ஹென்ரியின் பழந்தோழருள் இப்போருக்குப் பின்னும் மீந்தவன் பிஸ்டல் ஒருவனே. அவன் ஃப்ளூவெல்லினைப் பலர் முன்னிலையிலும் 'பச்சைப் பன்றித் தோல் தின்னும் வேல்ஸ் நாட்டினன்' என எள்ளியதுடன், "வெறும்தோல் தின்னவேண்டாம். இந்த உப்பைக் கொஞ்சம் சேர்த்துக்கொள்," என உப்பை நீட்டினன். இவ் அவமதிப்பைப் பொறாத ஃப்ளூவெல்லின், பன்றித்தோலை மடியில் வைத்திருந்து, தனிமையில் அவனைக் கண்டவுடன் அவனை நையப்புடைத்து, "என்னைப் பச்சைப்பன்றித் தோலைத் தின்னச்

சொன்னதனால் நீ காய்ந்த பன்றித் தோலையேனும் தின்னுக" என்று வற்புறுத்தித் தின்னவைத்தான். இத்துடன் பிஸ்டல் தன் ஊக்கங்குன்றி உள்ளழிந்தான்.

அஜின் கோர்ட் வெற்றியின்பின் ஹென்ரி பல நகர்களைப்பிடித்து ஃபிரான்சு நாட்டினுள் முன்னேறினான். இறுதியில் தம் இறுமாப்பு முற்றும் விட்டு ஃபிரெஞ்சு அரசனும் டாஃபினும், ஃபிரெஞ்சுப் பெருமக்களும் ஹென்ரியின் காலடியில் வீழ்ந்து அமைதி வேண்டி மன்றாடினர். ஃபிரெஞ்சு அரசன் தன் மகள் காதரைனை ஹென்ரிக்குத் தந்தான். அதோடு சார்லஸுக்குப்பின் ஹென்ரியையே அரசனாக்க வேண்டும் என்று வரையறையுடன் உடன்படிக்கை ஏற்பட்டது சிறைப்பட்ட ஃபிரெஞ்சுப் பெருமக்களும் அவ் வுடன்படிக்கையின் பயனாக விடுதலை பெற்றனர்.

காதரைனுக்கு ஆங்கிலம் நன்கு தெரியாது. ஹென்ரி அரசனுக்கு ஃபிரெஞ்சும் அப்படியே. அதோடு போரில் மட்டுமே ஈடுபட்ட ஹென்ரிக்குக் காதற்போரின் முறைகள் புத்தம் புதியவையாகத் தோன்றின. போர் உடன்படிக்கையால் வலியுறுத்திப் பெண் பெறும் முறையும் காதலுக்கு உகந்ததாகத் தோன்றவில்லை. எனினும் உய்த்துணர்வும் நகைச் சுவை யுணர்வும் மிக்க காதரைன் ஹென்ரி அரசனை வரவேற்று அவன் உள்ளத்தின் நிமிர்ந்த வெற்றி இருமாப்பைத் தன் பக்கமாக வளைத்துக்கொண்டாள். அவளுடன் ஹென்ரி இனிது அரசவாழ்வு நடாத்தினான்.

## II. ஆறாம் ஹென்ரி

### (கதை உறுப்பினர்)

ஆடவர்

1. ஆறாம் ஹென்ரி அரசன்: ஐந்தாம் ஹென்ரி அரசன் மகன்: 9 திங்கள் அளவில் அரசிருக்கை ஏறியவன்.
2. சார்லஸ்: ஃபிரெஞ்சு அரசன்.
3. சார்லஸ் டாஃபின்: ஃபிரெஞ்சு அரசன் மகன்—ஜோனால் முடிசூட்டப் பட்டவன்.
4. பர்கண்டிப் பெருமகன்; ஆங்கிலர் சார்பான ஃபிரெஞ்சுக் கட்சித் தலைவன்.
5. அர்மக்னக் தலைமகன்: பர்கண்டிக் கெதிரான கட்சித் தலைவன்.
6. டால்பட்.
7. சாலிஸ்பரி: யார்க்குக் கட்சியினன்.
8. பெட்ஃபோர்டுப் பெருமகன்—ஹென்ரியின் ஃபிரான்சு ஆட் பெயரா யிருந்தவன்.

(6–8: அஜின் கோர்ட்டில் பொருத வீரர்)

9. கிளஸ்டர் கோமகன் } இங்கிலாந்தின் ஆட்பேரும் ஹென்ரியின் பாது காப்பாளனும் பெட்ஃபோர்டால் கொலை யுண்டவனுமாவன்.
10. ஸஃபோக்கு: பெட்ஃபோர்டுக்குப் பின் ஃபிரெஞ்சு ஆட் பெயராய்த் தன்னை விரும்பிய மார்கரட்டை அரசனுக்கு மணம் புரிவித்து நாட்டைக் காட்டிக் கொடுத்தவன்-பொது மக்களால் கொலையுண்டவன்.
11. ஸாமர்ஸெட்: சஃபோக் கட்சியினன்.
12. ஜோன்: ஆங்கிலேயரை எதிர்த்த ஃபிரெஞ்சு வீரப் பெண்மணி.
13. பொஃபோர்ட்டு முதற் றலைமகன்: ஸஃபோக்குக்கட்சியினன்.
14. வார்விக்: யார்க்கின் கட்சியின் மாபெரும் தலைவன்.
15. யார்க் கோமகன் ரிச்சர்டு: நான்காம் ஹென்ரியால் சிறைப்பட்ட ஆங்கில அரசுரிமையாளன். மார்ட்டிமரின் தங்கை மகன்—ஸஃபோக்கையும் அரசனையும் எதிர்த்துப்போராடியவன்.
16. எட்வர்டு (நான்காம் எட்வர்டு அரசன்.)
17. ஜார்ஜ் (கிளாரன்ஸ் கோமகன்.)
18. ரிச்சர்டு (மூன்றாம் ரிச்சர்டு அரசன்.)
19. எட்மன்டு யார்க்குடன் போரில் இறந்தவன்.

(16–19: யார்க்கின் பிள்ளைகள்.)

20. கிளிஃபோர்டுப் பெரு மகன்: ஸஃபோக் கட்சியினன்.
21. ஜாக் கேட்: கென்ட் தொழிலாளர் கிளர்ச்சித் தலைவன்.

பெண்டிர்

1. மார்கரட்: நேப்பில்ஸ் அரசன் புதல்வி; ஸஃபோக்கிடம் பற்றுக் கொண்டவள்; ஹென்ரி அரசனை மணந்து ஆங்கில அரசியானவள்.
2. கிளஸ்டர் கோமாட்டி: அரசியை வெறுத்து அரசனை வீழ்த்த முயன்று சிறைப்பட்டவள்.

## கதைச் சுருக்கம்

ஐந்தாம் ஹென்ரி ஃபிரான்சில் அரசுரிமை கோரி அஜின் கோர்ட்டு வெற்றியால் அடைந்த நாடுகளை எல்லாம் ஜோன் என்ற வீரப் பெண்ணின் எதிர்ப்பினாலும் ஃபிரான்சில் அவன் மகன் ஆறும் ஹென்ரியின் ஆட் பெயராய் அமைவு பெற்ற ஸஃபோக்கின் தன்னலத்தாலும் ஆங்கிலேயர் இழந்தனர். மேலும் அரசரின் பாதுகாப்பாளரான கிளஸ்டர்க்கோமகனையும் அவன் கொலை செய்வித்தான். எனவே ஆங்கிலப் பொது மக்கள் அவன் எதிரிகளான ஸாலிஸ்பரி, வார்விக் ஆகியவர்களின் தலைமையில் கிளர்ச்சி செய்து ஸஃபோக்கைத் துரத்தினர். ஆங்கில அரசரினும் அரசுரிமைக்கு மிகுதியும் தகுதியுடையவனான யார்க் கோமகன் ரிச்சர்டு இந் நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு அரசன் கட்சியை எதிர்த்தான்.

முதற் சண்டையிலேயே யார்க் இறக்க, அவன் மூத்த மகன் எட்வர்டு, அரசி மார்கரட்டையும் அரசனையும் வென்று ஸ்காத்லந்துக்குத் துரத்திவிட்டு நான்காம் எட்வர்டு என்ற பெயருடன் அரசனானான். பின் அவன் தன்னை எதிர்த்த தன் தம்பி ஜார்ஜையும் தன் நண்பன் வார்விக்கையும் போரில் வீழ்த்தினான். அவன் தம்பியருள் இளையவனான ரிச்சர்டு சிறையிலிருந்த ஆறும் ஹென்ரியைக் கொன்று, எட்வர்டுக்குப் பின் உறவினர் அனைவரையும் அழித்து மூன்றாம் ரிச்சர்டு அரசனானான்.

# II. ஆறும் ஹென்ரி

## I

### 1. தெய்வீக மாது

ஆண்மைக் குணத்தின் பயனும் ஆங்கில மக்கள் நெஞ்சில் அரசிருக்கைகொண்ட அரசருள் முதன்மை யானவன் ஐந்தாம் ஹென்ரி; ஆனால் அவன் மகன் **ஆறும் ஹென்ரி** இதற்கு நேர்மாறானவன். அரசராய்ப் பிறந்தவருள் அவனிலும் பேடி எவரும் இல்லை என்ன லாம். அரச வாழ்வின் பொறுப்புக்களைத் தாங்கும் உரமுமின்றி, அவற்றைத் துறக்கும் துணிவுமின்றி, அவன், ஆங்கில அரசியல் வாழ்வின் கொந்தளிப்பி னிடையே அலைகடலில் ஒரு துரும்பெனும்படி அலைக் கழிக்கப் பட்டான்.

ஐந்தாம் ஹென்ரி தன் வெற்றிகளின் பயனாகவும் ஃபிரெஞ்சு அரசியல் கட்சிகளில் ஒன்றின் தலைவனான **பர்கண்டிக் கோமகனின்**[1] நேசத்தாலும் ஃபிரான்சிலும் தனது வன்மையைப் பெருக்கினான். மேலும் ஃபிரெஞ்சு அரசனுடன் உடன்படிக்கைசெய்து தான் அவ்வரசன் காலத்தில் ஃபிரான்சில் அவனுடைய ஆட் பேராகவும், அவனுக்குப்பின் ஃபிரான்சு நாட்டின் அரசனாகவும் ஒப்புக்கொள்ளப் பெற்றான். எனவே **சார்லஸ்**[2] இறந்த உடன் இரண்டு நாடுகளின் அரசுரிமைகளும் அவனிடம் வந்து சேர்ந்தன. ஆயினும் அவற்றைத் துய்க்கக் கொடுத்துவைக்காது அவனும் அதே ஆண்டில் இறக்கவே, பிறந்து ஒன்பது திங்களேயான பிள்ளையாகிய அவன் புதல் வன் ஆறும் ஹென்ரி அவ்விரு பெரும் பொறுப்புக்

---

1. Duke of Burgundy. 2. Charles.

களுக்கும் உரிமையாளனானன். அவன் சிறு குழந்தை யாதலால் இங்கிலாந்திலும் ஃபிரான்சிலும் முறையே அவனுடைய சிற்றப்பன்மாரான **கிளஸ்டர்க் கோமக னும்**[1] **பெட்ஃபோர்டுக் கோமகனும்**[2] அன்னவன் ஆட் பேராயிருந்து அரசாட்சி செய்தனர்.

ஆங்கிலேயருக்கு உடந்தையாயிருந்த பர்கண்டிக் கட்சிக் கெதிரான **அர்மக்னக்குக்**[3] கட்சியினர் சார்லஸ் அரசனின் பிள்ளையான **சார்லஸ் டாஃபினையே**[4] அரச னாகக் கொண்டனர். இரு திறத்தினரிடையும் நெடு நாள் போர்நடந்தது. ஐந்தாம் ஹென்ரியுடன் **அஜின் கோர்ட்டுச் சண்டை**[5]யில் வெற்றியுடன் பொருத வீர ரான பெட்ஃபோர்டு, **ஸாலிஸ்பரி**[6], **டால்பட்டு**[7] முதலிய வர்கள் ஆங்கிலேயர் பக்க மிருந்ததன் பயனாக அவர் களுக்கே மீண்டும் மீண்டும் வெற்றி கிடைத்து வந்தது. அதோடு டாஃபினும் பெருங் கோழை; அவனைச்சுற்றி இன்பவேட்கை மிக்க சோம்பேறிக் குழாங்களிருந்துகொண்டு அவனைக் கெடுத்துவந்தன. தலைமக்களும் பெருமக்களும் வேறு தங்கள் தந்நலத் தாலும் பூசலாலும் அவன் வலிமையைக் குறைத் தனர். அவர்கள் படைகள் ஆங்கிலேயருக்குத் தோற்று ஒவ்வொன்றாக ஃபிரான்சின் பெரும் பகுதி யை அவர்களுக்கு விட்டுக்கொடுத்தன. இத் தோல்வி கண்டு டாஃபின் தவறி என்றேனும் மனம் கொதித் தால், தலைமக்கள் அவனிடம் "வெற்றி தோல்விகள் இறைவன் செயலேயன்றி முயற்சியின் பயனாக வருவனவல்ல" என்று கூறி அவனை மேன்மேலும்

1. Duke of Gloucester. 2. Duke of Bedford. 3. Armagnac 4. Charles Dauphin. 5. Battle of Agin court. 6. Salisbury. 7. Talbot.

செயலற்றவனாக்குவர். அவர்கள் நயமொழிகளே அவனுக்கு நோயும் நோயை மறக்கவைக்கும் பூச்சு மருந்துமாய் அமைந்தன. நாட்டின் அரசனாகவும் தலைவராகவும் அமைந்து இவர்கள் நிலையால் ஃபிரெஞ்சுப் பொதுமக்கள் தம் நாட்டின் "ஊழை" எண்ணி மனமுடைந்து வருந்தினர்.

இந்நிலையில் ஃபிரெஞ்சு நாட்டு இன்ப வாழ்விலிருந்தும் அரசியல் புயல்களிலிருந்தும் நெடுந்தொலைவில் **டாம் ரெமி**[1] என்ற ஊரில் **ஜோன்**[2] என்ற ஓர் ஏழைப்பெண்ணின் உள்ளத்தில் ஃபிரெஞ்சு மக்களின் நாட்டார்வம் தெய்வ உருக்கொண்டு ஒளிகான்றது. இறையருள் நேராக அவளிடம் தோன்றி, "நலிந்த நின்நாட்டிற்கு நின்னால் நன்மை ஏற்படும்; நின்நாட்டு வீரரைப் போரில் வெற்றியுடன் நடத்திச் சென்று நின் அரசனாகிய டாஃபினுக்கு **ரெயிம்ஸ்**[3] நகரில் முடி சூட்டுவாயாக!" என்று, கூறியதாக அவள் உணர்ந்தாள். அவ்வாணையைப் பின்பற்றி அவள் தன் தாய் தந்தையர் அன்புத் தளையையும் பிறர் ஏளனங்களையும் புறக்கணித்து டாஃபினிடம் வந்தாள்.

வீழ்ச்சியின் பிடி அணுக அணுகப் போலி நண்பர்களின் பொய் ஆறுதல் மொழிகளுக்குக்கூட வழியின்றித் தத்தளித்த டாஃபின் சொல்லளவிலேனும் நம்பிக்கை தருகின்றனவே என ஜோன் மொழிகளுக்குச் செவிசாய்த்ததோடு, வேறு செயலற்ற நிலையில் தன் சிதைவுற்ற படையின் ஒரு பகுதியையும் அவளிடம் ஒப்படைக்க ஒருப்பட்டான்.

---

1. Domremy. 2. Joan. 3. Rheims.

நாட்டுப்பற்று மிக்க ஃபிரெஞ்சு வீரர்களின் உள்ளங்கள் நாட்டின் நலிவுகண்டு கொழுந்துவிட்டு எரிந்துகொண்டுதா னிருந்தன. ஆனால் அதே பற்றுத் தலைவர்களிடம் இல்லாத குறையினால் அவர்கள் வீரமெல்லாம் இதுவரை விழலுக்கு இறைத்த நீராய்ப் பயனற்றதாயிற்று. இன்று ஜோன் அவர்களுக்கு வீர உணர்வும் ஊக்கமும் ஊட்டும் ஒப்பற்ற தலைவியானாள். அவளுடைய பெண்மை அவ் வீரத்துக்கும் நாட்டுப் பற்றுக்கும் உயரிய மதிப்பளித்தது. எனவே பெருமக்களையும் தலைமக்களையும்போல் அவர்கள் அவள் கண்ட தெய்வஒளியில் அவநம்பிக்கைகொள்ளவில்லை. அவள் தெய்வஆணை பெற்றுவந்த தெய்வப் பிறப்பினள் என்றே அவர்கள் நம்பினர்.

ஜோனின் தலைமையில் ஃபிரெஞ்சு மக்கள் தம் பழைய தோல்விகளை யெல்லாம் 'மறக்கும்' வண்ணம் வியத்தகு முறையில் வெற்றிமேல் வெற்றியடைந்தனர். **ஆர்லியன்ஸ்**[1] என்ற நகரில் டாஃபினின் படை ஒன்று நெடுநாள் முற்றுகையால் நலிந்து எதிரிகளிடம் சரணடையும் நிலையில் இருந்தது. ஜோனின் வீரர் துணிந்து முற்றுகைக் கோட்டையைப் பிளந்து சென்று பகைவரை வென்று, நகர மக்களுக்குப் புத்துயிரும் புத்துணர்ச்சியும் தந்தனர். சில நாட்களுக்குள் இதே முறையில் ஃபிரான்சின் பல பகுதிகளையும் மீட்டபின் தெய்வ ஆணையின்படியே ரேயிம்ஸ் நகரில் வைத்து டாஃபினை முடிசூட்டினாள்.

---

1. Orleans.

அவள் வெற்றிகளால் ஃபிரெஞ்சுப் பொதுமக்கள் அவள்மீது எவ்வளவுக் கெவ்வளவு ஆர்வமும் இறும் பூதும் எய்தினரோ, அவ்வளவுக் கவ்வளவு பெரு மக்களுக்கும் தலைமக்களுக்கும் அவள்மீது அழுக் காறும் பகைமையும் வளர்ந்தன. ஆங்கிலேயரது கைக்கூலி மற்றொருபுறம் அவர்கள் இழிதகைமை யை மிகைபடுத்திற்று. அவர்கள் சமயம் பார்த்து அவளைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத் தனர். தம் வெற்றிகளை யெல்லாம் தோல்விகளாக்கிய அவள்மீது ஆங்கிலேயர் தமது முழு வஞ்சமும் தீர்த்துக்கொண்டனர். மாயக்காரி என்று அவர்கள் அவள்மீது குற்றஞ் சாட்டி அவளைத் தீக்கிரை யாக்கினர்.

## 2. அல்லிமலர்ப் போர்

ஜோன் இறந்ததால் ஃபிரஞ்சுக் கட்சி வலி குறைந்துவிடினும், அவள் பழியே ஆங்கிலேயர் பக்கம் நின்று அவர்களை வெற்றி யடையாமல் செய்தது என்னலாம். டால்பட், ஸாலிஸ்பரி முதலிய பல ஒப்பற்ற வீரர் இன்னும் அவர்கள் பக்கம் இருந்தும், அவர்களுடன் தலைவர்கள் ஒத்துழைக்க முடியாதபடி அவர்களுக்குள் புதியதொரு பெரும் பிளவு வளரத் தொடங்கிற்று.

ஐந்தாம் ஹென்றியின் தந்தை இரண்டாம் ரிச்சர்டு அரசனை வீழ்த்தியே அரசனானவன். ஆனால் ரிச்சர்டை அகற்றிய போதுகூட நேரான அரசுரிமை அவனுக்கு இல்லை. ஏனெனில் ஹென்றியின் குடி யினரைவிட அதற்கு அண்மையான உரிமையுடை

யவர் **மார்ட்டிமர்**[1] குடியினர். அவர்களுள் நான்காம் ஹென்ரியை எதிர்த்த **எட்மன்டு மார்ட்டிமர்**[2] சிறைப் பட்டு அங்கேயே உயிர்நீத்தான். அதன்பின் அவன் தங்கை பிள்ளையாகிய **யார்க்குக் கோமகன் ரிச்சர்டு**[3] அவன் பழிக்கும் அவன் உரிமைக்கும் உரியவன் ஆனுன். அப்பழியைத் தீர்த்துக்கொள்ளத் தனக்கு எப்போது சமயம் வாய்க்கும் என்று அவன் காத் திருந்தான்.

மார்ட்டிமர்களின் உரிமை புறக்கணிக்கப்பட்டு விட்டால், அரசனுக்குப்பின் அடுத்த உரிமையுடைய கிளைக் குடியினர் **பொஃபோர்டுகள்**[4]. இவர்களுள் **ஸாமர் ஸெட் கோமகனும்**[5] முதல் **தலைமகனுயிருந்த** இன்னொரு **பொஃபோர்ட்டும்**[6] தலைமையானவர்கள். இவர்கள் ரிச்சர்டின் உரிமையை எண்ணி அவனிடம் வெறுப்புக் கொண்டனர். ஒருநாள் ரிச்சர்டுடன் அவர்கள் 'கோயில் மாடம்' என்ற இடத்தில் ஒருங்கே உலவியபோது இவ்வெறுப்புப் பூசலாக மாறிற்று. ஸாமர்ஸெட் தன்னை ரிச்சர்டு மதிப்புக் குறைவாக நடத்துவதாக எண்ணி, "நான் அரசருக்கடுத்த உரிமையாளன் என்பது நினைவிலிருக்கட்டும்" என்ருன். "அரசரினும் உரிமையுடையேம் யாம்!" என்று ரிச்சர்டு தருக்கினுன். அவர்களுடன் அப்போது இங்கிலாந்தில் செல்வாக்கு மிக்க **ஸஃபோக்**[7], **வார்விக்**[8] ஆகிய இருபெருங் குடியின் செல்வர் வீற்றிருந்தார் கள். தம்மிடையே உள்ள போட்டியை இவ்வுரி மையை வெளிக் காரணமாகக் கொண்டு வலியுறுத்த

1. Mortimer. 2. Edmund Mortimer. 3. Richard Duke of York. 4. Beanforts. 5. Duke of Somerset. 6. Cardinal Beaufort. 7. Suffolk. 8. Warwick.

எண்ணி இருவரும் இதிற் கலக்கலாயினர். ஸாமர் ஸெட் அங்கு மலர்ந்திருந்த செவ்வல்லி மலர் ஒன் றைக் கையிலெடுத்து என் உரிமை சரியாயின் இச் செவ்வல்லி மலர்வெல்க என்ருன். ஸஃபோக்கும் செவ்வல்லி மலரே வெல்க என அதனைக் கைக் கொண்டான். கொள்ளவே வார்விக் சினங்கொண்டு வெள் அல்லி மலர் ஒன்றெடுத்து ரிச்சர்டின் உரிமை சரியாயின் இதுவே வெல்க என்ருன். அது முதல் இரு கட்சியினருக்கும் அல்லி மலர்கள் குறியீடாயின. அவர்களிடை நடந்த முப்பது ஆண்டைய கொடும் போரும் அல்லிமலர்ப் போர் என வரலாற்றில் பெயர் பெறுவதாயிற்று.

### 3. தன்னலத்தின் தறுகண்மை

ஆங்கிலேயருக்கு உடந்தையாயிருந்த பர்கண்டிக் கோமகன் ஜோன் இறந்தது முதல் தன் நாட்டினர் பக்கமே சாயத் தொடங்கினன். பெட்ஃபோர்டு இறந்தபின் ஃபிரென்சு நாட்டு ஆட்பேராக வந்த ஸஃபோக் பர்கண்டியைப் பகைத்து இன்னும் ஃபிரெஞ்சுக் கட்சியை வலிமைப் படுத்தினன். இந் நிலையில் பெட்ஃபோர்டின் எதிரியான அர்மாக் நாக் குப் பெருமகன் புதல்வியை ஹென்ரிக்கு மணம் செய் வித்து, ஃபிரெஞ்சு அரசுரிமையை அவன் பக்கமே உறுதிப்படுத்த வேண்டுமென்று அரசன் ஆட்பெய ரும் பாதுகாப்பாளனுமான கிளஸ்டர் முயன்ருன். தன்னலமும் தன்முற்போக்குமே குறியாகக்கொண்ட ஸஃபோக்குக்கு இது பிடிக்கவில்லை. அவன் தன்னையே விரும்பியவளான நேப்பிள்ஸ் தலைவன் புதல்வி

மார்கரட்டை[1] ஹென்ரிக்கு மணம் செய்வித்து அவள் மூலம் அரசனைத் தன் கைப்பொம்மையாக வைத்தாட்ட வேண்டும் என்றெண்ணினன். அது மட்டுமன்று. அவளைப் பெண்ணாகப் பெறுவதற்காக நார்மண்டியில் பெரும் பகுதியை அவள் தந்தைக்கு விட்டுக் கொடுக்கவும் அவன் இணங்கினன். பொஃபோர்ட்டுகளின் ஆதரவினால் அரசனைத் தன் வயப்படுத்தி ஸஃபோக் இம்மணத்தை நிறைவேற்றி வைத்தான். ஐந்தாம் ஹென்ரி யரசன் வீரத்தாலும் பெட்போர்டு கிளஸ்டர் முதலியவரது தன் மறுப்புக்களாலும் பிரான்சு நாட்டில் ஏற்பட்ட ஆங்கில அரசுக் கோட்டை, இங்ஙனமாக ஸஃபோக்கின் தன்னலமாகிய உட்பகையால் தகர்ந்தது.

## II

### 4. கிளஸ்டர் படுகொலை

எடுப்பார் கைப்பிள்ளையாய் இருந்த ஹென்ரியை அரசி மூலம் ஆட்டிவைத்து, ஆங்கிலநாட்டு அரசியல் போட்டியில் வெற்றிபெற்ற ஸஃபோக், அவ்வெற்றியை நிலவரமானதாக்கவேண்டுமானல், கிளஸ்டர் கோமகனை அழித்தாகவேண்டுமென்று கண்டான். இவ்வகையில் ஸாமர்ஸெட்டும் பொஃபோர்ட்டுப் பெருந்தலைமகனும் அவனுக்கு உதவி செய்தனர். அரசன் ஆட்பெயர் நிலைக்கு அச்சமயம் யார்க்கும் ஸாமர்ஸெட்டும் போட்டியிட்டனர். கிளஸ்டர் ஸாமர்ஸெட்டின் உரிமையை எதிர்த்துப்பேசவே ஸஃபோக்

---

1. Margaret, daughter of King of Naples.

அவனை வாயடக்க எண்ணி "அஃது அரசன் விருப்பம்" என்றான். கிளஸ்டர் உடனே "அரசன் கைப்பிள்ளை யல்லனே; அவன் கருத்தை அவனே வெளியிட லாமே" என்றான். ஸஃபோக் அச்சொற் பொறியி லேயே அவனை மாட்டி, "அரசன் கைப்பிள்ளை யல்ல னாயின் அவனுக்குப் பாதுகாப்பாளன் எதற்கு?" என்று கேட்டான். கிளஸ்டர் தன் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் தன் பாதுகாப்பாளன் நிலையைத் துறந் தான்.

ஸஃபோக்கின் உள்ளம் இத்துடன் நிறைவடைய வில்லை. அவன் கிளஸ்டரை முற்றிலும் அழிக்கும் வாய்ப்புக்காகக் காத்திருந்தான். கிளஸ்டரைப்போல எளிய உள்ளமும் மன நிறைவும் பெறாத **கிளஸ்டர்க் கோமாட்டி**[1] தன்னினும் கீழ்நிலையிலிருந்து உயர்வுற்ற அரசியிடம் வெறுப்பும் பகைமையும் கொண்டாள். அது பெருகி அவள் பேரவாவுடன் இணைய, அவள் அரசனை அகற்றும் எண்ணங்கொண்டு பெண்ணியல் புக்கேற்ப மாயக்காரர் மூலம் ஏவல் வினைகள் செய் வதில் முனைந்தாள். ஒற்றர் மூலம் யாவும் தெரிந்து கொண்டிருந்த ஸஃபோக், அவளைச் சமயம் பார்த்துக் கையும் மெய்யுமாகப் பிடித்து நாட்டுப் பகைமைக் குற்றஞ்சாட்டி, லண்டன் தெருவழியாக அவமதித்து நடத்திச் சென்று, பின் **மான் தீவில்**[2] மீளாச் சிறையி லிட்டான். அதன்பின் அவன் செயலற்ற அரசனைப் புறக்கணித்து, அவன் பெயரால் கிளஸ்டர் மீதும் பொய்க் குற்றம் சாட்டி, அவனைப் பொஃபோர்ட்டு முதற் றலைமகன் மாடத்தில் சிறை வைத்தான்.

1. Duchess of Gloucester. 2. Isle of Man.

சின்னாட்களுக்குள் அவன் அனுப்பிய கொலைஞர் இருவர் நோய்வாய்ப்பட்டிருந்த கிளஸ்டரை மூச்சுத் திணறவைத்து வதைத்துக் கொன்றனர்.

## 5. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்

இதுவரை அரசியின் செல்வாக்கு மூலம் ஸஃபோக்குக்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்து வந்தது. பெருமக்களிடையே அச்செல்வாக்குக்கு எத்தகைய ஊறும் இல்லாதது கண்டு அவன் தருக்கினான். பொதுமக்களைப் பற்றியோ அவர்கள் நல்லெண்ணத்தைப் பற்றியோ அவன் எண்ணவேயில்லை. ஆனால் தம் நாட்டின் உயர்தகுதிபற்றி ஐந்தாம் ஹென்ரியின் ஆட்சிமுதல், வீறும் பெருமையும் கொள்ளத் தலைப்பட்ட அவர்கள், அவ்வரசன் வெற்றியால் கிடைத்த நாட்டை முன்பின் பாராது விட்டுக்கொடுத்த சஃபோக்மீது வர வரக் கொதிப்படைந்து வந்தனர். கிளஸ்டர் கொலைபற்றி அவர்கள் கேள்விப்பட்டதே உலர்ந்த பஞ்சுப் பொதியில் தீப்பொறி பட்டதுபோலாயிற்று. அவர்கள் ஸாலிஸ்பரி, வார்விக் ஆகிய ஸஃபோக்கின் எதிரிகள் தலைமையில், சின்னபின்னமுற்றுச் சிதைந்து உருமாறிவிட்ட கிளஸ்டர் உடலுடன் அரசன்முன் வந்து, "ஸஃபோக் ஒழிக; ஆங்கில நாட்டுப் பகைவன் வீழ்க," என்று இரைந்து ஆர்ப்பரித்தனர். மார்கரட் எவ்வளவு முயன்றும், அரசன் பொதுமக்கள் எதிர்ப்புக்கஞ்சி ஸஃபோக்கை நாடு கடத்தினான். பிரான்சு செல்லும் வழியில்கூட ஆங்கில மக்கள் பகைமை அவனை விடவில்லை. ஆங்கில வீரர் பலர் வேறொரு கப்பலில் சென்று

அவன் கப்பலை இடைமறித்து அதிலேயே அவனைத் தூக்கிலிட்டனர். கிளஸ்டர் கொலைக்கு உடந்தையாயிருந்த பொஃபோர்ட்டு முதற்றலைமகனும் மனச்சான்றின் வதைப்புக்காளாகி மாண்டான்.

பொதுமக்கள் கிளர்ச்சியின் பயனாக இன்னும் பல இடையூறுகள் அரசனுக்கு நேர்ந்தன. **ஜாக் கேட்**[1] என்பவன் தலைமையில், **கென்ட்** நாட்டுப்புறத் தொழிலாளர் கிளர்ச்சிசெய்து லண்டன் நகரையே கைப்பற்றிக் கொண்டனர். அரசன் கட்சியினராகிய **கிளிஃபோர்டுப் பெருமகனு**[2]டைய சொல் வன்மையால் இக்கிளர்ச்சி அடக்கப்பெற்றது. ஆனால் அரசனின் கட்சித் தலைவனாயிருந்த ஸாமர்ஸெட்மீது மக்களுக்குள்ள வெறுப்பைப் பயன்படுத்தி, யார்க்கோமகன் இன்னொருபுறம் கிளர்ச்சி செய்தான். கிளஸ்டர் கொலைக்கு முன்னமேயே, அயர்லாந்தில் ஒரு கிளர்ச்சியை அடக்கும்படி யார்க் படையுடன் அனுப்பப்பட்டிருந்தான். அயர்லாந்து செல்லாமல் படையுடன் காத்திருந்து, அவன் அரசன்மீது இப்போது படையெடுத்து வந்தான்.

## 6. குட்டியிட்ட பெண்புலி

ஆங்கில அரசர்களுள் புலிபோல் வீறுமிக்க பேரரசருட் சேராது பூனைக்குட்டிபோல் அடங்கி ஒடுங்கி வாழ விரும்பியவன் ஆறும் ஹென்ரி. ஆனால் அவன் மனைவியாகிய மார்கரட், மாற்றார் கைப்பட்ட குட்டியைமீட்கப் பாய்ந்தெழும் பெண்புலிபோல்

1. Gack caed. 2. Lord Clifford.

அரசாட்சியைத் தன் கைவயப்படுத்தப் போராடினாள். அதோடு அவள் அரசியல் சூழ்ச்சிகளிலும் வல்லவளாதலால், ஸம்போக்கை மணிக்கூண்டுச் சிறைக்கு அனுப்பிவிட்டதாக நடித்து, யார்க் கிளர்ச்சிப் படையைக் கலையவைத்தாள். அதன்பின் அவளுக்கு ஒரு புதல்வன் பிறந்தான். அரசனுக்குப் பிள்ளையில்லாதிருந்ததால் யார்க்கே அரசன் என்று யாவரும் ஒப்புக்கொண்டிருந்தனர். ஆகவே பிள்ளை பிறந்தது முதல் மார்கரட்டுக்குத் துணிவு மிகுந்தது. ஆயினும் அதே ஆண்டு ஹென்ரிக்குப் பித்துப் பிடித்தது. யார்க்கே கிளஸ்டரைப்போல் மீண்டும் பாதுகாப்பாளனாக அமர்த்தப்பட்டான். அடுத்த ஆண்டு ஹென்ரி பித்தந்தெளிந்தான். இதற்கே காத்திருந்த மார்கரட், யார்க்கை நீக்கிவிட்டு முன்னைய ஒப்பந்தத்தை முற்றிலும் புறக்கணித்து, ஸாமர்ஸெட்டை மீட்டும் அழைத்துக் கொண்டாள். இப் புதிய போக்கால் அரசாட்சியை நேரடியாக எதிர்க்கும் வாய்ப்பு யார்க்குக்குக் கிடைத்தது. அவன் தன் கலைந்த படையை மீண்டும் திரட்டிப் போருக்கெழுந்தான். அல்லி மலர்ப்போர் தொடங்கிற்று.

## III

### 7. பழியும் பழிக்குப் பழிகளும்

போருக்கு யார்க்கு இப்போது வேறு எத்தகைய காரணமும் தேடாது நேரிடையாக அரசியல் மன்றில் தன் அரசுரிமையை வற்புறுத்தினான். வாய்மொழியாலும் போர்த்துணையாலும் ஸாலிஸ்பரி, வார்விக்

ஆகிய இங்கிலாந்தின் இரு பெருங்குடிகளும் அவனுக்குத் துணைபுரியக் காத்துநின்றன. அவன் பிள்ளைகளாகிய **எட்வர்டு**[1], **ஜார்ஜ்**[2], **ரிச்சர்டு**[3], ஆகிய மூவரும் அவன் படைகளை அணிவகுத்து நின்றனர். கடைசிப் புதல்வனான **எட்மண்டு**[4] கூடத் தன் வீட்டாசிரியருடன் போரைப் பார்வையிட வந்து நின்றான். எட்வர்டும் ரிச்சர்டும் ஒப்பற்ற வீரர் ஆதலின் போர் யார்க் பக்கமே வெற்றி தருவதாகத் தோன்றிற்று. ஆனால் ஒருபுறம் சிறியோனாகிய எட்மண்டு கிளிப்போர்டு கைப்பட்டு அவனால் இரக்கமின்றிக் கொன்று சிதைக்கப்பட்டான். இன்னொரு புறம் தன் பிள்ளைகளிடமிருந்து விலகிநின்ற யார்க்கும் எதிரி கைப்பட்டான். குருதிவெறி மிக்க கொடிய அரக்கியாகிய மார்கரட் எட்மண்ட் குருதியில் தோய்த்த கைக்குட்டையால் அவன் தன் கண்ணீரைத் துடைக்கும்படி வற்புறுத்திப் பலவகையில் அவனை வருத்தி வதைத்துக் கொன்றாள். இத் தீச் செய்திகள் கேட்டுப் படைகளும் தலைவரும் போர்க்களம் விட்டோடித் துயர்கொண்டாடினர்.

**வேக் ஃபீல்டு**[5] என்ற இடத்தில் கிட்டிய இவ் வெற்றியின்பின், மார்கரட் லண்டன் நோக்கி விரைந்து, வார்விக்கின் காவலில் இருந்த அரசனைக் கைப்பற்ற முயன்றாள். வார்விக் போரில் தோற்றுவிடவே அரசன் தன் கட்சியினிடமே வந்து சேர்ந்தான். ஆனால் இவ்வெற்றியைப் பின்பற்றி லண்டனுக்குச் சென்று அரசாட்சியைக் கைப்பற்றாமல் மார்கரட், தன் குருதிவெறியால் தூண்டப்பட்டுச், சிறைப்

1, Edward, 2. George. 3. Richard. 4. Edmund. 5. Wake Field.

பட்டவர்களை எல்லாம் படுகொலை செய்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்து விட்டாள். ஒப்பற்ற வீர னும் படைத் தலைவனுமான எட்வர்டு இதனைப் பயன் படுத்தி, லண்டன் சென்று பொருட்குவையைத் தன் கைவசப் படுத்திக்கொண்டான். அதன்பின் டௌட்டன் ஃபீல்டு[1] என்னுமிடத்தில் மார்கரட் டின் படையை அவன் நைய முறியடித்தான். கிளிப் போர்டு யார்க்குக் கட்சியினர் கைப்படவே, அவர்கள் யார்க்கின் கொலைக்கு அவன்மீது பழிவாங்கினர். போர்ச் சமயத்திலும் ஹென்ரி அதில் அக்கறை கொள் ளாது, உள்ளத்தில், இந்த இங்கிலாந்துக்கு வேறு யாரேனும் அரசராயிருந்து, நான் இதன் இயற்கை யழகைக் கண்டு இன்புற்று வாழும் ஓர் இடையனாக வேனும் பிறந்திருக்கலாகாதா, என்ற எண்ணச் சுழலில் சிக்கிக் கிடந்தான். அவனை மார்கரட் இழுத் துக்கொண்டு ஸ்காத்லந்துக்கு ஓடினாள். நாட்டி லிருந்து அரசன் வெளியேறியதே, எட்வர்டு அரசியல் மன்றம் கூட்டி, நான்காம் எட்வர்டு என்ற பெய ருடன் தானே அரசனானான்.

## 8. புதிய அரசன்

எட்வர்டு அரசனாக உதவிசெய்த வார்விக்கும், எட்வர்டின் தம்பி கிளாரன்ஸ் கோமகனான ஜார்ஜூம் நாளடைவில் அவனை வெறுத்து எதிரிகளுடன் சேர்ந்தனர். ஆயின் அவர்கள் பலதடவை முறி யடிக்கப்பட்டு மடிந்தனர். இன்னொரு தம்பியாகிய ரிச்சர்டு உண்மையில் அருவருக்கத்தக்க உடலும்

1. Towton field.

அதனினும் அருவருக்கத்தக்க உளமும் பேய்க்குண மும் உடையவனுயினும், எட்வர்டு எத்தகைய வீரன் என்பதை நன்கறிந்து அவன் ஆட்சிநாள் அளவும் அவனுக்கு அடங்கியவன்போல் நடந்துவந்தான். ஆனல் யாருமற்றுத் தனியே மணிக்கூண்டுச் சிறை யில் கிடந்த ஹென்ரி அரசன்மீது மட்டும் அவன் தன் குருதி வெறியைத் தணித்துக்கொண்டான். இறக்கும் தறுவாயில் ஹென்ரி, தன் பாட்டன் நான்காம் ஹென்ரி ரிச்சர்டுக்குச் செய்த பழியை எண்ணி, "ரிச்சர்டு, இதோ உன் கடன் தீர்ந்தது," என்று கூறி உயிர்நீத்தான்.

---

## வின்ட்ஸாரின் இன்நகை மாதர்

### (கதைச் சுருக்கம்)

பெண்களைக் காதலிப்பதாக நடித்துப் பொருள் பறிக்கும் உயர்குல வீணனாகிய ஃபால்ஸ்டாஃப் பெருந்தகையை நன்றாக ஒறுக்க எண்ணினர் திருவாட்டி பேஜ், திருவாட்டி ஃபோர்டு என்ற இரு குடியானவர் மனைவியரும். அதன்படி திருவாட்டி விரைவுடையாள் மூலம் அவனுக்குக் காதல் தூது அனுப்பி, அவனை அவர்கள் திருவாட்டி ஃபோர்டு வீட்டிற்கு அழைப்பித்தனர். அறிவிலியாகிய ஃபால்ஸ்டாஃப் தன் மீது உளவறிய மாற்றுருவில் வந்த திரு ஃபோர்டை நம்பி எல்லாம் அவனுக்குச் சொல்ல, அவனும் குறிப்பிட்ட நேரம் வந்துவிடுகிறான். அழுக்குக் கூடையை வைத்து இன்னகை மாதர் அவனை வெளியேற்றினும் அவர்கள் தனிப்பட வேலையாட்களைத் தூண்டி அவனை ஆற்றில் அமிழ்த்துகின்றனர். சூடு கண்டும் அடங்காது இரண்டாம் தடவையும் மூன்றும் தடவையும் ஃபால்ஸ்டாஃப் அவர்கள் பொறியில் விழுகிறான். இரண்டாந்தடவை சூனியக்காரி உருவில் கணவனால் புடைக்கப்பெறுகிறான். மூன்றும் தடவை ஊர்வெளியில் பேய் வாழ்வதாகக் கருதப்பட்ட மரத்தடியில் பேயுருவில் வந்த அவர்களாலும் அரமங்கையர் உருவில் வந்த சிறுவராலும் அவன் குற்றுயிராக்கித் துன்புறுத்தப்பட்டு இறுதியில் உண்மையறிந்து திருந்துவதாக உறுதி கூறுகிறான்.

திருவாட்டி பேஜின்மகள் ஆன், இதே விழாவின்போது அரமங்கையருடன் அந்நாட்டரசியாக நடித்திருந்தாள். அவள் தந்தையும் தாயும் தாம்தாம் விரும்பியவர்களை அவள் மணக்கும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். ஆனால் அவள் இருவரையும் ஏய்த்துத் தன் காதலனாகிய ஃபென்டனையே மணந்துகொள்கிறாள்.

---

# விண்ட்ஸாரின் இன்நகைமாதர்

## (கதை உறுப்பினர்)

**ஆடவர்**

1. திரு. பேஜ்.
2. திரு. ஃபோர்டு

} விண்ட்ஸார் நகரத்துக்குடியானவர்.

3. ஜான் ஃபால்ஸ்டாஃப் பெருந்தகை.
4. வழக்குத்தலைவன் ஷாலோ. (ஷாலோ என்றால் அறிவின் ஆழமற்றவன் அதாவது வெள்ளை மனத்தான் என்பது பொருள்.)
5. ஸ்லெண்டர் (மெலிந்தவன் என்பது பொருள்.) ஷாலோவின் மைத்துனன்—திரு பேஜின் நண்பன.
6. மருத்துவ அறிஞர் கயஸ்: வேல்ஸ் நாட்டினன்—திருவாட்டி பேஜ் விரும்பிய மருகன்.
7. சமயத்தலைவன் ஹியூப் பெருந்தகை: அயர்லாந்து நாட்டினன்.
8. ஃபென்டன்: ஆனின் காதலன்.
9. ஆனின் தம்பி.
   பிற சிறுவர்கள்.

**பெண்டிர்**

1. திருவாட்டி பேஜ்.
2. திருவாட்டி ஃபோர்டு.

} விண்ட்ஸாரின் இன் நகை மாதர்.

3. ஆன்: திருவாட்டி பேஜின், மகள்.
4. திருவாட்டி விரைவுடையாள்: திருவாட்டி ஃபோர்டின் காதல் தூதி.
5. ஆனின் பணிப்பெண்.

## வின்ட்ஸாரின் இன்நகை மாதர்

**முன்னுரை** :—ஷேக்ஸ்பியர் நாடகங்களுள் நான்காம் ஹென்ரியின் கதையுறுப்பினனான ஜான் ஃபால்ஸ்டாஃப் பெருந்தகையின் ஒப்பற்ற நகைத்திறத்தை மேடையரங்கிற் கண்டு, ஆங்கில அரசி எலிஸபெத் ஷேக்ஸ்பியரிடம் "இதே பால்ஸ்டாஃபைக் காதலுள் ஈடுபடுத்திக் காட்டுக" என்று பணிக்க, அதன்படி எழுதப்பெற்றதே "வின்ட்ஸாரின் இன்னகைமாதர்" என்ற நாடகமாகும் என்பது வரன்முறைக்கதை.

ஆனால் நகையுலகில் ஒப்பற்ற அறிவாற்றலுடன் விளங்கிய இந்த ஃபால்ஸ்டாஃப் காதலுலகில் அறிவாற்றலும் செயலுமற்ற சொத்தையாகவே காணப்படுகிறான். "நான்காம் ஹென்ரி"யில் அவனது நயமிக்க உரைகளில் நம் கவனம் செல்லும். வின்ட்ஸாரின் "இன்னகைமாத"ரின் திறத்திலோ கதைப் போக்கிலேதான் மிகுதியும் பற்று ஏற்படக்கூடும்.

### கதை

#### 1. ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து......

**வின்ட்ஸார்**[1] நகரில் **திருவாளர் பேஜ்**[2] **ஃபோர்டு**[3] என்ற இரு குடியானவர் இருந்தனர். அவர்களுள் பேஜ் என்பவனுக்கு **ஆன்**[4] என்ற புதல்வியும் பள்ளியிற் பயிலும் சிறுவன் ஒருவனும் ஆக இருமக்கள் உண்டு. ஆன் அறிவிலும் அழகிலும் ஒப்பற்றவள்.

---

1. Windsor. 2. Mr. Page. 3. Mr. Ford. 4. Anne.

அதோடு அவள் தந்தை பெரும்பொருளீட்டி அவள் பங்கிற்கும் போதிய செல்வம் வைத்திருந்தான். எனவே பலரும் அவளை மணக்க விரும்பிவந்தனர். அவர்களிடையே **வழக்குத் தலைவன் ஷாலோவின்**[1] மைத்துனனான **ஸ்லெண்டரே**[2] திரு. பேஜுக்குப் பிடித்தமானவன். அவன் மனைவி **திருவாட்டி பேஜ்**[3] அவனுக்கு மாறாக **வேல்ஸ்**[4] நாட்டினனும் மருத்துவ **அறிஞனுமான கயஸையே**[5] மருகனாகக்கொள்ள விரும்பினாள். தன்முனைப்பு மிக்க ஆன் உள்ளூர இருவரிடமும் வெறுப்பே கொண்டாள். அவள் உள்ளத்தைக் கவர்ந்தவன் **ஃபென்டன்**[6] என்ற இளைஞனே. அவள் களவுமுறையில் அவனை மறைவிற் கண்டு உறவாடி வந்தாள்.

ஆனின் தாயாகிய திருவாட்டி பேஜ் தாய்மைப் பருவ மெய்தியவளாயினும் வனப்புக்குன்றாதவள். அதோடு நாட்டுப்புற மாதர்களைப் போலன்றி நாகரிகமாக உடுத்தும் பேசியும் வருபவள். அவள் அண்டை வீட்டுக்காரியும் ஆருயிர்த் தோழியுமாகிய **திருவாட்டி ஃபோர்டும்**[7] அப்படியே. நெஞ்சிற் கரவில்லாத அவ்விருவரும் தமக்கிடையேயும் பிறருடனும் மனம் விட்டுப் பேசிக்களித்தும், நாடகக்காட்சி முதலியவற்றிற்குச் சென்று களியாட்டயர்ந்தும் வந்தனர். திருவாட்டி பேஜின் கணவன் மனிதர் குணங்களையும் உலகியலையும் ஒப்ப அறிந்தவனாதலால் இவ்வெளித் தோற்றத்தைத் தீங்கற்றதாக ஏற்று மனைவியைப் பாராட்டிவந்தான். ஆனால் திரு. போர்டு தன் மனைவி

1. Justice Shallou. 2.. Slender. 3. Mrs. Page. 4. Wales. 5. Doctor Caius. 6. Fenton. 7. Mrs. Ford.

யின் பெருநடையான போக்குக்கண்டு, ஐயமும் வேற்றுணர்ச்சியுங் கொண்டு, தானுந் துன்புற்று அவளுக்குந் தொந்தரவு மிகுதி கொடுத்துவந்தான்.

சும்மா வாயை மெல்லுபவனுக்குக் கொஞ்சம் அவல் அகப்பட்டாற்போல் வெற்று ஐயங்கொண்ட அவனுக்குப் பற்றுக்கோடாக ஒரு செய்தி நிகழ்ந்தது. உயர் வகுப்பினரது நாகரிக நயத்துடன் இழிமக்கள் உறவும் நடையும் குறும்பும் மிக்க பகட்டாளன் ஒருவன் அந்நகரில் இருந்தான். அவன் பெயர் **ஜான் ஃபால்ஸ்டாஃப் பெருந்தகை**[1] என்பது. அவன் பாரிய உடலுடையவன். நகைச்சுவையாலும் ஆர்வமிக்க மொழிகளாலும் அரசன் முதல் ஆண்டிவரையும், அடியார் முதல் திருடர், கொள்ளைக்காரர் ஆகியவர் வரையும், கவர்ச்சி செய்து அவர்களை நயமாக ஏமாற்றித், தன் இன்ப வாழ்வினுக்கு உடந்தையாயிருக்கச் செய்தவன் அவன். மேலும் அவன் உயர்குடி மாதர் முதல் விடுதிப் பெண்கள் வரை அவ்வவர் நிலைக்கேற்றபடி அவர்களுக்குக் காதல்தூபமோ முகமனுரைத்தூபமோ காட்டி, அவர்களிடமிருந்து பொருள்பறித்துத் தன் சோம்பல் வாழ்வை நடத்திவந்தான். செல்வர் மனைவியராகவும் பகட்டாளராகவும் இருந்த திருவாட்டி பேஜ், திருவாட்டி ஃபோர்டு ஆகியவர் பிற குடியானவர் மாதரையும் பெண்களையும்போல் உயர் வகுப்பினளுகிய தன் காதல் வலையில் விழுவர் என்று ஃபால்ஸ்டாஃப் எண்ணி, அத்தகைய தூதுகளில் ஈடுபட்டவளான **திருவாட்டி விரைவுடையாள்**[2] மூலம் அவர்களிருவருக்கும் காதற்கடிதங்கள் வரைந்தான். அவற்றில்

1. Sir John Falstaff. 2. Mrs. Quickly.

மாதர் மயக்குகளுக்குப் புறம்பான தான் அவர்களை மனமாரக் காதலித்து விட்டதாகவும், அக் காதலுக்காக உயிரையும்விட ஒருங்கி இருப்பதாகவும் அவர்களைப் பலவாருகப் புனைந்து பாராட்டி எழுதியிருந்தான்.

தம்போன்ற, ஆனல் தம்மினும் உலகியல் அறிவு குறைந்த பல பெண்களை ஏமாற்றி இப்போது தங்களையும் ஏமாற்றப் பார்க்கும் இவ்வுயர்குல 'வீணனுக்கு' அவன் இனி என்றென்றும் இத்தகைய எண்ணங்களை எண்ணுதவண்ணம் நல்ல படிப்பினை தர வேண்டும் என்று இருவரும் ஒத்துப்பேசிக்கொண்டனர். அதன்படி திருவாட்டி ஃபோர்டு ஃபால்ஸ்டாஃபுக்கு மறுமொழி எழுதித் தன் வீட்டுக்கு அன்றிரவு பத்துப் பதினெரு மணிக்கிடையில் வரும்படி அவனைத் தூண்டினள்.

## 2. மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

பிறர் நால்வர் படுக்கப்போதிய பாரிய நாற்காலி ஒன்றில் அதன் கால்கள் வளைந்து நெளியும்படி கிடந்து புரண்டு கொண்டிருந்தான் ஃபால்ஸ்டாஃப் பெருந்தகை. தன் வலையிற்பட்ட பெண்களனைவரும் தன் அழகில் மயங்கித்தான் ஏமாந்தனர் என்று அவன் அடிக்கடி வீம்பு பேசுவதுண்டு. திருவாட்டி ஃபோர்டின் கடிதங் கண்டவுடன் தனக்கு உண்மையிலேயே அத்தகைய கவர்ச்சி உண்டோ என்று அவன் ஐயுறலானுன். பல தீச்செயல்களிற் கலந்தும் ஆழ்ந்த சூழ்ச்சித் திறமற்ற அவனுள்ளம், இதனுல் பூரிப்படைந்து அதனை அடக்க மாட்டாமல் தத்தளித்தது. அச்சமயம் அவன் யாரிடமாவது அதனைக் கூறவேண்டியிருந்தது.

ஊழ்வயத்தால் கூறத்தகாத ஒருவனிடமே, அஃதாவது அம்மாதின் கணவனிடமே, அவன் அதைக் கூறும்படி நேர்ந்தது.

தன் வீட்டிற்கு ஆட்கள் வருவதையும் போவதையும், திருவாட்டி பேஜுடன் தன் மனைவி உரையாடி உரையாடி மகிழ்வதையும், இருவரும் கலந்து கடிதம் அனுப்புவதையும் உற்றுக் கவனித்துக் கொண்டிருந்தான் திரு. ஃபோர்டு. அவன் கடிதம் கொண்டு செல்லும் மாதைத் தொடர்ந்து சென்று, அது ஃபால் ஸ்டாஃபிடம் கொடுக்கப்பட்டதைக் கண்டான். கண்டு இதனை முற்றிலும் உளவறிவோம் என்ற எண்ணத்துடன் மாற்றுருக்கொண்டு அவனிடம் சென்று, "ஐய, தம்மிடம் ஒரு காரியமாக வந்தேன். நான் பக்கத்தூரில் உள்ள செல்வன். என் பெயர் **புரூக்**[1]" என்றான்.

**ஃபால்:** என்னிடம் உனக்கு என்ன காரியம்.

**புரூக்:** எனக்குத் திருவாட்டி ஃபோர்டுமீது, அவள் சிறு பெண்ணாயிருக்கும்போதே காதல். என் தந்தை பிடிவாதத்தினால் நான் அவளை மணந்து கொள்ள முடியாமற்போயிற்று. ஆனால் எப்படியும் அவள் நட்பைப் பெறாது என் மனம் அமைதியுற இணங்க வில்லை. அதற்காக எவ்வளவு பணச்செலவு வந்தாலும் துன்பம் நேர்ந்தாலும் பட்டுக்கொள்வேன். அதுவகையில் தாங்கள் உதவக்கூடும் என்றுதான் வந்தேன்.

---

1. Brook.

**ஃபால் :** இதென்ன ஐயா! பொருத்தமற்ற பேச்சு; எனக்கும் இதற்கும் என்ன தொடர்பு இருக்கின்றது.

**புரூக் :** தொடர்பில்லாமலா நான் தங்களிடம் வருவேன். ஐயனே! பெண்டிர் எம்போலியர் பணத்தைப் பெற்றுச் செலவு செய்யக்கூடும். ஆனால் வேறு கவர்ச்சியில்லாத விடத்து அச்செல்வம் அவர்கள் ஒழுக்க வரம்பைக் கலையாது; தாமோ தமது பலவகைக் கவர்ச்சிகளால் அவ்வரம்பினைக் கடந்து செல்லும் ஆற்றல் உடையவர். ஆகவே தம் மூலம் இதில் நான் வெற்றி கைவரப்பெறுவேன் என்று நம்புகிறேன்.

**ஃபால் :** இன்னும் நீர் சொல்வது எனக்கு விளங்கவில்லையே. நீர் சொல்லுகிறபடியேதான் வைத்துக் கொண்டாலுங்கூட நான் வரம்பு கடப்பதால் உமக்கென்ன நன்மை?

**புரூக் :** நான் ஆய்ந்தோய்ந்துபாராமல் தங்களைத் தேடி வரவில்லை. ஐயனே! அவளது கற்பியல் வரம்பு கண்டு அஞ்சிய என் போன்றவர், தாங்கள் அதனைத் தகர்த்துச் சென்ற வழியைப் பிடித்து எளிதில் செல்லலாம் அல்லவா? ஆகவே அஞ்சாது இப்பொருளை எடுத்துச் செலவு செய்து எனக்கு அப்பக்கம் வழி ஏற்படுமாறு செய்தருள்க.

## 3. படாதவரும் முகமனிற் படுவர்

முகமனில் யாரும் கரையாதிருக்க முடியாது. அதிலும் தாம் விரும்பும், ஆனால் தம்மிடமில்லாத பண்புகள் தம்மிடம் இருப்பனவாக வானளாவப்

புகழ்ந்தால் அதில் மகிழாதவர் யார்? ஃபால்ஸ்டாஃப் அக் குழியில் விழுந்து அவனுக்குதவுவதாக உறுதி கொடுத்ததுடன் நில்லாது, பின்னும் நெருக்கமாக அவனை அணுகி, "இவ்வளவு நேரம் நட்பான பின் உன்னுடன் ஒளிப்பானேன்; நான் இன்றே நீ கூறிய பெண்மணியிடம் போக இருக்கிறேன். அவள் என்னைத் தன் வீடு வரும்படி தானாகவே எழுதியிருக்கிறாள். பத்துப் பதினொன்று மணிக்கிடையில் நான் போவேன். நாளை என்னைத் தொடர்ந்து நீயும் வரலாம். அந்த அப்பாவி ஃபோர்டின் குடிக்கு இனி நீயே தலைவன் என்று வைத்துக்கொள்," என்று தட்டிக் கொடுத்தான்.

புரூக் உருவில் வந்த ஃபோர்டு உள்ளூரப் பொங்கி வரும் உளக் கொதிப்பை அடக்கிக்கொண்டு, "அப்படியா? அவ்வளவு தொலை காரியம் சென்றுவிட்டதா? வரட்டும்; புள்ளியைக் கையும் மெய்யுமாகப் பிடித்தபின் என்னபாடு படுத்துகிறேன், பார்!" என்று, உள்ளூரக் கறுவினான்.

## 4. நகை மாதர் கூத்து

அன்று திருவாட்டி ஃபோர்டு வீட்டில் ஃபால்ஸ்டாஃப் புகுந்து உட்கார்ந்ததுதான் தாமதம். முன்னேற்பாட்டின்படியே திருவாட்டி பேஜ் படபடப்புடன் கையை நெரித்துக்கொண்டே அங்கலாய்ப்புடன் உள்ளே வந்து, "இஃது என்னடி போதாத காலம்! உன் கணவன் என் கணவனையும் ஊர் மக்களையும் திரட்டிக்கொண்டு ஆர்ப்பாட்டமாக இப்பக்கம் வருகிறான். அவன் உளவு கண்டிருக்கிறானாம்; களவு

கண்டு பிடிக்கப் போகிறாளும். இந்த வீட்டினுள்ளாக இப்போது நீ ஒருவனை ஒளித்து வைத்திருக்கிறாயாம். உன் திருட்டைக் கண்டு பிடித்து உன்னை ஊராரறிய அவமதிக்கப் போகிறாளும்" என்றாள்.

திருவாட்டி ஃபோர்டு அஞ்சியவள்போல் நடு நடுங்கி, 'நான் இனி என்ன செய்வேன்; இனி என்ன செய்வேன்?' என்றாள்.

**தி-டி பேஜ்:** ஏனடி நீ அஞ்சவேண்டும்? இங்கே தேடி ஆளகப்பட்டால் தானே. ஆளகப்படா விட்டால் அவனுக்குத் தானே அவமதிப்பு?

**தி-டி ஃபோர்டு:** (கையை நெரித்துக்கொண்டு) ஆள்தான் இதோ இருக்கிறானே யம்மா? நான் இனி என்ன செய்வது?

**தி-டி பேஜ்:** அப்படியா செய்தி; சரி! இனி எப்படியாவது தப்பத்தான் வழிதேடவேண்டும். (சுற்றிப் பார்த்துப், புன்முறுவலுடன்) இதோ எனக்கொரு வழி தோன்றுகிறது. அழுக்குத் துணிகளைப் போட்டு வைக்கும் இப்பெரிய கூடைக்குள் இவனை வைத்துத் துணிகளால் மூடிவிட்டால், வேலைக்காரர்களைக் கொண்டு வெளியே தூக்கிக்கொண்டு போகச் சொல்லலாம்.

**தி-டி ஃபோர்டு:** (சிரிப்பை அடக்கிய வண்ணம்) அதற்குள் இப்பாரிய உடல் போகாதே!

உயிர் வேறாகவும் உடல் வேறாகவும் நின்ற ஃபால்ஸ்டாஃப் பரபரப்புடன் "போகும், போகும். நான் அப்படியே போய்விடுகிறேன்," என்றான்.

இருமாதரும் அவனைச் சுருட்டிமடக்கிக் கூடைக்குள் திணித்து, அழுக்குத் துணிகளையும் பாண்டலடைந்த கந்தைகளையும் அவனைச் சுற்றிலும் மேலும் திணித்து, வேலைக்காரரிடம் கூடையை வெளியே ஆற்றுப்பக்கங் கொண்டு செல்லும்படி கூறினர். வழியிலேயே ஐயப்பேயின் ஆட்டத்திற்கு உள்ளான திரு. ஃபோர்டு, அதனைக் கீழே இறக்கி வைக்கும்படி கூறியதுடன் அதனுள் துணி தவிர வேறு எதுவும் இல்லையே என்றுங் கேட்டான். இக் கேள்வியால் தனக்குப் பேரிழிவு ஏற்பட்டது கண்டு மேலும் அதனைத் துழவாமல் விட்டுவிட்டு, அவன் வீட்டிற்குச் சென்று அங்கேயும் பெட்டி தொட்டிகளெல்லாம் ஆர்ப்பாட்டம் செய்து தேடி அலுத்தான். இறுதியில் வேறு வகையின்றித் தான் ஐயுற்றது தவறென்று எல்லாரிடமும் மனைவியிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

ஃபால்ஸ்டாஃப் அன்று பட்டபாடு சில நாளில் மறக்கக்கூடியதன்று. கூடையில் அப் பாரிய உடலை அடக்கி முடக்கி வைத்திருந்ததனால் ஏற்பட்ட உடல் துன்பம், வீட்டிலும், வெளியில் திரு. ஃபோர்டு ஆராய்வின் போதும் எங்கே அகப்பட்டு மானமும் கெட்டு உயிரும் இழக்க நேரிடுமோ என்ற அச்சம், ஆகியவற்றால் அடைந்த வருத்தம் போதாமல், அம் மாதர் மறைவான தூண்டுதலால் வேலையாட்கள் ஆற்றில் சேறு மிகுந்த பகுதியில் அவனைக் கூடையுடன் அமிழ்த்திவிடவே, திணறி நீந்த முடியாமல் கூடையினுள்ளிருந்து தத்தளித்து, இறுதியில் உடல்சோர்ந்து, உளம் சோர்ந்து, சேற்றில் தோய்ந்த ஆடைகளுடன்

அவன் விடுதி வந்து சேர்ந்தான். இவ்வளவுக்கும் காரணமான அம்மாதர்கள்மீதே அவன் புழுக்கம் முற்றும் சென்றது. அவர்களை அவன் உள்ளூர வையாத வசவு இல்லை.

ஆனால் அவன் அம்மாதரை அறிந்ததைவிட அவர்கள் அவனை நன்கு அறிந்துவைத் திருந்தனர். பெண்வழி மனம்போகவிட்டவனுக்கு மானமுமில்லை; சுரணையுமில்லை என்று அவர்கள் அறிந்து, அவனை இன்னும் அலைக்கழித்து ஒறுக்கத் தலைப்பட்டனர். முன் காதல் தூதுசென்ற அதே மாதினிடமாகத் தம்மிடம் யாதொரு குற்றமும் இல்லாதது போலவும், நடந்துவிட்ட தீங்குகளுக்கு அவனைவிடத் தாம் வருந்துவதாகவும், அதற்காகத் தம்மை வெறுத்துத் தமக்கு ஆறுதல் இல்லாமல் செய்துவிடப்படாதென்றும், மறுநாள் எட்டு ஒன்பதுக்கிடையில் பகலிலேயே வந்தால் இவை யெல்லாவற்றையும் மறக்கடிக்கும் வண்ணம் அவனைக் காதற்கடலி லாழ்த்திவிடுவதாகவும் அவர்கள் பலவகையிலும் பசப்புரைகள் கலந்து எழுதி யிருந்தனர். தோல்விகளை மறக்கடிப்பது வெற்றியே யெனத் துணிந்து, ஃபால்ஸ்டாஃப் மீண்டும் அவர்கள் பொறியில் வந்துவிழ ஒருப்பட்டான். அதோடு இம்முறையும் புரூக்கிடம் நம்பகமாக அத்தனை செய்திகளையும் கூறி, ‘நாளையுடன் உன் காரியம் பழுந்தான்’ என்று ஊக்கந்தந்து தட்டிக் கொடுத்தான்.

ஃபால்ஸ்டாஃபுக்கு எவ்வகையிலும் இளைக்காத முதல்தர அறிவிலியாகிய திரு. ஃபோர்டு முன்னிலும் பன்மடங்கு ஐயத்துடன், மறுநாள்

நண்பரைத் திரட்டி இழுத்துக்கொண்டு சென்று வீட்டின் எல்லா இடங்களையும் தேடினான். ஆனால் இம் முறை அவ் வின்நகை மாதர் அவனை எங்கும் ஒளித்து வைக்கவில்லை. அவனுக்குச் சேலையும் கச்சும் கட்டிப் பெண்ணுருவுடன் கூட்டி வந்தனர். கிட்டத் தட்ட இதே உருவும் வடிவும் உடைய சூனியக்காரி ஒருத்தி பக்கத்து ஊரில் இருந்தாள். அவளைப் பெண்டிர், வீட்டிற் கழைத்துக் குறி கேட்கவும் வினை வைக்கவும் தூண்டுவ துண்டு. திரு. ஃபோர்டுக்கு அவள்மீது மிகவும் வெறுப்பு. அவளை வீட்டிலேற்றவே கூடாது என்று அவன் திட்டப்படுத்தியிருந்தான். ஃபால்ஸ்டாஃபைச் சூனியக்காரி என்று நினைந்த அவன், தன் ஆணையை மீறி அவளை வீட்டில் அழைத்து வைத்த தன் மனைவியிடங் கொண்ட சீற்றம் முழுவதையும் தற்காலிகமாக அச் சூனியக்காரி மீது காட்டி, அவளுருவில் வந்த ஃபால்ஸ்டாஃபை நையப் புடைத்து வெளியே தள்ளினான். திருடன் கையில் தேள்கொட்டியதுபோல, ஃபால்ஸ்டாஃபும் தன் மெய்ம்மையை விள்ளவுமாட்டாமல் பொய்ம்மையை விலக்கவுமாட்டாமல் தவித்தான்.

இருமுறை இங்ஙனம் அவனைக் குற்றுயிராக்கியும் அவன்மீது நகைமாதர் இருவரது கொதிப்பும் தீர்ந்தபாடில்லை; அவனை மீண்டும் ஏமாற்ற முடியும் என்ற நம்பிக்கையும் அவர்களிடம் சற்றுந் தளரவில்லை. ஆனால் சூழ்ச்சி மட்டும் இத்தடவை எவரையும் திகைக்கச் செய்வதாகவும் சிக்கலானதாகவும் இருந்தது. அதோடு அச்சூழ்ச்சி ஃபால்ஸ்டாஃபுக்காக மட்டிலும் அமைக்கப் பெறவில்லை. அவனோடு ஆனின்

காதலரையும் அவள் தந்தையையும் அதில் மாட்ட ஏற்பாடாயிற்று. ஆனின் கைத்திறம் வேறு அச் சூழ்ச்சியில் சித்திர வேலை செய்து அவள் தாயையும் கூட அதில் சிக்கவைத்தது.

ஆனைக் காதலித்தவருள் அவள் தனக்குக் கிட்ட மாட்டாள் என்றறிந்து ஆய்ந்தமைந்தவன், அயர் லாந்துக்காரனும், சமயத் தலைவனுமாகிய **ஹியூப் பெருந்தகையே.**[1] அவன் சமயச்சார்பான நாடகங்களில் பிள்ளைகளை அரமங்கையராகவும் அரமைந்தராகவும் நடிக்கப் பழக்கி வந்தான். அவ்வாண்டு மே விழா வன்று அவன் முன்னமேயே ஆனின் உடன்பிறந் தானையும் ஆனையும், பிற சிறுவர்களையும் பயிற்று வித்து வைத்திருந்தான். நகைமாதர் இதே மே விழா நாளில் நள்ளிரவில் ஊர்ப்புறத்துள்ள பெரிய மர மொன்றின்கீழ் தம்மை வந்து காணும்படி ஃபால் ஸ்டாஃபுக்கு எழுதியிருந்தனர். இம்மரம் கொம்பேறி என்ற பேய் குடிகொண்டதென மக்கள் நம்பி அதனை நெருங்காது விலக்கி வந்தனர். அதனால் எவரும் தம்மை அங்கு வந்து தொந்தரவு செய்ய மாட்டாரெனவும், அதிலும் அவனே கொம்புகளுட னும் சங்கிலிகளுடனும் கொம்பேறி உருவில் வந்தால் இன்னும் பாதுகாப்பா யிருக்கும் எனவும் அவர்கள் ஃபால்ஸ்டாஃபைத் தூண்டினார்கள். அதே சமயம் அவர்கள் மே விழாக் குழாத்தினரும் கையில் ஊசி களுடனும் பெட்டிகள் வைத்து மறைத்த விளக்கு களுடனும் அண்டையிலுள்ள இடுகாட்டுக் குழி களில் ஒளிந்திருக்க ஏற்பாடு செய்தார்கள். மாதர்

1. Sir High the Parson.

போலிக்காதற் காட்சியினிடையில் ஒரு குறிப்புக் காட்டியவுடன், அனைவரும் ஃபால்ஸ்டாஃபைச் சூழ வேண்டுமென்றும், அவர்கள் அரமங்கையர் அர மைந்தர் என்றெண்ணித் தீநெஞ்சினனாகிய ஃபால் ஸ்டாஃப் அவர்களைக் காண அஞ்சுவான் என்றும், கண்ணை மூடிக்கொண்டிருக்கும் அவன்மீது விளக் கொளியையும் ஊசியையும் நீட்டி, “உன்னைத் தீண்டு கிறோம்; நல்லெண்ணத்தவனானால் இன்புறுக! தீ எண்ணத்தவனானால் துன்புறுக!” என்று கூறிக் கொண்டே தீயால் சுடவும் ஊசியால் குத்தவும் வேண் டும் என்றும் ஏற்பாடாயிற்று. இதுவே இம்முறை ஃபால்ஸ்டாஃபைத் துன்புறுத்த நகைமாதர் அமைத்த சூழ்ச்சி.

ஆனால் இதே சூழ்ச்சியால் வேறு சில காரியங்களை யும் முடித்துக்கொள்ள எண்ணினர் ஆனின் தாய் தந்தையர். திரு. பேஜ் தன் நண்பனான ஸ்லெண்டரை அவள் மணக்கும்படி செய்யவேண்டும் என்று காத்தி ருந்தான். இஃது அதனை எளிதில் முடித்துவிட நல்ல தறுவாய் என்று அவன் எண்ணி, அவளை அரநாட் டரசியாக வெள்ளாடையுடன் நடிக்கும்படி தூண்டி, ஸ்லெண்டரிடம் சென்று இச்செய்தியைக் கூறி அவ் வெள்ளாடையையே அடையாளமாகக்கொண்டு அவளை இட்டுச்சென்று மணம் புரிந்துகொள்ளுமாறு அவன் கூறியிருந்தான். ஆனால் கள்ளன் வீட்டில் குள்ளன் புகுந்ததுபோல், அவன் மனைவி தன் மகளைத் தனியாக அழைத்து, வெள்ளாடையை அவள் பணிப் பெண்ணுக்கு உடுத்திவிட்டுப் பச்சை ஆடை உடுத்தி வரும்படி கூறினாள். அதன்பின் அவள் மருத்துவ

அறிஞர் கயசுக்கு ஆளனுப்பி, அப்பச்சை ஆடையையே அடையாளமாகக் கொண்டு அவளைத் தனியாக அழைத்துச் சென்று அவளை மணம் புரிந்து கொள்ளும்படி ஏவினள். உள்ளூர இருவர் திட்டத்தையும் தகர்த்து ஆன், தன் தம்பிக்கு அப்பச்சை ஆடையைத் தந்துவிட்டுத் தான் சிவப்பு ஆடை அணிந்துகொண்டாள். தன் காதலனாகிய ஃபெண்டனைக்கண்டு அச்சிவப்பு ஆடை மூலம் தன்னை அடையாளங் கண்டு இட்டுச் சென்று மணவினையிற் கொள்ளும்படி கேட்டுக் கொண்டாள்.

கொம்பேறி உருவில் வந்த ஃபால்ஸ்டாஃபைத் திருவாட்டி ஃபோர்டு ஒருபுறம், திருவாட்டி பேஜ் ஒருபுறம் நின்று, ஒரே சமயம் இருவரும் காதலிப்பதாக நடித்து அவனை நயமாக வதைத்தனர். ஒருவர்க்கெதிராக ஒருவர் போட்டியிடுவதுபோல் நடித்த அவ்விருவரின் கேலிக் காதலிடையே, அவன் இருபுறமும் காதல் நாடகம் நடிக்க முடியாமல் தவித்தான். நீர் நிறைந்த இடத்தில் நீர்வீடாய் தணிக்கமாட்டாது உயிர் விடுபவர் நிலையே அவனது அப்போதைய நிலை. அதனிடையில் பேரரவத்துடன் அரமங்கையர் குழாம் வந்து அவனைச் சூழவே, அவன் தான் தீயவனுதலால் அவர்கள்மீது விழிக்கப்படாதென்று கண்ணை மூடிக் குப்புறப்படுத்துக் கொண்டான். அர நாட்டரசி, "எங்கோ தீவினையின் வாடை தென்படுகிறது! எல்லாரும் விரல் கொண்டு சுற்றிலும் தீண்டி நோக்குக! நல்வினையாளரிருப்பின் இன்புறுவர்; தீவினையாளர் இருப்பின் துன்புறுவர்" என்றாள். விரல்களைக் கொண்டு தீண்டுவதாக நடித்து, அவர்

கள் உண்மையில் விளக்கொளியையும் ஊசியையும் கொண்டு தாக்கினர். ஒரு மணிநேரம் ஃபால்ஸ்டாஃ பைப் பிள்ளைகள் விட்டிலேப்படுத்திய பாடு படுத்திய பின், திருவாட்டி பேஜும் திருவாட்டி ஃபோர்டும் அவர்கள் கணவரும் வந்து அவனை விடுவித்து உண்மையை வெளிப்படுத்தி, இனியேனும் இவ் வகைப்பட்ட இழிதகைமையுடைய எண்ணங்களுக்கு இடந்தாரா திருக்கும்படி எச்சரித்தனர். தப்பினேம் பிழைத்தோம் என்று ஃபால்ஸ்டாஃப் ஓடினன்.

ஸ்லென்டரும் கயசும் தமக்குத் தரப்பட்ட அடை யாளப்படி பணிப்பெண்ணையும் பையனையும் இட்டுச் சென்றனர். ஸ்லென்டரின் மணம் பணிப்பெண் ணுடன் உறுதிப்பட்டு அவன் பெருமை எல்லாம் குலைந்தது. கயஸ், மணவினைக்கு முன்னுகவே ஆன் என்றெண்ணிய உருவம் ஆனுமன்று, பெண்கூட அன்று என்று கண்டு சினந்து திருவாட்டி பேஜினிடம் வந்தான். அவளும் அவள் கணவனும் தம்மையும் மிஞ்சி நடந்த தவறு யாது என வியந்து ஃபால்ஸ்டா ஃபின் துயரினும் மிகுதியான துயருற்றனர். அச் சமயம் ஆன் மணமாலையுடன் ஃபென்டனை அழைத்து வந்து "இவர் என் கணவர். எங்களுக்கு வாழ்த்துரை தருவீராக!" என்று கூறி, இருவரும் அவர்கள் காலில் விழுந்தனர். நடந்ததெல்லாம் நன்மைக்கே எனத் தேறித் திரு. பேஜும் அவன் மனைவியும் தம் மகளை யும் மருகனையும் ஏற்று நல்லுரை கூறினர். தம்பொறி யில் தாமே வீழ்ந்தமை யுணர்ந்து, இனித் தீமையை ஒறுக்கக்கூட எவருக்கும் இழிந்த சூழ்ச்சி செய்வ தில்லை என அவர்கள் உறுதிகொண்டார்கள்.

## IV. மூன்றும் ரிச்சர்டு

(கதை உறுப்பினர்)

ஆடவர்

1. மூன்றும் ரிச்சர்டு அரசன் : கிளஸ்டர் கோமகன்—நான்காம் எட்வர்டின் தம்பி.
2. நான்காம் எட்வர்டு அரசன் : மூன்றும் ரிச்சர்டுக்கு முந்திய அரசன்—அவன் அண்ணன்.
3. ஜார்ஜ் கிளாரென்ஸ் கோமகன்: எட்வர்டு, ரிச்சர்டு ஆகிய இருவருக்கும் தம்பி—ரிச்சர்டால் கொலையுண்டவன்.
4. ஆறும் ஹென்ரி அரசன் : மூன்றும் ரிச்சர்டுக்கும் நான்காம் எட்வர்டுக்கும் முந்திய அரசன்—எட்வர்டால் சிறையுண்டு ரிச்சர்டு கைப்பட்டுக் கொலையுண்டவன்—மார்கரட் கணவன்.
5. ஹென்ரி ரிச்மண்டு கோமகன் : ரிச்சர்டுக்குப் போட்டியான அரசுரிமையாளன் — ரிச்சர்டைக் கொன்று வென்று ஏழாம் ஹென்ரி அரசனானவன்.
6. ஸ்டான்லிப் பெருமகன் : ரிச்சர்டின் மாற்றுந் தந்தை—ரிச்சர்டின் கட்சியிலேயே நெடுநாள் இருந்தவன்.
7. ரிவர்ஸ் கோமகன் : எலிஸபெத் அரசியின் உடன் பிறந்தான்.
8. டார்ஸட் கோமகன் தாமஸ்:
9. ரிச்சர்டு கிரேப் பெருந்தகை :

(8, 9: எலிசபெத் அரசியின் முதல் மணத்து மக்கள்.)

(7–9: ரிச்சர்டால் கொலையுண்டவர்)

10. ஹேஸ்டிங்ஸ் பெருமகன்:- அரசுரிமைத் தோழன்; அரசி கட்சியை எதிர்த்தும் இளவரசரை எதிர்க்கத் தயங்கியதால் கொலையுண்டவன்.
11. பக்கிங்ஹாம் கோமகன் : அரசனுடன் முடிசூடும் வரை ஒத்துழைத்தும், முன் உறுதிதந்த பெருநிலக்கிழமை கேட்க, அதனுல்பகைக்கப்பெற்றுக் கிளர்ச்சிசெய்து தூக்கிடப் பெற்றவன்.
12. கேட்ஸ்பி — ஹேஸ்டிங்ஸ் வேலையாளும் ரிச்சர்டின் உளவாளுமாவன்.
13. எட்வர்டு இளவரசன்.
14. எட்வர்டு இளவரசன் தம்பி.

பெண்டிர்.

1. மார்கரட் அரசி: ஆறும் ஹென்ரியின் மனைவி.
2. எலிசபெத் கிரே அரசி: நான்காம் எட்வர்டின் மனைவி உட்வில் குடியினள்.
3. யார்க் கோமாட்டி: நான்காம் எட்வர்டு, மூன்றும் ரிச்சர்டு, கிளாரன்ஸ் கோமகன் ஜார்ஜ் ஆகிய இம்மூவரின் தாய்.
4. ஜேன் பெருமாட்டி: ஆறும் ஹென்ரியின் மகனுகிய இளவரசன் மனைவி — ரிச்சர்டால் வலுகட்டாய மணம் செய்யப் பெற்றவள்— மீண்டும் எலிசபெத்தின் மகளை மணக்கும் எண்ணத்துடன் அவனால் கொலையுண்டவள்.
5. எலிசபெத் இளவரசி: எலிசபெத் அரசி மகள்.

## மூன்றும் ரிச்சர்டு

## கதைச் சுருக்கம்

மூன்றும் ரிச்சர்டு ஆறும் ஹென்ரி அரசனை வென்று சிறையிட்ட அரசனுகிய நான்காம் எட்வர்டின் தம்பியருள் ஒருவன். எட்வர்டின் வலிமையை உணர்ந்து அவன் மற்றத் தம்பியாகிய கிளாரன்ஸ் கோமகனை ஜார்ஜைப்போல் எதிரி பக்கம் சாயாமல் எட்வர்டின் நண்பனுகவே கடைசிவரை நடித்தான். ஆயினும் எட்வர்டு இறந்தவுடன் தானே அரசனுகும்படி அவன் எல்லாவகையான சூழ்ச்சிகளையும் வஞ்சச் செயல்களையும் செய்தான். முதலில் சிறைப்பட்டிருந்த பழைய அரசனுகிய ஆறும் ஹென்ரியைக் கொன்முன். அவன் உடலை அடக்கம் செய்யச் செல்லும்வழியிலேயே அவன் இறந்துபோன மகன் மனைவியாகிய ஜேன் பெருமாட்டியை அச்சுறுத்தி வலிந்து மணஞ்செய்து தன் திமுயற்சிகளுக்கான செலவுக்காக அவன் செல்வத்தைக் கவர்ந்தான். இம்மணத்திற்குத் தன் உடன்பிறந்தான் ஜார்ஜ் தடையாய் இருப்பானென்று கருதி, அவனுக்கும் மற்ற உடன் பிறந்தானுகிய மன்னன் எட்வர்டுக்குமிடையில் திராப்பகையை

மூட்டி ஜார்ஜைச் சிறையிடுவித்து மறைந்திருந்து தானே கொன்ருன். பின் எட்வர்டு இறந்தபின் அரசியின் உறவினரை வெறுத்த பெருங்குடி மக்களைச் சேர்த்துக்கொண்டு முதலில் அவ்வுறவினரிடையே தலைவனை ரிவர்ஸ் கோமான் (அரசியின் அண்ணன்), டார்ஸட் கோமான், ரிச்சர்டு கிரேப் பெருந்தகை (அரசியின் முதல் மணத்து மக்கள்) ஆகியவரைக் கொன்றொழித்தான். பின் அரசுரிமையை எதிர்த்த ஹேஸ்டிங்ஸ் வீழ்ச்சியடைந்தான். எட்வர்டின் பிள்ளைகளாகிய இளவரசர் இருவரும் சிறைப்பட்டு மணக்கூண்டில் அவன் கூலிபெற்ற போக்கிலிகளால் கொல்லப்பட்டனர். இறுதியில் இதுகாறும் உடந்தையா யிருந்த பக்கிங்ஹாம் கோமகனுக்கு முன் உறுதியளித்த ஹெரிபோர்டு பெருநிலக்கிழமையைத் தாராது ஏமாற்றினுன்.

பக்கிங்ஹாம் எளிதில் அவனிடமிருந்து தப்பித் தான் சிறைப்படுத்தி வைத்திருந்த அரசனுடைய பகைவரை விடுதலை செய்து, அரசன் குடிக்குப் போட்டியாய் அரசுரிமைக்கு வாதாடிய ஹென்ரி ரிச்மண்டு என்பவனுடன் ஃபிரான்சில் சென்று சேரும்படி அவர்களைத் தூண்டினுன். இங்கிலாந்திலும் அவர்களுக்கு உதவ அவன் ஒரு கிளர்ச்சியை எழுப்பினுன். ரிச்சர்டு கிளர்ச்சியை அடக்கப் பக்கிங்ஹாம் கோமகனைத் தூக்கிட்டான். பின் ஜேனைக் கொல்வித்து அவளை முன் வலியுறுத்தி மணந்ததுபோலவே தன் அண்ணன் மனைவியாகிய எலிசபெத் அரசியையும் அச்சுறுத்தி அவள் மகள் எலிசபெத் இளவரசியை மணக்க முயன்ருன். ஆனுல் இத்தடவை அவன் வெற்றிபெறவில்லை. நேர்மாருக எலிசபெத் அவன்மீது சீற்றங்கொண்டு ஃபிரான்சு சென்று தன்மகளை அவன் எதிரி ஹென்ரி ரிச்மெண்டுக்கே மணம் செய்வித்தாள். இங்ஙனம் உரம்பெற்ற ஹென்ரி இங்கிலாந்தின் மீது படையெடுத்து பாஸ்வொர்த் சண்டையில் ரிச்சர்டைக் கொன்று ஏழாம் ஹென்ரியாக இங்கிலாந்தின் அரசுரிமை பெற்ருன்.

---

# IV. மூன்றும் ரிச்சர்டு [1]

## 1. எட்வர்டு அரசனும் ரிச்சர்டும்

இங்கிலாந்தின் மன்னருள் வாழ்க்கை முற்றிலும் துன்பத்துக் காளான தீவினையாளன் ஆறும் ஹென்ரி அரசனே. ஆனால் வாழ்க்கை முற்றிலும் பிறருக்குத் துன்பமே யிழைத்துப் படுகொலைகளையும் தீச்செயல் களையும் அஞ்சாது செய்த அரசனும் உண்டு. அவனே மூன்றும் ரிச்சர்டு[1]. தன் அண்ணனுகிய நான்காம் எட்வர்டு அரசனுயிருக்கும்போது அரசுரிமைக்கு முன்னேற்பாடாக அவன் செய்த கொலைகள் பல. அதன்பின் அவன் அவ்வுரிமையைக் காக்க இயற்றிய செயல்கள் அவற்றினும் மிகுதியாகவும் அவற்றை விடக் கொடுமையானவை யாகவும் இருந்தன.

ஆறும் ஹென்ரி அரசன் மணிக்கூண்டில் சிறைப் பட்டிருந்தாலும், அவன் பெயராலும் அவன் மகன் எட்வர்டு இளவரசன் பெயராலும் அவன் மனைவியா கிய மார்கரட் பெண்புலிபோல் மீண்டும் மீண்டும் பாய்ந்து வந்து சண்டைசெய்து வந்தாள். எட்வர் டின்மீது பொருமைகொண்ட வார்விக்கோமகனும், எட்வர்டின் தம்பி கிளாரன்ஸ் கோமகன்[2] ஜியார்ஜூம் அவள் பக்கம் சென்று சேர்ந்தனர். அவள் அவர்கள் உறவை வலியுறுத்தும்படி எட்வர்டு இளவரசனுக்கு வார்விக்கின் புதல்வியாகிய ஜேன்பெருமாட்டியை யும், கிளாரென்ஸூக்கு வார்விக்கின் இன்னொரு புதல்வியையும் மணம் புரிவித்தாள். ஆனால் ட்யூக் ஸ்பரிச் சண்டையில் அவளுடைய இரு கோட்டை

---

1. King Richard III. 2. Duke of Clarence.

களும் தகர்ந்தன. கோழையாகிய ஜியார்ஜ் மீண்டும் அண்ணனுடனேயே சென்று சேர்ந்துகொண்டான். போரில் இளவரசனும் சிறைப்பட்டு விடவே, அவனை எட்வர்ட்டு அரசனும் ரிச்சர்டும் குருதியாரோடு வதைத்துக் கொன்றூர்கள். தன் போர்களுக்கெல்லாம் உயிர்நிலையான மகனைப் பறிகொடுத்த மார்கரட் பழி ஒன்றைத் தவிர மற்றவை எல்லாம் மறந்து அவர்களை வாயார வைது தூற்றிவந்தாள்.

நான்காம் எட்வர்டு அரசன் அஞ்சா நெஞ்சினன்; போரில் கொடும் புலிபோல நின்று எதிரிகளை அடர்த்தழிப்பவன்; அரசியல் சூழ்ச்சிகளிலும் வல்லவன். ஆகவே அவன் பூசலும் போரும் மிக்க அந்நாளில் எளிதில் ஆட்சியைக் கைக்கொண்டதில் வியப்பில்லை. ஆனால் வெற்றியஞ் செல்வியின் புன்முறுவல் இளமையிலேயே அவன் பேராவல்களுக்கு முழுமையும் நிறைவு தந்தது. அவ்வெற்றிகளிடையே அவனுடைய வேறு சில பண்புகள் வெளியாயின. அவன் போரில் எவ்வளவு வீரனோ அவ்வளவு வாழ்வில் இன்ப விருப்பினனாயும் இருந்தான். இளமைக்காலப் போர்களில் இருப்புக் கம்பிகள்போல் இறுகிய அவன் நரம்பு நாடிகள், வெற்றியின் பின் உணவின்பம், குடியின்பம், நல்வாழ்வின்பம் ஆகிய நறைகளிற் கிடந்து தளர்ச்சியும் பூரிப்பும் அடைந்தன.

ஆனால் புலி பசியாறி இளைப்பாறினும் நகங்களின் கூர்மை குன்றுவதில்லை. அது போலவே அவனை எதிர்த்தவர்கள் அவன் பழைய ஆற்றலின் அளவை மீட்டும் ஒருமுறை கண்டார்கள். கிளா

ரென்சும் வார்விக்கும் இச் செய்தி அறியாது அவனை எதிர்த்து முறிவடைந்தனர். எட்வர்டு பெருந் தன்மையுடன் கிளாரென்ஸை மன்னித்தான். எட்வர்டின் மற்றத் தம்பியாகிய ரிச்சர்டு இவை அனைத் தையும் பார்த்துக்கொண் டிருந்தான். அவன் பேரா வல் எட்வர்டின் ஆவலைவிடக் குறைந்ததன்று. போரில் அவன் எட்வர்டுடன் சரி நிகராயிருந்து வெற்றி தேடியிருந்தான். தன் பேரவாவுக்குத் தடையா யிருப்பவர்களை ஒழிப்பதில் எத்தகைய தயக்கமும் இருவரிடையேயும் கிடையாது. ஆனால் எட்வர்டின் காலம் அது; தன் காலம் வரவில்லை என்று ரிச்சர்டு காத்துக்கொண்டிருந்தான்.

எட்வர்டு தன்னலமும் சூழ்ச்சியும் நிறைந்த வனே. பழிச்செயல் எதற்கும் அஞ்சாதவனே. ஆயினும் மனைவி மக்களிடம் அவன் கொண்ட பற்று அவனுக்கு மனித உணர்ச்சியை உண்டுபண்ணிற்று. நடுத்தரக்குடியிற் பிறந்த எலிசபெத் உட்விலை அவன் மணந்தபின் அவன் அவளுடைய உறவினருக்கு உயர்வும் செல்வமும் தந்தான். மேலும் தனக்குப் பின் தன் குழந்தைகளின் அரசுரிமைக்கு எத்தகைய இடையூறும் இருக்கப்படாதென்ற கவலைகொண்டு அதற்கான முன் ஏற்பாடுகளில் அவன் முனைந்துவந்தான்.

ஆனால் எட்வர்டிடம் கண்ட இம்மனித உணர்ச்சிக்கும் கனிவுக்கும் ரிச்சர்டிடம் இடமில்லை. எத்தகைய விலங்கியல்கொண்ட மனிதருக்கும் பெண்கள் பிள்ளைகள் ஆகியவர்களின் காதல் கனிவுதரும் என்று கூறுவதுண்டு. அதற்கு முற்றிலும் விலக்கானவன் ரிச்சர்டு. அவன் போரில் கொல்பவன்

மட்டிலுமல்லன்; பொது வாழ்விலும் அண்ணன் தம்பி யென்றும், மனைவி மக்களென்றும் பாராமல் தனக்குத் தடையா யிருப்பவர்களைப் படுகொலை செய்து, குருதி ஆறொழுக்கிய கொடியவன் அவன். பேய்க்கும் தாய் பிள்ளை தெரியும் என்பார்கள். ஆனால் ரிச்சர்டு தாய் பிள்ளைப் பற்றுக்கூட அற்றவன். பேய் மன முடையவன்.

இயற்கைக்கு மாறாகத் தோற்றும் அவனுடைய இவ் விலங்கியலுக்கு முற்றிலும் காரணமில்லாம லில்லை. அவனது உடல் இளமையிலேயே கூனிக் குன்றி உருச் சிதைவுற்றிருந்தது. அதனைப் பிறர் அருவருத்து வெறுக்குந்தோறும் அவனுக்கு மக்கள் அனைவர்மீதும் வெறுப்பும் எரிச்சலும் தோன்றின. பிறரைத் துன்புறுத்துவதையும், பெண்களையும் குழந்தைகளையும்கூட வதைத்துக் கொல்வதையும் அவன் தன் இன்ப விளையாட்டாகக் கொண்டிருந்தான். அவனைப் பெற்ற தாயும் அவன் கொண்ட மனைவியும் கூட அவன் அழிந்தொழிய மாட்டானா என்று வெறுக்கும்படி அவன் அவ்வளவு வரம்பற்ற கொடுமை உடையவனாகவும் கொடுங்கோலனாகவும் இருந்தான்.

## 2. பேய்க் காதல்

பிள்ளையைக் கொன்றதுடன் அமையாமல் குருதி வெறி கொண்ட ரிச்சர்டு மணிக்கூண்டுக்குப் போய் ஹென்ரி அரசனையும் கொலை செய்தான். மறு

நாட் காலை ஹென்ரியின் உடல் இலண்டன் தெருக்கள் வழியாக அடக்கஞ் செய்யுமிடத்துக்குக் கொண்டு போகப்பட்டது. வழியில் அதனைக் காணும் அவாவுடன் ரிச்சர்டு காத்திருந்தான். இறந்தவருக்காக வருந்திப் பின் சென்றவர்களுள் ஹென்ரியின் மகன் மனைவியாகிய ஜேன் பெருமாட்டியும் ஒருத்தி. தந்தையையும் கணவனையும் மாமனையும் இழந்த அவள் துயர் கண்டு கல்லும் கரையும். ஆனால் ரிச்சர்டு அவளைக் கண்டவுடன் அவளை ஏன் தான் மணஞ்செய்து அவள் செல்வத்தைக் கவரக்கூடாது என்று எண்ணமிட்டான். தன் பேராவல்களுக்கு அது முதற்படியாயிருக்குமாதலால் அதனை அவன் உடனேயே செய்து முடிக்க எண்ணங் கொண்டான்.

மனித வகுப்பைச் சேர்ந்தவர் இறந்தவர் முன்னிலையிலாவது தம் சிறுமையை அடக்கி வைத்துக் கொள்வர். ரிச்சர்டு விலங்கினும் தாழ்ந்த பேய்த் தன்மை கொண்டவனாதலால் அந்தத்துயரத்தை மதியாது அவ்வுடலைத் தடுத்து அவளிடம், "இப்பிணம் கல்லறை செல்ல வேண்டுமானால் நீ என் விருப்பத்துக்கு இணங்கியாக வேண்டும். உன் அழகில் மயங்கி உன்னை மணம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தால்தான் நான் உன் தந்தையையும் கணவனையும் மாமனையும் கொன்றேன். இன்னும் யார்யார் தடையாயிருப்பார்களோ அவர்களும் சாவது திண்ணம். ஆகவே என்னை மணப்பதாக உறுதிகொடு. உன்னையும் இப்பிணத்தையும் போகவிடுகிறேன்," என்றான். காலன் பிடியிலிருந்து விலகினும் இக் காலகண்டன் பிடியிலிருந்து விலகுவதற்கில்லை என்று கண்ட ஜேன்

உள்ளத்தில் மட்டற்ற வெறுப்புடனும் எரிச்சலுடனும், "என்ன உறுதி வேண்டுமானாலும் தருகிறேன். என் கண்முன் நில்லாது தொலைந்து போ," என்றாள்.

ஆனின் உள்ளத்தில் தன் தந்தையையும் தன் கணவனையும் இறுதியில் தன் மாமனையும் கொன்ற கொடியோனிடம் வெறுப்பு ஒருபுறம் இருந்தாலும், அச்சுறுத்தலும் துணிவும் முகமனுரையும் கலந்த அவன் நடிப்புக்கு முன் அவள் கோழைமை நாணி ஒடுங்கிப் பணிந்தது. அதுகண்ட ரிச்சர்டு பின்னும் துணிவுடன் அவள் பெண்மை உணர்ச்சிகளை ஒறுப்பினால் தூண்ட முனைந்தான். 'நான் செய்த கொடுமைகள் அத்தனையும் உன்னுடைய அக் கண்களின் கொடுமையினால்தான்; இன்னும் அக் கண்களின் கவர்ச்சியுட்பட்டு நான் மேலும் கொலைகள் நடத்தக் கூடும். கொலையைத் தடுக்கக் கொலைசெய்வது பழியன்று என்பர். ஆகவே என்னை நேரிடையாகக் கொன்றழிக்க,' என்று கூறிக்கொண்டு தன் வாளை உருவி அவள் காலடியில் வைத்து மண்டியிட்டு நின்று தன் மார்பை அவளுக்குக் காட்டினான். எவ்வளவு வெறுப்பிடையேயும் அம் மெல்லியலாள் தன்னைக் கொல்லும் துணிவுடையவள் அல்லள் என்ற அவன் உறுதிக்கேற்ப அவளும் 'வேண்டா; எழுக' என்றாள். தன் காரியம் எளிதில் கைகூடுவது கண்ட ரிச்சர்டு 'எழமாட்டேன்; என்னைக் கொல்லத்தான் வேண்டும். உன் காதலின்றி நான் இருக்க விரும்பவில்லை. என்மீ திரங்கி என்னை மணப்பதாக உறுதி கூறினால் மட்டுமே நான் எழுவேன்' என்றான்.

'உன்னை மணப்பதும் நான் சாவதும் ஒன்று தான். வாழ்வுக்கு வகையற்ற நான் இனி எது செய்தால் என்ன? உன்னையோ உன்னிலும் கடைப்பட்ட விலங்கையோ வேண்டுமானாலும் மணக்கிறேன். நீ இப்போது என்னைவிட்டு அகலமாட்டாயா?' என்றாள் அவள். கடைப்பட்டவரும் மதிக்கும் காதலினும் காரியமே பெரிதாகக் கொண்ட ரிச்சர்டு, தன் எளிய வெற்றியில் மன நிறைவு கொண்டு மகிழ்வுடன் தருக்கிச் சென்றான். வேடன் விரும்பிய குயில் அவன் பையில் வந்து சேர்ந்தது. அப் பாடுங் குயில் இனிப் பாடுமோ பாடாதோ என்பதைப்பற்றி அவனுக்கென்ன கவலை? குயில் எல்லாருக்கும் செவிப் புலன் வழியே இன்பந் தருவது. அவனுக்கு அவ்வின்பம் நாப்புலன் வழித்தானே!

எட்வர்டு அரசன் தன் வீரத்தாலும் படைத் தலைமைத் திறத்தாலும் அரசியல் முறைகளாலும் பெற்ற அரசாட்சிச் செல்வத்தைச் சூழ்ச்சியால் பெற ரிச்சர்டு மனக்கோட்டை கட்டியிருந்தான். அதன் அடிவாரக்கல் ஜேனேயாவள். அவள் செல்வத்தினைப் பெற்றதே தன் மனக்கோட்டையில் பாதி கிட்டிவிட்டதாக ரிச்சர்டு எண்ணினான். அடுத்தபடியாக ஜேனின் தமக்கை கணவனாகிய தன் தம்பி கிளாரன்ஸ் கோமகன் இம்மணத்திற்குத் தடையா யிருக்கக்கூடுமாதலால், அவனை ஒழித்துவிட ஏற்பாடு செய்தான். பகையைப் பகையால் அழிப்பதே சிறந்த அரசியல் சூழ்ச்சி என்ற சாணக்கிய முறையை அவன் நன்கு அறிந்தவனாதலால், கிளாரன்ஸ்மீது எட்வர்டுக்கும் அவன் மனைவிக்கும் தீராப்பகைமை உண்டு பண்ணலானான்.

எட்வர்டின் திருமணக் காலத்திலேயே பல காரணங்களால் அவன் தாயாகிய யார்க்குக்கோமாட்டி அதனை விரும்பவில்லை. ஆகவே எட்வார்டு இளமையில் மறைவாகச் செய்துகொண்ட ஒரு திருமணத்தின் சீட்டைக் காட்டி அங்ஙனம் ஒரு மனைவி இருக்கையில் அவனுக்கு இரண்டாவது மணம் செய்ய உரிமையில்லை என்று வாதாடி வந்தாள். எட்வர்டு வாயாடி மிக்க சமயத்தலைவர்களை ஏவி அதனைப் புறக்கணித்து விட்டாலும் மக்கள் மறைவில் அரசிக்கும் அவள் பிள்ளைகளுக்கும் அரசுரிமை கிடையாது என்று கூறிக் கொள்வதைமட்டும் அவனால் தடுக்க முடியவில்லை. இருப்புச் சலாகைகள் போன்ற தன் ஆட்சியின் பிடி நீங்கியபின், இவ்வெண்ணம் மக்களிடை வேர்க் கொள்ளுமாயின், தன் பிள்ளைகளின் உரிமைக்கும் வாழ்வுக்கும் பேரிடர் நேருமென்று அரசன் அஞ்சினான். அத்துடன் அரசியும் அவள் உறவினரும் அஞ்சினர்.

கிளாரன்ஸ் அரசன் மணத்திற்கெதிராக மக்கள் எண்ணத்தைத் தூண்டி வருகிறான் என்று ரிச்சர்டு இப்போது அரசன் காதில் ஊதிவிடவே, அரசனும் அரசியும் ஆய்ந்தோய்ந்து பாராமல் கிளாரன்ஸ்மீது சினங்கொண்டு அவனைச் சிறையிட்டதுடன், ரிச்சர்டின் நயவஞ்சகமான தூண்டுதல்களுக்கு அடிமைப் பட்டு அவனைக் கொன்றுவிடுமாறு ஆணை தந்தார்கள். மேலும் அரசன் மனம் அமைதியுற்றுப் பகுத்தறிவின் தூண்டுதலுக் காளாகு முன்னமே, ரிச்சர்டு தன் கை வசமுள்ள கொலையாளிகள் மூலமாக அவ்வாணையை நிறைவேற்றி விட்டான். விரைவில் கவலையால்

படுக்கையில் வீழ்ந்து இறுதியை யணுகிய அரசனும் அவனை ஒட்டி நல்லெண்ணத்தின் சூழலுட்பட்ட அரசியும் அவ்வாணையை மறுதலிக்க எண்ணிய போது, ரிச்சர்டு, "இக் கழிவிரக்கத்தால் பலனில்லை. எதிர் ஆணை செல்லுமுன் முதல் ஆணை நிறைவேற்றப் பட்டு விட்டது," என்று ஒன்று மறியாதவன்போல் வருத்தத்துடன் கூறினான்.

பாலுக்கும் காவல், பூனைக்கும் தோழன் என்ற படி இறுதிவரையிலும் ரிச்சர்டு கிளாரென்ஸுக்கு உற்ற நண்பன்போல் நடித்து, அவன் சிறைக்கனுப் பப்பட்டது பற்றி வியப்படைந்ததாகக் காட்டிக் கொண்டான். ஆனால் இங்ஙனம் தமையனாகிய அரசன் அவன்மீது ஐயங்கொள்ளக் காரணமாயிருந்த வள் அரசியே என்று தோன்றும் வண்ணம், அடிக்கடி அவள் முன்னிலையிலும் சிறைகாவலன் முன்னிலையி னும் 'நாம் என்செயக்கூடும். நாம் அனைவரும் அரசி யின் குடிகள்; அரசி மனம் கோணின் ஆந்துணை யில்லை' என்று குத்தலாகப் பேசினான்.

## 3. மார்கரட்டின் பழி

அரண்மனையிலும் கிளாரென்சுக் கெதிரான எண்ணத்தை அவனே தூண்டி விட்டபோதிலும், அரசியும் அவள் உறவினரும் அதன் பிடியுட்பட்டாடும் காலத்தில், அவன் அவர்களிடம் சென்று பலரும் கேட்க அவர்களைக் கிளாரன்சைப்பற்றிப் பேசும்படி கிண்டி, அதன்பின் தான் அவன் சார்பில் பேசுவது போல் நடித்து அவர்களைத் தூற்றிவந்தான். அச் சமயம் அவர்கள் அனைவரிடமும் பொதுப் பகையின

ளாகிய மார்கரட் அப்பக்கம் வந்தாள். பேயினும் கொடிய மனிதப் பேயாகிய ரிச்சர்டு நீங்கலாக அனைவரும் அவளது வற்றி வரண்ட அலங்கோல வடிவங் கண்டு உடல் குன்றி விறைத்து நின்றனர். தன் பிள்ளை இருக்கும் வரை போர்செய்யும் பெண்புலியை ஒத்து யார்க்கரசர் குடியை எதிர்த்துவந்த மார்கரட் இப் போது யாதொரு நோக்கமு மற்றுப் பழியன்றி வேறு எதனிலும் மனம் செல்லாமல் திரிந்துவந்தாள். தன் பகைவரிடையே பிளவும் சூழ்ச்சியும் படுகொலைகளும் மிகுவது கண்டு அவள் எக்களிப்புக் கொண்டாள். தன் இருக்கையில் அமர்ந்த தன் எதிராளியான எலிசபெத் அரசியைக் கண்டதும் அவள் கொதித் தெழுந்து "சிறுமனத்துச் சிறுபிறப்பே! உன்னால், உன்பேரால் நான் அரசிநிலை இழந்தேன்; தாய்மைநிலை தவிர்ந் தேன்; மனக்கிழத்திநிலை மறந்தேன். விரைவில் நீயும் அரசிநிலையும் அற்றுத் தாய் நிலையும் மனைவி நிலையு மற்றுப்போகக் கடவை. அது மட்டுமன்று; நீ இன்று என் எதிரியாயினும் விரைவில் என்னுடன் சேர்ந்து நான் பழிப்பவரை நீயும் சேர்ந்து பழிக்கக் கடவை" என்றாள்.

பின், மார்கரட் ஒவ்வொருவர் பக்கமும் திரும்பி நின்று அவரவர் பங்குக்குத் தனித்தனி பழிமொழிகள் வழங்கினாள். அவளுடைய கோர உருவத்தையும் கடுமொழிகளையும் கேட்டு அனைவரும் செயலற்று நின்றனர். ரிச்சர்டு அவள் பழி முற்றிலும் கேட்டு நின்று, 'இவ்வளவுதானா!" என்றான். உடனே அவள் ரிச்சர்டை நோக்கிக் 'குருதிவெறி கொண்ட பேயே, உன் தீவினை முற்றும்வரை தெய்வம் தன் தண்டப்

பொறிகளைப் பதுக்கி வைத்திருந்து, இறுதியில் உறக்கமும் மன அமைதியும் மிழக்கும்படி செய்து, உன் மனச்சான்றின் ஓயா வதைப்பிற்கு உன்னை ஆளாக்குக" என்று கூறினாள். பின் அவள் பக்கிங்ஹாமையும் ரிச்சர்டையும் நோக்கி 'உங்களுள் ஒருவனுக்கொருவன் கத்தியா யமைக; தெய்வத்தின் பழியின் உருவங்களே, ஒருவர் கழுத்தை ஒருவர் அறுப்பீர்களாக' என்றாள்.

ரிச்சர்டு ஒருவனே அவள் பழிகேட்டு மனம் சிதையாதவன். எதிர்காலத்தில் அவள் பழி கை வந்தபோதுமட்டும், அவள் அன்று பேசிய பேச்சுக்களும் நின்ற நிலையும் தோற்றமும் அவனைச் சித்திரவதை செய்தன.

## 4. போலி நட்பும் சதியும்

என்றும் எதற்கும் அஞ்சாது, நல்வினை தீவினை இறைவன் பெயர் ஆகியவற்றை யெல்லாம் தூசாக மதித்த "கள்ளுள்ளி மங்கனை" ரிச்சர்டு, எட்வர்டு ஒருவன் ஆற்றலுக்கு மட்டும் அஞ்சியடங்கிக் கிளாரன்சைப்போல் அவனை எதிர்க்கத் துணியாமல் அவனிடமும் அவன் மனைவியினிடமும் போலி நட்பு நடித்து வந்தான். எட்வர்டு இறந்தபின் அவன் அச்சம் நீங்கிற்று. முதலில் அரசி எலிசபெத்தினிடம் அவள் பிள்ளையாகிய இளவரசன் எட்வர்டையே தான் முடிசூட்டப் போவதாக உறுதி கூறினான். அதே சமயம் பெருமக்களிடையில் அவளுடைய இழிந்த பிறப்பு, பேராவல், அவள் உறவினரின் செல்லரிப்பு ஆகியவற்றால் ஏற்பட்டிருந்த பகைமையைத் தூண்டி அவள் ஆட்சியை ஒழிக்க முற்படுவதாகக் காட்டிக்

கொண்டான். அரசியின் உறவினரை வெறுத்த **ஹேஸ்டிங்ஸ் பெருமகன்,**[1] **ஸ்டான்லிப் பெருமகன்**[2], **பக்கிங் ஹாம் கோமகன்**[3] முதலிய பலரும் இவ்வெதிர்ப்பில் கலந்து கொண்டனர். அவர்களுதவியால் அவன் இளவரசன் எட்வர்டுடன் புடைசூழ்ந்து வந்த அரசி யின் தம்பி **ரிவர்ஸ் கோமகன்**[4], அவள் முதல் மணத்துப் பிள்ளைகளான **டார்ஸெட் கோமகன் ரிச்சர்டு**[5], **கிரே பெருந்தகை**[6] ஆகிய மூவரையும் பிரித்துச் சிறையி லிட்டுப்பின் கொலை செய்ய முயன்றான். ஆனால் டார்ஸெட் மட்டிலும் தப்பிப் பிழைத்தோட, மற்ற இருவரும் கொலையுண்டனர்.

தன் உறவினருக்கு நேர்ந்த முடிவுகண்டு ரிச்சர்டின் தீயெண்ணங்களை உய்த்துணர்ந்து கொண்ட எலிசபெத் உடனே இளைய மகனுடன் ஒரு மடத்தில் அடைக்கலம் புகுந்தாள். ஆனால் ரிச்சர்டு, கான்டர்பரி முதல் தலைமகனை அச்சுறுத்தி, மடத்தினுரி மைக்கு எதிராக இருவரையும் வலிந்திழுத்து மணிக் கூண்டுக்குக் கொண்டு வருமாறு பணித்தான். அப் படியே கோழை மகனாகிய அம் முதல்தலைவன் இளைய வரசனைக் கைக்கொண்டு வந்தான். எலிசபெத் மட்டும் அவன் பிடியை மீறி ஒரு சிலர் உதவியால் கடல் கடந்து ஃபிரான்சு சென்று சேர்ந்து விட்டாள். சூதறியாப் பாலகர்களாகிய இளவரசர் இருவரும் மணிக்கூண்டில் அடைபட்டனர்.

அரசியை எதிர்ப்பதில் அரசனுடன் ஒத்துழைக்க முன்வந்த ஹேஸ்டிங்ஸ், இளவரசரை நீக்கி ரிச்சர்டை

---

1. Lord Hastings 2. Lord Stanley 3. Duke of Buckingham 4. Earl Rivers. 5. Marquis of Dorset Richard. 6. Earl of Grey.

அரசனாக ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. இதனை அவன் வேலையாளும் அரசனுக்கு உள்ளாளுமான **வில்லியம் கேட்ஸ்பி**[1] மூலம் அறிந்த ரிச்சர்டு, அவனையும் எளிதில் தென்புலத்துக்கு அனுப்பினான். அதன் பின் பக்கிங்ஹாமின் ஒத்துழைப்புடன், ரிச்சர்டு சமயப் பற்று மிக்கவனாகவும் உலகியல் வாழ்விலோ அரசியல் உயர்விலோ பற்றற்றவனாகவும் நடித்து, இலண்டன் நகர்த்தலைவனையும் மக்களையும் மயக்கினான். அச்சமயம் பக்கிங்ஹாம் மக்கள்சார்பாகத் தானும் நகர்த்தலைவனும் மன்னன் எட்வர்டின் மணிமுடியை அவனுக்குத் தர எண்ணுவதாகக் கூறினர். ரிச்சர்டு மிக நேர்மையுள்ளவன் போல் அவ்வுரிமை அண்ணன் பிள்ளையாகிய இளவரசன் எட்வர்டுக்கே செல்லுபடியானது என்று கூறினான். பக்கிங்ஹாம் அவ்வுரிமை செல்லுபடியன்று என்று தலைமக்களும் வழக்கறிஞரும் மறுக்கின்றனர் என்று காட்டிக், கூட்டத்தில் தான் அங்கங்கே நிறுத்தி வைத்திருந்த கூலிகள் மூலம் "ரிச்சர்டு அரசனாக வேண்டும்; ரிச்சர்டு மன்னன் வாழ்க," என்று கூவச் செய்தனன். இத்தகைய நடிப்புக்களின் பயனாக ரிச்சர்டு மூன்றும் ரிச்சர்டு அரசனாக முடி சூட்டப்பெற்றான்.

## 5. பக்கிங்ஹாமின் பகைமை

ரிச்சர்டு தான் அரசனானவுடன் பக்கிங்ஹாமினுடைய ஒத்துழைப்பிற்குப் பரிசாக அவனுக்கு ஹெரிஃபோர்டுப் பெருநிலக் கிழமையைத் தருவதாக உறுதிகூறியிருந்தான். ஆனால் தன் எண்ண முற்றும் கைகூடியபின் வருவாய் மிகுதி உடைய அந்நிலக்

1. William Catesby.

கிழமையினை அவனுக்கேன் விட்டுக்கொடுக்க வேண்டும் என்று எண்ணலானான். தன் காரியத்திலேயே கண்ணும் கருத்துமாயிருந்த பக்கிங்ஹாமும் அதனை வற்புறுத்திக் கேட்கக் காத்திருந்தான். மணிக் கூண்டிலுள்ள பிள்ளைகள் இருக்கும் அளவும் தன் அரசுரிமை நிலையற்றது என்றெண்ணி அவர்களை ஒழிக்க அரசன் அவன் துணையை நாடியபோது, அவன் இவ்வுறுதியை நினைவூட்டினான். அரசன் "சரி பார்ப்போம்; நாளை வருக," என்று கூறிவிட்டு, அன்றிரவே வருவாயற்றுக் கூலிக்குத் தன்னை விற்கக் காத்திருந்த கயவனாகிய **ஜேம்ஸ் டிரல்**[1] மூலம் அக் கொடுஞ்செயலை நிறைவேற்றினான்.

அரசன் புறக்கணிப்பை அறிந்ததுடன், இதுவரை அவனிடம் கள்ளனுக்குக் குள்ளனாக இருந்து அவன் இயல்பை அறிந்தவன் பக்கிங்ஹாம். எனவே அவன் உடன் தானே தன் ஊர்ப்புறம் சென்று, தான் சிறைப்படுத்தி வைத்திருந்த அரசன்பகைவரை விடுவித்தான். விடுவித்தபின் அவன் அவர்களிடம் "ஃபிரான்சிற்குச் சென்று ஆளும் ஹென்ரி வழியில் இங்கிலாந்தின் அரசுரிமையாளனான **ரிச்மண்டுக் கோமான்**[2] ஹென்ரியுடன் சேர்ந்து இங்கிலாந்துக்கு எதிராகப் போர் தொடுக்குமாறு சொல்லி அவர்களைத் தூண்டினான். அவனும் விரைவில் படை திரட்டி, அவர்களுக்குப் பக்கத்துணையாக இங்கிலாந்தின் மேற்குப்புறத்தில் கிளர்ச்சிக் கொடியை நாட்டினான். ஹென்ரி ரிச்மண்ட் விரைவில் ரிச்சர்டைப் போரில் கொன்று ஏழாம் ஹென்ரி அரசனானான். ரிச்சர்டின் கொடிய ஆட்சி இங்ஙனம் முடிவுற்றது.

1. James Tyrrel. 2, Earl of Richmond.

# V. பெரிக்ளிஸ்

## (கதை உறுப்பினர்கள்)

**ஆடவர்**

1. அன்டியோக்கஸ் : அன்டியோக் நகர் அரசன்.
2. பெரிக்ளிஸ் : டையர் அரசன், தயீஸா கணவன், மரீனு தந்தை.
3. ஹெலிக்கனஸ்:—
4. எஸ்கானஸ்:

   } டையர்பெருமக்களில் முதல்வர்.
5. கிளியோன் : தார்ஸஸ் தலைவன், பெரிக்ளிஸ் நண்பன், மரீனுவை வளர்த்தவன்.
6. ஸிலிமாக்கஸ் : மைட்டிலீன் நகரின் காவலன்; மரீனு காதலன்.
7. தைலார்டு : அன்டியோக்கஸ் கையாள்.
8. சைமனிடிஸ் : பென்டாப்போலிஸின் அரசன், தயீஸா தந்தை.
9. நாவாய்க் கிறைவன்.
10. ஸெரிமன் : எபீஸஸ் நகரின் மருத்துவ அறிஞன், தயானு கோயில் பணிமுறைத் தலைவன்.
11. அந்தோனின் : தயோனிஸாவின் கையாள்.

**பெண்டிர்**

1. அன்டியோகஸ் புதல்வி.
2. மரீனு : பெரிக்ளிஸின் புதல்வி.
3. தயோனிஸா: கிளியோன் மனைவி, மரீனுவை வளர்த்துச் சூழ்ச்சியால் கொலை செய்ய முயன்றவள்.
4. தயீஸா : சைமனிடிஸின் புதல்வி, பெரிக்ளிஸ் மனைவி, மரீனு தாய்.
5. பைலாட்டென் : கிளியோன் தயோனிஸா ஆகியவர்களின் புதல்வி.

## கதைச் சுருக்கம்

டையர் நகரின் இளைஞனை அரசன் பெரிக்ளிஸ் அன்டியோக்கஸ் என்ற பேரரசனைப் பகைத்துக் கொண்டதனல் அவனுக் கஞ்சி நாட்டின் ஆட்சியை ஹெலிக்கானஸ் என்ற

பெருமகனிடம் விட்டுவிட்டுச் சிலநாள் தார்ஸஸ் நகரில் சென்று மறைந்து தங்கினான். அங்கே பஞ்சத்தால் வாடிய மக்களுக்கு உணவு உதவி அந்நகர்த்தலைவன் கிளியோன், அவன் மனைவி தயோனிஸா ஆகியவர்களால் பாராட்டப்பட்டிருந்து, தான் அங்கிருக்கும் செய்தி வெளிப்பட்டதால் அங்கிருந்தும் புறப்பட்டுக் கடலிற் புயலால் மரக்கலமுடையக், கிரீஸைச் சார்ந்த பென்டாப் பொலிஸில் மீன் படவரால் கொண்டு சென்று ஆதரிக்கப்பட்டான். பென்டாப் பொலிஸின் அரசனான சைமனிடிஸ் மகள் தயீஸாவை மணக்கக் காத்திருந்த அரசிளஞ் செல்வருடன் சென்று பெரிக்ளிஸ் தயீஸாவின் காதலைப்பெற்று அவளை மணந்து கொண்டான்.

அதற்குள் அன்டியோக்கஸ் இடிவீழ்ந்து இறக்க, டையரிலும் மக்கள் ஹெலிக்கானஸை அரசனாகும்படி வற்புறுத்த, அவன் அவர்களிடம் பெரிக்ளிசைக் கண்டுபிடிக்க ஒரு ஆண்டுத் தவணை கேட்டு இச் செய்தியை எல்லா நாடுகளுக்கும் சுற்றறிக்கையாக விடுத்தான். அது கேள்விப்பட்டுப் பெரிக்ளிஸ் கருவுற்ற மனைவியுடன் கப்பலில் வருகையில் தார்ஸஸ் பக்கம் புயலிடையே தயீஸா பெண்மக வீன்று இறந்ததாக எண்ணப்பட்டுக் கடலில் பெட்டியில் வைத்து மிதக்க விடப்பட்டாள். குழந்தை மரீனா தார்ஸஸில் கிளியோனிடம் ஒப்படைக்கப்பட்டாள்.

அயர்ச்சியால் பிணம்போல் கிடந்தவளான தயீஸா எபீஸஸில் செரிமன் என்ற மருத்துவ அறிஞரால் அயர்ச்சி அகற்றப் பெற்று, அங்கே தயானா என்னும் தெய்வம் உறையும் கோயிலில் சார, மரீனாவை தயோனிஸா தன் புதல்வி பைலாட்டெனுக்குப் போட்டியெனப் பொறாமைகொண்டு அவளைக் கொல்விக்க முயன்றாள். ஆனால் தற்செயலாக அவள் கொள்ளைக்காரர் கைப்பட்டு மைட்டிலீனில் தீயவிடுதி ஒன்றில் சேர்ந்து அதனைத் திருத்தித் தானும் நல்வழி நின்றாள். அவ ளிறந்ததாகக் கேட்டுத் துயருருவில் சுற்றித் திரிந்த பெரிக்ளிஸுடன் அவள் கலந்து இணைந்தபின் அனைவரும் தயானாவின் கனாக் காட்சியால் எபீஸஸ் சென்று தயீஸாவையும் அடைந்தனர். மரீனாவை மைட்டிலீன் தலைவன் லிஸிமாக்கஸ் காதலித்து மணந்தான்.

## V. பெரிக்ளிஸ்

### 1. தீவினையின் ஆர்ப்பாட்டம்

**அன்டியோக்கஸ்**[1] என்ற ஒரு கொடுங்கோல் மன்னன் **அன்டியோக்**[2] என்ற ஒரு நகரம் அமைத்து, அதில் குடிகள் மட்டுமன்றி அயல் மன்னரும் வெருவ அரசுபுரிந்தான். அவன் தீச் செயல்களைத் துணிந்து செய்து உலகம் அவற்றை அறியாவண்ணம் வெளிப் பூச்சுப் பூசி ஏமாற்றிவந்தான். இதில் தான் அடைந்த வெற்றியால் தருக்கி மேன்மேலும் அவன் உலக மக்களை ஏய்க்கவும் துன்புறுத்தவும் தொடங்கினான்.

பிறரறியாமல் மறைந்திருந்த அவன் தீச்செயல்களில் அவன் அழகிய புதல்வியும் அவனுக்கு உடந்தையாக இருந்தாள். ஆகவே இயற்கைக்கு மாறாக அவளை யாருக்கும் மணம் செய்து கொடுக்காமல் தன்னிடமே வைத்துக்கொள்ள அவன் விரும்பினான். ஆயினும் மெய்ப்புக்கு அவளை மணக்க வேண்டுமென்று விரும்புபவர் தன் புதிர் ஒன்றுக்கு விடை தர வேண்டுமென்றும், விடை தராவிடில் தலையிழக்க இணங்கவேண்டுமென்றும் அவன் பறை சாற்றுவித்தான். அப்புதிரில் யாரும் அறியாத அவன் தீச் செயலே குறிப்பாகக் காட்டப்பட்டிருந்தது. அதனையுணராது அரசிளஞ் செல்வர் பலர் அவன் பொறியில் வீழ்ந்து வீணே தம் விலைமதித்தற்கரிய உயிர்களை இழந்தனர்.

ஆயினும் [3] **டையர்** நகரத்தின் புதிய அரசனை

---

1. Antiochus. 2. Antioch. 3. Tyre.

**பெரிக்ளிஸ்**[1] என்ற இளைஞன், யாரும் அறியமுடியாது என்று அன்டியோக்கஸ் நினைத்துத் தருக்கியிருந்த மறை பொருளைப் புதிர் வாயிலாக உய்த்துணர்ந்து கொண்டான். புதிரை விடுவியாதவர்களை இரக்கமின்றிக் கொல்லும் அன்டியோக்கஸ் விடுவிப்பவர்கள்மீது பின்னும் பன்மடங்கு வெறுப்பையும் சீற்றத்தையும் காட்டுவான் என்று கண்டுகொண்ட பெரிக்ளிஸ், "அரசே, ஏன் இந்த விளையாட்டு? இப் புதிரின் பொருளை யாரும் அறியார் என்றுதானே இவ்வளவு பகட்டாக அதனை வெளியிடுகிறீர். இதனைப் பிறர் அறிந்தால் அல்லது அறிந்து சொன்னால் உமது புகழுக்கு இழுக்காகுமே!" என்றான்.

பெரிக்ளிஸ் தன் தீச் செயலை உய்த் துணர்ந்து கொண்டான் என்றும், கொல்லுவதாக அச் சுறுத்தினால் ஒருவேளை வெளியிட்டு விடுவான் என்றும் கண்டு அன்டியோக்கஸ் இனி அவனைப் பிறரறியாமல் மறைவாக அழித்துவிட வேண்டும் என்று துணிந்தான். ஆயினும் வெளிக்கு அவனை அச் சுறுத்துவதாகக் காட்டி, "உனக்குத் தெரியாதவற்றைத் தெரிந்தவன்போல் நடித்து என்னை ஏய்த்துவிடலாம் என்று பார்க்காதே. நீ இளைஞனாயிருப்பதனால் உனக்கு வேண்டுமானால் இன்னும் இரண்டு வாரம் தவணை தருகிறேன். அதற்குள் எப்படியாவது மறைபொருளைக் கண்டறிந்து புதிரை விளக்க முடியாவிடில் உன் தோழர் பலர் இதுகாறும் சென்றவிடமே நீயும் செல்வாய்," என்று கூறி அவனைக் காவலில் வைக்க ஆணை தந்தான்.

1. Pericles.

அன்டியோக்கஸ் தீ வாழ்க்கையை உய்த்துணர்ந்த பெரிக்ளிஸுக்கு அவன் இப்போது கொண்ட துணிபு, அவன் முகத் தோற்றத்திலிருந்து நன்கு விளங்கிற்று. அத்துணிபை அவன் செயற்படுத்துவதற்கு முன்னாக அன்றிரவே பெரிக்ளிஸ் காவல்மீறித் தப்பியோடினான். ஓடித் தன் நாட்டின் பெருமக்களுள் முதல்வனான ஹெலிக்கானஸிடம்[1] இச் செய்தி அனைத்தும் கூறி, இனி அன்டியோக்கஸின் வெஞ்சினத்தினின்று தப்பிப் பிழைக்கும் வழி யாது என்று உசாவினான். அமைச்சனின் சூழ்ச்சித் திறமும் அன்பனின் கனிவும் ஒருங்கே கொண்ட ஹெலிக்கானஸ் பெரிக்ளிஸை நோக்கி, "அண்ணலே! நம் சிறு நாடு அன்டியோக்கஸின் படையெடுப்பு வரின் தாளாது. அதோடு அன்டியோக்கஸ் போர்க்களத்துப் போர் முறையை மட்டுமன்றிச் சூழ்ச்சித் துறையிலும் ஒப்பற்ற சூரன் ஆவான். ஆகவே அவன் சினமொழியுமளவும் தலைமறைவாய் உருக்கரந்து திரிவதே தம்மையும் தம் நாட்டையும் பாதுகாக்கச் சிறந்த வழியாகும்," என்று கூறினான். பெரிக்ளிஸும் அதுவே சரியெனக் கொண்டு ஆட்சியை அவ் அன்பு மிக்க தோழனிடமே விட்டுவைத்து வெளியேறினான்.

## 2. கேட்டில் உறுதி

முதலில் எங்நாடு செல்வது என அரசன் ஆராயும்போது ஹெலிக்கானஸ் "அரசே! ஓராண்டாய் தார்ஸஸ்[2] நாட்டில் பஞ்சமேற்பட்டு நாடும் குடியும் உண்ண உணவின்றி நலிவுறுகின்றன. தாம் போதிய உணவுப் பொருள்களுடன் சென்று அவர்களுக்கு

1. Helicanus. 2. Tarsus.

உதவி செய்தால் பிறர் நலம் பேணித் தம் நலமும் உற்றவராவீர்" என்றான். அவ் வறிவுரையை மேற்கொண்டு பெரிக்ளிஸ் தார்ஸஸ் சென்று அந் நாட்டுத் தலைவனுக்கும் நாட்டு மக்களுக்கும் காலமறிந்துதவும் கற்பகமாய் விளங்கினான். தார்ஸஸின் அரசியல் தலைவனான **கிளியோனும்** [1] அவன் மனைவி **தயோனிஸா** [2] வும் அவன் இன்னானென அறிந்தும் அதனை வெளியிடாது அவன்பால் நன்றியும் அன்பும் பூண்டு அவனைப் போற்றி வந்தனர்.

இப்பால் அன்டியோக்கஸ் பெரிக்ளிஸை எங்ஙனம் விரைவில், ஆனால் பிறர் ஐயங்கொள்ளாத வழியில் கொல்லலாம் என்று ஆழ்ந்த ஆராய்ச்சியி லீடுபட்டிருக்கையில் திடீரெனக் காவலன் வந்து "ஐய, தம்மிடம் வந்த இளைஞர், இரவே எங்கோ போய்விட்டார் என்று தோற்றுகிறது. காலையில் எங்கும் காணவில்லை" என்றான். அன்டியோக்கஸ் சற்றுத் திகைத்து, 'ஆ அப்படியா செய்தி!' என்று வெளியிட்டுக் கூறிப், பின் தான் அவனைப் பகைவனாக நடத்தக் கூறவில்லை என்பதை ஓர்ந்து தன்னை யடக்கிக்கொண்டு காவலனை அனுப்பிவிட்டுத், **தைலார்டு** [3] என்ற தன் கையாளை வருவித்து அவனிடம் "நீ இதுவரை எனக்குச் செய்தது பெரிதன்று. நான் உனக்கு இதுவரை செய்திருப்பதும் பெரிதன்று. தப்பிப் பிழைத்தோடி விட்டாலும் பெரிக்ளிஸ் என்ற அச் சிறுபைதல். அவனை எப்படியும் கண்டு பிடித்துக் கொலை செய்து வருக! வந்து என் நட்பிற்கும் நன்றிக்கும் உரிய விலைபெறுக!" என்றான். தைலார்டு

---

1. Cleon. 2. Dionyza. 3. Thilard.

அவ்வாணை பெற்று டையரை அடைந்து அங்கே பெரிக்ளிஸ் காணுமற் போய்விட்டான் என்ற செய்தியைக் கேட்டு ஏமாற்ற மடைந்தான். பின் 'எப்படியும் இந்த உலகில்தானே இருப்பான் அவன். தேடிக் கண்டுபிடிக்காவிட்டால் நாமும் மறைந்தொழிய வேண்டியதுதானே. ஆகவே நாமும் நாடு சூழ்வருவோம்' எனப் புறப்பட்டான்.

தைலார்டு வந்த செய்தியையும் பிற விவரங்களையும் மெய்யன்பனுகிய ஹெலிக்கானஸ் அவ்வப்போது தார்ஸஸுக்கு ஆளனுப்பிப் பெரிக்ளிஸுக்குத் தெரிவித்து வந்தான். ஆனல் சிறிது காலத்திற்குள் பெரிக்ளிஸின் புகழ் எங்கும் பரவி அவன் தார்ஸஸிலிருக்கும் விவரம் எல்லோருக்கும் தெரியலாயிற்று. தைலார்டுக்கோ அன்டியோக்கஸின் பிற ஒற்றர்களுக்கோ இது தெரிந்துவிடுமுன் பெரிக்ளிஸ் மீண்டும் மறைந்து திரியவேண்டுமென்று அவன் பெரிக்ளிஸுக்கு விரைவில் ஓலை போக்கினுன். அது பெற்ற பெரிக்ளிஸ் தன் புதிய நேசனை கிளியோனிடமும் அவன் மனைவியிடமும் பிரியா விடை பெற்று மீண்டும் உருமாறித் திரியலானுன்.

## 3. புயலும் அமைதியும்

ஊழால் அலைக்கழிக்கப்படும் உயிரை அறிஞர் கடலில் அலைக்கழியும் துரும்புக்கு ஒப்பிடுவர். ஆனல் உவமைமுகத்தாலன்றி உண்மையிலேயே பெரிக்ளிஸ் வாழ்வில் கடலலையின் போக்கே ஊழின் போக்காயிருந்தது. தார்ஸஸிலிருந்து பல நாள் பயணத்திற் கப்பால் நாவாய் செல்லுகையில் கடலேழும் புயலேழும் ஒரே புயலாக ஓர் உருப் பெற்றெழுந்த

தென்னப் பெரும் புயலொன்று எழுந்து, நாவாயைப் பலவகையிலும் வாரியடித்து வீசி இறுதியில் அதனை ஒரு திடலில் மோதி நொறுக்கிற்று. பெரும்பாலோர் நாவாயின் பகுதிகளிடையே கிடந்து தாமும் நொறுக்குண்டு நைந்து மாண்டனர். பெரிக்ளிஸும் ஒரு சிலரும் சிறிது நேரம் மிதக்கும் துண்டுகளைப்பற்றி மிதந்தனர். அவர்களுள் எத்துணைப் பேர் இவ்வுலகு கடந்து மேலுலகுக்கு நீந்திச் சென்றனர் என்று கூற முடியாது. பெரிக்ளிஸும் அவர்கள் வழியே சென்றிருக்கக்கூடும். அவன் நல்லூழின் பயனாக மீன்படவர் சிலர் அவ்வழியே வந்து அவனைத் தம்முடன் தம் சிறுபாக்கத்திற்கு இட்டுச் சென்று, அவனுக்கு வேண்டிய உணவும் உடையும் உதவி ஆதரவு காட்டினர்.

முரட்டு வாழ்வு வாழ்ந்தவராயினும் அம் மீன்படவர் வாழ்க்கையின் அருமையறிந்தவர்கள். அவர்களுடன் அளவளாவிப் பெரிக்ளிஸ் அது **கிரீஸ்** [1] நாட்டின் ஒரு பகுதியாகிய **பென்டாப் பொலிஸ்** [2] என்றும், அதன் அரசன் நல்லோன் எனப் பெயர்வாய்ந்த **ஸைமனிடிஸ்** [3] என்றும் அறிந்தான். மேலும் அவ்வரசன் புதல்வி மண்மேல் நடக்கும் திருவன்ன **தயீஸா** [4] என்பவளை விரும்பி அரசிளஞ் செல்வர் பலரும் அவ்வரசன் மாளிகையில் தங்கி அவள் கையுடன் தம் கையைப் பிணைக்கும் நாளை எதிர்பார்த்திருந்தனர் என்பதையும், தற்செயலாக அடுத்த நாளே அவர்களிடையே போட்டிக் கேளிக்கை நடக்கும் நாள் என்பதையும் அறிந்து, பெரிக்ளிஸ் தன்னிடம்

1. Greece. 2. Pentapolis. 3. Simonides the good king. 4. Thaica.

அங்கே செல்வதற்கான உடையில்லையே என்று கவன்றான். 'கொடுக்குந் தெய்வம் கூரையைப் பொத்துக்கொண்டு கொடுக்கும்' என்பதற் கிணங்க அதே நாள் மீன்படவர் வலையில் பெரிக்ளிஸ் கடலில் இழந்த கவசம் சிக்குண்டு அவன் கைக்கு வந்தது. தன் மூதாதையர் கவசம் வந்துதவியதே தன் முன்னோர் அருளும் திருவும் எய்தியதற் கறிகுறியாம் எனக் கொண்டு, பெரிக்ளிஸ் மறுநாள் ஸைமனிடிஸ் அவையில் இளவரசர் விளையாட்டில் சென்று கலந்தான்.

பெரிக்ளிஸ் அரசிளஞ் செல்வரிடையே முந்திக் கொள்ளாமலும், அவர்களிடையே காணப்பட்ட எழுச்சியில் பங்கு கொள்ளாமலும் தனித்து நிற்பதைக் கண்ட அருளாளனாகிய அரசன் ஸைமனிடிஸ், மனங் கனிவுற்று அவனை அழைத்துத் தன்னுடன் இருக்கும்படி செய்து அளவளாவினான். அவனுடைய பணிவே அவன் உயர்வுக்கு அறிகுறி என்றும், அவன் துயர் அவனுக்கு நேர்ந்த துன்பங்களின் பயனாகவே யிருக்கவேண்டும் என்றும் அரசன் உய்த்துணர்ந்து, தன் புதல்வி தயீஸா வாயிலாக அவனை ஊக்கி மகிழ்விக்க முயன்றான். மேலும் அவன் பெரிக்ளிஸுக்கு எழுச்சி யுண்டாக்கும் வண்ணம் அரசிளஞ் செல்வரை ஆடல் பாடல் கேளிக்கைகளில் ஈடுபடுத்தி, அதில் பெரிக்ளிஸை வற்புறுத்திப் பங்கு கொள்ளச் செய்தான். இதன் பயனாகப் பெரிக்ளிஸின் உள்ளார்ந்த இசைத்திறன், ஆடல்திறன் ஆகியவை வெளிப்படவே, 'அவன் பிற அரசிளஞ் செல்வருக்குள் வாத்துக்கள் கூட்டத்திடையே நீந்தி நின்ற அன்னப்புள்

போன்றவன்' என்பதைத் தயீஸாவும் அரசனும் கண்டுகொண்டனர். இதுகாறும் தந்தையின் விருப் பத்திற் கிணங்கவே அரசிளஞ் செல்வருடன் ஊடா டிய தயீஸா, இப்போது தன்னையும் மீறித் தன் மனம் அவன்பால் செல்வதைக்கண்டு, இதுவரை பிறரிடம் தடங்கலின்றி நடந்துகொண்டதுபோல் நடக்கமுடி யாது நாணுற்றாள். அக் குறிப்பறிந்த அரசன் மன மகிழ்வுடன் வலியுறுத்திப் பெரிக்ளிஸை மகிழ்விப்ப தற்காக அனுப்புவதுபோல அவனிடம் அவளை அடிக் கடி அனுப்பினான். சின்னாட்களில் அவர்கள் காதல் முற்றவே, தயீஸா தன் தந்தையிடம் அவனையே தான் மணக்க விரும்புவதாகத் தெரிவித்தாள். அரசன் மன முவந்து அவர்களுக்கு மணவினையாற்றி மகிழ்ந்தான். விரைவில் தயீஸா கருவுற்று மணமலரின் பயனாகிய இன்கனி யெய்தும் நிலைபெற்றாள்.

## 4. மீட்டும் புயல்

அரசன் அன்று கேட்கும், தெய்வம் நின்று கேட்கும் என்ற முதுமொழி பொய்யாதபடி, இதற் குள் அன்டியோக்கஸும் அவன் அடா நடைப் புதல்வியும் தேரூர்ந்து செல்கையில், வானின் சீற்றம் மின்னிட்டு இடியேறாய் அவர்கள்மீது வீழ்ந்து அவர் களையும் அவர்கள் தேரையும் தேர்ப் புரவிகளையும் எரித்துச் சாம்பராக்கிற்று. இச்செய்தி கேட்டு ஹெ லிக்கானஸ், இனி, பெரிக்ளிஸை அழைக்க வேண்டும் என்று எண்ணினான். ஆனால் பெரிக்ளிஸின் இருப் பிடம் தெரியவில்லையே யென்று அவன் கலங்கினான். நாட்டுமக்களும் பெருமக்களும் **எஸ்கானஸ்**[1] என்ற

1. Escanes.

முதல்வன் தலைமையில் அவனை இறைஞ்சி பெரிக்ளிஸ் காணப்பெறாததால் தாமே அரசுரிமை ஏற்றுத் தலைவனில்லா இத் தலைநிலத்தை நடாத்துக என்றனர். ஹெலிக்கானஸ் இதனை ஒத்துக்கொள்ள விரும்பாமல் 'இன்னும் ஓர் ஆண்டு அனைவரும் மனமொத்துத் தேடி நம் தலைவனாகிய பெரிக்ளிஸைக் காணமுடியாவிடில் நீங்கள் கூறியபடியே செய்ய இணங்குவேன்' என்றான். அதன்படி ஹெலிக்கானஸ் காற்றினும் கடுகிச் செல்லும் புரவிகள்மீதும், மரக்கலங்களிலும் ஒற்றரைப் போக்கி எல்லா நாடுகளிலும் சென்று அன்டியோக்கஸ் இறந்ததையும், நாட்டுமக்கள் துணிவையும், தன் விருப்பத்தையும் யாருமறியப் பறைசாற்றுவிக்கும்படி செய்தான்.

பின்னாளில் அத்தூதர்கள் கொண்டு சென்ற செய்தி பென்டாப் பொலிஸுக்கும் எட்ட, பெரிக்ளிஸ் தான் இன்னான் என மனைவியிடமும் மாமனிடமும் வெளிப்படக் கூறித் தன் நாடு செல்லும்படி விடைதரக் கோரினான். தன் மருகன் பெரிக்ளிஸே என்றறிந்த மகிழ்ச்சியுடன் அவனை விட்டுப் பிரிய வேண்டுமே என்ற கவலை போராடும் நிலையில் இன்பக் கண்ணீரும் துன்பக் கண்ணீரும் தொடர்ந்தெழ, அரசன் மகளையும் மருகனையும் தோழர் தோழியர் புடைசூழப், பணிமக்கள் பொன்னும் மணியும் புனைகலன்களும் ஏந்தி உடன் செல்ல, மரக்கலத்தேற்றி அனுப்பினான்.

தயீஸாவின் நாட்டுக்கு முதலில் பெரிக்ளிஸைக் கொண்டு சென்று தள்ளியது ஒரு புயலேயன்றோ?

அவன் மீண்டு வருகையில் தையீஸாவை உடன் கொண்டு தன் நாடு செல்வதைத் தடுத்து, அவன் இன்பக் கனவுகளை நனவெய்தா வண்ணம் தடுத்ததும் ஒரு புயல்தான். அப்புயலினிடையே மரக்கலத்தில் தயீஸா கருமுற்றிப் பிள்ளையைப் பெறும் நிலையில் வருந்தினள். வெளிப்புயலில் கருத்தைச் செலுத்தி நின்ற பெரிக்ளிஸினிடம் பணிமக்கள் சிலர் கவலை யுடன் வந்து நின்று 'அரசே, எங்களை மன்னிக்க வேண்டும். தங்கட்கு ஒரு நற்செய்தியும் ஒரு தீச் செய்தியும் ஒருங்கே கொணர்ந்தோம். இதோ இத் தட்டில் கிடக்கும் ஒன்று மறியாச் சிறுகுழவி அர சிளஞ் செல்வி இப்போதே ஈன்ற தங்கள் செல்வம். அதனைக் கண்டு தமக்கு நேர்ந்துள்ள தீமையில் தேறு தல் அடைவீராக,' என்று கூறிப், பொற்றட்டில் குழைவு மிக்க சொக்கப் பொன்னில் புனைந்த பதுமை போன்ற ஒரு குழந்தையைத் தந்தனர். அரசன் அதனைப் பெற்று வானளாவ மகிழ்ச்சியடையு முன், 'இச் செழுஞ் செல்வமீன்ற தாய் உயிர் துறந்தாள்' என் றனர் அவர்கள். இனிய இசைகேட்ட அசுணமா இடியேறு கேட்டதெனத் திகைத்துச் செயலிழந்த அரசனைப் பணிமக்களும் தோழர் தோழியரும் குழ வியை நினைவூட்டித் தேற்றினர்.

அதற்குள் நாவாய்க் கிறைவன் அரசனை அணுகி, 'அரசே, வெளிப்புயலை நோக்கத் தாம் தம் உட்புயலைக் கூட அடக்கவேண்டும். ஐயனே! பிணம் மரக்கலத்தி லிருக்குமளவும் கடலடங்கா தென்பர்; இதோ பாருங்கள் வானத்தை மறைத்து மலையைப் பகைத் தெழும் திரையரக்கர்களை! தாம் அறியாத தல்லவே.

தம் மனத்துயரை அடக்கி அரசிளஞ் செல்வியின் உடலத்தை அப்புறப்படுத்தி உதவுவீர்!' என்முன்.

அரசன் உள்ளம் அனலிற்பட்ட வெண்ணெயா யிளகியதாயினும், தன் குடிமக்கள் வேண்டுகோள் கேட்டு, வேலால் துளைக்கப்பட்ட சிங்கம் தன் பெடைக்கு ஆறுதலளிக்க எழுந்ததுபோல் எழுந்து, ஒரு பெட்டியில் அவ்வுடலைவைத்து, அவள் மண ஆடை மண அணி அத்தனையையும் உடன் வைத்துக் கொண்டு வரும்படி கட்டளையிட்டான். பின் 'இப் பெட்டியைத் தற்செயலாக யாராவது காணில், இறுதி வினை முற்றுவித்து அவள் உயிர்க்கு உறுதி தருவ துடன் உடன்வைத்த பொருள்களையும் கைக்கொள்க' என்று ஓர் ஓலை எழுதிப் பெட்டியில் உடன் வைத்து அதனைக் கண்ணீருடனும் கம்பலையுடனும் கடலில் மிதக்க விட்டான். அதன்பின் குழந்தையின் நலனை எண்ணிப் பார்த்து டையர் செல்லும்வரை அது தாளமாட்டாது என்று கண்டு, அருகிலிருப்பதாகத் தெரியவந்த தார்ஸஸுக்கே மரக்கலத்தை உய்த்துக், கிளியோனிடமும் அவன் மனைவியிடமும் குழந்தை யைப் பாதுகாக்கும்படி விட்டுச் சென்முன். கடலகத் துப் பிறந்த அக் குழந்தைக்குக் கடல் திரு என்ற பொருளில் மரீனு என்றே அரசன் பெயரிட்டான்.

உடலுடன் உயிராய் விட்ட மனைவியை இழந்து, உயிர்க்கு உறுதியாம் குழந்தையையும் பார்க்கக் கொடுத்து வைக்காமல், தலைவனுகிய தன்னை யிழந்து தவித்த குடிகட்கு மட்டும் தாமெருரு தாய்போல் நாட்டையாண்டு நாட்கழித்தான் பெரிக்ளிஸ்.

## 5 மருத்துவன் மாண்பு

கடலில் விடப்பட்ட பெட்டி இரவெல்லாம் மிதந்து சென்று காலையில் **எபீஸஸ்**[1] என்னுமிடத்தில் ஒதுங்கியது. அவ்விடத்தில் மருத்துவத் துறை ஆராய்ச்சியிலேயே தன் வாழ்நாள் முற்றும் கழித்த **ஸெரிமன்**[2] என்ற முதியோன் ஒருவன் இருந்தான். அவன் ஆட்கள் தற்செயலாகக் கடற்கரைக்குச் சென்றபோது அப்பெட்டியைக் கண்டு அவனிடம் கொண்டு வந்தனர். அவன் அதைத் திறந்து பார்த்து வியப்படைந்தான். அருகிலிருந்த பொருள்களும் கடிதமும் கண்டு அவன் என்ன நடந்திருக்கவேண்டும் என்பதை உய்த்துணர்ந்து கொண்டான். ஆனால் தயீஸாவின் முகத்தைப் பார்க்கப் பார்க்க அவள் உண்மையில் இறந்துவிடவில்லை; பிள்ளைப் பேற்றின் போது ஏற்பட்ட பெருந் துன்பத்தின் பயனாக அவள் முற்றிலும் உணர்விழந்து மூச்சுப் பேச்சற்ற நிலையில் இறந்தவளாகக் கைவிடப் பட்டவளே யாவள் என்பதனை உணர்ந்தான். அவன் அரிய மருத்துவத்திறனால் அவள் முற்றிலும் உணர்வு பெற்றதோடன்றி, அவனும் அவன் மனையாட்டியும் காட்டிய அன்பினால் கணவன் பிரிவையும் ஓரளவு ஆற்றியிருந்து வந்தாள். திரும்பவும் கணவனைச் சென்றடைவது, மிக அருமை யென்று அவள் எண்ணியபடியால் 'தயானா' என்னும் அவ்விடத்துக் கோயில் கொண்ட தெய்வத்தின் பணிப் பெண்களுடன் சேர்ந்து கன்னிமை நோன்பு நோற்பதென்று உறுதிகொண்டாள்.

---

1. Ephesus. 2. Cerimon.

இப் பணியில் ஸெரிமனின் புதல்வியும் அவளுடனிருந்து தோழியாய் உதவினாள்.

## 6. அழுக்காறெனவொரு பாவி!

இறந்துவிட்டவளாக எண்ணப்பட்ட தாயின் நிலை இதுவாக, அவளது மகவாகிய மரீனா, அன்னை தந்தையர் கண்பார்வை யில்லாத ஒரு குறையே யன்றி வேறு குறையின்றித், தார்ஸஸில் கிளியோன் அரண்மனையில் வாழ்ந்து வந்தாள். கிளியோனுக்கும் கிட்டத்தட்ட அவள் ஆண்டளவேயுடைய புதல்வி ஒருத்தி இருந்தாள். அவள் பெயர் **பைலாட்டென்**[1] என்பது. கிளியோன் முதற்கொண்டு பணியாள் வரையிலும், உள்ளூரார் முதற்கொண்டு மண நாடி வரும் புத்துறவினர் வரையிலும் மரீனா புகழே பாடினரல்லாது பைலாட்டெனைப் பற்றி மறந்தும் பேசாதிருந்தது கண்ட தயோனிஸாவின் மனத்தில் படிப் படியாக அழுக்காறு எனும் புழுச் சென்றரித்தது. அது முதல் அவள் மரீனாவின் தந்தை தனக்கும் தன் நாட்டிற்கும் செய்த நன்றியையும் மறந்து அவளை மனமார வெறுத்தாள். ஆகவே அவள் தீமை மிக்க வஞ்சகனாகிய **அந்தோனைன்**[2] என்பவனை அழைத்து மரீனாவைக் கடற்கரைக்கு இட்டுச் சென்று கொல்லுமாறு கூறினாள். ஆயின் அவன் அங்ஙனம் கொல்லத் துணியும் தறுவாயில், பெண்களை அடிமைகளாக்கும் எண்ணத்துடன் கொள்ளையடித்துச் செல்லும் கடற்கொள்ளைக்காரர் சிலர் வந்து

---

1. Philoten. 2. Antonine.

மரீனுவுட னிருந்த அந்தோனேனே அடித்துருட்டி விட்டு அவளைக் கொண்டேகினர்.

சற்றுநேரஞ் சென்று மீண்டெழுந்த அந்தோனேன் எப்படியும் மரீனு இனி மீளாள் ஆதலால் நான் அவளைக் கொன்றுவிட்டதாகவே கூறுகிறேன் என்று துணிந்தான். தயோனிஸாவிடம் திடீரென்று சுறுமீன் அவளைக் கொண்டேகிற்று எனக் கதையளந்தான். நாட்டு மக்கள் அனைவரும் அது கேட்டு ஆற்ருெணுத் துயருழந்தனர். கிளியோனிடம் மட்டும் தயோனிஸா உண்மையைக் கூற, அவன் சீற்றமும் வெறுப்பும் கொண்டான். பின் இனிச்செய்வது யாதொன்று மில்லையென்றுணர்ந்து அவனும் அக் கொடியாள்வழி நின்ருன். நாட்டு மக்களையும் பெரிக்ளிஸையும் கண் துடைக்கவேண்டி மரீனுவின் நினைவூட்டாகக் கடற்கரையில் பூஞ்சோலையும் அழகிய கல்லறையும் அமைக்கப்பட்டன.

சில நாட்சென்று மகளையேனும் கண்டுசெல்லலாம் என்று எண்ணித் தார்ஸஸ் வந்த பெரிக்ளிஸ், இறைவன் இச்சிறு ஆறுதலும் இல்லாமல் தன் வாழ்க்கையை வெறுமையாக்கியது கேட்டுப் புழுவெனத் துடித்தான். பிறர் ஆற்றத், துடிப்பு நீங்கினுனெனினும் அவன் அது முதல் நகையு மிழந்தான்; நாவு மிழந்தான்; அதோடு உணர்வு முற்றும் இழந்தவன்போலானுன். மரீனு பிரிவுக்காக உடுத்த கரிய ஆடையே ஆடையாய், அவள் கல்லறையருகில் கொண்ட முக்த் தோற்றமே முகத் தோற்றமாய் அவன் துயரே உருவாய்ச் சமைந்து விட்டான். உற்ற நண்பனுகிய ஹெலிக்கானஸ், எப்படியேனும் அவனுக்கு உணர்வு

வருவிக்க வேண்டும் என்ற எண்ணமுடையவனாய், அரசாட்சியை எஸ்கானஸ் என்ற தனக்கு அடுத்த பெருமகனிடம் ஒப்புவித்து விட்டு, ஒரு நாவாயில் அரசனுடன் இவர்ந்து பலநாடுகளுக்குஞ் சென்று, பல காட்சிகளாலும் பலர் நல்லுரைகளாலும் பல வகைக் கலை வகைகளாலும் அவன் மனத்தை வேறுவழியில் திருப்ப முயன்றான். ஆனால் அரசன் நாவாயில் தன் அறையினின்றும் எக்காரணம் கொண்டும் வெளிவரவோ, வாயிதழ்களசைத்து எதுவும் சொல்லவோ செய்யாது ஊணுறக்கமின்றி இருந்துவந்தான்.

## 7. நல்லார் இணக்கம்

அரசனை இங்ஙிலையில் விடுத்து விட்டுப், புலிக் குழாத்துட்பட்ட மானிளங் கன்றுபோல் கடற் கொள்ளைக்காரரிடம் அகப்பட்ட மரீனாவின் நிலை என்ன என்று காண்போம்.

இக்கொள்ளைக்காரர் மைட்டிலீன்[1] நகரில் பெண்கள் விடுதி ஒன்றுவைத்துப் பிழைத்த பாண்டர்[2] என்பவனுடைய கையாட்கள். அவனில்லத்தில் மரீனா பல வகையிலும் துன்புறுத்தப்பட்டதுடன் தீவாழ்க்கையை மேற்கொள்ளும்படியும் வற்புறுத்தப்பட்டாள். ஆனால் தீயினை அண்டிய எதுவும் தாம் தூய்மையடைவதன்றி அதனைத் தூய்மை கெடச் செய்யுமோ? மரீனாவின் அன்புகனிந்த அறவுரைகளால் பலரும் திருந்தினர். பாண்டர் கூட இறுதியில் அவள் அறவுரைக் கிணங்கினானெனினும், தன்

tiline. 2. Pandar.

வறுமையைத் தன் இழிதகைமைக்குக் காரணமாகக் காட்டினான். மரீனா 'இசை, நடனம் முதலியவற்றை நகர மக்களுக்குப் பயிற்றுவித்தும், கலைப்பண்பு மிக்க சிறு தொழில்கள் செய்தும் உன் மிடிதீர்க்கின்றேன்' என்று பாண்டரிடம் கூறி, அங்ஙனம் செய்து அவன் வாழ்க்கையில் நல் ஒளியைத் தூண்டினாள். அவளுடைய இத்தகைய அருஞ்செயல்களைக் கேள்வியுற்று அந்நகர்த் தலைவனாகிய லிஸிமாக்கஸ்[1] அவள்பால் மதிப்பும் பரிவும் கொண்டான்.

## 8. இழந்தவன் பெற்ற திரு

மரீனா இங்ஙனம் நாட்கழிக்கையில், நாவாயில் பெரிக்ளிஸுடனாகப் பல நாடுகளிலும் சுற்றித்திரிந்த ஹெலிக்கானஸ், ஒரு நாள் மைட்டிலீன் பக்கம் வந்து கடற்றுறை முகத்தில் தங்கினான். அன்று கடலகத்திறைவனாகிய வருணன் விழாநாள் ஆதலால், அன்று வந்த நாவாய் வருணன் திருவருட் பேற்றின் வெளியுருவெனக் கொண்டு, லிஸிமாக்கஸ், விழாவணி தாங்கிய தன் திரு ஓடத்திலேறி நாவாயை வரவேற்று, அதன் தலைவர் தம் விருந்தினராக வேண்டுமென்று வேண்டினான். ஹெலிக்கானஸ் தம் தலைவர் துன்பத்தால் பித்தரான நிலையிலிருப்பதால் விழாவுக்கு வரமாட்டார் என்றான். லிஸிமாக்கஸ் தனக்கு இணக்கம் தந்தால் தான் எப்படியும் அவனை மகிழ்வித்து மனமாற்றி விடுவதாகக் கூறவே, ஹெலிக்கானஸ் பெரிக்ளிஸை அவனுக்குக் காட்டினான். லிஸிமாக்கஸ் தான் அறிந்த எல்லாவகை முயற்சியும் செய்து பார்த்தும், சிறந்த பாடகரையும் இசை யறிஞரையும்

1. Lysimachus.

கலைஞரையும் அனுப்பிப் பார்த்தும் அவனை மகிழ்விக்க முடியாமற் போகவே இறுதியில் மரீனாவை அழைத்துப் பெரிக்ளிஸின் நிலையைக் கூறி அவனை மகிழ்விக்க முடியுமா என்று கேட்டான். அவள் தனியே அவனைக் கண்டு முயல்வேன் என்றாள்.

மரீனா முதலில் எல்லாரையும் போலப் பாடியும் நயந்தும் பார்த்தாள். அவன் துயரத்தையே தவமாகக் கொண்டிருந்தது கண்டு, அவள் அவனிடம் தன் துயர்களைக் கூறி, அவனிடம் ஒத்துணர்வு ஏற்படுத்த எண்ணி, "அரசே, தம் துயரம் மிகப் பெரிது என்பதற் கையமில்லை. எனினும் என் துயரில் அது பத்திலொரு பங்குகூட இருக்காதென்று துணிந்து கூறுவேன். என் துயர் கேட்டபின் பெண்ணான நான் இத்தனை துயர் தாங்கின் ஆடவரான தாம் துயரில் மூழ்கலாமா என்று பார்க்க வேண்டுகிறேன்," என்றாள்.

அவள் குரல் கேட்டதே சற்று அரசன் உள்ளத்தில் ஓர் உயிர்ப்பு எழுந்தது. தன் துயர்க்கு மேம்பட்ட துயர் என்ற சொல் அவனுக்குச் சற்று அதிர்ச்சி தந்தது. திறவாத வாய் திறந்து, ஆனால் அவள் முகம் பார்க்காமல், "அப்படி உன் துயர் என்ன?", என்றான். அவள் தான் பிறக்குமுன் தாயிறந்தது, இறந்த தாய் கடலுக் கிரையானது, கிளியோனிடம் வளர்ந்தது, கிளியோன் மனைவியின் சூழ்ச்சி, அதற்குத் தப்பிப் பிழைத்தது ஆகிய அனைத்தும் அடிமுதல் முடிவரை தழுதழுத்த குரலில் கூறினாள். அதனைக் கேட்ட அரசன் மனமெலாம் வெப்பமுற்று, "இது என்ன? என் மகள் இறந்துபோனாளே? இவள்

அதே கதை கூறுகிருளே! இது என் கதை யறிந்து இவள் கட்டிய கதையோ"! என்றெல்லாம் எண்ணிப் பின்னும் முகத்தை உயர்த்த எண்ணுமலே, "உன் பெயர் என்ன? தாய் தந்தையர் யார்? வளர்த்து வஞ்சித்த பாவிகள் யார்?" என்றுன். மரீனு "நான் கடலில் பிறந்ததனுல் என்னை மரீனு என்று தந்தை யழைத்தார். என் தாய் சைமனிடிஸ் அரசன் மகள் தயீஸா. என்னை வளர்த்தவர் கிளியோனும் கொலைகாரியான அவன் மனைவி தயொனிஸாவும். என் தந்தையோ பேறற்ற அரசன் பெரிக்ளிஸ்," என்ருள்.

இச் சொற்கள் செவியேரு முன்னம் அரசன் தலையுயர்த்தி அவள் முகநோக்கித் தன் மனைவியின் வடிவம் பதிந்திருத்தல் நோக்கி, "ஆ!, பேறற்ற அப் பெரிக்ளிஸ் நானே. என் வினையிருந்தவா றென்னே? நீயே என் புதல்வி, நீ இறந்தாய் என்று வாழ மறுத்த என் உயிருக்கு நீ வாழ்வை ஈந்தாய்; நீ பிழைத்த வாறு கூறுக!" என்று அவளை எடுத்தணைத்து மகிழ்ந்தான். ஹெலிக்கானஸ் அடைந்த மகிழ்ச்சிக் கெல்லையில்லை. லிஸிமாக்கஸோ- அவர்களுக்குப் பல நாள் விருந்து செய்தான். அதற்கிடையில் மரீனுவின் உயர்குணங்களிடை அவன் கொண்ட மதிப்பு, காதலாக மாற அவன் பெரிக்ளிஸினிடம் அவளைத் தனக்கு மணஞ்செய்து தருமாறு வேண்டினன். பெரிக்ளிஸ் மரீனு மன மறிந்து அதற்கிணங்கினன்.

ஒருநாள் பெரிக்ளிஸ் கனவில் தயானு என்ற தெய்வம் தோன்றி 'யாம் உறையும் எபீஸஸிலுள்ள கோயில் வந்து உன் வாழ்க்கை வரலாறு முற்றும் கூறி உன் மகளையும் மருகனையும் வாழ்த்துமாறு

என்னிடம் கோருக. நாளையே புறப்படுக!' என்று ஆணை தந்தது. அதனை யாவரிடமும் கூறி லிஸிமாக்கஸ், மரீனு இருவருடனும் ஹெலிக்கானஸின் நாவாயிலேயே சென்று பெரிக்ளிஸ் எபீஸஸை அடைந்தான். அங்கே கோயிலுக்கு வழிவழிப் பணிபூண்ட ஸெரிமனை அண்டித் தான் கனவிற் கண்ட காட்சியைக் கூறிக் கோயிலுக்கு அவனுடன் சென்ருன். கோயிலில் தயானு முன்நின்று அரசன் தன் பழந் துயர்களை யெல்லாம் மீண்டும் கிளறி ஆருகப் பெருகும் கண்ணீருடன் தன் வரலாறு கூறினுன். இறுதியில் என்னை "ஆண்டருளும் இறைவி! இதோ கடலகத்து மாண்ட என் மனைவி தயீஸா தந்த செல்வம் மரீனு; இதோ அச் செல்வத்தை இது காறும் பேணி இனியும் பேணவிருக்கும் செப்பு எனக் கூறத்தகும் செல்வன் லிஸிமாக்கஸ்," என்ருன்.

பெரிக்ளிஸ் கனவிலும் தயீஸா அதே கோயிலில் பணிமகளா யமர்ந்திருந்தாள் என்பதறியான்; ஸெரிமனும் வந்து பேசுபவன் இன்னுன் என்றறியான். ஆகவே தயானு அடியில் மலர் சொரிந்து நின்ற தயீஸா தன்னையும் தன் இறைப்பணியையும் கூட மறந்து ஓடிவந்து மரீனுவையும் பெரிக்ளிஸையும் மாறி மாறி அணைத்து லிஸிமாக்கஸை வாழ்த்துதல் கண்டு அனைவரும் வியப்படைந்தனர். முதன் முதல் நடந்தவை யாவும் உய்த்துணர்ந்த ஸெரிமன் படிப் படியாக ஒன்றுந் தோன்ருது விழித்த பெரிக்ளிஸுக்குத் தயீஸா கடலில் இறந்ததாக யாவரும் நினைத்த படி இறக்கவில்லை யென்றும் அவளுக்கு உணர்வு வரு

வித்துப் பேணி வளர்க்க அவள் கோயிலில் பணி செய்து வந்தாள் என்றும் கூறி யாவும் விளக்கினான்.

இரு புயல்களால் வாழ்க்கை முற்றும் புயலாகக் கொண்டு துன்புற்ற பெரிக்ளிஸ் மனைவியுடன் மகளும் மருகனும் சேர, நாடுசென்று அவர்களைத் தன் அரசிருக்கையில் அமருவித்துத் தானும் ஹெலிக்கானஸும் தமக்கு இன்னருள் பாலித்த தயாளுவினைப் பரவிச் சமயத் துறைப்பணி யாற்றினார்கள். தயீஸா முன்போல் அதனில் அவர்களுடன் கலந்து பங்கு கொண்டாள்.

# VI. எட்டாம் ஹென்ரி அரசன்

---

(கதை உறுப்பினர்)

ஆடவர்.

1. எட்டாம் ஹென்ரி அரசன்.
2. கார்டினல் உல்ஸி.
3. " கம்பீஜியோ.
4. அரண்மனைத் தலைவன் :
5. பக்கிங்ஹாம் : } பிற
6. ஆபெர்காபெர்னி: } பெரு
7. ஸரே : } மக்கள்
8. லிங்கன் தலைமகன்.
9. காண்டர்பரி முதல்வன்.
10. க்ராம்வெல் : *உல்ஸி வேலையாள், உல்ஸிக்குப் பின் அவனிலைக்கு உயர்த்தப்பட்டவன்.*
11. க்ரேன்மர் : *புலவன்–காண்டர்பரி முதல்வனானவன்.*

பெண்டிர்.

1. காதரீன் அரசி.
2. ஆன்புல்லென் : *பின்னாளில் அரசியான எலிஜபெத்தின் தாய், ஹென்ரி அரசனின் இரண்டாம் துணைவி.*
3. எலிஜபெத் (குழந்தை) : *பின்னாளில் அரசி.*

---

## (கதைச் சுருக்கம்)

எட்டாம் ஹென்ரிக்கு அக்கால சமய ஒழுங்குக்குப் புறம்பாக அவன் இறந்துபோன அண்ணன் மனைவியாகிய காதரீன் மணம் செய்து வைக்கப்பட்டாள். அவன் அமைச்சன் உல்ஸி தன் சூழ்ச்சியால் அவளை நீக்கி ஃபிரெஞ்சு அரசன் தங்கையை மணம் செய்விக்க ஏற்பாடு செய்தான். அதற்கிடையில் அரசன் ஆன்புல்லென் என்ற அழகியைக் கண்டு காதல் கொண்டான், உல்ஸி சமயத்துறையில் ஆணையாளனாயு மிருந்ததனால் அவன் உதவியால் திருப் பெருந்தந்தையிட மிருந்து காதரீன் மணவிலக்குக்கு ஆணை பெற அரசன் முயன்று அது தோல்வியடையவே அவன் வெகுண்டு க்ரேன்மர் என்ற புலவனைப் பிறநாட்டுப் புலவர் கருத்தறிந்துவரச் செய்து அதன் உதவியால் காதரீனை நீக்கினான். பின் உல்ஸியின் பேராவாவும் சூழ்ச்சியும் வெளிப்பட அவன் முன் பக்கிங்ஹாம் கோமகனைக் கொன்ற பகைமையால் பெருமக்கள் அரசனுடன் சேர்ந்து அவனை வீழ்த்தினர். அவன் பணியாள் மட்டும் அன்புடன் விடைகொண்டு பின் அரசனால் உயர்வு பெற்றான். அரசன் ஆன்புல்லெனை மணந்து அவளுக்கு முடி சூட்டினான். பின் அவளுக்குப் பெண் மகவு பிறக்க அதற்குக் கிரேன்மரால் எலிஜபெத் எனப் பெயரிட்டு மகிழ்ந்தான். காதரீன் அரசனை வாயாரப் புகழ்ந்து கற்பரசியாக மாண்டாள்.

# எட்டாம் ஹென்ரி அரசன்

## 1. பேரரசர்க் குகந்த பெருந்தகை

ஆங்கில அரசர்களுள் அமைச்சர் பெருமக்கள் கைப்பொம்மையாய் அல்லலுற்றவர் பலர்; அவர்கள் சூழ்ச்சிக்கும் எதிர்ப்புக்கும் இரையாகி அழிவுற்றவர் பலர். ஆனால் அவர்களையே பகடையாக வைத்தாடிய அரசனும் உண்டு. அவனே எட்டாம் ஹென்ரி அரசன் ஆவன்.

ஆங்கிலப் பெருமக்கள் சச்சரவினாலும் தொல்லையாலும் நல்ல அரசர் பலரும் நலிவுற்றனர்; ஆண்மை மிக்க அரசர் பலரும் அழிவுற்றனர். ஆகவே அப் பெருமக்களை அடக்கியாளும் [1] எட்டாம் ஹென்ரியின் ஆற்றல் கண்டு ஆங்கில மக்கள் அஞ்சினும் அவனையும் அவன் ஆட்சியையும் உள்ளூர ஆதரித்தே வந்தனர்.

ஆங்கில அரசனுக்கு உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் மிகவும் செல்வாக்கு உண்டுபண்ண உறுதுணையா யிருந்தவன் அவனுக்கு வலக்கையாய் உதவின [2] உல்ஸி என்பவன். அவன் மிகத் தாழ்ந்த குடியில் பிறந்தவனாயினும் அறிவாலும் திறத்தாலும் ஹென்ரியின் ஆதரவாலும் மிக விரைவில் மேம்பட்டு உயர்வடைந்தான். ஹென்ரி அவனை அவன் அறிவுக்காகவும் திறத்திற்காகவும் மதித்து அவனுக்கு நாள் தவறாது உயர்வும் ஊக்கமும் அளித்து வந்தான். உல்ஸியும் அவனிடம் உண்மையாய் நடந்து அவன் ஆட்சிக்கு எல்லா வகையிலும் வல்லமை தேடினான்.

---

1. Henry VIII. 2. Wolsey (Cordinal wolsey.)

ஹென்ரி அரசனுகுமுன் அவனுக்கு [1] ஆர்தர் என்ெ‌றாரு தமையனிருந்தான். அவன் இளமையி லேயே இறந்துவிட்டான். இறக்கு முன்னமேயே அவன் தந்தையாகிய ஏழாம் ஹென்ரி அவனுக்கு ஸ்பெயின் அரசன் தங்கையாகிய [2] காதரீனை மணஞ் செய்வித் திருந்தான். ஸ்பெயின் அரசனே அந் நாளில் ஐரோப்பாவிலுள்ள அரசர்கள் அனைவரிலும் மிக்க பேரரசன் ஆனவன். அவன் உறவை நாடியே ஏழாம் ஹென்ரி காதரீனைத் தன் மருகியாக்கி யிருந்தான். ஆர்தர் இறந்ததால் மகன் இறந்ததோ டன்றி இத்தகைய பேரரசர் உறவையும் இழக்க நேரிட்டதே யென்று ஏழாம் ஹென்ரி வருத்தமடைந் தான். அதே சமயம் ஸ்பெயின் அரசனும் ஆங்கில அரசன் உறவைவிட விரும்பவில்லை. ஆகவே காதரீனை அவர்கள் திரும்பவும் அப்போது இள வரசனு யிருந்த எட்டாம் ஹென்ரிக்கு மணம் செய் வித்தனர்.

கிரிஸ்தவர் சமய ஒழுங்குப்படி அந்நாளில் ஒருவன் அண்ணன் மனைவியை மணம்புரிவது தவருகக் கருதப்பட்டது. ஆனால் காதரீன் அப் போது சிறுமியா யிருந்தமையால் ஆர்தர் மனைவியாய் உண்மையில் அவள் வாழ்வில்லை என்ற சிறப்பு நிலைமையையும், பேரரசர் இருவர் செல்வாக்கையும் உன்னி கிரிஸ்தவ உலகின் தலைவனுன [3] திருப்பெருந் தந்தை ஹென்ரியின் மணத்திற்குச் சிறப்புரிமை தந்தான். காதரீனும் ஆர்தரைப் பெயரளவிலேயே கேட்டறிந்தவள். எனவே அவள் வாழ்க்கை எளிதில்

1. Arthur. 2. Catherine. 3. Pope.

எட்டாம் ஹென்ரி வாழ்க்கையுடன் பின்னி ஒன்று பட்டது. அவள் ஒரு பெண் மகவைப் பெற்றுப் பிறந்தநாட்டிற்கும் புக்கநாட்டிற்கும் புகழ்தரும் முறையில் ஒப்பற்ற மாதரசியாய் விளங்கினாள்.

ஆங்கில அரசன் வலிமையை வளர்ப்பதற்காக ஏற்பட்ட இம்மண உறவு உண்மையில் ஆங்கில நாட்டுக்கு வலிமை தரவில்லை என்பதை உல்ஸி கண்டான். ஸ்பெயினில் அப்போது ஆண்ட[1] ஐந்தாம் சார்லஸ் அரசன் காதரீனின் அண்ணன் பிள்ளை. எனவே அவன் மேற்கொண்ட போரிலெல்லாம் ஈடுபட்டு ஆங்கில அரசு தன் பொருளையும் ஆள் வலிமையையும் அவன் புகழிற்காகச் செலவிட வேண்டியிருந்தது. இதனால் ஸ்பெயின் பேரரசன் வல்லமை பின்னும் மிகுந்ததுடன் ஆங்கில நாடு அவனுக்குப் பின்துணையாக மட்டுமே நின்றது. எப்படியாவது ஸ்பெயினின் இந் நச்சுறவை ஒழித்து ஸ்பெயின் பகைவனாகிய ஃபிரெஞ்சு அரசனுடன் சேர்ந்தால் ஆங்கிலநாடு வலிமைபெறும் என்று உல்ஸி எண்ணினான். ஆகவே சமயப்பற்றும் உணர்ச்சி வேகமும் உடைய ஹென்ரி மனத்தில் காதரீன் மணம் சமயத்துக்கு மாறானது என்ற எண்ணத்தை ஊட்டி அவளை விலக்குவித்து ஃபிரெஞ்சு அரசன் தங்கையுடன் அவனை இணைத்துவிடவேண்டுமென்று உல்ஸி சூழ்ச்சி செய்தான்.

1. Charles V

## 2. தன்னலமும் சூழ்ச்சியும்

நாட்டுப்பற்றுக் காரணமாகக் கொண்ட இச் சூழ்ச்சியோடு தன்னலம் காரணமாகவும் உல்ஸியிடம் வேறு சூழ்ச்சியில்லாமலில்லை. ஆங்கில நாட்டில் அவன் மந்திரியாகவும் கருவூலத் தலைவனாகவும் இருந்தான். அஃதன்றிச் சமயத் துறையிலும் ஆங்கில நாட்டு முதல்வனாயிருந்தவன் அவனே. இவ்விரு பெரும் பணிகளின் மதிப்புடன் அரசன் நட்பும் பெற்ற அவனிடம் பிறநாட்டு மன்னரும், மன்னரும் அஞ்சும் நிலையுடைய திருப்பெருந் தந்தையும் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். திருப்பெருந் தந்தை அதனைச் செயலிற்காட்டி அவனைத் தன் [1] ஆணையாளனாக்கினான். இவ்வகையிலெல்லாம் பெருமையும் பெருஞ்செல்வமும் அடைந்த உல்ஸி அரசர் மாளிகையும் நாணுறும் பெரிய மாடங் கட்டி ஆரவாரத்துடன் வாழ்ந்து வந்தான். இவ்வளவிலும் நிறைவுகொள்ளாமல் அவன் உள்ளத் தடத்தின் ஆழத்தில் இன்னொரு பேரவாக் கரந்து கிடந்தது. அதுவே எப்படியாவது தானே திருப்பெருந் தந்தையாய் விட வேண்டும் என்பது. அதற்காக அவன் பிறநாட்டு மன்னருக்கும் மடங்களுக்கும் பொருளை வாரி வாரி இறைத்து வந்தான்.

உல்ஸியின் இச் செலவுகளுக்கும் வெளிநாட்டுப் போர்களுக்கும் ஆன பெரும்பொருளிற் கீடாக நாட்டில் வரிப் பளுவை மிகுதிப்படுத்த வேண்டிவந்தது. அது கண்டு பொது மக்கள் மன முளைந்தாலும்

1. Cardinal

அரசனைப்பற்றியோ அரசனிலும் வன்மை படைத்த வஞ்சகத் தோற்றிய உல்ஸியைப்பற்றியோ அவர்கள் ஒன்றும் கூறத் துணியவில்லை. பெருமக்களுள் ஒருவர் இருவர் அவனை எதிர்க்கத் துணிந்தபோதும் உல்ஸி அவர்களை எளிதில் அரசனுணையாகிய இரும்புப் பொறியை ஏவி அழித்து வந்தான். ஆனால் நாளடைவில் அவனுடைய பெரிய ஆரவார வாழ்க்கையையும் செருக்கையும் துணிவையுங் கண்டு முன் அரசரையும் ஆட்டிவைத்த வகுப்பினரின் கால்வழியினராகிய பெருமக்கள் அழுக்காறடைந்து புழுங்கினர்.

பெருமக்களுள் செல்வாக்கில் மிக்கவன் [1] **பக்கிங் ஹாம் கோமகன்.** அவன் நாட்டினிடத்தும் அரசனிடத்தும் பற்றுக் கொண்டவன். ஆனால் பெருமக்களிடையே பிறவாது பெருமக்களினும் பெருமிதமாக வாழ்ந்த உல்ஸியை மற்றப் பெருமக்களைப் போலவே அவனும் வெறுத்தான். உல்ஸியின் அடாச் செயல்களைத் துணிந்து அரசனிடங் கூற அவன் முயன்று வந்தான். இதனை அறிந்த உல்ஸி அவன்பேரில் நாட்டுப் பகைமைக் குற்றஞ்சாட்டி வழக்கு மன்ற ஆராய்ச்சியில்லாமலேயே அவனைச் சிறையிலடைத்தான். அதன்பின் அவன் பக்கிங்ஹாமின் [2] **நில மேற்பார்வையாளனையும்** [3] **குடும்பத்துக் குருக்களையும்** பக்கிங்ஹாமுக் கெதிராகச் சான்று பகரும்படி ஏற்பாடு செய்துவைத்தான்.

**உல்ஸி தனக் கெதிராகச் சூழ்ச்சி செய்வதை ஒருபுறமும், வரிப்பளுவை உயர்த்திப் பெருமக்களை அவமதிப்பதை இன்னொரு புறமும் கேள்விப்பட்டு**

---

1. Duke of Buckingham 2. Steward 3. Chaplain

அரசி காதரீன் அரசன் தலைமையில் பக்கிங்ஹாமைக் குற்றஞ் சாட்டுவதற்காகக் கூடிய பெருமக்கள் பேரவையில் தானே நேரில்வந்து உல்ஸியின் கொடுமைகளையும், பக்கிங்ஹாமின் மெய்ம்மையையும் எடுத்துரைத்தாள். ஆனால் அரசன் இருபுறமும் சாயாமல் நின்று அவர்கள் ஒருவரை ஒருவர் வைததைக் கேட்டுக் கொண்டிருந்துவிட்டான். அதோடு பக்கிங்ஹாம், குறிகாரன் ஒருவன் சொல்லைக்கேட்டுத் தானே அரசனாய் விடப்போவதாக நம்பி அதுவகையில் முயற்சிகளில் முனைந்திருந்தான் என்று அவன் முன்னேற்பாட்டின்படி நில மேற்பார்வையாளனையும் குருக்களையும் பக்கிங்ஹாமுக் கெதிராகச் சான்று பகரச் செய்தான். ஆகவே அரசியின் முயற்சி பயனடையாது போயிற்று. பக்கிங்ஹாமின்மீது கொலைத் தீர்ப்பு உறுதியாயிற்று.

காதரீன்மீது எறிய எடுத்த கல்லை இனி விரைந்து வீசித்தானாகவேண்டு மென்று உல்ஸி கண்டுகொண்டான். ஆகவே அரசன் மனத்தில் காதரீனை நேரிடையாகப் புகழ்ந்து தன்னை அவன் நண்பனாகக் காட்டிக்கொண்டே அவளுக்கு ஆண்மக வில்லாமையையும் அவள் திருமணம் செல்லுபடியாகாது என்று குடிமக்களும் அறிஞரும் உரைப்பதையும் அரசன் மனத்தில் பக்குவமாய் உருவேற்றினான். அதனோடு அரசன் மனத்தை இன்னும் அவள் பக்கமிருந்து பிரிப்பதற்காக அவன் ஒரு பெரிய விருந்துக் கேற்பாடு செய்து அதில் ஆடல் பாடல்களுக்கு இடமமைத்து வைத்து அரசனை அழையாமலேயே அரசன் காதில் இது விழும்படி செய்தான்.

## 3. மன்னர்வாழ்வை மாற்றவந்த புதிய கோள்

அவன் எதிர்பார்த்தபடியே அரசன் சில தோழர்களுடன் வெளிநாட்டினர் போன்ற மாற்றுருவில் அதில் வந்து கலந்துகொண்டான். அவர்களை வரவேற்பதற்கென்றே உல்ஸி இங்கிலாந்தின் ஒப்பற்ற அழகிகளையும் ஃபிரெஞ்சு நாட்டழகிகளையும் அழைத்திருந்தான். அவர்களுள் இடைத்தரக் குடியிற் பிறந்து அரசவையின் நச்சுக் காற்றுப் படாமல் கானாறுபோன்ற கலகலப்புடைய ஒப்பற்ற அழகியாகிய [1] **ஆன்புல்லென்** என்ற ஓர் இளமங்கை வந்திருந்தாள். அரசன் அவள் கண்வலையிலும் நடையுடை தோற்றங்களாகிய நுண்ணிய மாயவலைகளிலும் சிக்கிக் காதரீனை முற்றிலும் மறந்துவிட ஒருப்படலானான்.

உல்ஸி இவ்வளவு தொலைவு திட்டமிடவில்லை. ஆயினும் தற்போது காதரீன் தனை அறுவதுபோதும். இக் காதல்வலை விரைவில் இளமை விளையாட்டாகப் போய்விடும். அதன்பின் தன் திட்டப்படி அரசனுக்கு மணம் செய்விக்கலாம் என்று அவன் எண்ணினான். ஆகவே அரசன் உரைக்கிணங்கத் திருப்பெருந் தந்தைக் கெழுதிக் காதரீன் திருமணத்தை விலக்குவிக்க ஆணைகோரினான். இதற்கிடையில் அரசனும் பின்னிலைமைக் கேற்ப ஆன்புல்லெனுக்குப் பரிசுகளும் பொருளும் அனுப்பி வந்ததுடன் அவள் உள உயர்வுக்கும் உடலழகிற்கும் ஏற்பப் புறநிலையையும் உயர்த்த எண்ணி ஆண்டுக்குப் பத்தாயிரம் பொன் வருவாய் தரும் [2] **பெம்ப்ரோக் கோமாட்டி**

1. Anne Bullen 2. Duckess of Pembrohe.

யென்னும் உயர்ந்த - பெருமிலக் கிழமைக்குரிய பட்டத்தினையும் அவளுக்கு அளித்தான்.

ஹென்ரி அரசன் தன்னுண்மையும் துணிவும் மிக்கவன். விரும்பிய பொருளை அடைய யார் தடையையும் எத்தகைய நெறியையும் அவன் பொருட்படுத்துவதில்லை. ஆனால் அவன் உணர்ச்சிக்கொத்த அறிவுமுடையவனுதலின் தன்னுண்மையுடன் செய்யும் செயல்களுக்கும் தன் திறத்தால் ஒரு நெறியும் ஒரு நேர்மையும் தோன்ற நடந்துகொள்ள விரும்பினான். ஆகவே காதரீனை உண்மையில் தான் விலக்க எண்ணவில்லை என்றும், அரசன் என்ற முறையில் பொது மக்கள் குறைச்சொல்லுக் கஞ்சியே அவளை விலக்க எண்ணியதாகவும், அதிலும் அவள் பக்கம் பேச அறிஞரைத் தானே அமைத்து வழக்குமன்றுள் வாதாடி அவளுக்கு நேர்மை வழங்க எண்ணினதாகவும் காட்டிக்கொள்ள அவன் விரும்பினான். இக்கருத்துடன் ஹென்ரி விருப்பப்படி உல்ஸி மூலம் திருப்பெருந் தந்தையிட மிருந்து உல்ஸியின் நிலைக்கொத்த நிலையுடைய [1] கம்பீஜியோ என்ற ஆணையாளன் வரவழைக்கப்பட்டான். உல்ஸியும் அவனும் ஒருங்கே வழக்குத் தலைவர்களாயிருந்து அரசிபக்கம் வேறு அறிஞரை வழக்காடவைத்துத் தீர்ப்பளிப்பதென்று ஏற்பாடாயிற்று.

உலகின் முதற் பேரரசன் மகள் ஆகி இன்னொரு வல்லரசனுக்கு வாழ்க்கைப்பட்டும்; கணவன் எண்ணமின்றி வேறெண்ணமோ கணவன் சொல்லன்றி வேறு சொல்லோ அறியாத காரிகையாகிய

1. Cardinal Compeggio.

காதரீன் தன்னிடம் குற்றமெதுவுமின்றித் தன் கணவன் தன்னிடம் பற்றுக் குறைந்து காணப்படுவதையும், வேண்டா வெறுப்பாக, ஆனால் உலக மக்கள் கண்ணை மூடும் எண்ணத்துடன் நயமாக அவன் அவளைப் படிப்படியாக நீக்க எண்ணுவதையும் கண்டு அவள் உளமைந்தாள். அவளைவிடச் சற்றுக் கற்பிற்குறைந்த எந்த மாதும் இத்தகைய நிலைமையில் உலகெலாம் ஆட்டிவைக்கும் திறனுடைய தன் மருகனுக்குச் செய்தி தெரிவித்திருப்பாள். ஆனால் கற்பரசியாகிய அவளுக்குக் கணவனுக்கு மேற்பட்ட கருத்து எதுவுமில்லை. அவள் காதல் நிறைந்த கடிதங்கள் எழுதினாள். கல்வியிலும் அவள் கரைபோனவளாதலால் தன் திருமணம் நேர்மையானதென்று மறைமொழி முதலியவற்றை மேற்கோள் காட்டி எழுதினாள். வழக்கு மன்றங் கூடுவதாக அவளுக்கு அழைப்பு வந்தபோது அவள் பிடிவாதமாகத் தன் கணவனிடத்தன்றி வேறு எந்த மன்றத்துக்கும் தான் போவதில்லை என்று மறுத்துவிட்டாள்.

அவள் உண்மையையும் பெருமிதத்தையும் வெறுப்பிடையேயும் கூடக் கண்ட அரசன் அவளிடத்திலேயே உல்ஸி, கம்பீஜியோ ஆகிய இரு ஆணையாளரையும் கூட்டி வழக்காடப்பணித்தான். முறைப்படி அரசன் வழக்காளியாகவும் காதரீன் எதிர் வழக்காளியாகவும், வழக்குத்தொடங்கப்பெற்றது. ஆனால் அது நடைபெறுமுன் காதரீன் கல்லுங் கரையும்படி கதறியழுது அரசன் காலில் வீழ்ந்து, "அண்ணலே! எனக்கெதிராகத் தங்களுக் கென்னவழக்கு? ஆண்டவன் சான்றாக மனைவியானபின் அங்ஙனம் மனைவியா

யிருக்கும் உரிமை நீங்கலாக உயிரைக்கோரினும் வழக்கின்றி அளிக்கவேண்டியவளாயிற்றே நான். நான் தங்களுக் கிழைத்த தீங்கென்ன ? தீங்குண்டாயின் தக்க ஒறுப்புத் தாங்களே தரலாமே! தங்களின் மிக்க தீர்ப்பாளர் எனக்கு யார்? மனைவி என்ற உரிமை ஒருபுறமிருக்க, இந்நாட்டில் வாழ்பவள் என்ற முறையிலும் இந்நாட்டரசராகிய தங்களின் மிக்க வழக்குத்தலைவர் வேறு யாருளர்? ஆதலின் என் உயிரனைய தலைவ, எனக்கெதிராக வழக்காடற்க. என்னை எது செய்யினும் என் கற்புரிமையை மறுக்கற்க. என்னிடமிருந்து எவ்வாறேனும் பிரிய வேண்டுமென்று உண்டானால் என் உயிர்கொள்க!' என்றாள்.

விருப்பம் ஒருபுறமும் அறிவு ஒருபுறமும் இழுக்க அரசன் சிறிது நேரம் தயங்கினான். ஆன்புல்லெனின் அழகுக்காட்சி அவன் ஆண்மையையும் உணர்ச்சியையும் தூண்ட அவன் அவளை விட்டு விலகி, நயந்த, ஆயின் அன்பற்ற குரலில், "நீ யாதொரு குற்றமும் செய்ததாக யாரும் கூறவில்லை. உன் ஒப்பற்ற குணம் என்னைமட்டுமன்றி இந்நாட்டு மக்கள் அனைவரையும் உன்பால் ஈடுபடுத்தும். நீ ஒப்பற்ற மனைவி. நாட்டு மக்கட்குத் தாய். ஆனால் நான் தெய்வத்தின் வெறுப்பிற்கு அஞ்சுகிறேன். நாட்டுமக்கள் குறைச்சொல்லுக்கு அஞ்சுகிறேன். இங்கிலையில் என் விருப்பத்தையும் மீறி நடக்கிறேன். வெளிக்கு எதிர் வழக்காளியாகிய என்னுடைய உள்ளமே உனக்காக வழக்காடுகிறது. ஆகவே தான் உன் பக்கம் பேச அறிஞரை வைத்திருக்கிறேன், உல்ஸி என்னுடன் தொடர்புடையவன் என்பதற்காகக் கம்பீஜியோவை

யும் தீர்ப்பில் பங்கு கொள்ள அழைத்திருக்கிறேன்,'' என்றான்.

அரசன் உள்ளக் கருத்தை மறைத்துப் பேசுகிறான் என்று கண்ட காதரீன் கொதிக்கின்ற துன்பவெப் பத்தை அடக்கியவளாய் உல்ஸிமீது திரும்பி, "நய வஞ்சகமும் நெஞ்சகத்தில் இரண்டகமும் கொண்ட அறிவுடையோய்! இஃதனைத்தும் நின் சூழ்ச்சி என் றறிவேன். உன் பேரவாவிற்காக என் செய்யத் துணிந்தனை? ஒரு குடியைக் கெடுக்கின்றாய், ஓர் அரசனைத் தீவழியில் உய்க்கின்றாய்! சமயப் போர் வையுள் இத்தனை அடாச்செயலையும் செய்யும் உன் உள்ளம் இன்று உலகவெற்றியின் மேற்பட்ட இறை வனில்லை என்று தருக்கி நிற்கின்றது. விரைவில் உன் செயலின் பயனின்மையை அறிவாய்'' என்று ரைத்தாள்.

உல்ஸி மீதும் தன் மீதும் பொய்ம்மைக் குற்றஞ் சாட்டிய காதரீன் உரைகளை மாற்ற அரசன் தன் ஒழுங்கைக்கூறியதுடன் தன்னை இவ்வகையில் திருத் தித் தன் கடமையைக் காட்டியவன் லிங்கன் தலை மகன் என்றும் அவன் வாயுரையாலேயே விளக்க முயன்றான். ஆனால் அவ்ற்றை ஒன்றையும் வாங்கிக் கொள்ளாமல் காதரீன் தான் வழக்காடுவ்தானால் ஸ்பெயினிலிருந்துதன் உறவினரும் துணைவரும் வரும் வரை வழக்கை ஒத்திப்போட்டேயாக வேண்டும் என்று கூறி வழக்குமன்றத்தைப் புறக்கணித்து வெளி யேறிவிட்டாள்.

## 4. கட்டுத்தறியை முறித்த மதயானை

காதரீன் எவ்வளவு நல்லவளாயினும் சரி, பெருந் தன்மையுடையவளாயினும் சரி; வழக்குமன்றத்தில் அவள் எப்படியோ தன் தற்பெருமையைக் குலைத்துத் தன் மனக்கோட்டைகளுக்குத் தடங்கல் செய்ய முனைகிருள் என்று அரசன் கண்டதே அவன் நடிப்பும் மேற்பேச்சும் அகன்றன. அவன் உல்ஸியிடம் நேரிடையாகக் காதரீன் இல்லாமலே வழக்கை முடித்து விடுக என்று கூறினன். ஆனல் கம்பீஜியோ உள்ளூரத் திருப்பெருந் தந்தையைக் கலந்துகொள்ள எண்ணினன். உல்ஸியும் தான் பின்னளில் திருப்பெருந்தந்தையாவதற்குக் காதரீன், அவன்மருகனுகிய ஸ்பெயின் அரசன் ஆகியவர்களது நேரிடையான பகைமை நல்லதன்று என்று எண்ணினன். எனவே இருவரும் இன்னொரு முறை காதரீனை வருந்திச் சென்று கண்டு அரசனிடமே வழக்கை ஒப்படைக்கக் கேட்டுக்கொண்டனர். அவள் மறுத்த உடனே அரசனைக் கலக்காமல் வழக்கை ஒத்திப் போடும்படி திருப்பெருந் தந்தைக்கு எழுதிவிட்டனர். அதன்படி கம்பீஜியோவும் இங்கிலாந்தை விட்டகன்ருன்.

தன்னைமீறித் தன் கைப்பொம்மையான உல்ஸி நடக்கிருன் என்றெண்ணியதுமே ஹென்ரி கட்டுத் தறியை முறித்த மதயானைபோலச் செயல் துறைக்கு எழுந்தான். தானிட்டது சட்டம், தான் வைத்தது வரிசை என்பதை அவன் உலகுக்கு அப்போதுதான் காட்டலானன். க்ரேன்மர் என்ற அறிஞனை அவன் ஐரோப்பாவின் பல கல்லூரிகளுக்கும் அனுப்பி அவற்றின் அவையோர் இம்மணம் பற்றிக் கூறும் முடிவு

களைக் கண்டு திரும்பும்படி ஏவினன். அவன் திரும்பியதும் அவனை சமயத் தலைவனுக்கு அவன் முன்னேற்பாட்டுடன் தருவித்த முடிவுப்படி காதரீன் மணவினை ஒரேயடியாக விலக்கப்பட்டது. விரைவில் ஆன்புல்லெனுடன் மணவினையும் நடந்து முடிந்தது.

உல்ஸியிடம் அரசன் மனங்கோணி நடந்ததை அறிந்ததே பக்கிங்ஹாம் கொலை முதல் முணு முணுத்து வந்த [1]ஆபெர்காவெர்னி [2] ஸரே, [3] நார்ஃபோக், [4] ஸஃபோக் பெருமகன் [5] அரண்மனைத் தலைவன் முதலிய பெருமக்களனைவரும் ஒருங்கு திரண்டனர். பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்பதற் கிணங்க, அச்சமயத்தில் உல்ஸி திருப் பெருந் தந்தைக்குத் தனிப்பட்ட முறையில் காதரீன் வழக்கை ஒத்திப்போடும்படி எழுதிய கடிதம் அரசன் கைக்கு எப்படியோ தப்பிவந்தது. அதேபோது உல்ஸி தன் செலவுகளை யெல்லாம் தனக்குள்ளாகக் குறித்து வைத்த குறிப்புத்தாளும் அரசனுக்கு அனுப்பும் தாள்களுடன் அகப்பட்டுவிட்டது. அதில் அவன் பெருஞ் செலவுகள் மட்டுமன்றி திருப்பெருந் தந்தையாவதற்கு உதவிகோரி ஐரோப்பாவெங்கும் அனுப்பிய பெருந்தொகைகளின் விவரமும் இருந்தது. முன் பக்கிங்ஹாமிற்கு உல்ஸிவைத்தபொறி இப்போது அவனுக்கே வைக்கப்பட்டது. அரசனிடம் எத்தகைய் மறுமொழியும் கூறமுடியாது அவன் விழித்தான். அரசனைவிட்டுச் சற்று அப்புறம் இப்புறம் திரும்பினலோ பெருமக்கள் கரடியும் புலியும் நரியும் சூழ்ந்து கொத்து

1. Lord Abergaverny. 2. Lord Surrey. 3. Lord Norfolk. 4. Lord Suffolk. 5. Lord Chamberlain

வதுபோலக் கொத்தத் தொடங்கினர். அரசன் அவனைக் கண்கொண்டுகூடப் பாராமல் பெருமக்கள் மூலமாகவே அவன் பணி அடையாளங்களையும் உரிமைகளையும் உடைமைகளையும் பறிமுதல் செய்துவிட்டு அவனை அவன் ஊருக்கே மீட்டும் அனுப்பினான்.

பேரவாக்களிடையேயும் பெருந்தன்மையிழவாத உல்ஸிக்கு இது பெரும்படிப்பினையாயிற்று. 'ஆற்றங்கரையின் மரமும் அரசறிய வீற்றிருந்தவாழ்வும் விழும்' என்பதை அவன் கண்கூடாகக் கண்டான். அதோடு ஆற்றலுள்ளபோது அச்சத்தால் அடங்கியவர் அஃது அழிந்தபோது பழி மனப்பான்மை கொள்வதையும் கண்டு உலகின் உறுதியின்மை யறிந்து அவன் பெருமூச்சு விட்டான். ஆயினும் தன் நன்னிலையில் அவன் தன்பணியாளரையும் அண்டினோரையும் ஆதரித்ததன் பயனை அவர்கள் கண்களில் காணப்பெற்றான். அவர்களில் சிறப்பாகக் கீழ்நிலையினின்றும் தானுயருந்தோறும் உயர்ந்து மிகவும் அன்புடன் தான் நடத்திய தன் அருமைப் பணியாளனான [1] கிராம்வெலின் கவலை சோர்ந்த முகத்தைக் கண்டதுமே அவன் இறக்கும் தறுவாயில் மகன் முகங்கண்ட தந்தைபோல் 'தன் துன்பங்களை மறந்து அவனுக்குத் தன் ஒப்பற்ற நல்வாழ்வின் உறுதிகளனைத்தையும் திரட்டி அரசருடனும் நண்பருடனும் ஒழுகவேண்டும் முறை, இறைவனுக்கும் அரசனுக்கும் மனச் சான்றுக்கும் மட்டுமே பிழையாது நடக்க முயல வேண்டுவதன் இன்றியமையாமை ஆகிய நல்லுரைகள் தந்து தன்னுடைமைகள் எல்லாவற்றையும் அவனே பெறும்படி ஏற்பாடுகள்

1. Cremwell.

செய்து அவனிடம் கண்ணீருடனும் கம்பலையுடனும் விடைபெற்றுச் சென்றான்.

## 5. கிரேன்மரின் நன்மொழிகள்

உல்ஸியின் உரையின்படியே விரைவில் புல்லென் ஹென்ரியுடன் அரசியாக முடிசூட்டப்படும் போது கிராம்வெல் உல்ஸியின் நிலைக்கு உயர்த்தப்பட்டான். உல்ஸிமீது பொறாமைகொண்டு அவனை ஒழித்த பெருமக்கள் அதுபோல் கிரேன்மரையும் ஒழிக்கப்பார்த்தனர். அரசன் பெருமக்கள் குற்றச் சாட்டிற்குப் போதிய இடந்தந்தானாயினும் அவர்கள் அவனை அவமதிப்பது கண்டு சீற்றங்கொண்டு அவர்களை அதட்டியதுடன் அவர்கள் கண்காண அவனுக்குப் பின்னும் உயர்வுதந்தான். விரைவில் ஆன் புல்லென் பெண்மகவு பெற்றாள். கிரேன்மரே குழந்தைக்கு எலிஜபெத் என்ற பெயர் சூட்டியதுடன் அக்குழந்தை காலத்தில் இங்கிலாந்து உலகின் ஒப்பற்ற நாடாகும் என்றும் அதன்பின் ஆளும் அரசனும் மிகுந்த புகழுடையவனாயிருப்பான் என்றும் தெய்வ நிலைபெற்றுக் குறி கூறினான்.

காதரீன் வாழ்விலும் தாழ்வில் உயர்பண்புடையவளாய்ச் சுடச்சுட ஒளிரும் பொன்போல் தோழியரிடையே இறுதிவரை கணவன் புகழே கூறி இறந்தாள். இறப்பிலும் அவள் தன் இறுதி அருட்செல்வமாறாது அரசனை வாழ்த்தினாள். தன் கடைசி வேண்டுகோளாக அவள் கேட்டுக்கொண்டது தன்தோழியையும் தன்னைச் சார்ந்தவரையும் ஆதரிக்கவேண்டும் என்பதே. காதரீன் இறுதிகேட்டு அரசன் இன்ப துன்ப

வரையறையுட்படா இருமை நிலையெய்திச் சற்றுத் தன்னை மறந்திருந்தான். அரசனிடம் உண்மையுடையவளாயினும் காதரீனின் மிக்க மனையறனுடையாள் இல்லை என்று அவளைப் பாராட்டிவந்த ஆன் புல்லெனும், தன் இன்பவாழ்வையும் அதன் இன்கனியாகிய எலிஜபெத்தின் குழந்தை முறுவலையும் மறந்து சற்றுக் கண் கலங்கினாள்.

---

# VII. அடங்காப் பிடாரி

## (கதை உறுப்பினர்)

**ஆடவர்.**

1. **பப்டிஸ்டா:** பாதுவா நகர்ச் செல்வன்—காதரீன், பயாங்கா ஆகியவர் தந்தை.
2. **பெட்ருக்கியோ:** காதரீனைக் காதலித்து மணந்தவன்.
3. **லூஸெந்தியோ:** வின்ஸெந்தியோ புதல்வன்—பயாங்காவின் காதற் கணவன்.
4. **ஹார்ட்டென்ஸியோ:** பயாங்காவின் தோழியை மணந்தவன்.
5. **வின்ஸெந்தியோ:** லூஸெந்தியோவின் தந்தை—முதியவர்.

**பெண்டிர்.**

1. **காதரீன்:** பப்டிஸ்டாவின் மூத்த புதல்வி-அடங்காப் பிடாரியாயிருந்து பின் பெட்ருக்கியோவினால் திருத்தப் பட்டவள்—பெட்ருக்கியோவின் மனைவி.
2. **பயாங்கா:** பப்டிஸ்டாவின் இளைய புதல்வி—லூஸெந்தியோவை மணந்தவள்.
3. **பயங்காவின் தோழி.**

## (கதைச் சுருக்கம்)

---

பப்டிஸ்டாவின் புதல்வியர் இருவருள் மூத்தவளான காதரீன் அடமும் பிடிமுரண்டும் உடையவள். இளையவள் பயாங்காவோ நற்குணமிக்கவள். பயாங்காவை லூஸெந்தியோ என்ற இளைஞன் மணந்துகொள்ள விரும்பியும் காதரீனை மணக்க யாரும் முன்வராமையால் பயாங்காவின் மணமும் தடைபட்டிருந்தது.

இந்நிலையில் பெட்ருக்கியோ என்ற இளைஞன் காதரீனைத் திருத்தி மனைவியாக்க எண்ணி வந்தான். காதரீனின் வன்சொல்லையும் வெறுப்பையும் வாங்காது, அவன் அவளைப் பலர் முன் புகழ்ந்தும், அவனில்லாத நேரம் அவள் தன்னை மறைவிற் காதலித்து வெளித் தோற்றத்தில் வெறுப்பதாக நடிப்பதாகவும் கூறி எளிதில் அவள் மணவினைக்கு யாவரும் இணங்கும்படி செய்தான்.

ஆனால் மண வினையிலிருந்து தொடங்கி அவன் எல்லாரிடமும் அடாவடியாகவும் பித்துப் பிடித்தவன் போலவும் நடந்துகொண்டான். பணியாட்களையும் பிறரையும் உறுக்கி வாட்டி காதரீனுக்குக் கொண்டுவந்த ஊண் உடை, படுக்கை முதலியவைகளைக் குறைகூறி வீசியெறிந்து அன்பு மிக்கவனாக நடித்துக்கொண்டே காதரீனுக்கு நல்லுணவின்றியும், நல் ஆடையின்றியும், நல் உறக்கமின்றியும் செய்து அவள் அடமுற்றும் அடக்கி அவளைப் பணியவைத்தான். பின் தான் கூறியதை எல்லாம் மறுசொல் இன்றி ஏற்றுக் கூறியபடியே நடக்காவிட்டால் அவள் விருப்பமெதுவும் நிறைவேரு தென்பதை வலியுறுத்தினன். அவள் இப்படிப்பினைகளை ஏற்றுத் தங்கக் கம்பியாய் விட்டபின்னர் அவளைத் தந்தை வீட்டுக்கு இட்டுச் சென்றான்.

அவர்கள் மறுவீட்டு விழாவை ஒட்டி பயாங்காவின் மணமும் அவள் தோழியின் மணமும் நடைபெற்றன. காதரீனின் புதிய மாறுபாட்டை உணராமல் மண மக்கள் இருவரும் பப்டிஸ்டாவுடன் சேர்ந்து காதரீனைப் புறக்கணித்துப் பேசியது கண்ட பெட்ருக்கியோ அவர்களுடன் தத்தம் மனைவியர் குறிப்பறியும் குணத்தைத் தேர்வுக்கு விடுவதெனச் சூளுரைத்தான். பின் ஒவ்வொருவரும் தத்தம் மனைவியரை அழைக்க, மற்ற இருவர் மனைவியரும் சாக்கு போக்குச் சொல்லி நிற்கக், காதரீன் மட்டும் யாவரும் வியக்கும் வண்ணம் முன் வந்தாள். அவள் உயர்வு கண்டு வெட்கமுற்ற மற்ற இரு பெண்டிரும் தாமும் அவளைப் பின் பற்றித் திருந்தினர்.

## 1. உளிக்கேற்ற சுத்தி

[1] பாதுவா நகரில் [2] பப்டிஸ்டா என்றொரு செல்வன் இருந்தான். அவன் புதல்வியர் இருவருள் மூத்தவள் ஆகிய [3] காதரீன் ஓர் அடங்காப்பிடாரி. அவள் பிடி முரண்டும் குறும்பும் மிக்கவளாய்ச் சிறியவர் பெரியவர், ஆடவர், பெண்டிர் ஆகிய எல்லாரிடமும் தாறுமாறாக நடந்தும் பேசியும் வந்தாள். ஆனால் அவள் தங்கை [4] பயாங்காவோ இன்முகமும் நயத்தக்க நாகரிகமும் உடையவள். அவளை மணக்க விரும்பித் தொலைவிடங்களிலிருந்தும் பல செல்வ இளைஞர்கள் அவள் தந்தையிடம் வந்து வந்து போயினர். ஆனால் யாரும் மூத்தவளை மணக்க முன் வரவில்லை. மூத்தாள் மணம் செய்யாமல் இளையாளை மணத்திற் கொடுப்பதற்கில்லை என்று பப்டிஸ்டா இளையாளை விரும்பி வந்தவர்களுக்கெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தான். இதன் காரணமாக பப்டிஸ்டாவின் இருபுதல்வியருக்குமே என்றும் மணம் நிகழாதிருந்து விடுமோ என்று பலர் கூறலாயினர்.

உளிக்கேற்ற சுத்தி இல்லாமலிருக்காது என்றபடி இத்தகைய பெண்ணையும் மணக்க விரும்பிய ஒருவன் நாளடைவில் ஏற்பட்டான். அவனே [5] பெட்ரூக்கியோ என்பவன். அவன் ஆழ்ந்தகன்ற அறிவுடன் சமயத்துக்கேற்ற நடிப்பும், துணிவும், நாத்திறமும் உடையவன். முன்நிறைந்து முதிர்ந்த கள்ளியை

1. Padua. 2. Baptista. 3. Katherine. 4. Bianca. 5. Petruchio.

அப்புறப்படுத்தினுல் அதனடியில் அகில் அகப்படும் என்று கூறப்படுவதை அவன் அறிவான். அது போலவே நல்வழியில் செல்லாது தீங்குக்காளான காதரீன் புறம்போர்த்த முரண்பாட்டை நீக்கினுல் அவள் ஒப்பற்ற திறம் அவள் பெண்மைக்குப் பொலிவுதரும் என அவன் கண்டு எப்படியும் அவளை அடைந்து திருத்துவது என்று முனைந்தான்.

இவ்வகையில் பெட்ரூக்கியோவின் திட்டம் மிகவும் புதுமையானது. அரம்போன்ற இயல்புடைய அவள் முரண்பாட்டை அதனிலும் முரண்பாடுடைய கின்னரத்தால் அவன் தீட்டிச் செப்பனிட முயன்ருன். பப்டிஸ்டாவினிடம் அவன் சென்று 'உம் புதல்வியின் ஒப்பற்ற அழகையும் அவ்வழகினும் மேம்பட்ட உயர் குணங்களையும் கேள்விப்பட்டு அவளை மணக்க வந்தேன்' என்ருன்.

அச்சொற்களைக்கேட்ட அரசன் அவ்வுரை தன் இளைய புதல்வியையே குறித்ததெனக் கொண்டு மூத்த புதல்வி யிருக்க இளையாளை மணஞ் செய்விக்க முடியாது என்று விடை பகர்ந்தான்.

பெட்ரூக்கியோ ? ஐயனே, ஏன் இப்படி என்னிடம் உம் புதல்வியைப் பற்றிப் பொய்கூறி எனக்கு அவளை மணம் செய்துதர மறுக்கப் பார்க்கிறீர் ? நான் அதில் ஏமாறுபவன் அல்லன். உம் மூத்த புதல்வியின் அருங் குணங்களைக் கேட்டே அவளை மணக்க வந்திருக்கிறேன்.

பப்டிஸ்டாவுக்கு இன்னும் ஐயம் ஒழியவில்லை. 'ஐயனே, என் மூத்த புதல்வியின் பெயர் காதரீன்' என்ருன் அவன்.

பெட்ருக்கியோ: 'ஆம். காதரீன் புகழில் காதல் கொண்டே உடலழகைக்காணுமுன்பே அவளை மணப்பதாக உறுதிகொண்டு வந்திருக்கிறேன். அருள் கூர்ந்து என்னை அவளுக்கு அறிமுகம் செய்துவைப்பதுடன் அவளை நான் காதல் முறையில் கோரி அடைய இணக்கந்தர வேண்டுகிறேன்'

பப்டிஸ்டாவுக்கு இஃதொன்றும் விளங்கவில்லையாயினும் எப்படியாவது தன் புதல்விக்கு மணமாகட்டும் என்றெண்ணி அவன் பெட்ருக்கியோவைக் காதரீனிடம் இட்டுச்சென்முன்.

## 2. பெட்ருக்கியோவின் புதுவகைக் காதல்முறை

காதரீன் வழக்கப்படி அவனை வசைமாரியுடனும் சீற்றத்துடனும் வரவேற்றாள். ஆனால் பெட்ருக்கியோ தன் கண்ணுக்கு அவள் நடையெல்லாம் அன்னநடை; அவள் சாயலெல்லாம் மயிலின் சாயல்; அவள் சொல்லெல்லாம் குயில் மொழி என்றே தோன்றியதாக நடித்தான். அவள் சீற்றத்தையும் வெறுப்பையும் ஊடலெனவே கொள்வதாகக் காட்டிக் கொண்டான். அவள் பிறர் முன்னிலையிலோ பப்டிஸ்டாமுன்னிலையிலோ தன்னிடம் அவதூருக நடந்து கொண்டபோதெல்லாம் "ஏன் கேட், நம் காதலைப் பிறர் கண்டால் என்ன கெட்டுப்போகும். தனியாயிருக்கும்போது நீ எவ்வளவு கனிவுடன் பேசினுய் என்பதை அவர்கள் அறியாமல் ஏன் மறைக்கப்பார்க்கிருய்?" என்பான். அவள் அவனை முறைத்துப்பார்த்தால் அவன் "ஆம்! உன் காதல்விழிக்கு இப்படி முறைக்கவும் தெரிகிறதா? என்மட்டில் அம்முறைப்பிலும்

எவ்வளவோ கவர்ச்சி இருக்கத்தான் செய்கிறது" என்பான்.

இறுதியில் ஒரு நாள் அவன் பப்டிஸ்டாவிடம் 'ஐயா, காதரீன் விரைவில் எங்கள் மணத்தை முடிக்க வேண்டுமென்று வற்புறுத்துகிருள். ஆதலின் வருகிற ஞாயிறே அவ்வினைக்கான ஏற்பாடுகளைச் செய்யக் கோருகிறேன்' என்ருன்.

பப்டிஸ்டா: அப்படியா, இவ்வளவு தொலைவு அவள் இணங்கிவிட்டாளா?

பெட்ருக்கியோ: வெளிக்கு அவள் இணங்கவில்லை தான். பிறர் காணத் தன்னிடம் மாறுதல் உண்டானதை ஒப்புக்கொள்ள அவள் விரும்ப வில்லையாம். 'என் தந்தையிடம்கூட என்றும் கூறியதுபோல மணம் வேண்டாம் என்றுதான் நான் கூறுவேன். ஆனல் அதனைப் பொருட்படுத்தாது என் மண வினையை விரைவில் முடிக்கும்படி தந்தையை வற்புறுத்துங்கள்' என்று அவள் என்னிடம் பன்னிப் பன்னிக் கேட்டுக்கொள்கிருள்.

புரைதீர்ந்த நன்மை பயப்பிக்கும் நோக்கத்துடன் கூறப்பட்ட இப்பொய்யுரையால் காதரீனின் மறுப்புப் பொருளற்றதாயிற்று. அவள் எவ்வளவுதான் 'எனக்கு மணம்வேண்டாம்; இவ்வளவு விரைவில் ஏன்; தாமதித்துப் பார்த்துக்கொள்ளலாமே என்று கூறினும் அவளது 'வேண்டாம்' என்ற சொல் 'வேண்டும்' என்ற குறிப்புப்பொருள் தருவதாகவே கொள்ளப்பட்டது.

## 3. பொய் நடிப்பும் அச்சுறுத்தும்

பப்டிஸ்டாவையும் காதரீனையும் விட்டுப் பிரியும் போது பெட்ரூக்கியோ மணநாளைக்குள் ஆடை யணிகள் கொணர்வதாகக் கூறிச்சென்றான். மணநாள் மணவேளையாயிற்று. ஒருநாளும் எதிர்பாராத அத் திருநாளைக்காணக் கோயிலில் பல்லாயிரமக்கள் கூடி யிருந்தனர். காதரீனும் வேண்டா வெறுப்பாக இழுத் துக் கொணரப்பட்டாள். மணவேளை அணுக அணுக இன்னும் மணமகன் வரவில்லையே என்று யாவரும் பேசிக்கொண்டனர். மணநேரத்திலும் மணமகன் வர வில்லை. இதுவரை மணத்தை வெறுத்துத் தூற்றிய காதரீனுக்கு இப் புதியவகை 'அவமதிப்பு அவ் வெறுப்பை மணமகன் மீது மாற்றிற்று. வேளை தவ றிச் சற்று நேரத்துக்குப்பின் பெட்ரூக்கியோ அவ் விடம் வந்தான். ஆனால் அவன் மணமகன் உடையில் வரவில்லை. அவன் கொணர்ந்த மணமகளுடையும் பொது நாட்களில் காதரீன் அணியும் உடையினும் பொதுப்படையானது. அனைவரும் 'மணவினைக்கா இவ்வுடை?' என்றனர். பெட்ரூக்கியோ 'காதரீன் என் உடையைக் காதலித்து மணக்கவில்லையே; என்னைத் தானே காதலித்து மணக்க இணங்கி வந்திருக்கிறாள்' என்று கூறினான். காதரீனுக்கு அவமதிப்பால் உடல் எண் சாணும் ஒரு சாணாகக் குறுகிற்று. சீற்றத்தால் உடலெல்லாம் படபடத்தது. ஆனால் முதல் தடவை யாக அவள் சீற்றத்தை இன்று காட்டமுடியவில்லை. அவள் தோல்வி தொடங்கிற்று.

மணவினையின் போது பெட்ரூக்கியோ தன் வேலையாட்களிடத்தும் தன்னை வாழ்த்தவந்தவர்களி

டத்தும் கடுஞ்சினங்கொண்டு சீறிவிழுந்தான். சமயத் தலைவர் வழக்கப்படி மெள்ள 'இந்நங்கையை நீ ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று ஆணையிடுவாயா?' என்ற போது அவன் இடியேறென முழங்கி ஆரவாரித்துக் கொண்டு 'ஆம். நான் ஏற்றுக்கொள்கிறேன். இதெல் லாம் என்ன கேள்வி?' என்று அதட்டினன். எதிர்பாரா அந்நடத்தை கண்டு திகில்கொண்டு சமயத் தலைவர் கையிலிருந்த சமய நூலைத் தடாலென்று கீழேபோட்டு விட்டார். சமய வினைக்குப்பின் விடாய்தீர நறு நீர் கேட்க, மாப்பிள்ளைத் தோழன் நீர் கொணர்ந்தான். அதை உரக்கச் சிரித்துக்கொண்டே குடித்தபின் பெட்ரூக்கியோ கொணர்ந்தவன்மீதே மீந்த எச்சில் நீரைக் கொட்டினன். இதையெல்லாம் கண்டவர் கள் இதுவரை காதரீனைக் கட்டியதற்காகப் பெட் ரூக்கியோவிடம் இரக்கம் காட்டியது போய்ப் பெட் ரூக்கியோவை கட்டியதற்காகக் காதரீனிடமே இரக் கங் காட்டத் தொடங்கினர்.

மணவினை முடிந்தபின் பெரிய விருந்துக்கு ஏற் பாடாகியிருந்தது. ஆனல் பெட்ரூக்கியோ அது முடிந்தபின் முன்போலவே பித்துக்கொண்டவன் போல் நடித்துப் பப்டிஸ்டாவிடம் சென்று "என் மனை வியை நான் அழைத்துக்கொண்டு போகிறேன் என்னை எவர் தடைசெய்ய முடியும்?" என்ருன். நயமொழிகள் கூறக்கூட அஞ்சி அனைவரும் 'தடை யில்லை, நீங்கள் போகலாம்' என்றனர். 'அனைவரும் இங்ஙனம் அஞ்சி நடுங்கிப் பின்னிடச் செய்யும் இவ் விலங்குடன் இனி எப்படி வாழ்வது' என்று காதரீ னுள்ளத்தில் சற்றுக் கவலை தோன்றிற்று.

புக்ககத்திற்குச் செல்லப் பெட்ரூக்கியோ ஏற்பாடு செய்திருந்த வண்டி கட்டைவண்டியிலும் கடைப் பட்டதென்னல் வேண்டும். குதிரையோ திருவளத்தான் குதிரைபோல் மாதம் காதவழி போவது. வேண்டுமென்றே சதுப்பு நிலத்தினூடான வழியில் வண்டி செலுத்தப்பட்டது. அடிக்கடி பெட்ரூக்கியோ குதிரையையும் வண்டியையும் வண்டிக்காரனையும் வாயில் வந்தபடி திட்டினான். பெட்ரூக்கியோ தன்னிடம் எவ்வளவு நயமாக நடந்துகொண்டாலும் அஃதனைத்தும் வெளிநடிப்பு, அவன் பிறரிடம் நடந்துகொள்வதே இயல்பு என்ற எண்ணம் படிப்படியாகக் காதரீன் மனத்தில் ஏறிற்று.

## 4. காதரீன் படிப்பினை

புக்ககத்தில் மணமகளுக்கெனப் பலவகை உணவுகள் தருவிக்கப்பட்டன. ஆனால் மணமகள் அதைத் தொடுமுன் பெட்ரூக்கியோ அதை எடுத்துப்பார்த்து ஒவ்வொன்றிலும் குறைகண்டு பணியாட்கள்மீது சீறி அவ்வுணவை வீசி யெறிந்தான். மணமகளுக்கான படுக்கையைக் கொணர்ந்த போதும் இவ்வாறே தலையணைகள் மெத்தைகள், போர்வைகள் ஆகியவற்றின் மீதும் குறைகூறப்பட்டு அவை வீசியெறியப்பட்டன. காதரீன் தடங்கல் செய்யப்போன போதெல்லாம் பெட்ரூக்கியோ அவள்மீதுள்ள பெருங் காதலால் தான் இப்படிச் செய்வதாக நடித்து 'என் காதற் செல்வம் இவற்றைத் தின்பதா? என் கோலக் கிளி இவற்றிற் படுப்பதா' என்றிரைந்தான். இரண்டு மூன்று நாட்களாக மணப் பெண்ணுக்கு உணவில்லை,

உறக்கமில்லை. விளையாட்டுக்கு 'வேண்டாம், வேண்டாம்' என்ற திருமணம் இத்தகைய திரிமணமாகும் என்று அவள் எண்ணவேயில்லை. இடையிடையே அவன் சற்றுத் தாழ்ந்தவகை உணவைச் சித்திரமாகக் கையில் கொணர்ந்து 'இந் நாய்கள் உன்னைப் பட்டினி போடுகின்றனவே என்று என் கையால் கண்விழிப்பாகச் செய்து கொணர்ந்தேன், என்றான். அதை அவள் வாங்க எண்ணுமளவில் 'என் முயற்சி இப்படியா அருமையற்றுப் போகவேண்டும். தங்கள் முயற்சிக்கு மிகவும் நன்றி என்று கூறாதவர்களுக்கு நான் உணவு தருவதில்லை' என்று அதனை எறிந்து விடுவான். மேலும் மறுவீடு செல்ல உடை வேண்டுமென்று தையல்காரரிடம் அவன் கூறியிருந்தான். அவர்கள் கொண்டு வந்த உடைகளுக்கெல்லாம் அப்படியே குறைகூறி அவற்றைத் திருப்பிவிட்டான் பெட்ரூக்கியோ. கடைசியில் உடைச்சிறப்பு இன்றியே மறுவீடு செல்வதாக உறுதியாயிற்று.

நல்ல உச்சி வேளை. மணி ஒன்று இருக்கும். உச்சியுணவுநேரம் சென்றுவிட்டது. பெட்ரூக்கியோ மணிப்பொறியைக் கையிலெடுத்துப் பார்த்து இப்போது விடியற்காலந்தானே. இப்போது புறப்பட்டால் உச்சியுணவுக்கு வேட்டகம் சென்று விடலாம் என்றான்.

'இப்போது உச்சி வேளையல்லவோ?' என்றாள் காதரீன்.

'அப்படியானால் நாளைச் செல்லலாம்' என்று பயணத்தை ஒத்திப் போட்டுவிட்டான் பெட்ரூக்கியோ.

மறுநாள் மாலையில் திங்கள் எழும் நேரம் அதனைக் காட்டி அவன் "அதோ ஞாயிறு எழுந்தது. இப்போது புறப்பட்டால் உச்சிவேளை போய்ச் சேரலாமே," என்ருன்.

காதரீன் : 'அது ஞாயிரு?' என்று கேட்டு நிறுத்திக் கொண்டாள்.

பெட்ரூக்கியோ 'சரி, சரி, அது ஞாயிறன்று போலும்! ஆகவே இன்று போகவேண்டாம்' என்ருன். அவன் கூறுவதை அப்படியே ஏற்ருல்தான் தன் விருப்பப்படி அவன் நடப்பான் என்ற குறிப்புப் படிப்படியாக அவள் மனத்திற் பட்டது. அடுத்த தடவை இரவு நேரத்தில் 'இப்போது பகல் வேளை, புறப்படலாமா?' என்று அவன் கேட்ட போது அவள் 'சரி அப்படியே' என்ருள். மீட்டும் 'இரவல்லவா' என்றவுடன் 'ஆமாம் இரவுதான்' என்ருள்.

மறுநாள் வேட்டகம் செல்லும் வழியில் முன்ருல் ஒரு கிழவன் சென்றுகொண் டிருந்தான். புதிய பாடம் நன்ருக ஏறியிருக்கிறதா என்று பார்க்கப் பெட்ரூக்கியோ அவனைச் சுட்டிக்காட்டி 'இவ்விள நங்கை உனக்குச் சரியான தோழியாவாள். அவளை அழைப்பாயாக!' என்ருன்.

காதரீன் சற்றும் முகம் கோணுமல் கிழவரை நோக்கி, 'நங்கையே, நீ நகரம்தானே செல்கிருய்? என் தோழியாக உடன் வருகிருயா!' என்ருள்.

பெட்ரூக்கியோ உடனே 'ஏன் காதரீன், உனக்கு என்ன பித்தா! இவள் நங்கையல்லளே? முதிய கிழவரன்ருே?' என்றபோது அவளும் உடனே சொல்

மாற்றி, 'ஐயனே, மன்னிக்கவேண்டும். வெயில் கொடுமையால் பார்வை தவறித் தங்களை நங்கை என்றழைத்துவிட்டேன். தாங்கள் நகரத்துக்குத் தானே செல்கிறீர்கள்' என்றாள்.

அம்முதியவர் அவர்கள் புதுமையான பேச்சை இளமைக்குரிய நகையாடல் எனக்கொண்டு புன்முறுவலுடன் அவர்களுடன் அளவளாவிப் பேசினார். அப்போது அவர் பயாங்காவைக் காதலித்த [1] **லூஸெந்தியோவின்** தந்தையான [2] **வின்ஸெந்தியோ** எனத் தெரிந்தது. அன்றே பயாங்காவின் மணத்திற்காகக் குறிக்கப்பட்ட நாள் என்பதைப் பெட்ரூக்கியோ அவரிடம் கூறி அவரையும் இட்டுக்கொண்டு பப்டிஸ்டாவின் மாளிகையை யடைந்தான். பப்டிஸ்டா அவர்களை வரவேற்றுப் புதிய மணமக்களை வாழ்த்தும்படி கோரினான். பயாங்காவுடன் அவள் தோழியும் [3] **ஹார்ட்டென்ஸியோ** என்பவருக்கு மணம் செய்து கொடுக்கப்பட்டாள்.

## 5. கணவர் மூவரின் பந்தயம்

புதிய பெண்களிருவரும் காதரீனுடன் மாதர் பகுதியிலிருந்தனர். ஆடவர் வெளியில் பொழுது போக்கிக்கொண் டிருந்தனர். அவர்களுள் லூஸெந்தியோவும் ஹார்ட்டென்ஸியோவும் தன்னை ஏளனம் செய்து ஒருவர்க்கொருவர் கண்ணடிப்பதையும் முகங் காட்டுவதையும் பெட்ரூக்கியோ கவனித்தும் கவனியாதவன்போ லிருந்துவந்தான். பப்டிஸ்டாகூட இதில் ஓரளவு கலந்துகொண்டதுடன் சிறிதே கவலைதோன்

1. Lucentio. 2. Vincentio. 3. Hortensio.

றும் குரலில் பெட்ருக்கியோவை பார்த்துக் 'காதரீன் எப்படி நடந்துகொள்கிருள்?' என்ருன்.

**பெட்ருக்கியோ :** மணவினைக்குமுன் எல்லாரிடமும் நடந்துகொண்டபடியே என்னிடமும் நாகரிகமாகவும் அடக்க ஒடுக்கமாகவும் நடந்துகொள்கிருள்.

**பப்டிஸ்டா :** இது என்ன, தாம் கூறுவது கேலிக் கூத்தா என்ன?

**ஹார்ட்டென்ஸியோ :** ஆம். வீட்டில் படுவதை வெளியில் சொல்வானேன்?

**லூஸெந்தியோ :** ஏன் அவர் மனத்தைக் கிளறுகிறீர்கள்? எப்படியும் அவர் வந்து சிவபிரான் நஞ்சை உண்டதுபோல் காதரீனைக் கைக்கொண்டு செல்லாவிட்டால் நான் என் இன்னமுதாகிய பயாங்காவை மணப்ப தெவ்வாறு? ஆகவே பெட்ருக்கியோ எனக்காக எடுத்துக்கொண்ட தன்மறுப்புக்கு நான் எத்தனையோ நன்றி செலுத்தவேண்டும்.

**பெட்ருக்கியோ :** நீங்களெல்லாம் அன்னத்தை வாத்தாகவும் வாத்தை அன்னமாகவும் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள். என் காதரீன் விண்மீன்களாகிய பிற பெண்களிடையே முழுநிலாவொப்பாள்.

**லூஸெந்தியோ :** அன்பரீர், தங்கள் வாய்க் கோட்டை செயலுக்கு நில்லாது.

**ஹார்ட்டென்ஸியோ :** ஆம். நீர் கூறுவதில் பத்திலொருபங்கு பணிவைக் காதரீனிடம் காண முடியாதென்று நான் இருபது வெள்ளிகள் பந்தயம் வைப்பேன்.

**லூஸெந்தியோ :** ஆம். நானும் இருபது வெள்ளிகள் பந்தயம் வைக்க இணங்குவேன்.

பெட்ரூக்கியோ: 'என் காதரீனுடைய குணப் பொலிவின் உறுதிக்கு நான் இருபதுக்கு இருபதின் மடங்கு வெள்ளிகள் தருகிறேன். எங்கே, ஒவ்வொரு வரும் அவரவர் இல்லக் கிழத்தியரை வரவழையுங் கள். யார் குறிப்பறிந்து வருகின்றனர் என்று பார்ப் போம்,' என்றான்.

லூஸெந்தியோவும் ஹார்ட்டென்ஸியோவும் அப் பொழுதே அந்நானூறு வெள்ளியும் தம்மிடம் வந்ததாக எண்ணிச் செருக்குடன் தத்தம் மனைவி யரைப் பணியாளர் மூலம் அவர்களிடம் வரும்படி ஏவினர். முதலில் ஹார்ட்டென்ஸியோவின் வேலை யாள் திரும்பிவந்து, 'ஐயா, தலைவி வேலையில் மும்முர மாக ஈடுபட்டிருக்கிறாளாம். பிறகு வருவதாகக் கூறி யனுப்பினாள்' என்றான். ஹார்ட்டென்ஸியோவின் முகம் சற்றுச் சுண்டிற்று. ஆனால் 'எப்படியும் பயாங்கா வருவாள். பந்தயம் தோல்வியுறாமல் போக லாம்' என்றெண்ணிக் கொண்டான்.

விரைவில் பயாங்காவினிடமிருந்தும் வேலையாள் தனியே மீண்டு வந்தான். பயாங்கா அவன் மூலம் 'நான் இங்கு தோழியருடன் விளையாடிக்கொண் டிருக்கி றேன். அவர்களை இங்கேயே வரச்சொல்வதுதானே' என்று கூறியனுப்பினாள். லூஸெந்தியோவும் ஹார்ட் டென்ஸியோவும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண் டனர். ஆனால் பப்டிஸ்டா 'இன்னும் வராமலிருக்கும் மூன்றாவது மறுப்பு இவ்விரண்டையும் மறக்கச் செய் வதாயிருக்கும். இவை அவற்றிற்கு ஒரு பாயிரமட் டுந்தான்' என்றான்.

## 6. குறிப்பறியும் குணவதி

பப்டிஸ்டா வாய் மூடுமுன் காதரீன் புன்முறுவ லுடன் முன்வந்து நின்றாள். கையில் அவள் தைத்துக் கொண்டிருந்த பூவேலையுடன் ஊசியும் நாலும் இருந் தன. தந்தைக்கு வணக்கஞ் செலுத்தியபின் ஊசி, நூல் முதலியவற்றை அங்கிருந்த படிப்பலகை ஒன்றில் வைத்துவிட்டுக் கணவனை நோக்கித் 'தங்களுக்கு என்னவேண்டும்' என்றாள்.

தாம் காண்பது கனவா, நனவா என மற்ற இரு காதற்கணவரும் பப்டிஸ்டாவும் விழித்தனர்.

பெட்ரூக்கியோ மீண்டும் அவள் உயர்வினைக் காட்டும் எண்ணத்துடன் 'உன் தோழியர் எங்கே?' என்றான்.

காதரீன்: அவர்கள் சதுரங்கத்தில் ஈடுபட்டிருக் கின்றனர். நான் அவர்களுடன் பேசிக்கொண்டே பூவேலை செய்துகொண்டிருந்தேன்.

**பெட்ரூக்கியோ:** சரி, அவர்களை நாங்கள் அழைத்ததாகக் கூறாமலே இப்பக்கம் இட்டுக் கொண்டு வா.

காதரீன் 'சரி' என்று சென்று சில வினாடிகளுக்குள் வளையல்காரர் வந்திருப்பதாகக் கூறி மற்ற இருவரை யும் அப்பக்கமாக அழைத்துவந்தாள். தங்கள் தங்கள் கணவரும் தந்தையும் இருப்பதுகண்டு காதரீனை நோக்கி அவர்கள், 'ஏன் எங்களை ஏய்த்து இப்புறம் கூட்டிவந்தாய். நீ கூறியது மாதிரி இங்கே வளையல் காரர் யாரும் காணோமே' என்றனர்.

'காசுக்கு வளையலிடுபவர் இல்லைதான். காதலுக்கு வளையலிடுபவர்கள் இருக்கிறார்கள்' என்று கூறிக் காதரீன் புன்முறுவல் பூத்து நகைத்தாள்.

லூஸெந்தியோவும் ஹார்ட்டென்ஸியோவும் வெட்கித் தலைகுனிந்து தம் பந்தயந்தர ஒத்துக்கொண்டனர். பப்டிஸ்டா புதிதாக இன்னொரு மகள் பிறந்து வளர்ந்துவிட்டாலென்ன மகிழ்ச்சி கொண்டு அவள் பேருக்கும் அவளுக்குப் புத்துணர்வு தந்த கணவன் பேருக்கும் இன்னும் இருபதினாயிரம் வெள்ளி உடைமையாகத் தந்தான்.

விரைவில் காதரீன் தோழமையால் மற்ற இரு பெண்டிரும் நயமும் நாகரிகமும் குறிப்பறியும் திறனும் பெற்று விளங்கினர்.

## VIII. திராய்லஸும் கிரெஸிடாவும்.

### கதை உறுப்பினர்

ஆடவர்.

1. பிரியம்: திராய் அரசன்.
2. பாரிஸ்: ஹெலனைக் கவர்ந்து சென்றவன். } பிரியமின் புதல்வர்.
3. ஹெக்டார் } பிரியமின் புதல்வர்.
4. டெய்ஃபோபஸ் } பிரியமின் புதல்வர்.
5. ஹெலனஸ் } பிரியமின் புதல்வர்.
6. திராய்லஸ் கிரஸிடாவின் காதலன் } பிரியமின் புதல்வர்.
7. ஈனியாஸ்: } திராய் படைத் தலைவர்
8. அந்தெனர்: } திராய் படைத் தலைவர்
9. பண்டாரஸ்: கிரெஸிடாவின் மாமன்.
10. கால்சஸ்: திராயின் சமய குரு, கிரேக்கருக்கு உதவி செய்தவன்.
11. மெனிலாஸ்: ஹெலன் கணவன்.
12. அகமெம்னன்: கிரேக்கப் படையின் தனிமுதல் தலைவன், மெனிலாஸ் உடன் பிறந்தான்.
13. யுலிஸிஸ்: அறிவும்வீரமும் மிக்கவன் } கிரேக்கப் படைத் தலைவர்.
14. அச்சிலிஸ்: ஒப்பற்ற வீரன், தற்புகழ்ச்சி விருப்புடையவன். } கிரேக்கப் படைத் தலைவர்.
15. அஜாக்ஸ்: திராய் நகரத்துத்தாய்க்கும் கிரேக்கத் தந்தைக்கும் பிறந்த வீரன்: } கிரேக்கப் படைத் தலைவர்.
16. நெஸ்டார்: } கிரேக்க வீரர்.
17. தயோமிடிஸ்: கிரெஸிடா காதல் கவர்ந்தவன். } கிரேக்க வீரர்.
18. பத்ரொக்ளிஸ்: } கிரேக்க வீரர்.
19. தெர்ஸிடிஸ்: கிரேக்கக் கோமாளி. } கிரேக்க வீரர்.

பெண்டிர்.

1. ஹெலன் : ஒப்பற்ற கிரேக்க அழகி, மெனிலாஸ் மனைவி, பாரிஸால் கவரப்பெற்றவள்.
2. அந்த்ரோமக்கே: ஹெக்டார் மனைவி.
3. கஸன்ட்ரா: பிரியம் மகள், ஹெக்டார் தங்கை, தெய்வ வெறியால் பித்துக் கொண்டவளாகக் கருதப்பட்டவள்.
4. பாலிக்ஸெனு : பிரியம்மகள்
5. கிரெஸிடா: கால்சஸ் மகள், திராய்லஸின் காதலி. தயோமிடிஸுடன் காதலுற வாடியவள்.

## கதைச் சுருக்கம்

திராய் நகர் முற்றுகையின்போது கிரேக்கர் பக்கம் சென்று உதவிய சமயகுரு கால்சஸ் கிரேக்கர் பக்கம் சிறைப்பட்ட திராயின் படைத்தலைவன் அந்தெனருக்கு மாருகத் தன் புதல்வியாகிய கிரெஸிடாவைத் திராய் நகரிலிருந்து மீட்டுக்கொண்டான். ஆனால் அதற்குள் அவள் தன் மாமன் பண்டாரஸின் உதவியால் திராய் அரசன் பிரியமின் இளைய புதல்வன் திராய்லஸ் காதலைப் பெற்றிருந்தாள். நகரிலிருந்து வெளியேறுகையில் அவள் அவனுடன் பிரியாவிடை பெற்றுக் கையுறை மாற்றிக் கொண்டாள். இருதிறத்தினரிடையேயும் தற்காலிகமாக ஏற்பட்ட போர் நிறுத்தமொன்றைத் துணைகொண்டு திராய்லஸ் தன் உடன்பிறந்தானை ஹெக்டாருடன் கிரேக்கரின் விருந்தாளியாக வந்து மறைவிலிருந்து கிரெஸிடா தயொமிடிஸ் என்ற கிரேக்க வீரனுடன் உறவாடியதையும் தன் கையுறையை அவனுக்குக் கொடுப்பதையும் கண்டு சீற்றத்துடன் மறுநாள் போர் புரிந்தான். அப்படியும் அச்சிலிஸ் என்ற கிரேக்கத் தலைவன் சூதால் ஹெக்டாரைக் கொன்றுவிடவே முற்றிலும் மனமுடைந்து திராய்லஸ் திராய்நகர் மீண்டான்.

# VIII. திராய்லஸும் கிரெஸிடாவும்

## 1. கிரெஸிடாவின் மீட்பு

[1] கிரேக்க நாட்டிற் பிறந்த [2] ஹெலென் என்ற இளவரசி கிரேக்கரிடையே மட்டுமன்றி அந்நாளைய உலகிலேயே ஒப்பற்ற அழகுடையவளாயிருந்தாள். அவளை [3] மெனிலாஸ் என்ற கிரேக்க அரசன் மணம் செய்துகொண்டான். ஆனால் அவளை மணம் வேட்டு வந்திருந்த பலருள் [4] திராய் நகரின் அரசனாகிய [5] பிரியமின் மூத்த புதல்வனான [6] பாரிஸ் ஒருவன். அவன் அவளை மணவினையிற் பெறாததனால் புழுக்கமுற்று அவளை மெனிலாஸினிடமிருந்து வலிந்து கவர்ந்து கொண்டு தன் நாடு ஏகினான்.

இச்செயல் நேர்மையற்றதென்றும் கிரேக்க மக்களுக்கு அவமதிப்பானது என்றும் எண்ணிக் கிரேக்க அரசர் அனைவரும் மெனிலாஸின் உடன்பிறந்தானான [7] அகமெம்னன் தலைமையில் ஒன்றுபட்டுப் பெரும் படையுடன் கப்பல்களிலேறி ஹெலெனை மீட்கும் எண்ணத்துடன் திராய் நகரத்தை அடைந்து அதனை முற்றுகையிட்டனர். முற்றுகை பத்தாண்டளவும் நடந்தது. அதில் கிரேக்க இளைஞரும் திராய் இளைஞரும் பல்லாயிரக்கணக்கில் உயிர்துறந்தும் நெடுநாளாக இருபுறமும் தெளிவான வெற்றி ஏற்படாதிருந்தது.

கிரேக்கர் பக்கம் வெற்றி ஏற்படாதிருந்ததன் காரணங்களுள் ஒன்று தலைவர்களிடையே ஒற்றுமையில்லாமை ஆகும். ஹெலெனையிழந்தது பொதுவகையில் தங்கள் அவமதிப்பெனக் கிரேக்கர் பிறர்

---

1. Greece. 2. Helen. 3. Menelaus. 4. Troy. 5. Priam. 6. Paris. 7. Agamemnon.

முன்னிலையில் வீம்புடன் கூற முன்வரினும், தமக்குள்ளாக அடிக்கடி மெனிலாஸ் ஹெலெனை வைத்துக் காப்பாற்ற முடியாத கோழை யென்றும் மனைவியை இத்தனைபேர் மீட்கும்படி விட்ட கையாலாகாத பேர்வழி என்றும் குறை கூறிவந்தனர். அத்துடன் [1] **அச்சிலிஸ்** முதலிய பெருவீரர் எங்கும் புகழ்ப்பெற்றதனால் உலகில் எல்லாம் தாமே என்று கருதி அவர்கள் தற்பெருமைகொண்டு செயலற்றவராயிருந்து வந்தனர். போதாக் குறைக்கு அச்சிலிஸ் திராய் நகரத்துக்குத் தூதனாய்ச் சென்றிருக்கும்போது அங்கே பிரியமின் புதல்வியாகிய [2] **பாலிக்ஸெனவைக்** கண்டு உள்ளூரக் காதல் கொண்டு அவள் அண்ணன்மாருடன் போரிட மனமின்றி ஒதுங்கி நின்றான்.

எதிர்ப்பக்கத்தில் திராய் நகரிலும் முழுஒற்றுமையில்லை. முதலில் பாரிஸ் ஹெலெனைக் கவரச் செல்லும்போது அது வீரமிக்க துணிகரச் செயல் என்றும் கிரேக்கருக்கு எதிராகத் திராய் மக்கள் உயர்வை அது நிலைநிறுத்தும் என்றும் மனத்துட்கொண்டு பிரியமின் மற்றப் புதல்வரான [3] **ஹெக்டார்,** [4] **டெய்ஃபோபஸ்** [5] **ஹெலெனஸ்,** [6] **திராய்லஸ்** முதலிய எல்லாரும் அவனை ஆதரித்ததுடன் அதில் பெருமைகொள்ளவும் செய்தனர். ஆண்டுக்கு மேல் ஆண்டு முற்றுகை நீடித்து இளங்காளைகள் பலர் உயிர்நீத்து மங்கையர் பலர் நாணிழக்குந்தோறும் அவர்களிடையே ஒரு சிலர் இவ்வொரு பெண்ணிற்காக இத்தனைபேர் உயிர் இழப்பானேன்; அவளைத் திரும்பக் கிரேக்கரிடம்

1. Achilles. 2. Polyxena. 3. Hector. 4. Deiphobus. 5. Helenus. 6. Troilus.

கொடுத்து விடுவதுதானே என்று எண்ணினர். இத்தகைய கோழைமதிகளுள் தலைமையானவன் இளவரசருள் சமயகுருவாய்ச் சமைந்துநின்ற ஹெலெனஸ் என்பவன். இளவரசர்களுள் ஒப்பற்ற வீரனாகிய ஹெக்டாரும் அவன்புறம் சாய்வதுண்டு. ஆனால் அவர்கள் எல்லாரிலும் இளைஞனும் அறிவிலும் ஆற்றலிலும் மிக்கவனுமான திராய்லஸ் பாரிஸ் பக்கம் நின்று ஹெலெனஸைப் பழித்து ஹெக்டாரையும் பிறரையும் ஒறுத்து அத்தகைய கோழைத்தனம் வளராது பார்த்துவந்தான்.

கோழைத்தனத்தின் எல்லைக்கோடுதாண்டி நாட்டுப் பகைவனாகத் துணிந்த திராய் மகனும் ஒருவன் இருந்தான். அவனே சமயத்தலைவனாகிய [1]கால்சஸ். பிரியம் குடியினர் தன் பேரவாவுக்கேற்ற உயர்வு தரவில்லையென்று உள்ளூரப்புழுங்கிய அவன் எதிரியுடன் சேர்ந்து தன் நாட்டினரின் உள்ளூறை மறைவுகளையும் நொய்மைப் பகுதிகளையும் எதிரிகளுக்கு எடுத்துக்கூறி அவர்களை அழிக்க எண்ணங்கொண்டான். ஆகவே அவன் இரவோடிரவாக மதில்கடந்து கிரேக்கர் பாசறை சென்று அவர்களிடம் சரண்புகுந்தான். பேராவற் பேயால் தூண்டப்பெற்ற அவன் இங்ஙனம் ஓளிந்தோடும்போது தன் புதல்வியாகிய [2]கிரெஸிடாவைத் திராய் நகரிலேயே விட்டுவந்ததை மறந்து விட்டான். ஆயினும் விரைவில் அவன் தன் தவற்றை உணர்ந்து அதனை எவ்வகையிலேனும் திருத்திவிட எண்ணினான்.

கால்சஸ் நாநயமும் சூழ்ச்சியும் மிக்கவன். கிரேக்கர் தலைவனாகிய அகமெம்னனோ இளகிய நெஞ்சமும்

1. Calchus. 2. Cressida.

பெருமித உணர்ச்சியும் உடையவன். ஆகவே கால்சஸிடம் அவன் பரிவுகொண்டு அவன் கோரியபடியே கிரெஸிடாவை அவள் தந்தையுடன் சேர்த்துவைக்க இணங்கினான். திராய் மக்களுள் சிறைப்பட்டவர் பலரை அவளுக்கிணையாக விடுவிப்பதாகக் கூறி அவன் திராய் நகருக்குத் தூதனுப்பியும் ஒன்றும் பயனில்லாது போயிற்று. கால்சஸிடம் கடும்பகைமை கொண்டுவிட்ட திராய் மக்களும் அவர்கள் தலைவரும் அவளை அனுப்ப மறுத்தனர். இறுதியில் திராய் அரசர் குடிக்கு நெருங்கிய உறவினனும் ஒப்பற்ற வீரனுமாகிய [1] அந்தெனர் கிரேக்கர் கைப்பட்டான். கால்சஸின் வற்புறுத்தலுக்கிணங்கி கிரேக்கர் அவனை விடுவிப்பதாகக் கூறி அவனுக்கிணையாகக் கிரெஸிடாவை அடைவதற்குத் திராய் மக்களிடமிருந்து இணக்கம் பெற்றனர்.

## 2. காதலர் கூட்டுறவும் பிரிவும்

கால்சஸ் சென்றபின் கிரெஸிடா திராய் நகரில் தன் மாமன் [2] பண்டாரஸின் பாதுகாப்பிலிருந்தாள். இளமையும் அழகும் மிக்க அவளைப் பெரிய இடத்தில் காதலால் பிணைத்து அதன்மூலம் பெருமையடைய எண்ணி அவன் அவளுக்கும் பிரியமின் இளையபுதல்வனை திராய்லஸுக்கு மிடையே நட்புணர்ச்சி ஏற்படும்படி செய்து நாளடைவில் ஒருவரை ஒருவர் மாறுக்காதல் கொள்ளுவித்தான். இளைஞனை திராய்லஸ் அக்காதல் வெள்ளத்தில் தலைகுப்புற வீழ்ந்து தத்தளித்தான். கிரெஸிடாவோ உள்ளூர அவன்மீது காதல் கொள்ளினும் அதனை வெளிக்காட்டினால் அவன் தன்னை எளிதில் பெற்றுப்

1. Antenor. 2. Pandarus.

பின் தன்னை அவ்வளவாக மதிக்கமாட்டான் என்றெண்ணி அவனைத் தொலைவில் விலக்கி வைத்துக் காதலற்றவள்போல் நடித்தாள். திராய்லஸ் அவளையே யெண்ணிப் போரில் முழுமுயற்சி யற்றிருந்தான். அவன் தன் நிலைமையை அண்ணனாகிய பாரிஸினிடம் கூறி அவன்மூலம் போரினின்றும் ஒருநாள் முற்றிலும் விலகிநிற்க இணக்கம் பெற்றான். பெற்று அந்நாளில் பண்டாரஸ்மூலம் பெருமுயற்சி செய்து அவள் வீடடைந்து தோட்டத்தில் அவளைக் கண்ணுற்றான். அவனுடன் நெருங்கி ஊடாடும் போது கிரெஸிடாவின் பயிர்ப்பு காற்றெனப் பறந்தோடிற்று. அன்றிரவே அவர்கள் காதற்கனா நனவாயிற்று. அதுவரை காதலின் அழைப்பிற்குக் கதவடைத்து இராநேரங்களை ஊழிகளாகக் கழித்த கிரெஸிடா அன்று அஃது ஓர் இமைப்பொழுதெனக் கழிந்ததாக உணர்ந்தாள்.

ஆனால் பொழுது விடிவதுடன் அவர்கள் காதற்கனவுக்கும் விடியற்காலமாயிற்று. கிரேக்கர் தலைவனான அகமெம்னனின் தூதனாகிய [1]தயோமிடிஸ் அந்தெனருடன் புறப்பட்டுத் திராய்நகர் வந்து கிரெஸிடாவைக் கோரினான். பாரிஸ் கிரெஸிடாவினைத் தன் தம்பி காதல்கொண்டு அன்றிரவுகூட அவளுடனேயே இருந்தான் என்பதை அறிவான். இப்பிரிவால் திராய்லஸ் மிகவும் மனநோவான் என்பதும் அவனுக்குத் தெரியும். ஆயினும் வேறுவகையின்றி அவன் பண்டாரஸ் வீட்டிற்கு வந்து திராய்லஸைத் தனியே அழைத்துக் கொண்டுபோய் விவரமனைத்தும் அவனிடம்

1. Diomedes.

கூறிப் பின் அவனைத் தேற்ற முயன்றான். அதேசமயம் பண்டாரஸனும் இச்செய்தி அறிந்து கிரெஸிடாவிடம் அவள் கிரேக்கர் படைவீடு செல்லவேண்டும் என்பதைக் கூறிப் பின் அவளைத் தேற்றலானான்.

திராய்லஸுக்கும் கிரெஸிடாவுக்கும் ஒருவருக்கொருவர் ஆர அமர விடை பெறுவதற்குக் கூட நேரமில்லாதிருந்தது. ஆயினும் பாரிஸின் உதவியாலும் பண்டாரஸின் ஏற்பாட்டினாலும் சற்றே அவர்கள் தனித்து நின்று ஒருவர் உள்ளத்தின் துயரை ஒருவர் உள்ளத்தில் கொட்டிக்கொள்ளலாயினர். கிரெஸிடா மீண்டும் மீண்டும் "திராய்லஸ், நான் போய்த்தான் தீரவேண்டுமா? போய் நான் என் செய்வேன்" என்பாள். திராய்லஸ் "கண்ணே, போகாது வழி வேறு என்ன இருக்கிறது. போய்த்தான் ஆக வேண்டும்," என்று அவன் முகத்துடன் தன் முகத்தையும் சேர்த்து இருவர் கண்ணீரையும் ஒருங்கே ஒழுக்குவான். இறுதியில் அவன் "எப்படியும் காதல் உடற்பிரிவைக் கடந்து நிற்கும். நீ மட்டும் உறுதி தவறாதிருப்பின் நான் வேறெல்லாத் தடைகளையும் கடந்து உன்னை வந்து காண்பேன்," என்றான். அச்சொல்லில் கண்ட ஐய உணர்ச்சிக்கு வருந்தி அவள் பின்னும் அழுதாள். ஆனால் திராய்லஸ், "நான் உன்னிடம் ஐயங்கொள்ளவில்லை. கிரேக்க இளைஞர் கலை நலம் வல்லவர்; நாநயமும் நடைநயமும் உடையவர். அதன் கவர்ச்சி வலையில் அறியாப்பெண்ணாகிய நீ விழுந்துவிடக்கூடாதே என்று எச்சரித்தேன்," என்றான். அவள் தனக்குத் திராய்லஸன்றி வேறு எக்கவர்ச்சியு மில்லை என்று கையடித்துக் கூறினாள். இறுதியில் மாறா உறுதியுடன்

அவர்கள் ஒருவர்க்கொருவர் நினைவூட்டாகத் தம் கையுறைகளை மாற்றிக்கொண்டனர்.

தயோமிடிஸினிடம் அவளை ஒப்படைக்கையில் திராய்லஸ் அவனிடம் அவளை நன்கு நடத்துமாறு கோரினான். "அங்ஙனம் நடத்தினால் நீ எதிரியாயினும் உன்பால் நான் நல்லுணர்ச்சியுடையவனாய் உற்றிடத்து உதவுவேன்," என்றான். தயோமிடிஸ் சட்டென, "அழகு மிக்க இந்நங்கையை அவள் அழகுக்காகக் கவனிப்பது உறுதி. உன் நல்லுணர்ச்சி எனக்கு வேண்டாம்" என்றான். திராய்லஸ் மனம் புண்பட்டது. ஆனால் கிரெஸிடா தயோமிடிஸ் பக்கம் நோக்க அவன் உடனே தன் நடையை முற்றிலும் மாற்றித் திராய்லஸிடம் பசப்பி மன்னிப்புக் கோரினான்.

### 3. [1]யுலிஸிஸின் சூழ்ச்சி முறை

கிரெஸிடா கிரேக்கர் பக்கம் செல்வதற்கு முந்தின நாள் திராயின் ஒப்பற்ற வீரனாகிய ஹெக்டாரைப் போரில் [2]அஜாக்ஸ் என்ற வீரன் தாக்கினான். இதற்கு முன் யாரும் தன் முன்வரத் தயங்குவதறிந்த ஹெக்டார் சீற்றத்துடன் அவன்மேற் பாய்ந்தான். ஆனால் அஜாக்ஸ் எளிதில் விட்டுக்கொடுக்காதிருந்தத்துடன் ஹெக்டாரைப் பின்னடையும்படி மிகவும் திறம்படப் போர் தொடுத்தான். அதற்குள் பொழுதிருட்டி விட்டதால் ஹெக்டார் மீண்டும் செல்ல வேண்டி வந்தது. பலநாள் பொருததன் பயனாய் ஏற்பட்ட தன்புகழ் ஒரு நாளில் மங்குவதற்கிடமாயிற்றே என்று கவன்ற அவன் மறுநாள் விடிந்ததே

---

1. Ulysses. 2. Ajax.

தன் முரசுவீரனை அழைத்துக் "கிரேக்கவீரர் முன் சென்று 'ஹெக்டார் தன் தாய் நாடே ஒப்பற்றதெனப் பறை சாற்றி அதனை மறுப்பவரை அறைகூவிப் போருக்கழைக்கின்றான். கிரேக்கரிடையே ஆடவர் உண்டென்றால் வந்து போரிடுக' என்று பறை சாற்று" என்றான்.

இப் போர் முரசங் கேட்டதே அகமெம்னன் மிக மிக விரைவில் போரவை கூட்டினான். அதில் வீரவாழ்விலும் அறிவு நிறைவிலும் முதிர்ந்த நரை மலிந்த வீரனாகிய [1]நெஸ்டாரும் ஒப்பற்ற மெய்யறிவாளனும் மற்போர் வீரனுமாகிய யுலிஸிஸூம் பிற வீரரும் வந்திருந்தனர். ஆனால் கிரேக்கர் தம் புகழுக்கே உயிரெனப் போற்றிய அச்சிலிஸூம் அஜாக்ஸூம் அங்கே வரவில்லை. நெஸ்டார் கிரேக்க தலைவனாகிய அகமெம்னனுக்கு அவர்கள் தற்பெருமையையும் குறுகிய தன்னலத்தையும் எடுத்துரைத்தான். யுலிஸிஸ் எழுந்து, "அவர்கள் தற்பெருமை மட்டிலும் அன்று அறிவின்மையிலும் ஒப்புயர் வற்றவர்கள்; அவர்கள் இருவருமே போரிலீடுபட வேண்டுமாயின் அவர்களை ஒருவர் மீதொருவர் அழுக்காறு கொள்ளும்படி செய்ய வேண்டும்," என்று கூறி அதற்கான வழிகளையும் தலைவனிடம் கூறினான்.

அதன்படி அகமெம்னன் அச்சிலிஸிற்குஅழைப்பு விடுத்தான். அவன் வராமற் போகவே அவையுடன் அகமெம்னன் அவனிடம் சென்றான். அப்போதும் அவன் தன் நண்பனை [2]பட்ரோக்ளிஸினிடம் தான் நோயுற்றிருப்பதாகக் கூறியனுப்பிவிட்டான். அதன்பின் யுலிஸீஸ் முன்கூட்டி ஏற்பாடு செய்தபடியே அனைவரும்

1. Nestor. 2. Patrocles.

அஜாக்ஸினிடம் சென்று அச்சிலிஸ் அவன்மீது பொறாமைகொண் டிருப்பதாகவும், ஹெக்டார் அவன் ஒருவனையே அஞ்சுவதாய்க் கூறியதாகவும் கூறினார்கள். எதிர்பார்த்தபடியே அஜாக்ஸ் வீம்படித்துக் கொண்டு "அச்சிலிஸ் அச்சங்கொண்டு பின்னடைகிறான் பார்! நானே சென்று ஹெக்டாரின் கொட்டம் அடக்குகிறேன்" என்று புறப்பட்டான். எல்லாரும் அவனைச் சூழ்ந்து புகழுரைமாலை யணிவித்ததுடன் அச்சிலிஸைப் புறக்கணிப்பாகப் பேசவும் நடத்தவும் தொடங்கினர். அது கேட்டு அச்சிலிஸும் மனம் புழுங்கினான். அச் சமயம் பார்த்து யுலிஸிஸ் அவனிடம் சென்று நயமாக "நீயும் போரி லீடுபட்டால்தான் புகழ்பெறுவாய்" என்று கூறினான்.

## 4. பகைக் களத்தினிடையே நட்பும் விருந்தும்

மறுநாள் ஹெக்டாரும் அஜாக்ஸும் இருதரப்பு வீரர் அணிவகுப்பினிடையே கைகலந்தனர். ஆனால் முதல் நாள் அஜாக்ஸினிடம் சீற்றங்கொண்ட ஹெக்டாருக்கு அவனுடன் போர் செய்ய இப்போது விருப்பம் இல்லை. ஏனெனில் அவன் முற்றிலும் கிரேக்க வீரனல்லனென்றும், அவன் தன் தந்தையின் உடன் பிறந்தாளை மணந்த கிரேக்க வீரனின் புதல்வனாதலால் அவன் ஒருவகையில் தன் மைத்துனனும் பாதி திராய்மகனும் ஆவான் என்றும் அவன் அன்றே அறிந்தான். அதோடு தன் தோள்வலியுடன் போட்டியிடும் அவன் திறங்கண்டு இப்போது அவன் சீற்றமனைத்தும் அவன் தன் உறவினன் என்ற முறையில் பெருமையாகவும் பாராட்டாகவும் மாறின. ஆகவே போர் நடுவில் யாவரும் வியக்கும்படி அவன் போரை நிறுத்

தும்படி கட்டளையிட்டு அவனை மனமாரப் புகழ்ந்து நட்புறவாடினான். அஜாக்ஸூம் அதனை ஏற்றதுடன் இப்புதிய உறவுக்கு அறிகுறியாக இரு புறத் தலைவருடனும் பேசிப் போர் நிறுத்தஞ் செய்து பின் அவனைத் தன் விருந்தினனாகத் தன் பாசறை மாளிகைக்கு வரும்படி அழைத்தான். இருபுறத் தலைவரும் அதனை ஏற்றனர்.

கிரேக்கர் பாசறைப்பக்கமே தன் உயிரை நாட விட்டு வெற்றுடலுடன் திராய்க் கோட்டைக்குள் அடங்காது துடித்த திராய்லஸ் தன் காதற்கிளியைச் சென்று காண இந்நிகழ்ச்சியை அரியதோர் வாய்ப்பாகக் கொண்டு ஹெக்டாருடன் கிரேக்கர் பாசறைக்கு வந்து அவ்விருந்திற் கலந்துகொண்டான். நேற்று வரை பகைவராயிருந்து இனி நாளையும் பகைவராகவே இருக்கப்போகும் அவர்களிடம் வீரரது பெருமிதம் தோன்ற வீரத்தினும் நற்குணத்திற்குப் பெரிதும் பேர்போன பெருந்தகையாகிய அகமெம்னனும் பிற கிரேக்கவீரரும் நன்மதிப்புடனும் பெருந்தன்மையுடனும் கலந்து விருந்தாற்றினர். அதனிடையே துயரே உருவில் வந்தது போல் வந்திருந்த திராய்லஸினிடம் யுலிஸிஸ் பரிவும் அன்பும் கொண்டான். திராய்லஸூம் அவனிடம் தனிமையில் தான் கால்ச்சஸ்வீட்டில் அவன் புதல்வியைக் காணவிரும்புவதாகக் கூறினான்.

### 5. கனவிலும் காண எண்ணாத காட்சி

யுலிஸிஸூக்குத் திராய்லஸூக்கும் கிரெஸிடாவுக்கும் இடையே உள்ள உறவு தெரியவராது. சூழ்ச்சி வயப்பட்ட கிழ்மகனான கால்ச்சஸின் புதல்விக்கும்

உலகின் ஒப்பற்ற அரசமரபில் தோன்றிய அவ்விளவ லுக்கும் மிக நெருங்கிய நட்பு இருக்க இடமில்லை என்று அவன் கருதியது இயல்பே. எனவே திராய் லஸிடம் அவன் அவள் ஓர் இளமை உணர்ச்சி மீறிய நங்கை என்றும், பெண்களுக் கரணுகிய நாற்குண வரம்பும் அற்றவள் என்றும், தான் எண்ணியதை அவனிடம் கூறினுன். அதை அவன் நம்பவில்லை என்று கண்டதும் தயொமிடிஸிடம் அவள் தகாக் காதல் கொண்டு நடிப்பதைக் காட்டுகிறேன் என்று கூறினுன். காதல் வன்மை ஒருபுறம், காதலிமீது கூறும் பழியை நேரில் சென்று கண்டு உண்மையறி யும் ஆர்வம் ஒருபுறம் அவனைப் பிடித்து வாட்டின.

அன்றிரவு நெடுநேரம்வரை விருந்தயர்ந்தபின் ஹெக்டாரும் திராய்வீரரும் விடைகொண்டு தம் நகர்க்கோட்டையை நாடிச் சென்றனர். அவர்களை வழியனுப்பச் சென்றவர்களுள் தயோமிடிஸும் ஒரு வன். திராய்வீரர் அப்பால் அகன்றபின் அவன் பிறரு டன் திரும்பாமல் ஒருபுறமாக ஒதுங்கிப் பதுங்கி நின்று பின் தனியாயிருப்பதாக எண்ணிச் சீழ்க்கையடித்துத் தாழ்ந்த குரலில் பாடியவனுய்க் கால்ச்சஸ் குடிசைப் பக்கம் திரும்பினுன். அவனைப் பின்பற்றி ஒளிந்து கொண்டே திராய்லஸும் யுலிஸிஸும் சென்றனர்.

தயோமிடிஸ் கால்ச்சஸைக் கண்டு "உம் புதல்வி யெங்கே?" என்று உரிமையுடன் வினவியதையும், அவன் "அவள் உன்னையே எதிர்பார்த்துத் தன் அறை யின் பலகணியில் காத்திருக்கிறுள்" என்று கூறியதை யும், தன்னிடம் உறுதி கூறிய கிரெஸிடா அவ்விளை ஞனுடன் கூசாது நள்ளிரவில் பேசிப் பிணங்கியதை

யும் கண்டு திராய்லஸ் அங்கமுற்றும் வெம்பிக் கொதித்தான். யுலீஸிஸின் பொறுப்பை உன்னி அருமுயற்சியுடன் தன்னை யடக்கிக்கொண்டு கனவிலும் காண எண்ணியிராத காட்சிகளை அவன் கண்டான். தயோமிடிஸ் ஏதோ ஒன்றை அவளிடம் வற்புறுத்திக் கேட்பதையும், அவள் அதனைக் கொடுக்க மறுத்தும் அவன் பிணங்கி வெளிச் செல்வதாகக் கூறவே, அவள் அவனை நாடியைத் தாங்கி அழைத்து வந்து தருவதாகக் கூறுவதையும், பலதடவை இவ்வண்ணம் அகச்சான்றுடன் போராடிக் காதலன் வயப்பட்டு இறுதியில் அதனை அவள் கொடுத்ததையும் திராய்லஸ் கண்டான். அங்ஙனம் உள்ளத்தினின்று பறித்தெடுத்துக் கொடுப்பதுபோல் அவள் கொடுத்தது தன் காதல் நினைவூட்டாகிய கையுறையே யென்றறிந்ததும் அவன் பித்துக் கொண்டவன்போலானான். வேறு செய்வகை யறியாமல் யுலீஸிஸினிடம் 'என் உயிரைக் கவர்ந்த இக் கயவனை நாளையே போரில் வீழ்த்துகிறேன்' என்று சூளுரைத்து அகன்றான்.

### 6. தறியுடைத்தெழும் தறுகண் யானை

திராய்லஸின் இக்காதல் நாடகம் முடிவுற்று அவன் திராய்க்கு மீளுமுன் போர்நிறுத்தக்காலம் முடிவுற்றது. ஹெக்டார் அஜாக்ஸினிடம் கோழமையினால் விட்டுக்கொடுத்தான் என்ற அலர்தூற்றலுக்காளாகப் படாதென்று எண்ணி விடியுமுன்னமே அரியேறென முழங்கிக்கொண்டு போரில் முனைந்தான். முந்தின நாள்வரை கிரெஸிடாவை எண்ணிப் போரில் ஒதுங்கி நின்ற திராய்லஸும் கட்டுத்தறியை உடைத்துப் பாய்ந்து முன்வரும் மதயானை போல் அவனுடன்

நின்று போர்செய்யலானான். அவ்விருவர் முன்னும் கிரேக்கப் படைகள் வடவைத்தீமுன் சுவறும் கடல் நீர் போல் சுவறிக் கொதித் தெழுந்து ஒதுங்கின. அகமெம்னன் யுலிஸிஸ், நெஸ்டார் முதலிய தலைவர்களுடன் தன்னாலானமட்டும் அவர்களைத் தடைந்து ஊக்க முயன்றும் முடியாதுபோகவே அஜாக்ஸினிடமும் அச்சிலிஸினிடமும் சென்று "நீங்கள்தாம் கிரேக்கர் பெயரைக் காக்க வேண்டும்" என்றான். முந்தின நாள் விருந்தின்போது ஹெக்டார் அச்சிலிஸைக் கிளறிச் சினமூட்டி அவனைப் போருக்கு இழுத்திருந்தான். ஆகவே எப்படியும் அன்று ஹெக்டாரை முடிப்பது என்று அச்சிலிஸ் துணிந்து புறப்பட்டான். அஜாக்ஸும் எப்படியும் திராய்லஸை ஒரு கை பார்த்து விடுவது என்று முனைந்தான். திராய்லஸும் தயோமிடிஸைத் தாக்கிக் கொன்று பழி தீர்க்க எண்ணினான்.

ஹெக்டார் போருக் கஞ்சாதவன்; அதோடு போரில் நேர்மையும் அருளும் உடையவன். போரில் பகைவர் கைப்படை யற்றுப்போனால் அவன் அச்சமயத்தில் அவர்களை அழியாது போகவிடுவான். சூழ்ச்சிமிக்க பகைவரிடையே இத்தகைய நடைமுறை சரியான தன்று என்று திராய்லஸ் அவனுக்கு அடிக்கடி கூறுவான். தீக்கோளின் பாற்பட்ட ஹெக்டார் மனம் அதனை ஏற்காது அறவே மறுத்தது. அதோடு அன்று அவன் புறப்படும்போதே அவன் மனைவி அன்ட்ரோமக்கே தீக்கனாக்கள் கண்டு அன்று போரிடப் போகவேண்டாம் என்று தடை செய்தாள். சற்றுப்பித்தும் தெய்வ வெறியும் கொண்ட

அவன் தங்கை [1] 'கஸன்ட்ரா' 'இன்று நீ போரில் அழிவாய்; போகாதே' என்று கூவினாள். ஆனால் நெருப்பைச் சுடாதே என்றால், அல்லது வளரிள ஞாயிற்றை ஒளி வீசாதே என்றால் அவை கேட்குமா? ஹெக்டார் அவற்றை யெல்லாம் மீறி வென்று போருக் கெழுந்தான்.

ஹெக்டார் திராய்லஸுடன் நின்றிருந்தபோது ஒரு வீரன் வந்து அஜாக்ஸ் [2] ஈனியாஸைக் கைப் பற்றிச் செல்கின்றான் என்றான். தன் படைத் தலைவருட் சிறந்தவனான அவனை மீட்கும்படி திராய் லஸ் அஜாக்ஸைத் துரத்திக்கொண்டு சென்றான். இதற்குள் பகட்டான கவசமணிந்த கிரேக்க வீர னொருவன் ஹெக்டார் பக்கம்வந்து அவனைச் சற்றே எதிர்த்துவிட்டு ஒதுங்கி ஓடினான். ஹெக்டார் அவனைப் பின்பற்றிச் சென்றான். பொழுதடையும் வரை படைகளிருந்த இடத்திலிருந்து பெருந் தொலை ஓடி அவன் சட்டென நின்று எதிர்த்தான். ஹெக்டார் சிறிது நேரம் சண்டையிட்டு அவனை நிலத்தில் வீழ்த்தினான்.

பொழுது மாயிற்று; பகைவரும் இல்லையென்ற எண்ணத்தால் ஹெக்டார் கைப்படைகளை எறிந்து, கவசத்தையும் கழற்றிவிட்டு இளைப்பாறினான். நேரில் அவனை வெல்லலரிது என்றெண்ணி யிருந்த அச்சிலிஸ் பல வீரரைப் படைகளுடன் முன்கூட்டி ஏற்பாடு செய்து வைத்துக்கொண்டு ஒளிந் தொளிந்து பின்னாலேயே வந்துகொண்டிருந் தான். படையும் கவசமும் நீத்து அவன் கிடந்தது

1. Cassandra. 2. Aeneas.

கண்டதுமே அனைவரும் சென்று அவனை வெட்டி வீழ்த்தினர். ஒருவரும் உண்மை நிகழ்ச்சியை யாரிடமும் கூற வேண்டா என்று விலக்கிவிட்டு அச்சிலிஸ் வாழ்க; ஹெக்டார் வீழ்க என்று கூக்குரலிடும்படி செய்தான். ஹெக்டாரின் வீர உடலையும் அவன் பல வகையில் ஊறுபடுத்தி அவனுடலைத் தன் குதிரை வாலில் கட்டி இழுத்துக்கொண்டு கிரேக்கர் பாசறை வந்து சேர்ந்தான்.

ஹெக்டாரின் முடிவு கேட்டுத் திராய்லஸ் கதி கலங்கினன். களப்போரில் தோற்றனர் திராய்மக்கள்: அதோடு தன் வகையில் உளப்போரிலும் வாழ்க்கைப் போரிலும் தோல்வியே கிட்டின என்பதை அவன் உணர்ந்தான். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இப்போது அவனுக்கு மலைவைத் தந்தது இன்னொரு பெருங்கவலை. ஆண்டு முதிர்ந்த பிரியமிடம் போய் 'நீயிருக்க, உன் உயிர் போயிற்று: உன் உயிரனைய புதல்வன் இறந்தான்' என யாரே கூறத்துணிவர்! அன்ட்ரோமக்கேயிடம் அவள் பெண்ணரசாட்சி ஒய்ந்தது என்று கூறி அவள் வீறிட்டலறி மடிவதைக் காண யார் அவள் முன்செல்வர்! தெய்வவெறி கொண்ட கஸன்ட்ரா இடியேறுண்டழியும் நாகம்போல் அழிவதை யாரே கண்கொண்டு காணப் பொறுப்பர் என்பதே அக் கவலை.

அவன் காதல் கனவுகளை அழித்தது காதல் முறிவாகிய புயல். அப்புயலை விழுங்கியது அவனுடைய ஒப்பற்ற அண்ணனின் அழிவாகிய ஆற்றொணுத் துயரம். ஆனால் தந்தை, தாய், அண்ணியார், தங்கை ஆகியவர் துயராகிய பாலைவெஞ் சூறையில் அவன் கனவுகளும்

அதைத் தொடர்ந்த புயல்களும் அதனைப் பின்பற்றி வந்த துயரமும் எல்லாம் பறந்தன. அவன் திராய்லஸின் எலும்புக்கூடாக, திராய் நகரின் அழிவுக் குறியாகச் செயலற்று உணர்வுநீத்துக் கவிழ்ந்த முகத்துடன் திராய் நகரினை நோக்கி மீண்டான்.

## IX. டைட்டஸ் அன்ட்ரானிக்கஸ்

### கதை உறுப்பினர்

**ஆடவர்**

1. **காலஞ்சென்ற ரோமப் பேரரசன்** : சாட்டர்னினஸ், பஸ்ஸியானஸ் ஆகியவர்களின் தந்தை.
2. **சாட்டர்னினஸ்** : ரோமப் பேரரசன் மூத்த புதல்வன்-பஸ்ஸியானஸ் அண்ணன்-டைட்டஸால் பேரரசனாக முடிசூட்டப்பட்டவன்-டமோராவை மணந்தவன்.
3. **பஸ்ஸியானஸ்** : ரோமப் பேரரசனின் இளைய புதல்வன் - சாட்டர்னினஸின் தம்பி - டைட்டஸ் புதல்வி லவீனியாவின் காதற் கணவன்.
4. **மார்க்கஸ் அன்ட்ராக்னிகஸ்** : டைட்டஸ் அண்ணன் - ரோமப் பொதுமக்கள் தலைவர்களுள் ஒருவன்.
5. **டைட்டஸ் ஆன்ட்ரானிக்கஸ்**: ரோமப் படைத்தலைவன் - பொதுமக்களின் செல்வாக்குப் பெற்ற முடிசூடா மன்னன்-25 புதல்வரைப் பெற்று நாட்டுக்குப் பறிகொடுத்த உயர்வீரன்.
6. **மியூட்டியஸ்** : லவீனியாவைக் காத்துத் தந்தையாகிய டைட்டஸ் கைவாளால் மடிந்த புதல்வன்.
7. **குவின்டஸ்** :
8. **மார்ட்டியஸ்** :
9. **லூஸியஸ்** :

(6–9:) டைட்டஸ் புதல்வர் 25 பேருள் முன்பே போர்களில் இறந்த 20 பேரும் காத்தியர் போரில் இறந்த ஒருவனும் போக மீந்த 4 புதல்வர்கள்.

10. **அலார்பஸ்** டைட்டஸின் இறந்த புதல்வனுடன் காவு கொடுக்கக் கொலை செய்யப்பட்டவனுடமோராவின் மூத்த புதல்வன்.
11. **சிரான்** :
12. **டெமெட்ரியஸ்** } லவீனியாவிடம் தகாக்காதல் கொண்டு அவளைச் சிதைத்தவர்கள்.

(10–12:) டமோராவின் புதல்வர்

13. **ஏரான்** : கருநிற அடிமை-டமோராவின் திருட்டுக் காதலன்.
14. **இளைஞன் லூஸியஸ்** : லூஸியஸ் புதல்வன்—டைட்டஸ் பேரன்.

---

**பெண்டிர்**

**டமோரா**: காத்தியர் அரசி-டைட்டஸிடம் சிறைப்பட்டவள் - சாட்டர்னினஸை மணந்தவள்-ஏரானின் திருட்டுக் காதலி-அலார்பஸ், சிரான், டெமெட்ரியஸ் ஆகியவர்களின் தாய்.

2. **லவீனியா**: டைட்டஸ் புதல்வி—பஸ்ஸியானஸைக் காதலித்து மணந்தவள்.

## (கதைச் சுருக்கம்)

ரோமப் பேரரசன் இறந்ததும் அரசுரிமைக்காக அவன் மைந்தரான சாட்டர்னினஸூம் பஸ்ஸியானஸூம் போரில் முனைவதைத் தடுத்துப் பொதுமக்கள் தலைவரான மார்க்கஸ் அண்ட்ரானிக்கஸ் முதலியோர் தாய்நாட்டுப் போர்களில் 20 மக்களை இழந்து இன்னும் ஒரு மகனைக் காத்தியருடன் செய்த போரில் இழந்து, மீந்த 4 புதல்வருடன் மீண்டுவந்த வெற்றி வீரனும் மார்க்கஸின் உடன் பிறந்தவனுமாகிய டைட்டஸ் அண்ட்ரானிக்கஸை அரசனாகும்படி கூறினர். டைட்டஸ் பெருந்தன்மையுடன் அதனை சாட்டர்னினஸூக்குத் தந்தான்.

போரில் சிறைப் பிடித்த காத்தியர் அரசி டமோராவின் மூத்த புதல்வன் அலார்பஸ் பலியிடப்பட்டு டைட்டஸின் இறந்த புதல்வனுடன் எரிக்கப்பட்டான். சாட்டர்னினஸ் டைட்டஸ் புதல்வி லவீனியாவை மணக்க விரும்பி டைட்டஸ் இணக்கம் பெற்றும் அவள் இணங்காது தான் காதலித்த பஸ்ஸியானஸை மணந்தாள். டைட்டஸின் புதல்வர் அவளைக் காத்துநிற்க, அவர்களுள் இளையோனை மியூட்டியஸ் அச்செயலில் தந்தையால் வெட்டப்பட்டான். டைட்டஸிடம் மகன் உயிருக்குப் பழிவாங்க எண்ணிய டமோரா லவீனியாவால் புறக்கணிக்கப்பட்ட ஸாட்டர்னினஸை மணந்து தன் திருட்டுக் காதலன் ஏரானுடனும், லவீனியாவிடம் தகாக் காதல் கொண்ட தன் இரு பிள்ளைகளுடனும் சூழ்ச்சி செய்து பஸ்ஸியானஸைக்கொன்று லவீனியாவின் பெண்மையழித்துக் கைகளையும் நாவையும் வெட்டிச் சிதைக்கச்செய்து, அதோடு பஸ்ஸியானஸ் கொலைக்கு டைட்டஸின் மற்றப் புதல்வர்களுள் குவின்டஸையும் மார்ட்டியஸையும் பொறுப்புடையவரென நிலைநாட்டி அவர்களைக் கொலைசெய்தாள். அவர்கள் உயிரைத் தருவதாகப் பொய் நடிப்புக்காட்டி அத்தீயர்கள் டைட்டஸ் கையையும் வெட்டும்படி செய்தனர்.

டைட்டஸின் கடைசிப் புதல்வன் லூஸியஸ் உடன்பிறந்தார்பக்கம் பேசியதற்காக நாடுகடத்தப்பட்டுக் காத்தியர் துணைபெற்று ரோம்மீது படையெடுத்தான். டைட்டஸ் பித்தனாகியும் பழிமறவாது 'காளி' உருவில் தன்னை ஏமாற்ற வந்த டமோராவை ஏமாற்றி அவள் பிள்ளைகளையே கறியாக்கி அவளை உண்ணச் செய்து பின் சாட்டர்னினஸ் முன்னிலையில் அவளைக் கொன்றான். சாட்டர்னினஸ் வெகுண்டு டைட்டஸைக் கொல்ல, லூஸியஸ் டமோராவைக் கொன்று ரோம மக்களுக்கு டைட்டஸின் துயர்க்கதையின் உண்மை முற்றிலும் விளக்கி அவர்கள் அரசனானான்.

# IX. டைட்டஸ் அன்ட்ரானிக்கஸ்

## 1. அரசுரிமைப் போராட்டம்

[1] ரோமப் பேரரசை நெடுநாள் அமைதியாக ஆண்டு வந்த பேரரசன் ஒருவன் இருந்தான். அவனுக்கு [2] சாட்டர்னினஸ், [3] பஸ்ஸியானஸ் என்ற இரண்டு புதல்வர்கள் இருந்தனர். ரோமப் பேரரசர் வழக்கப்படியே அவ்விருவரும் பேரரசின் மாவட்டங்களாய் அமைந்திருந்த தொலைவு நாடுகளிரண்டில் அரசியல் தலைவர்களாய் அமர்த்தப்பட்டிருந்தனர். அவ்விருவரும் தந்தை யிறந்தவுடன் தாம் தாம் அரசாட்சியைக் கைப்பற்றவேண்டும் என்ற எண்ணத்துடன் தத்தம் கட்சியை வலுப்படுத்த முயன்றிருந்தனர். எனவே திடுமெனப் பேரரசன் இறந்ததும் இருவரும் தத்தம் படைகளுடன் அரசாட்சியைக் கைக்கொள்ளுமாறு ரோம் நகரை நோக்கிவந்தனர்.

நகரின் ஒரு வாயில் வழியாக சாட்டர்னினஸும் அவன் ஆட்களும், இன்னொரு வாயில் வழியாக பஸ்ஸியானஸும் அவன் ஆட்களும் உட்புகுந்தனர். ரோம் நகரின் வரலாற்றில் முன் பல தடவைகள் நடந்ததுபோலவே இப்போதும் அரசுரிமைக்காகப் பெரிய உள்நாட்டுப் போர் எழுமோ என்று மக்கள் மனங் கலங்கினர். அச்சமயம் பொதுமக்கள் அவையின் தலைவருள் ஒருவனாகிய [4] மார்க்கஸ் அன்ட்ரானிக்கஸ் என்பவன் பெருமக்கள் தலைமையில் அவர்களை வரவேற்று அவர்கள் இருவரிடமும் "நாட்டுக்

---

1. The Roman Empire 2. Saturninus. 3. Bassianus.
4. Marcus Andronicus.

குப் பேரரசனைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெரு மக்களையும் பொதுமக்களையுமே சேர்ந்தது; படையுடன் நகருக்குள் நுழைந்து அதனை வலிந்து கொள்ளுதல் முறையன்று. ஆதலால் இருவரும் ரோம் நாட்டின் நன்மக்கள் என்ற முறையில் படைகளைக் கலைத்துவிட்டுப் பொதுமக்கள் முடிவு கோரி அதன்படி நடப்பீராக," என்று கூறினான்.

பொதுமக்கள் முன்னிலையில் இந்நேர்மையான கோரிக்கையை மறுப்பதனால் நகரின் பகைமை ஏற்பட்டுத் தம் உரிமைக்கு முற்றிலும் எதிர்ப்பு நேர்ந்துவிடுமாகையால் இருவரும் அதனை ஏற்றுத் தத்தம் படைகளைக் கலைத்துவிட்டனர். அரசியல் தொலைநோக்குடைய மக்கள் தலைவராகிய மார்க்கஸ் அன்ட்ரானிக்கஸும் பிறரும் அதன் பின்னும் அவர்கள் இருவருள் ஒருவரை ஏற்க விரும்பவில்லை. ஏனெனில் எப்படியும் ஒருவரை ஏற்பதன் மூலம் மற்றவர் பகைமையும் அவர்கள் சார்பிலுள்ள மக்கள் மனவேறுபாட்டால் கட்சிப் பூசலும் விளைந்தே தீரும். ஆகவே இருவரையும் ஏற்காது பொதுமக்களாக இன்னொருவனையே தேர்ந்தெடுப்பது என் அவர்கள் முடிவு செய்திருந்தனர். அதன்படி மார்க்கஸ் அன்ட்ரானிக்கஸின் உடன் பிறந்தானை [1] டைட்டஸ் அன்ட்ரானிக்கஸைப் பேரரசனுக்குவதென்று அவர்கள் துணிந்தனர்.

பெருமக்களேயன்றிப் பொதுமக்களும் இம் முடிவை மனமார வரவேற்றனர். ஏனெனில் டைட்டஸ் அன்ட்ரானிக்கஸ் வழிவழியாகப் பெரும்

1. Titus Andronicus.

போர் வீரர் மரபில் தோன்றியவன். பலபோர்களில் அவன் உயிரைப் புல்லென மதித்து இடுக்கண்களை அவாவுடன் வரவேற்று நகரின் பகைவர்களை முறியடித்து வந்திருந்தான், அவன் புகழுடலையும் புற உடலின் முதுகுப்புறத்தையும் தவிர போரில் காயம் படாத வேறு இடமே கிடையாது என்னலாம். அது மட்டுமன்று. அவனுடைய புதல்வர் இருபத்தைந்து பேருள் இருபதின்மர் ரோமின் முன்னைய போர்களில் அவனுடன் நின்று பொருது மாண்டு அவனது மாண் புகழைப் பன்மடங்காக்கி யிருந்தனர். அவனது கடைசிப் போரிலும் ரோமின் பழம் பகைவராகிய [1]'**காத்**'**தியரை** வென்று அவன் வெற்றிமாலையுடன் அப்போதே திரும்பி வந்துகொண்டிருந்தான்.

உடன்பிறப் புரிமையைக் கூடப் பாராமல் ஒருவரை ஒருவர் பேரரசுப் பெரும்பே ராவலை முன்னிட்டு அழிக்கத் துணிந்த சாட்டர்னினஸூம், பஸ்ஸியானஸூம் பொதுமக்கள் உள்ளார்வத்தைக் கொள்ளை கொண்ட இவ் வொப்பற்ற தலைவன் பெயர் கேட்டதே அவனைப் பேரரசனுக்குவதென்ற முடிவை எதிர்க்கத் துணியாமல் ஏற்பதாகக் காட்டிக்கொண்டு வெற்றி முழக்குடன் தாய்நாட்டுக்கு மீண்டுவரும் அவனை வரவேற்பவர்களுடன் தாமும் கலந்து கொண்டனர்.

## 2. வெற்றி முழக்கும் வெறியாட்டும்

டைட்டஸ் இந்தத் தடவை அடைந்த வெற்றியும் சிறு வெற்றியன்று. போர்க்களத்தில் அழிந்த

1. Goths.

வர்களும் போர்வீரர்களின் சூறையாட்டுக்காளாய் அழிந்தவர்களும் போக, ஆயிரக் கணக்கானவர்கள் சிறைப்பட்டுக் கைவிலங்குகளுடன் அவன் தேரின் பின் அணியணியாகக் கொண்டுவரப்பட்டனர். அவர்களுடனுகச் சிறைப்பட்ட அவர்கள் அரசியாகிய [1]டமோராவும் அவள் பிள்ளையாகிய [2]அலார்பஸும், [3]சிரானும், [4]டெமெட்ரியஸும் டைட்டஸின் தேர்க்காலில் கட்டப்பட்டுத் தலையிறக்கத்துடன் ரோம்நகர்த் தெருக்கள் வழியாகக் கொண்டுவரப்பட்டனர். காத்தியரிடம் கொள்ளை கொண்ட பொன்னும் மணியும் சுமந்து பல்லாயிரம் காத்தியப் பெண்கள் பின்வந்தனர். ரோமின் பொதுமக்கள் கண்ணில் இத்தனையையும் விட உயர்வான ஒரு பொருள் டைட்டஸின் முன்னுலேயே கொண்டு செல்லப்பட்டது. அது அவன் மைந்தருள் மீந்திருந்த ஐவருள்ளும் அப் போரில் உயிர் துறந்த இன்னொரு புதல்வன் உடலமே. அதனை விலைமதிப்பேறிய பெட்டி ஒன்றில் வைத்து அப் புதல்வனின் உடன் பிறந்தாராகிய மற்ற நாலு புதல்வர்கள் தள்ளிக்கொண்டு வந்தனர்.

நகரெங்கும் "டைட்டஸ் வாழ்க; அன்ட்ரானிக்கஸ் அருங்குடி வாழ்க." என்ற முழக்கங்கள் வானைப் பிளந்தன. நகரமன்றில் பொதுமக்கள் நாற்புறமும் வளைந்து கல்லென்ருெலிபரப்பப், பெரு மக்களிடையே மக்களின் தலைவர்கள், மார்க்கஸ் அன்ட்ரானிக்ஸுடன் நின்று டைட்டஸையும் அவன் மாண்ட மைந்தனையும் மாண்தகு வாகை சூடிய

1. Queen Tamora. 2. Alarbus. 3. Cheron. 4. Demetrius.

மைந்தரையும் வரவேற்று, "எந்தாய் வருக! எம் தந்தையரின் மைந்தர் வருக! எம் நாட்டன்னைக் குகந்தாய் வருக!" எனப் பாராட்டினர். டைட்டஸும் அவர்கள் முன் தன் மைந்தன் உடலையும் தன் வெற்றிக் கறிகுறியாகிய சிறைப்பட்ட பகைவர்களை யும் அவர்கள் செல்வத்தையும் வைத்துச், "சிறியேன் பணியை என் தாய்நாடு ஏற்றருள்க! மைந்தர்கள் இருபதின்மரை இதுகாறும் தாய்நாட்டிற்குத் தந்து இப்போதும் ஒரு மகனை நாட்டுப் பணியில் இழந்த நான் என் நாட்டன்னையின் வாழ்த்தையும் நாட்டுப் பெரியோராகிய உங்கள் வாழ்த்தையும் இம்முதிய நிலையில் என் பரிசாகக் கொள்ள விரும்பினேன்," என்றான்.

மார்க்கஸ் அன்ட்ரானிக்கஸும் பிற தலைவரும் முன்வந்து அவனை முறை முறை தழுவித், "தாய் நாட்டின் ஒப்பற்ற மைந்தனே, இந் நாட்டின் மொழி களங்கமற்று நிலவுங்காறும் உன் பெயர் நிலவுவதாக! உன் ஒப்பற்ற தன் மறுப்புக்களை அன்னை உவப்புடன் ஏற்றாள்,' என்றனர்.

**டைட்டஸ்.**—அன்னை மனமுவத்தல் என் அருந் தவப்பேறேயாகும். இனி என் மாண்ட மைந்தன் சார்பில் யான் செய்யவேண்டும் கோரிக்கை ஒன்று உள்ளது.

**தலைவர்** :—டைட்டஸ் விருப்பத்திற்கு மாறுண்டோ? கூறுக.

**டைட்டஸ்** :—பகைவர் கைப்பட்டிறந்த என் மைந் தன் உயிர் அமைதி பெறும் வண்ணம் பகைவரிற் சிறந்த ஒருவனை ரோமர் சமய வினைப்படி காவு

கொடுத்து வழிபாடு செய்ய இணங்கும்படி வேண்டு கிறேன்.

**தலைவர் :**—அப்படியே செய்யலாம். யாரைக் காவு கொடுக்க விரும்புகின்றாய்?

**டைட்டஸ்.**—ஐயன்மீர்! யான் சிறைப்பிடித்துக் கொண்டுவந்திருக்கும் காத்திய அரசியின் செல்வர்களுள் மூத்தவனான அலார்பஸே அதற்குத் தக்கவன். அவனை என் மைந்தர்களுடனனுப்ப வேண்டுகிறேன்.

தலைவர்கள் டைட்டஸ் வேண்டுகோளுக் கிணங்கினார்கள். ஆனால் அவர்களுடன் நின்றிருந்த காத்திய அரசி டமோரா டைட்டஸ் காலில் விழுந்து மன்றாடி, "ஒப்பற்ற வெற்றி வீரனே! குழந்தையிழந்த உன் உள்ளம் என் துன்பத்தைச் சற்று எண்ணிப் பார்க்கட்டும். நாடிழந்து, விடுதலையிழந்து, ரோம் மக்கள் கண்காட்சிப் பொருளாக வந்து நிற்கும் என்னுடைய தாய்மை உணர்ச்சியையாவது காப்பாற்றுங்கள்," என்றாள்.

ரோமிற்காக எத்தகைய தன்மறுப்பையும் தயங்காது செய்யும் அப்பெருந்தகை உள்ளம் அவளைப் பற்றிய மட்டில் சற்றும் இரங்கவில்லை. "உனக்கென்ன தெரியும் ரோமர் பழக்க வழக்கங்கள்! இவ்வேற்பாடு எங்கள் சமய வினைகளைச் சார்ந்தது; விலக்க முடியாதது. மேலும் அடிமைகளாகப் பிறர் பொருளாய்ப் போனவர்களுக்குத் தாய் ஏது, பிள்ளை ஏது? அலார்பஸ் இப்போது எங்கள் கைப்பொருள்; நீ யார் கேட்பதற்கு?" என்று சீறி அவளை அகற்றி விட்டுத் தன் மைந்தர்களை வெறியாடலுக்கு அனுப்பினான்.

சிறிது நேரத்தில் அவன் மகன், அலார்பஸின் குருதி தோய்ந்த கையுடன் வந்து, “இறைவர்க்கு மன நிறைவு ஏற்பட்டுவிட்டது. அண்ணன் உடலமும் அலார்பஸின் குருதியுடனும் குடலுடனும் குதித்தாடிக் கொந்தளிப்புடன் எரிந்தது,” என்றான்.

ஒரு குடும்பத்தின் அடிவயிறு பற்றி எரியும்படி ஒரு குடும்பம் இறை வழிபாடு நடத்திற்று.

## 3. டமோராவின் வெஞ்சினம்

வணங்காமுடி மன்னர் மரபில் வந்த டமோரா உள்ளூர உறுமிப் பொருமினள். அருகில் நின்றிருந்த அவள் மக்கள் பொங்கி யெழலாயினர். ஆனால் அவள் “மைந்தர்களே, பொறுங்கள். ஆனைக்கொரு காலம் வரின், பூனைக்கும் ஒரு காலம் வரும். என்னைப் போரில் வென்றதையும் மக்கள் கண்காட்சியாக்கியதையும் நான் பொருட்படுத்தவில்லை. தாய் காண என் பிள்ளையைப் படுகொலை செய்த இக்கொடுமைக்குப் பழி வாங்குவேன். ‘காத்தியர் பகைவருக்குப் பகைவர், கொடியவர்க்குக் கொடியவர்’ என்பதைக் காட்டுவேன்!” என்று அவள் வெஞ்சினங் கூறினாள்.

இறந்துபோன மகன் இறுதிக்கடனாற்றி டைட்டஸும் தலைவரும் மீட்டும் மக்கட் பொதுமன்றத்திற்கு வந்தபின் தலைவர்கள் டைட்டஸ் அன்ட்ரானிக்கஸை நோக்கி, “நாட்டு மக்களும் பெருமக்களும் உன் பணியை மெச்சித் தலைவனற்று மயங்கும் இந் நாட்டின் அரசுரிமையை உனக்கே தர முடிவு செய்கின்றனர்; அதனைப் பெற்றருள்க”, என்றார்கள்.

டைட்டஸ் :—ஐயன்மீர்! தங்கள் நன்மொழிகளும் பாராட்டுமே என் ஒப்பற்ற பேறு. அத்துடன்

அமையாது, பேரரசின் பெரும் பொறுப்பை முதுமை வாய்ந்த என் தோள்களில் சுமத்தலாமா? யான் அதற்கு உரியவன் அல்லேன்.

தலைவர்கள்:—உன்னையே தகுதியுடையவனென்று ரோம் கருதுகிறது, எனவே இது உன் பொறுப்பு ஆகும்.

டைட்டஸ்:—அப்படியாயின் நான் அதனை என் மனப்படி உரியவர் என நான் நினைப்பவர்க்குக் கொடுத்தலாகுமன்றோ?

இக்கேள்வி தலைவர்களுக்கு வியப்பையும் இறும்பூதையும் கலக்கத்தையும் தந்தது. ஸாட்டர்னினஸும் பஸ்ஸியானஸும் இதுவே தறுவாய் என முன் வந்து டைட்டஸ் முன் நின்று தனித்தனி "எனக்கே இப் பொறுப்பு உரியது. எனக்கு அளிப்பீராக," என்று கூறினர்.

சற்றும் தயக்கமின்றி டைட்டஸ், "பேரரசனின் முதற்புதல்வன் என்ற முறையில் ஸாட்டர்னினஸே பேரரசனுதற்கு உரிமை உடையவன் என்று நான் கருதுகிறேன். அரசுரிமையுடன் நாட்டின் பேரால் நான் அடைந்த வெற்றியையும் அவருக்கே உரிமையாக்குகிறேன்," என்று கூறி ஸாட்டர்னினஸை அரசிருக்கைக் கிட்டுச் சென்று மணிமுடியையும் செங்கோலையும் அவனுக்குத் தந்தான். பின் காத்தியரிடமிருந்து திறைகொண்ட பொருள்களை அவன்முன் வைத்து, "ரோமப் பேரரசர்க்கு வெற்றி உண்டாவதாக! இச் செல்வத்தையும் அதற்குரியவராய் இப்போது சிறைப்பட்டிருக்கும் இக் காத்தியரையும் அவர்கள் தலைவியாகிய அரசி டமோராவையும்

உங்கள் பொருளாக உங்களிடம் ஒப்புவிக்கிறேன்,'' என்றான்.

உள்ளூர அரிய நடிப்புத் திறமும் சூழ்ச்சியும் உடையவளாய், டைட்டஸை அழிக்கும் வகைபற்றி ஆராய்ச்சிகள் செய்துகொண்டிருந்த டமோரா டைட்டஸின் பெருந்தன்மையையும் அதனால் ஏற்பட விருக்கும் மாறுதலையும் உய்த்துணர்ந்தாள். ஆகவே டைட்டஸ் தன்னை ஸாட்டர்னினஸுக்கு உரிமை யாக்கியவுடன் அதனையே ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவள்போல் நடித்து அவள் சட்டென விரைந்து அவன் பக்கமாகச் சென்று, வணங்கி அடிமையாக நில்லாமல் அடிமை கொள்ள வந்த 'மோகினி'போல் நாணிக்கோணி நின்றாள். அதோடு இதுவரை மேற்கொண்டிருந்த துயரத் தோற்றத்தை யும், ஊக்கமின்மையையும் விடுத்துத் தன் மைந்தர் களைப் பிடித்து ஸாட்டர்னினஸின் முன் விட்டு, "மகிழ்ச்சியுடன் நானும் என் சிறுவர்களும் தங்கள் ஆதரவை ஏற்கிறோம்,'' என்றாள்.

## 4. காதலின் குருதிப் பலி

ஸாட்டர்னினஸ் தான் நன்கொடையாகப் பெற்ற அரசுரிமையை டைட்டஸின் நட்பை வலி யுறுத்துவதன் மூலம் முற்றிலும் தனதாக்க எண்ணி னான். எண்ணி அவன் டைட்டஸை நோக்கி, "ரோம் நகரின் செல்வ மனைய சீராள! உம் நாட்டுப் பற்றை யும் பெருந் தன்மையையும் பாராட்டாதவரில்லை. அரசுரிமையைப் பெற்ற யான் தம்மிடம் இன்னும் சற்று உயர்ந்த உரிமை ஒன்றைக் கோர விரும்புகி

றேன். தங்கள் அன்புரிமை இருந்தால் அதனையும் அடைய எண்ணுகிறேன்," என்றான்.

**டைட்டஸ்:** நானும் என் பொருள்கள் யாவும் கேட்குமுன்னமே தங்களுடையன. தங்கள் விருப்பமே என் நற்பேறு எனக் கொள்வேன்.

**ஸாட்டர்னினஸ்:** தாம் தந்த அரசுரிமையையும் மணிமுடியையும் என்னுடன் பங்கு கொள்ளும்படி தங்கள் புதல்வி [1] லவீனியாவை நான் துணைவியாகக் கொள்ள விரும்புகிறேன். தங்கள் கருத்து எதுவோ?

**டைட்டஸ்:** எனக்கு அதனினும் பெருமை யாது? இதோ அவளை வரவழைக்கின்றேன் என்று கூறி அவளையும் தன் மைந்தர்களையும் அழைத்து இச் செய்தியை அவர்களிடம் கூறினன். ஆனால் லவீனியா இது கேட்டு மகிழ்வதற்கு மாறாகத் திடுக்கிட்டுத் தந்தையை வணங்கி நின்று, "தந்தையே, என்னுலியன்ற வரையில் தங்கள் ஆணையை நான் மதிக்கக் கடமைப்பட்டவளே. பேரரசரும் என் வணக்கத்திற் குரியவர். ஆனால் என் இதயம் முன்பே பஸ்ஸியானஸின் உடைமையாகப் போய்விட்டது. தங்கள் விருப்பப்படி நடக்க இயலாமைக்கு மன்னிக்கக் கோருகிறேன்," என்றாள்.

அச்சமயம் பஸ்ஸியானஸும் முன்வந்து அவள் கையைப்பற்றி, "இதுவரை என் மனமொத்த துணைவியாய் இருந்தாய்; இனி மணமொத்த துணைவியாகக் கொள்வேன்," என்று கூறி அவளை அழைத்து அப்பாற் சென்றான். காவலர் தடுக்கப்புகும் அளவில் டைட்டஸின் புதல்வர்கள் வாளையுருவி அவ்விரு

1. Lavinia

வரையும் காவல் செய்து அவர்கள் வெளிச்செல்ல உதவினர். மைந்தர்களுள் அனைவரிலும் இளையவனான [1] மியூட்டியஸ் அவர்கள் வெளிச்செல்லும் வாயிலில் வழி மறித்து நின்றான். அவர்களை எதிர்த்துத் தன் புதிய அரசுரிமைக்கு இழுக்கு வருவிக்க வேண்டாமென எண்ணி ஸாட்டர்னினஸ் டமோரா பக்கம் திரும்பி, 'வா நாம் போவோம்' என்று வேறு வாயில் வழியாகச் சென்றான்.

## 5. பொய்நட்பும் பாசாங்கும்

தோல்வி மனப்பான்மையும் ஏமாற்றமும் நிறைந்த ஸாட்டர்னினஸ் பக்கமாக டமோரா கடைக்கண்ணோக்கம் செய்து, "தம் காதலைப்பெறத் தவம் கிடக்கவேண்டும். அவளுக்கு அது கொடுத்துவைக்கவில்லை!" என்றாள்.

அவள் குறிப்பிற்கிசைய அரசன் மனம் அவள்பால் எளிதில் வளைந்தது. விரைவில் அரசன் உள்ளத்தையும் அவனைச் சார்ந்தார் உள்ளங்களையும் கவர்ச்சிசெய்து டமோரா ரோமப் பேரரசியாயமர்ந்தாள்.

அரசன் இவ்வாறிருப்ப டைட்டஸ் தன்னையும் தன் மன்னனையும் அவமதித்து எதிர்த்த தன் மகள் மீதும், அவள் காதலன் மீதும், தன் மைந்தர்கள் மீதும் பொங்கி யெழும் சினத்துடன் அவர்களைப் பின் தொடரும் எண்ணங்கொண்டு வாளுடன் புறப்பட்டான். அவனுடைய கடைசிக் கான்முளையாகிய மியூட்டியஸ், "ஐய, தந்தையாயினும் இப்போது

1. Mutius

என் தமக்கை உரிமையைக் காத்து நிற்கும் என்னைக் கடந்து செல்ல முடியாது," என்றான்.

குடிப்பற்றினும் நாட்டுப்பற்றே மிக்க டைட்டஸ் பிள்ளையென்றும் பாராமல் அவனை வெட்டிச் சாய்த்தான். இஃதறிந்த மற்றப் பிள்ளைகளும் லவீனியாவும் பஸ்ஸியானஸும் வந்து கண் கலங்கி யழுது பின் அவனுடலைக் குடும்ப எரிமாடத்துக்குக் கொண்டு செல்ல முயன்றனர். டைட்டஸ் பின்னும் சினமமையாது, "தெறுதலையாகிய இவன் என் மகனல்லன். என் குடிப்பிறந்த உயர் வீரருடன் இவனுடலை அடக்கம்செய்ய இடந்தரேன்," என்று மறுத்தான். பிள்ளைகளும் மார்க்கஸ் அன்ட்ரானிக்கஸும் வந்து பல வகையிலும் அவன் சீற்றந் தணித்து இறுதிக் கடனாற்றினர்.

இயற்கையிலேயே நன்றியற்றவனான ஸாட்டர்னினஸ் தன்னை அவமதித்த ஆணவமிக்க அன்ட்ரானிக்கஸ் குடியினரையும் பொதுமக்கள் மனங் கவர்ந்த டைட்டஸையும் ஒழித்தாலன்றித் தன் ஆட்சி பெருமையுறாது என்றெண்ணி அவர்களை அழிக்க முற்பட்டான். டமோரா இவ்வகையில் அவனைப் பல வகையிலும் ஊக்கியே வந்தனளாயினும் ரோம் மக்கள் கண்களில் பொடி தூவுவதற்காக டைட்டஸின் பக்கமே பேசுவதுபோல் நடித்தும், அரசன் ஆத்திரத்தில் பகைவரை நேரடியாக எதிர்க்காதபடி தடுத்தும் வந்தாள். டைட்டஸ் அன்ட்ரானிக்கஸின் பெருந்தன்மையும் எளிமையும் அவள் சூழ்ச்சிகளுக்கு மிகவும் உகந்தவையாயிருந்தன. அவன் அவள் சொல்லைப் பின்பற்றி ஸாட்டர்னினஸ் உண்மையிலேயே தன்

நட்பை ஏற்றுக் கொண்டானென்றெண்ணி அவன் பணியில் முன் போல் அமர்ந்தான்.

டமோரா ரோமப் பேரரசைக் கைவசப் படுத்தி ரோமிடமும் டைட்டஸ் குடியினரிடமும் பழிவாங்கும் எண்ணத்துடனேயே ஸாட்டர்னினஸைக் காதலித்த தாகப் பாசாங்கு செய்தாள். உண்மையில் அவள் காதலித்தது[1] ஏரான் என்ற ஒரு கருநிற அடிமையையே ஆகும். தன் மைந்தர்கள் கூட இக்காதலை அறியாத படி அவனை அவள் வெளிப் பார்வைக்குத் தன் அமைச்சனாகவும் அரண்மனை மேற்பார்வையாளனாகவும் அமர்த்தி வந்திருந்தாள். ரோமில் அவனுடன் கலந்துறவாட அவளுக்கு வாய்ப்பு நேரிடவில்லையாதலால் அரசனுடன் வேட்டையாட விரும்புபவள் போல் நடித்துக் காட்டிற்குச் சென்று அங்கே ஏரான் முன் கூட்டிக் கண்டுவைத்திருந்த குகையில் தங்கிப் பிறர் வேட்டையாடச் சென்ற நேரத்தைத் தனியே அங்கே கழித்து வருவது வழக்கம். ஸாட்டர்னினஸின் போலி நட்பில் நம்பிக்கை வைத்த டைட்டஸும் அவன் மக்களும் இவ்வேட்டைகளில் கலந்து அரசனுக்கும் அரசிக்கும் உதவி வந்தனர்.

## 6 படுகொலைக் களரியும் பழி மாலையும்

கீழ்மகளாகிய டமோராவின் பிள்ளைகளான சிரானும் டெமெட்ரியஸும் ரோம் நகரின் நாகரிக வாழ்வுடன் தொடர்புபட்டும் தம் கீழ்மையையும் கீழ்க்குணங்களையும் விடவில்லை. பெண்ணின் பெருமை, பெண்மையின் பெருமை ஆகியவற்றில் அவர்கட்கு நம்

---

1. Aaron.

பிக்கை இல்லை. தாம் விரும்பிய பெண்களை வலிந்து கொள்வதையும் அதற்காக உடன் பிறந்தார் உறவினர் என்று பாராமல் கொலைகள் புரிவதையும் அவர்கள் வழக்கமாகக் கொண்டவர்கள். எட்டாக் கனிக்குக் கொட்டாவி விட்ட மூடவரென இருவரும் லவீனியாவை அடைய எண்ணி அதற்காக அரண்மனையிலேயே ஒருவருடன் ஒருவர் வாய்ச்சண்டை தொடங்கி அது முற்றவே கைச்சண்டையிலும் குத்துச்சண்டையிலும் இறங்கினர். இதனால் எங்கே டமோராவின் பொய் நடிப்புக்கு இடையூறு ஏற்பட்டு விடுமோ என்றஞ்சிய ஏரான் அவர்களுக்கு இன்னும் கீழ்த்தனமான சூழ்ச்சி ஒன்றைக் கற்பித்து அவர்களை விலக்கினான். அச் சூழ்ச்சியாவது டமோராவுடன் கலந்து அவள் ஒத்துழைப்புடன் பஸ்ஸியானஸைக் காட்டில் வைத்துக் கொன்று, லவீனியாவை இருவருமே தம் விருப்பத்திற்கிணங்க வைத்ததன் பின், அவள் அது பற்றிப் பிறரிடம் எதுவும் அறிவியாமலிருக்கும்படி அவள் கைகளையும் நாவையும் வெட்டிவிடவேண்டு மென்பதே. டமோராவும் இச் சூழ்ச்சிக்கிணங்கவே அனைவரும் மறுநாள் வேட்டையாடச் சென்றனர்.

டமோராவின் சூழ்ச்சியால் அரசனும் டைட்டஸும் வேடரால் நெடுந்தொலைக்கப்பாற் கொண்டு செல்லப்பட்டனர். பஸ்ஸியானஸையும், லவீனியாவையும் மலைவளம் காட்டுவதாகச் சொல்லி ஏரான் குறிப்பிட்டிருந்த இடத்துக்குச் சிரானும், டெமெட்ரியஸும் கூட்டி வந்தனர். அவர்களை அவ்வளவு விரைவில் எதிர்பாராத டமோரா அச்சமின்றி ஏரானுடன்

அளவளாவிப் பேசி இருந்தாள். அவள் நடத்தை கண்டு அனைவருக்கும் வெறுப்பே ஏற்பட்ட தாயினும் சிரானும் டெமெட்ரியஸனும் தம் சூழ்ச்சி யின் முடிவையே பெரிதாய் எண்ணி வாளா இருந் தனர். ஆனால் பஸ்ஸியானஸனும், லவீனியாவும் அவளை வைது அரசனிடமே அவள் பொய் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறி விடுவதாக அச்சுறுத்தினர். அத்துடன் அவர்களனைவரும் ஒன்று சேர்ந்து பஸ்ஸியானஸ் மீது பாய்ந்து அவனைக் கொலை செய்து பக்கத்திலிருந்த புலித்தாமொன்றில்தள்ளினர். அதன்பின் முன் திட்டப் படுத்தியபடியே டமோரா முன்னாலேயே அவள்மக் களிருவரும் லவீனியாவை வலிந்திழுத்துச் சென்றனர். தன்னை விடுவியாவிடினும் கொன்றுவது போடும்படி டமோராவை அவள் கெஞ்சிக் கூத்தாடியும் பயனில் லாது போயிற்று. அவள் அவர்களின் அரக்கப்பிடிக்கு இரையாகியபின் அவர்கள் இரக்கமின்றி அவள் நாவை அறுத்துப் பின் பிறருக்கு அச் செய்தியை எழுதியும் தெரிவியாவண்ணம் அவள் இருகைகளையும் வெட்டி விட்டனர். அவளும் உணர்ச்சி யிழந்து ஒரு பாறை யில் கிடந்துருண்டாள். அந்நிலையிலேயே அவள் விலங்குகளுக்கு இரையாயிருக்கக் கூடும். அவள் விரும்பியதும் அதுவே. உயிரினும் அரிய பெண்மை யிழந்தும் உயிர்வாழவோ மாந்தர்கண்களில் படவோ அவள் விரும்பவில்லை. ஆயினும் மானம் பின் தள்ளப் பழியுணர்ச்சி முன்தள்ள மெல்ல எழுந்து நடக்க லுற்ற அவளை அவ்வழி வந்த மார்க்கஸ் அன்ட் ரானிக்கஸ் கண்ணுற்று அவள் நிலைமையைப் படிப் படியாயுணர்ந்து அழலாயுருகி அவளை டைட்டஸிடம் இட்டுச்சென்றான்.

இதற்குள் இன்னொருபுறம் டைட்டஸின் மக்களான [1] குவின்டஸையும் [2]மார்ட்டியஸையும் ஏரான் வேட்டுவரை எல்லாம் ஏமாற்றிக் காயத்துடன் ஒளிந்திருக்கும் ஒரு புலியைக் காட்டுவதாகச் கூறியழைத்து வந்து பஸ்ஸியானஸ் விழுந்துகிடக்கும் குழியண்டை கொணர்ந்தான். அப்போது அரையிருட்டாகையால் அவ்வடர்ந்த புதர்களுக்கிடையில் ஏரான் நழுவிவிட்டான். மார்ட்டியஸ் புதர் மூடிய அக்குழியில் சறுக்கி விழுந்து அங்கே புலிக்குமாறாகத் தன் அரிய மைத்துனனே காயமுற்று விழுந்து கிடப்பது கண்டு அங்கம் பதைத்தான். அதன் பின் வெளியேற வழி யெதுவுமில்லாதிருப்பது கண்டு அவன் குவின்டஸைக் கூவியழைத்தான். ஆனால் ஆழ்ந்த அக்குழியைக் கண்டுபிடித்தும் அவனைக் குவின்டஸால் எடுத்துவிட முடியவில்லை. வேறுவழியின்றிக் குனிந்து அவனை இழுக்க முயன்றபோது அவனும் உள்ளே விழுந்தான். இது முழுவதும் ஒண்டி நின்று கவனித்துக்கொண் டிருந்த ஏரான் இதுவே சமயமென்று அரசனையும் பிறரையும் அவ்விடங் கொணர்ந்தான். டமோராவின் உதவியால் இதற்கு முன்னமே அவர்கள் பெயரால் பொய்க் கையெழுத்திட்டு ஏரான் ஒரு கடிதம் எழுதியிருந்தான். அதில் அவர்கள் பஸ்ஸியானஸைக் கொன்று அவன் காட்டில் ஒளித்து வைத்திருக்கும் பொருளை எடுப்பதற்குச் சூழ்ச்சி செய்ததாகக் குறிப்பிட்டிருந்தது. ஏரான் சூழ்ச்சியால் அக்கடிதம் டைட்டஸ் கண்ணிற்படும்படி போடப்பட்டது. சூதறியாத டைட்டஸ் அதனை அரசனுக்குக்காட்ட அரசன் அதிற் கூறிய

1. Quintus. 2. Mortius.

இடத்தில்சென்று பொன்னைக் கண்டுபிடித்து அதன் மூலம் அக்கடிதம் உண்மையானதே என்று உறுதி கொண்டான்.

## 7. துன்பக்கேணி

பின் அவன் ஏரானுடன்சென்று பஸ்ஸியானஸ் காயம்பட்டு இறந்து கிடந்த உடலையும் அதனுடன் இருந்த குவின்டஸையும் மார்ட்டியஸையும் காணவே அவர்களே கொலைஞர்கள் எனக்கொண்டு நகருக்கு அவர்களைக் கொண்டு சென்று அவர்களுக்குக் கொலைத் தீர்ப்பளிக்க ஏற்பாடு செய்தான். தன் பிள்ளைகளுக்காக டைட்டஸ் கல்லும் கரைய அவர்கள் முன் குறையிரந்து நின்றான். அவன் பக்கம் செவிகொடாது அரசனும் அரசியும் நகர மக்களுடன் கொலைமன்றம் சென்றனர். டைட்டஸின் கடைசிப் பிள்ளையாகிய [1] லூஸியஸ் தன் உடன் பிறந்தாருக்காகப் பேச முன் வந்த குற்றத்திற்காக நாடு கடத்தப்பட்டான். அப்போதும் டைட்டஸின் பழி கண்டு ஆறாத டமோரா பின்னும் அவனைத் துன்புறுத்த எண்ணி அவன் கை ஒன்றைத் தருவதாயின் அவன் மக்களைக் கொல்லாது விடுவதாகக் கூறினாள். இதற்குள் லவீனியாவுடன் மார்க்கஸ், டைட்டஸிடம் வந்தான். லவீனியா துயரம்கூட டைட்டஸின் மனத்துள் அந்நேரம் நுழையவில்லை. அவன் பிள்ளைகளுக்காகத் தன் கையை வெட்டத் துணியுமளவில் லூஸியஸும், மார்க்கஸும் தடைசெய்து தம் கையை அளிப்பதாக வாதாடினர். ஆனால் டைட்டஸ் அவர்களை ஏமாற்றிவிட்டுத் தானே தன் கை ஒன்றை

1. Lucius.

வெட்டி யனுப்பினான். ஆனால் கொடியவளாகிய டமோராவின் சூழ்ச்சியுட்பட்ட ஸாட்டர்னினஸ் தன் சொல்லை மீறி மைந்தரையும் கொன்று கையையும் திருப்பி அனுப்பினான்.

டைட்டஸின் துன்பக்கேணியில் பின்னும் ஒரு துளிக்குக்கூட இடமின்றித் துயர் வெள்ளம் நிறைந்து அவன் பெருந்தன்மை, வீரம், அறிவு, பொறுமை ஆகிய நாற்புறச் சுவர்களையும் தாண்டி வழிந்தோடலாயிற்று. அவன் பித்துப் பிடித்தவன் போலானான். அடிக்கடி அப்பித்தின் பயனாக அவன் மார்க்கஸினிடமும் நண்பரிடமும், “இவ்வுலகில் ஒழுங்கு அற்றுப்போயிற்று. நரகிலாவது துறக்கத்திலாவது ஒழுங்குண்டோவென்று பார்க்கிறேன். நரகர்களுக்கும் நாகர்களுக்கும் இதுபற்றி மனுக்கள் விடுக்கின்றேன். அவர்கள் என்ன கூறுகிறார்கள், பார்ப்போம்,” என்று கூறிப் பலவகையான கடிதங்கள் எழுதி அவற்றை அம்புமூலம் நாகருலகுக்கும் நரகுக்கும் வானுலகுக்கும் அனுப்பும்படி லூஸியஸின் பிள்ளையும் தன் பேரனுமான [1] இளைஞன் லூஸியஸிடம் கோரினான். அங்ஙனம் செய்யாவிடின் அவன் மனம் பின்னும் கவலுமே என்றெண்ணி மார்க்கஸும் பிறரும் அவன் கூறியபடியே செய்தனர். இக் கடிதங்களில் பல ரோமின் தெருக்களிலும் ஸாட்டர்னினஸின் மாளிகையிலுமே போய் விழுந்தன. அவற்றை எடுத்துப் பெருமக்களிடம் காட்டி, அவற்றைக் காரணமாகக்கொண்டு பெருமக்கள் அன்புக்கு உரியவனான டைட்டஸைக் கொல்ல ஸாட்டர்னினஸ் முயன்று வந்தான்.

1. Lucius Junior.

ரோமின் நிலைமை இதுவாக நாடு கடத்தப்பட்ட லூஸியஸ் காத்தியரிடம் சென்று டைட்டஸின் வரலாறு முற்றிலும் கூறி டமோராவின் நன்றி யின்மை, கொடுமை ஆகியவற்றுடன் அடிமையும் கயவனுமாகிய ஏரானுடன் அவள் கொண்ட பொய் ஒழுக்கம் முதலிய எல்லாச் செய்திகளையும் வெளி யிட்டான். அவற்றைக் கேட்டுச் சீற்றங்கொண்டு அவர்கள் தம் பழம் பகைவராகிய ரோமரை அவன் தலைமையில் சென்றழிக்க ஒருப்பட்டார்கள். இதனைக் கேள்விப்பட்டு ஸாட்டர்னினஸ் நடுங்கலானான். ஆனால் டமோரா அவனுக்குத் தேறுதல் கூறி, 'எல்லாம் நான் பார்த்துக்கொள்கிறேன்,' என்றாள்.

டமோராவுக்கு இன்னொரு இடுக்கணும் அதே சமயம் ஏற்பட்டது. ரோமுக்கு வந்த பின் அவள் சூல்கொண்டு ஒரு பிள்ளையை யீன்றாள். ஆனால் பிள்ளை ஏரானின் பிள்ளையென்று கண்டவுடன் தெரியும்படி அவனைப்போன்றே கருங்குரங்கு உருவில் இருந்தது. அதனை ரோமர் கண்ணுற்றால் தன் செய்தியாவும் வெளியாகும் என்று அஞ்சி டமோரா குழந்தையுடன் அவனை வெளியேற்றினாள். அவன் தன் தீவினை வயத்தால் காத்தியர் கைப்பட்டு லூஸிய ஸிடம் கொண்டுவரப்பட்டான். தன் உயிரையும் குழந்தையின் உயிரையும் காக்கும் வண்ணம் அவன் தன் கதை முற்றிலும் கூறி காத்தியரிடம் லூஸியஸ் கூறிய அனைத்தையும் மெய்ப்பித்தான்.

## 8. பழிக்குப் பழி

தன் தீவினைப் பொறி தன்னை முற்றிலும் சூழ்ந்து விடுமுன் டமோரா தன் சூழ்ச்சித் துருப்புகளில்

கடைசியான ஒன்றை வீசித் தப்பமுயன்ருள். அதாவது பித்துக்கொண்ட டைட்டஸ் நரகருக்கும், நாகருக்கும் எழுதுவதால் அவன் பித்துக்கேற்றபடி தானே நாகர் உலகத்திறைவியாகிய காளியாகச் சென்று நடிக்க அவள் எண்ணினுள். இவ்வெண்ணத் துடன் அதற்கேற்ற உருவும், உடையும், நடிப்பும் கொண்டு மைந்தராகிய இருவரையும் தன் கணத்தின ராக வரும்படி செய்து அவன் முன்சென்று ஊங்கா ரம் செய்து, 'நானே காளி, உன் ஆத்திரமிக்க கடிதம் கண்டு வந்தேன். எங்கே உன் பகைவர்: விரைவில் காட்டுக! இதோ அழித்தேன்!' என்ருள்.

டைட்டஸ் ஓரளவு பித்துக் கொண்டிருந்த போதிலும் டமோரா எண்ணிய அளவு தலை மயக்கங் கொண்டிருக்கவில்லை. தன் பிறவிப் பகைவியாகிய அவளைக் கண்டதும் இருந்த சிறு மயக்கமும் அகன் றது. ஆயினும் வஞ்சிக்க எண்ணிய அவளை வஞ்சித்து விடத் துணிந்து பித்தன் போலவே நடித்து அவன், "உன்னை நம்பேன் காளி! நம்பேன். என் பகை வரை வருவிக்கு முன் மறையப் போகிருய்," என் ருன். டமோரா "இதோ என் கணத்தினரைப் பிணைய மாக உன்னிடமும் வைத்துச் செல்கிறேன். உன் எதிரிகளை வரவழை. உன் மகன் லூஸியஸையும் அவன் நண்பரையும் வரவழை. அவர்கள் முன் உன் பகைவர் குருதியைக் குடிக்கிறேன்," என்ருள்.

டமோரா உண்மையில், "அவன் அழைத்தால் லூஸியஸ் வருவான். நம் ஆட்களால் அனைவரையும் போரின்றிச் சூழ்ச்சியாலேயே கொன்று விடலாம்," என்றெண்ணினுள். டைட்டஸ் அவள் கூறியபடியே

தன் மகனுகிய லூஸியஸை அழைத்ததுடன் ஸாட்டர்னினஸையும் டமோராவையும் கூடவந்து விருந்துண்ணும்படி அழைத்தான். ஆனால் விருந்தில் உணவுக்கு மாறாக டமோராவின் பிள்ளைகளே கறியாகச் சமைக்கப்பட்டிருந்தனர். உண்டியருந்திய பின் டைட்டஸ் தன் மகளை அவள் முன்னிறுத்தி அனைவரும் அறிய அவள் பழியை எடுத்துக் கூறிய பின், "அவளுக்கு இவ்வகை இன்னல் செய்தவர் அழிந்தனர். அவள் பழியும் இத்துடன் ஒழியட்டும்," என்று அவள் குறையுடலைத் தன் கையாலேயே வெட்டி வீழ்த்தி அவள் துயருக்கு ஒரு முடிவு தந்தான். பின் டமோராவை நோக்கி, "இறந்த உன் மைந்தர் நிலைமை என்ன என்று அறியவிரும்புகிருயா? அவர்கள் வேறெங்கும் இல்லை. உன் வயிற்றிலேயே சென்று விட்டனர்! கொடியோய்! நீ தின்றது உன் குழந்தைகள் இறைச்சியையே என்றறி இதுவே என் பழி," என்றான். அவள் திகைத்து நிற்குமளவில் லூஸியஸ் ஏரானை முன் நிறுத்தி அவள் செயல்களை வெளிப்படுத்தினன். தன் அவமதிப்பைப் பொருது டமோரா எழுந்தோடத் தலைப்படுமளவில் டைட்டஸ் அவளைக் குத்திக் கொன்றான். ஸாட்டர்னினஸ் வெகுண்டு டைட்டஸைக் கொன்றான். உடனே லூஸியஸ் தந்தையுயிரை வாங்கிய அதே வாளால் ஸாட்டர்னினஸின் உயிரை மாய்த்தான். ரோம் மக்கள் இக் கொலைகளையெல்லாம் கண்டு, 'இது என்ன? இறைவன் சீற்றமோ?' என்று அஞ்சி நடுநடுங்கினர். லூஸியஸ் அவர்களிடையே வந்து வணங்கி நின்று தன் குடியினர் அடைந்த பழிகளையும் டமோராவின் தீச்செயல்களையும் எடுத்துரைத்தான். ரோம் மக்கள்,

"லூஸியஸ் வாழ்க, லூஸியஸே! எங்கள் பேரரச ராகுக," என்று ஆர்ப்பரித்தனர். முன் டைட்டஸை முடிசூட்ட எண்ணியிருந்த மார்க்கஸ் அன்ட்ரானிக்கஸ் அவன் மீந்த ஒரே பிள்ளையாகிய லூஸியஸுக்கு முடி சூட்டினான். காத்தியரும் லூஸியஸின் வீரத்தை மதித்து அவனுக்குப் புகழ் மாலைகள் சூட்டி நட்புணர்ச்சியுடன் தம் நாடு சென்றனர். டைட்டஸின் பெருந் துயர்மிக்க பெருமிதவாழ்வு ரோம் மக்களால் உருக்கமிக்க பாடல்களாகவும், ஓவியக் காட்சிகளாகவும், நாடகங்களாகவும் யாக்கப்பட்டுப் பலவகையிலும் போற்றப்பட்டது.